| 929 | செருக்கு விட்டு வளிநிலை செய்து இருசி வடிவாக இரு. | 398 |
| 930 | வீணாய் அலையாமல் உப்பை வைத்துக் கொண்டு வாதம் பார். | 398 |
| 931 | நொ. வெ. அ. செ. சேர். பழுக்கும். | 398 |
| 932 | அ. செ. வுக்கு நொ. வெ. போடாவிட்டால் பழுக்காது. மாற்றுக் காணாது. புடமிறங்காது | 399 |
| 933 | நொ. வெ. யில் வேழை போடாமல் வெறும் வெள்ளியில் வேதை போட அது புடத்தில் தீய ஏமாற்றம் அடைவீர். | 399 |

| செய்யுள் எண் | பொருளடக்கம் | பயன் |
|---|---|---|
| 934 | கடு முயற்சியுடன் இக்காண்டத்தில் நொறுக்கு வெள்ளி சொல்லியுள்ளேன். | 400 |
| 935 | நூன் முறைப்படி செய்து கொண்டேவரின் ஏதேனும் ஒன்று பலியாமற்போகாது. | 401 |
| 936 | என்னூலை அடிதொடுத்து முடிவரைக்கும் பார்த்தால் எல்லாக் கருத்தும் தோன்றும். வாழியாவான் ஞானசித்தி யோக சித்தியாகும். | 401 |
| 937 | நொறுக்கு வெள்ளி. | 401 |
| 938 | நொ. வெ. வையரைத்துப் புடமிடுக. | 402 |
| 939 | நொறுக்கு வெள்ளி ஆய்வு. | 402 |
| 940 | வெள்ளியுருக்கு முகத்தில் சிதறாது. | 403 |
| 941-942 | செம்புக்கரி செய்யும்போது பெரும்புடமே போடுக. | 403 |
| 943 | தவறாமல் விழிப்பாகச் செய். | 404 |
| 944-945 | துருசுச் சுண்ணம். | 405 |
| 946-947 | ஆனந்தக் களிப்பு-வெடியுப்புத் திராவகம். | 405 |
| 948-949 | வீரப்பதங்கம். | 406 |
| 950- 951 | வீரப்பதங்கத் திராவகம். | 406 |
| 952-955 | திராவகம் பிடிக்க வேண்டிய பக்குவம். | 407 |
| 956-958 | துருசுக்குத் தீச்சை. | 407 |
| 959-961 | துருசுக்குக் கவசம் செய்ய அண்டச் சீனச் சுண்ணம். | 408 |
| 962 | துரிசுச் சுண்ணத்திற்குப் புடம். | 408 |
| 963 | துரிசுச் சுண்ணத்தால் மூலிகைச் சாறு எடுக்க. | 409 |
| 964-965 | இரசம் கட்ட. | 409 |
| 966 | இரசமணி வேதை. | 409 |
| 967-968 | வாதம் கோடிக்கு ஒருவருக்கு வரும். | 409 |
| 969 | இந்நூலில் ரசமணி கட்டத் துரிசுச் சுண்ணம் வகையாகச் சொன்னேன். | 411 |

| செய்யுள் எண் | பொருளடக்கம் | பயன் |
|---|---|---|
| 970 | இந்நூற்சொல்லியனவெல்லாம் உண்மை செய்ய மாட்டமுடன் பொய்யென்பான். | 411 |
| 971 | துரிசுச் சுண்ணம் செய்து கொண்டால் இருந்த இடத்திலேயே அட்டமாசித்தும் ஆடலாம். | 412 |
| 972 | இதனடியிற் சொல்லப்படும் அயச்செம்பானது முன் சொல்லியவற்றை விடச் சிறந்ததாகும். | 412 |
| 973 | அயச்செம்புக்கு அயக்கரி. | 413 |
| 974-975 | செம்புக்கரி. | 413 |
| 976 | அயக்கரி தாமிரக்கரி சேர்க்கும் எடையும் அவற்றைச் செந்தூரமாக்கவும். | 414 |
| 977-978 | அயச்செம்பு ஒழுங்காக இருக்கவேண்டிய நிறம். | 414 |
| 979 | அயச்செம்பு வேதை. | 415 |
| 980-981 | மூடவாதிகள் பேச்சைக் கேட்டு மூலிகையினால் வாதமாகுமென்று மோசம் போகாதே. அப்படிச் சுட்டவன் தீரா நரகம் அடைவான். | 415 |
| 982 | சித்தர் நூல்களையாய்ந்து வாதகாண்டம் இரண்டாகப் பாடினேன். இதில் இருப்பன மெய். இந்நூலைப் பார்த்துச் சித்தியானால் இகபரவாழ்வு உண்டாம். | 416 |
| 983 | நூலுணர்த்திய வழி. | 416 |
| 984 | யூகிமுனி தேரரிடத்திற்கேட்டுத் தெளிந்து உலகவாதிகள் பிழைக்க வாதகாண்டம் இரண்டாகச் செய்து அதில் கைபாகம் எல்லாமும் செம்பின் முறையெல்லாமும் கூறியுள்ளவற்றைத் தெளிந்து நலம் பெறலாம். | 417 |
| 985-986 | ஆசிரியர் வணக்கம். | 417 |

# யூகி முனிவர் வாதகாவியம்
# இரண்டாங் காண்டம்

ஆகுவா கனன்பாதம் குருவின் பாதம்
அத்தியுரித் திடைதரித்த அண்ணல் பாதம்
பாகுஉமை யாள்பாதம் பயின்றமுரு கன்பாதம்
பத்தியுடன் பதினெட்டுச் சித்தர் பாதம்
ஏகுவாய் ரிஷசித்தர் பாதம் போற்றி
எனையாண்ட தேரருட பாதந் தன்னைத்
தாகமாய்ச் சிரசில்வைத்துத் துதியே செய்து
தாட்டிகமாய்ப் பாகமெல்லாம் அறைந்திட்டேன் (1)

அறைந்திட்டேன் சிவனுமைக்கு மகிழ்ந்து சொல்ல
வகையாக வுமைதானும் நந்திக்குச் சொல்லத்
தறைந்திட்டேன் நந்தியசு வனிக்குச் சொல்லத்
தாட்டிகமாய் அசுவனி விசுவனிக்குச் சொல்ல
மறைந்திட்டு விசுவனியாந் தேவர் தானும்
பாகமாய்த் தன்வந்திரிக்கு உவதே சிக்க
அறைந்திட்ட தன்வந்திரி யகத்தியர்க்குச் சொல்ல
ஆதியாய் அகத்தியரும் அன்பாய்த் தானே (2)

அன்பாக அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்ல
ஆதியாம் அகத்தியரும் தேரருக்குச் சொல்ல
தென்பாகத் தேரருமே யூகிக்குச் சொல்லத்
திறமான யூகியுமே யுலகத் தோர்க்கு
வன்பாகப் பிழைக்கவுமே வாத காண்டம்
வகையாகக் கைபாக விவரம் எல்லாம்
இன்பாகச் சொல்லிடவே இந்த நூலை
எளிதாகப் பாத்துமே செய்தி டாயே

செய்திடவே இந்நூலைப் பார்த்த றிந்து
செயமாகச் செந்தூரம் களங்கு சுண்ணம்
வைதிடவே மெழுகோடு தைல மெல்லாம்
பார்த்தறிந்து நன்மையாய் உழைத்தா யானால்
மெய்யாக வாதமெல்லாம் சித்தி யாகும்
மேன்மையாய்ப் பாகமெல்லாம் கண்டறிந்தால்
வையகத்தில் உனைப்போல ஞானி யுண்டோ
வடிவாக யூகிமுனி சொன்ன வாறே (4)

சொன்னதொரு அயத்தைத்தான் முன்னே பாரு
சுகமாகப் பின்னேதான் சொல்லக் கேளு
நன்னயமாம் சவுக்காரச் சுண்ணம் பாரு
நலமாக அதிற்பின்பு துரிசைப் பாரு
கன்னல்போ லாகுமது கருத்துக் கேளு
கனமான சூதத்தைக் கட்டிப் பாரு
இன்னிலத்தில் பெரியோராய் இருக்கப் பாரு
இதமாக ஞானங்கள் மிகவுண் டாமே (5)

உண்டாகும் உழைத்தாக்கால் வாத முண்டு
உறுதியாய் வாய்ப்பேச்சா லொன்று மில்லை
கண்டாகும் ஏருழுதால் பலனு மாகும்
கல்வியாய்ச் சொன்னாக்கால் கடைத்தே றான்காண்
பண்டாகும் நூலெல்லாம் பார்த்துத் தேறு
பதறினால் பலனென்னை வாத மாமோ
கண்டாக்கால் நிசந்தோணும் காணாப் போனால்
கருத்தில்லா மானிடர்கள் பொய்யென் பாரே (6)

என்பார்கள் உறுதியில்லார் ஆசைக் காரர்
இன்பமாய் உடம்புவளை யாமல் தானும்

நன்மையாய்ப் புற்றுமண்ணை லிங்க மாக
நாடியே உருப்பிடத்துச் செபங்கள் செய்வார்
வன்பாகப் பசிவந்த போதில் தானே
வடிவாக இரந்துண்பார் மாயம் மெத்த
உண்பாரை உடுப்பாரைப் பார்த்து ஏங்கி
உறுதிதான் இல்லாமல் அலைகு வாரே (7)

அலையாமல் நாலுவே தத்தில் உள்ள
அடைவான குருமார்கள் பொய்கள் சொல்லி
நிலையவே அவரவர்கள் வேதங் கட்டி
நீச்சாக வுன்றெய்வ மென்றெய்வ மென்று
மலையவே மானிடரை மயக்கங் காட்டி
மகிமைபெற இருந்துமே நிட்டை போல
குலையவே காட்டியே யடிமை செய்வார்
குரூரமாய்ப் பார்த்தறிந்தால் எல்லாம் பொய்யே (8)

பொய்யென்று போகாமல் வாதம் பாரு
போக்கோடே சகலமுந்தான் நிசம தாகும்
மெய்யென்று வாதத்தை முன்னே பார்த்தால்
மேன்மையாய் எல்லாமுஞ் சித்தி யாகும்
கைமுறையும் நிறைவாகும் விடவும் வேண்டாம்
கற்றவர்கள் சாத்திரத்தில் கருத்தைப் பாரு
துய்யவே வாதங்கள் வந்தால் ஞானம்
துடியாகப் பலிக்குமென்று உரைசெய் தேனே (9)

உரைக்கிறது வாதமென்றால் அஞ்சாம் வேதம்
உண்மையாய் நாலுவே தத்தி லுள்ள
பரைக்குமே குருமார்கள் பணமுங் கேட்பார்
பதிவாகும் பொருள்பிடுங்கி உண்பார் பாரு

திரைக்குளே உள்ளிருந்து மனிதர் போல
தீட்சைதான் அஞ்செழுத்தை சொல்வா ரப்பா
மறைத்துமே நம்பவே வேண்டா மப்பா
மதிபெருக வாதத்தைப் பார்த்துத் தேறே (10)

பார்த்திடவே அயச்செம்பை முன்னே பாரு
பதிவாக இரதமதைக் கட்டிச் சேரு
சேர்த்திடவே துருசையுந்தான் சுண்ணம் பண்ணிச்
சிவசொத்தை வறுமைபோல் உண்டு தேறு
சார்த்திடவே பெருமைகள்தான் வேண்டா மப்பாக்
கருத்தாகச் சாத்திரத்தை நம்பிப் பாரு
ஏர்த்திடவே பலன்கொடுக்கும் யூகி நூலை
இன்பமாய்ப் பார்த்தாக்கா லெல்லா மாமே (11)

ஆமேதான் சாத்திரத்தில் மனத்தை யூணு
அன்பாகச் சிவசொத்தை வறுமையாகத்
தாமேதான் உண்டிடவே சித்தி யாகும்
தாக்கியே செந்தூரம் பண்ணித் தின்னு
வாமேதான் சுழிமுனையில் மனத்தை யூணு
வடிவான சித்ம்பரத்தின் மார்க்க மாக
காமேதான் ஐந்தாம்வே தத்தி லுள்ள
கனிவான செம்பையெல்லாந் தங்க மாக்கே (12)

ஆக்குவது கெந்தியினால் செம்பைக் கொல்லு
அடைவாக அயத்தினா லெழுப்பிக் கொள்ளு
தாக்குவது உருக்கிடவே செம்பொன் னாகும்
துடியாக மதிதனிலே எட்டுக்கு ரெண்டு
தாக்குவது ஏழாகும் விற்றுக் கொள்ளு
தண்மையாய் வாசியோகத்தைப் பாரு

நோக்குவது பிராணனைத்தான் மேலே நோக்கு
நொடிக்குள்ளே எட்டிரண்டும் சித்தியாமே (13)

சித்தியாம் எட்டிரண்டும் என்ற பேரு
சிறப்பான ரவிமதியாம் உன்னிப் பாரு
பத்தியாய் இதுவிரண்டு மொன்றா னாக்கால்
பதிவான தங்கமாம் இந்த வித்தை
முத்தியாம் உன்சென்மம் ஈடே றிப்போம்
முடிவான பொருளதுதான் மூர்க்க மாகும்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் பொருளு மாகும்
சதாசிவன்றான் சொன்னதிது சரிதான் பாரே (14)

## அயச்செம்பு

சரியாக இன்னமொரு சேதி கேளு
சாதகமாய் அரப்பொடியோ பலமோ பத்து
வரியாக ரோமமது ஐம்ப தாகும்
வடிவாக எள்ளெண்ணெய் தனிலே தோச்சு
துரியாகச் சட்டியிலே யுருக்கிப் பாரு
துடியாக உருகையிலே அரப்பொடியைப் போடு
பரியாகப் புரட்டியே வாங்கிக் கொள்ளு
பக்குவமாய் அப்புறந்தான் வைத்துக் கொள்ளே (15)

கொள்ளவே யதன்பின்பு சொல்லக் கேளு
கூராகச் செம்புமே பலமோ பத்து
விள்ளவே நாற்றமது முக்கா லாகம்
விருப்பமாய்ச் சூடனது அரையும் போடு
துள்ளவே வீரமது காலுங் கூட்டித்
துடியாகப் பாணியால் அரைத்துச் சாமம்

மெள்ளவே ரெண்டுமே யரைத்துக் கொண்டு
மெதுவாகச் செம்புமேல் கவசங் கட்டே (16)

கட்டியே காயவைத்து அதன்மேற் கேளு
கனமாகச் சுண்ணமது கவசம் போடு
தட்டியே பத்தெருவில் புடத்தைப் போடு
தாட்டிகமாய் எடுத்துமே பிட்டுப் பாரு
வட்டியே நொறுங்கினதோர் அதரு எல்லாம்
வடிவாக எடுத்துமே வைத்துக் கொள்ளு
துட்டியே நொறுங்காமல் போனால் பின்னும்
துடியாகக் கெந்திமேல் கவசம் போடே (17)

போடவே வலுவாகப் போட்டு மேலே
பொருந்தியே முன்போலே கவசங் கட்டி
ஆடவே பத்தெருவில் புடத்தைப் போடு
அதன் பின்பு செய்கின்ற வரிசை கேளு
நாடவே எடுத்துப்பார் நொறுங்கிப் போகும்
நலமான சத்தெல்லாம் புறம்பாய் வைத்து
காடவே முன்ரோம அயத்தி னோடே
கரிபோல இருக்கிறதை இடையாய்ச் சேரே (18)

**அயரோமம் செம்புச் சத்திலே சத்துச்**
**செந்தூரம் செய்தால் தான்**
**கெந்தி யீயம் விலகிப் போகும்**

சேர்த்துமே செவ்வல்லிப் பூச்சாற் றாலே
சேர்த்தரைத்துச் சிவக்கு மட்டும் புடத்தைப் போடு
பார்த்துமே செம்பிலே பிடித்த கெந்தி
பதிவான ஈயமது விலகிப் போகும்

நார்த்துமே ஈயமது விலகிப் போனால்
நலமாக ஈயமாம் வெள்ளி தன்னில்
பார்த்திடவே எட்டிரண்டும் சேர்த்தால் கேளு
பதிவாக ஏழாகும் பகர்ந்து பாரே (19)

## அயத்தாம்பரம் உருக்கும் வகை

பகர்ந்துபார் முன்வைத்த செந்தூரத்தில்
பதியவே வெங்கார மெடையே சேர்த்துத்
தகர்ந்துமே செவ்வல்லிப் பூச்சாற் றாலே
தாட்டிகமாய் அரைத்துமே மூசை தன்னில்
பகர்ந்துமே உருக்கிடவே ரவியு மாகும்
மாசற்ற வெள்ளிபொன் போல்நின் றாடும்
உகர்ந்துமே யதையெடுத்துப் பாரு பாரு
ஓகோகோ ஏமமயம் ஆகும் பாரே (20)

ஏமமய மானதொரு அயத்தின் செம்பை
இன்பமாய் வெள்ளிதனி லெட்டுக் கொன்று
தாமமாய்க் கொடுத்திடவே யேழு மாற்று
தப்பாமல் கைகண்ட பொருளு மாகும்
தூமமாம் இச்செம்பைச் செந்தூரித்தால்
துடியாகக் கோடிக்கு ஒன்று ஓடும்
காமமாம் பெண்ணாசை தன்னை விட்டுக்
கருதியே செய்தாக் காலேம மாமே (21)

## அயத்தாம்பர நாகரசகெந்திச் செந்தூரம்

ஆமேதான் முன்னெடுத்த அயத்தின் செம்பை
அடைவாக நாலுபலம் நிறுத்துக் கொண்டு

தாமேதான் தங்கமொன்று நாகமொன்று
 தப்பாம லுருக்கிடவே வெட்டை யாகும்
காமேதான் வெட்டையைத் தான் செம்பிற் சேர்த்துக்
 கருத்தாக உருக்கிடவே சொல்லக் கேளு
நாமேதான் கெந்திபலம் ஒன்று போடு
 நளினமாய்ச் சூதமொன்று நிறுத்துக் கொள்ளே (22)

கொள்ளவே முலைப்பாலால் ஆறு சாமம்
 குணமாக அரைத்திட்டு மிளகு போல
மெள்ளவே உண்டைபண்ணி ரவியில் காய
 மேன்மையாய் வைத்திட்டுச் சொல்லக் கேளு
துள்ளவே முன்னிருக்கும் அயத்தின் செம்பில்
 துடியாகக் இராசமிட வுடைந்து போகும்
வள்ளலார் சொன்னதுதான் புகைநீர் தன்னை
 வகையாக வூற்றியே வறுத்துப் போடே (23)

போடவே காசியென்ற மேரில் போடு
 பெருக்கவே பன்னிரண்டு சாமந் தீத்தான்
ஆடவே போட்டிடவே உடைத்துக் கொண்டு
 அப்படி பார்த்தஞ்சு திறமு மாக
தாடவே திராவத்தை விட்டுக் காய்ச்சித்
 தாட்டிகமாய் எரித்திடவே மடக்கு அஞ்சு
காடவே அஞ்சுதிறம் எரித்துப் போட்டுக்
 கனமாக முருக்கம்பூ வாகும் பாரே (24)

## அயத் தாமிர செந்தூரம் செம்பிற் கொடுக்கச் சொல்லியது

பாருமே முருக்கம்பூச் செந்தூரத்தைப்
 பதிவாகச் செம்புதனில் நூற்றொன் றிட்டால்

சாருமே எட்டரைதா னாணிக் கொக்கும்
சவம்போலே திரிந்தாக்கா லென்ன வுண்டு
காருமே சாத்திரமும் பெருநூல் பாரு
கருத்தான சூத்திரமும் பார்த்துத் தேரு
வாருமே வாதமெல்லாம் நொடிக்குள் ளாகும்
வகையாகச் சோதித்தா லெல்லாம் ஆமே (25)

### சாத்திரத்தில் ஆசை வைத்துப் பார்க்கச் சொல்லியது

ஆமேதான் பெண்கொங்கை தன்னைப் போல
அடுத்துமே சாத்திரத்தை அன்பாய்ப் பாரு
தாமேதான் கன்னியிடம் சேர்ந்தாற் போல
தாக்கிடவே வாதத்தைக் கற்றுச் சோதி
வாமேதான் வைத்தியத்தில் ஆசை பூண்டு
வகையாகப் பார்த்திடவே எல்லாம் சித்தி
காமேதான் ஸ்திரிவிடையம் தன்னைப் போல
கருத்துடனே சோதித்தால் தீனி யாமே (26)

### உலகம் மயங்கச் செய்பவர்

தீனியாம் உண்டிட்டுப் பூசை பண்ணிச்
செகத்திலே காவிவே டங்கள் பூண்டு
ஞானியைப்போல் சாத்திரத்தைப் படித்துத் தேறி
நலமாகச் சொல்வார்கள் ஆதீனத் தார்
யோனியென்றால் ஆசைகொள்வார் இரவில் தானும்
ஒத்துமே வைகறையில் வேடம் பூண்டு
வானிலே கண்மூடிப் பூசை செய்வார்
வகையாக வுலகத்தில் நம்பு வாரே (27)

நம்பியே யவருடைய காலில் வீழ்ந்து
நலமாக எனக்குவரம் தரவா வென்பார்
வெம்பியே அழுதிடுவார் நம்ப வேண்டாம்
விதமாகக் காவிவே டத்தி னாலே
சம்புவினால் வந்தமுத்தி ரையினாலே
சட்டமாய் அவர்செய்யும் குணத்தைத் கானார்
தெம்புடனே தங்கத்தைக் கண்ட போதே
திறமாகப் பிரம அனுக் கிரக மாமே *(28)*

## *1 - 27* உரை

*(1-14 அறிவுரை. மேல் அயச் செம்பு)* அரப்பொடி பத்துப் பலம் முடிமயிர் 50 பலம். எள்ளெண்ணெய்யில் தோய்த்துச் சட்டியிலிட்டுருக்கு உருகும் போதுஅரப்பொடியைப் போடுபுரட்டி எடு. பின்னர் செம்பு பத்துப் பலம் எடு. கெந்தி ஏழரைப் பலம் சூடன் அரைப் பலம் வீரம் காற்பலம் இவற்றைப் பாணி விட்டு அரை. செம்பின்மேல் கவசமிடு. காயவை பின்பு அதன் மேல் சுண்ணக் கவசம் செய். பத்தெருப்புடமிடு. நொறுங்கிய அதராகும். நொறுங்காவிட்டால் மீண்டும் ஒருமுறை புடமிட்டெடுத்துப் பார். நொறுங்கும். இதனை முன் ரோம அயத்தொடு சேர். செவ்வல்லிப் பூச்சாறு விட்டு அரை. சிவக்கும் அளவு புடமிடு. செம்பிற் பிடித்த கெந்தி யீயம் விலகி விடும். அதனை வெள்ளியில் எட்டுக்கு இரண்டு சேர்க்க ஏழு மாற்றாகும்.

முன் வைத்த செந்தூரத்தினெடை வெங்காரம் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்துக் குகையிலிட்டுருக்கு செம்பாகும். வெள்ளி பொன் போல் கண் விட்டாடும். இந்த அயச் செம்பை வெள்ளியில் எட்டுக்கு ஒன்றீய ஏழு மாற்று இது கை கண்ட பொருள். அதனைச் செந்தூரித்தால் கோடிக்கு ஒன்று கொடு சிவக்கும். பெண்ணாசை விடு. அந்த அயச்செம்பு நாலுபலம்

தங்கமும் செம்பும் வகைக்க ஒரு பலம் நிறத்துச் சேர்த்து உருக்கு வெட்டையாகும் இதனைச் செம்பிற் சேர்க்க வழி கேள்.

ஒரு பலம் கெந்தி ஒருபலம் ரசம். முலைப்பால் விட்டு ஆறுயாமம் அரை. மிளகுபோல் உருட்டிக் காயவை. முன்செய்த அயச்செம்பில் துடியாகக் கிராசமிடு. (ஒவ்வொன்றாய்த் தூவு) உடைந்து போகும். புகைநீர் விட்டு வறு காசிக்குப்பியில் போட்டுப் பன்னிரண்டு யாமம் எரி உடை. மீண்டும் மீண்டும் திராவகம் விட்டரைத்து ஐந்து முறை புடமிடு. முருக்கம் பூநிறமாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. ஆணிக்கு எட்டரை பெருநூலும் அதற்குத் திறவு கோலும் பார்த்துத் தெளி. பெண்ணின் கொங்கையில் விருப்பம் போல நூலைப் பார்த்துத் தெளி. கன்னியிடம் சேர்வது போல் கற்று ஆராய்ந்துபார் *27, 28,* அறிவுரை

## வாதமறிந்தவர்கள் எல்லாத் தேவர்களுக்கும் ஒப்பாவார்கள்

ஆமேதான் வாதத்தைக் கண்ட பேர்கள்
ஆதிசிவ னிவனாகும் ருஷிக ளாகும்
தாமேதான் சத்தமகா சித்த ராகும்
தடையறவே நவகோடி சித்த ராகும்
வாமேதான் கண்டவர்க்குத் தெய்வ மில்லை
வடிவாகக் கண்டவர்தாம் தெய்வ மாகும்
பூமேதான் பூமாதர்க் கொப்பு மாகும்
புவியிலுள்ள மனிதர்களுக் கதிக மாமே *(29)*

## தங்கமும் செம்பும் சிவமும் சத்தியும்

அதிகமாம் பரமசிவன் தங்க மாகும்
அடுத்துநின்ற செம்பொன்று உமையா ளாகும்

பதியவே உமையாளைக் குளிகை தன்னால்
பாய்ச்சிடவே களிம்பற்றுச் சிவமு மாச்சு
கதியவே புதுசாகச் சிவமு மாச்சு
கருணைபெறச் சிவனுக்கு அதிக மாகும்
சதியாகச் சொன்னாக்கா லென்ன லாபம்
சத்ததியமாய் நரகிலே மாளு வாரே (30)

மாளாம லிருக்கவல்லோ வயத்தைச் சொன்னேன்
மாண்டிறந்து போகாமல் செம்பைச் சொன்னேன்
தேளான பசியடங்க மதியைச் சொன்னேன்
தென்பாக மதிதனிலே கொடுத்து விற்று
பாளாகப் போகாமல் ஞானம் பாரு
பதிவாகப் பார்த்துமே மலைகள் தோறும்
வாளாகச் சஞ்சரித்து வாதம் கேளு
வடிவாக இரத்தைக் கட்டித் தேறே (31)

## யோகி போல் வாதிகருத்தும் இருக்க வேண்டியது

தேறவே வழியோடே சென்ற றிந்து
திறமாகப் பூரணத்தில் சொக்கி னாற்போல்
ஆறவே தமர்வாசல் வழியை நீக்கி
யன்பான நிராகாரத் துள்ளே சொக்கிப்
பாறவே இதுபோலே நினைவு பூண்டு
பக்குவமாய் அயச்செம்பை கருத்தில் பாரு
நேறதாங் காயசித்தி யோக சித்தி
நிர்ணயமாய் வாதசித்தி வருகும் பாரே (32)

வருகிறது விசுவாச முள்ள பேர்க்கு
வகையாக நல்லறிவு உள்ள பேர்க்குப்

பருவமாய் வந்திடுமே ஞான வாதம்
பத்தியாய் யோகமுதல் சித்தி யாகும்
தருவான மாயமாம் வாதிக் குத்தான்
தடையில்லா தெல்லாமும் வந்த தென்பார்
உருவாக வூதியே கரியும் சுட்டு
உண்மையாய்ச் சாகமட்டும் மாளு வானே (33)

### 29 – 33 உரை மற்றும் அறிவுரை

(உரை வேண்டாம்).

## வாதம் உபதேசம் செய்த கிரமம்

மாளாமல் இருக்கவல்லோ சிவனு மைக்கு
மார்க்கமாய்ச் சொல்லிடவே நந்தி கேட்டு
வாளாக அசுவனிக்குச் சொன்னா ரையா
வகையாக அசுவனியும் விசுவனிக்குச் சொன்னார்
மூளாகச் சொல்லிடவே முனிவர் தாமும்
முக்கியமாய்த் தன்வந்திரிக்கு அறிக்கை பண்ணி
தாளாகத் தன்வந்திரி யகத்தியர்க்குச் சொல்ல
தர்க்கமாய் அகத்தியரும் சொன்ன வாறே (34)

சொன்னதொரு புலத்தியர்க்குச் சொன்ன போது
சுகமாகப் புலத்தியரும் தேரருக்குச் சொல்ல
நன்னயமாய்த் தேரருமே யூகிக்குச் சொல்ல
நலமாக யூகியுமே யுலகத் தோர்க்கு
கன்னல்போல் பிழைக்கவுமே பாகஞ் சொன்னேன்
கருத்தாக மானிடர்கள் பார்த்தால் எல்லாம்
நன்னயமாய் நீடுழி காலம் வாழ்வார்
நலனுரைத்தால் எல்லாமும் சித்தி யாமே (35)

## மூடச்சித்தரின் செய்கை

சித்தியாம் மானிடர்கள் ரொம்ப வுண்டு
செகசாலம் பார்ப்பார்கள் பகடி யாக
முத்தியாய் ஞானம்போ லிருப்பார் பாரு
முதலெழுத்துத் தெரியாமல் மூட மாக
பத்தியாய்ச் சண்டைதான் மிகவுஞ் செய்வர்
பதிகெட்டுப் போனவுடன் தொண்டு செய்வார்
நத்தியே இதிலென்ன பலனுண் டாகும்
நாய்கடித்த வெள்ளெலும்பாம் நலம தாமே (36)

சோதிப்பார் செம்பைத்தான் சோதி யென்றேன்
சொற்பெரிய பொல்லாத பாவி தானும்
சாதிப்பார் செம்பைவிக் கிரகம் பண்ணி
சாத்தியே பூமாலை யுடனே சாத்தி
வாதிப்பார் எல்லாருங் காலில் வீழ்வார்
வதையில்லாச் செம்பைத்தான் தங்கம் பண்ணக்
காதிலே கேட்டவுடன் என்னத்துக்கு
கலக்கமாய்ப் பிச்சையெடுத் துண்பே னென்பார் (37)

பிச்சையெடுத் துண்ணாமல் வாதஞ் சொன்னேன்
பிரபலமாய் வாழ்ந்துமே யிருந்து கொள்ளு
நச்சரவன் சடையானை நினைந்து கொள்ளு
நாடியே சிவயோக வழியில் நில்லு
நிச்சயமாய்த் திரேகத்தை நிறுத்திக் கொள்ளு
நீடூழிக் காலந்தான் மிகவி ருந்து
பச்சமாய்ச் சித்தறிவால் வாதம் பாரு
பதினாறு சித்தியாம் பாரு பாரே (38)

பார்க்கவே இரும்புதனை வீரத் தாலே
பதையாமல் கொன்றிட்டு வேதை பாரு
ஏர்க்குமே சரக்கெல்லாங் கெஞ்சி யாடும்
ஏழையைப் போலிருந்து உண்டு தேறு
தாக்குமே உலகத்தில் புத்தி யில்லார்
தாட்டியமாய் வாதமில்லை யென்று சொல்வார்
கோர்க்கவே தெரியாது ஊசி தன்னில்
கொடுக்காட்டால் வைவரவர் குணமில் லாரே (39)

குணமில்லா நூலில்லாப் பேருக் குத்தான்
குணமில்லை வாதத்தை நிறுத்தார் பாரு
பணமில்லாப் பேருக்கு வாத மில்லை
பக்குவமாய் முன்னிட்டுப் பின்னே வாங்கு
உணவான பதார்த்தங்கள் நாக்கி லுண்டால்
உண்மையாய் ருசிக்கு மது இல்லை யானால்
துணையான மொன் றுமில்லை யென்பா ரையோ
துடியான வாதிதா னிரும்பைப் பாரே (40)

இரும்பு நீலனுஞ் சேர்த்திடத் தீஞ்செடு ஏமம்
நரும்பு வீரனும் பண்ணையு மதன்வழிச் சேர்க்க
கரும்பொன் செம்பது ஆகிடும் மதிபத்து ஆகும்
துரும்பு தூணது ஆனது வாறுபோல் சொல்லே (41)

சொல்ல வேயயம் தன்னையே யுழைத்திடத் துயரம்
அல்லல் போய்விடும் பிறவிச்சா காமல்நல் வாழ்வு
நல்ல நின்றிடும் இரும்பினி லதிசயம் நாடு
தில்லை வாழ்ந்திடுஞ் சித்தர்கள் செயுமயச் செம்பே (42)

## வங்கவெட்டை

வங்க வெட்டையு மாகிடக் குமரிச்சா றதனில்
திங்கள் போலவே யுருக்கியே திறமுட னெட்டு
இங்கி தம்பெறச் சாய்த்துமே இனியென்ன அப்பால்
துங்க மாகிய கௌரியும் பலமென வெடுத்தே (43)

எடுத்து நஞ்சறப் பாஞ்சவன் சாற்றினா லரைத்து
அடுத்து மேமுள குண்டைபோல் உருட்டியே கிராசி
தடுத்து வெட்டையாம் வெட்டையி லிடைக்கிடை லிங்கம்
விடுத்தெ டுத்துமே சுட்டவே வினவுறேன் பாரே (44)

பாரு தாம்பரத் தகட்டினில் பலிக்கவே தாரம்
சேரு கன்னியா வரைத்துமே பூசிடு சிறக்க
காரு மேபுடம் வைத்திடக் கரியது போல
நீரு தன்னில் அரைத்துமே வன்னியில் சுட்டே (45)

சுட்ட லிங்கமேல் சுட்டியே யுமிப்புடம் கனியத்
திட்ட மாயிடு உருக்கிடு திடமதா யுருகும்
துட்ட வங்கத்தி லெடைக்கெடை யிட்டெடு களங்காம்
நட்ட மில்லாமல் துரிசினில் செம்பினில் ரெண்டே (46)

ரெண்டுக் கொன்றிடு உருக்கபின் னெடுத்துமே நிலையாய்
கண்டு மேமதி யெட்டுக்கு ரெண்டடிக் கனகம்
பண்டு தாயது சேர்த்துமே பதிவுட னூத்து
நன்று நன்றென ஏமமாம் நவிலவே நாடே (47)

நாடி யுப்புக்குங் காவிக்கு நின்றிடும் தாட்டித்
தேடி யேயுனைக் கேட்டிடு வார்களாம் திடமாய்

மூடி யேசொலாய் முத்தியும் வந்திடும் சித்தி
பாடி யூகியும் பார்த்திட வாதத்தின் பதிவே (48)

பதிவு மாகவே சிவன்சொல்லத் தேவிக்கும் பரிவாய்
நிதியு மாகிடத் தேவியும் நந்திக்கு நிரம்பச்
செதியு நத்தியு மசுவனி தேவருக் கருள
செதியுந் தாகவே தன்வந்திரி கேட்டருள் புரிந்தார் (49)

புரிந்த கத்தியர் புலத்தியர்க் கருள்செய்த புதுமை
தெரிந்து தேரருங் கேட்டுமே மனங்களி கூர்ந்து
பரிந்து யூகிக்குச் சொல்லிட யூகியுஞ் சொன்னார்
அரிந்து லகத்தில் மனிதர்கள் பிழைக்கவே பகர்ந்தார் (50)

பகர்ந்த வங்கத்தைப் பார்த்துமே பரிந்து நீ செய்து
சுகர்ந்து விற்றுமே செலவது செய்துமே தவத்தைப்
பகிர்ந்து பார்த்துமே காயத்தை நிறுத்திடு கற்றூண்
நகர்ந்து உண்டிடச் சித்தியாம் மலைதனில் நாடே (51)

## 34 – 51 உரை

(34-38 அறிவுரை) இரும்பினை வீரம் சேர்த்துக் கொன்று (வேதை பார்) மாற்றுப் பார். சரக்கெல்லாம் வசப்படும். பணமின்றேல் மாற்று இல்லை. முன்னே பணமிட்டுப் பின்னே எடு.

இரும்பும் துரிசும் சேர்த்து வீரமும் இலிங்கமும் கூட்டி அயச்செம் பாக்கு (நூலில் பின்னர் வழி தேர்) வெள்ளி பத்து மாற்றுப் பசும்பொன்னாகும் இரும்பினில் உழை. துன்பம் நீங்கும். விறவி சாகாமல் வாழ்வு நிலைபெறும். கற்றாழைச் சாற்றில்

வங்கத்தையுருக்கி எட்டுமுறை சாய்ப்பாயாக. பின்னர் கௌரி யொரு பலம் எடுத்து நஞ்சறப் பாய்ந்தான் என்ற மூலிகைச் சாறுவிட்டு அரைத்து மிளகு போல் உருட்டி வங்கத்தில் கிராசமிடு (தூவு) வெட்டையாகும் அதன் எடைக்கெடை லிங்கம் சேர்த்துக் கட்ட வழி கூறுவேன் கேள்.

அரிதாரத்தைக் கற்றாழைச் சாறு விட்டரைத்துச் செம்புத் தகட்டினில் பூசிப் புடமிடு. கரிபோலாம் நீர் விட்டரைத்து இலிங்கத்தின் மேல் கவசமிட்டு உமிப் புடமிடு. எடுத்து உருக்கு உருகும். முன்கூறிய வங்கவெட்டையில் எடைக்கெடை தாக்கு. களங்கமாகும். துரிசுச் செம்பில் இரண்டிற்கு ஒன்று கொடு. உருக்கு. பின் வெள்ளியில் எட்டுக்கு இரண்டிடு செம்பொன்னாம் தாய்ச் சேர்த்து ஊது. ஏமமாகும்.

உப்புக்கும் காவிக்கும் ஓடாது. உன்னைத் தேடி வந்து பாகம் கேட்பர். சொல்லாய். சித்தியும் முத்தியும் ஆகும்.

சிவன் அம்மை நந்தி அசுவனி தன்வந்திரி அகத்தியர் புலத்தியர் தேரர் இவர்கள் வழி வழிக் கேட்டு அவர் வழியில் யூகி முனிவர் தேரரிடம் கேட்டுச் சொன்ன முறை இது.

வங்கத்தைச் செய். வில். செலவிடு. தவம் செய். காயத்தை நிறுத்து. கற்றூணாக்கு. வலுக்கும்.

## நாகரசச் செந்தூரம்

நாடி யின்னொரு நாகத்தின் பாதையை நவில்வோம்
தேடி னாற்கிடை யாதுயர் வழியுமாஞ் சிறப்பு
கோடி சித்தர்கள் செய்திடும் பாகமும் சிணத்தில்
பாடி னேன்பல நூலினி லில்லை யாம் பரிந்தே *(52)*

பரிந்து நாகத்தைப் பதிவுடன் இலுப்பைநெய் படியில்
அரிந்து ருக்கியே சாய்த்திட அதிலறும் ஏழு
முரிந்தெ டுத்து நீ பலமது நாலினில் முதியோர்
தெரிந்து சூதமும் ஒன்றிடு உருக்கியே சேரே (53)

சேரும் போதினி லிலுப்பைநெய் யூற்றியே யுருக்கிக்
காருமே யதை ஆட்டியே யெடுத்துமே வைத்துப்
பாருமேவெடி யுப்புமே பத்துட னிறுத்துக்
காரச் சீனமு மிருபத்தி யஞ்சுடன் றாக்கே (54)

தாக்க வேநிறு திராவகம்
பாக்க வேயடை பரிந்துயச் சிவனவன் விந்து
ஏற்க வேயெடு சேருமே கல்வத்தி லிட்டுத்
தாக்க வேபுகை நீரைநீ விட்டிடப் பூவே (55)

பூவு மாகுமே ரவிதனி லிட்டுமே யெடுத்து
வீவு முன்ரச நாகத்தின் பிட்டினிற் சேர்த்துத்
தாவு தானெடை நேருடன் சேர்த்துமே புகைநீர்
ஆவ லாகவே யரைத்துமே காசியி லெரியே (56)

எரிக்க வேயதைச் சிவக்க மட்டுமே யெரித்து
நரிக்கிக் கொட்டியே நலமுடன் பார்க்கவே சிவப்பாம்
பரிக்கு மேன்கிடந் தாடுவீர் உமக்கிது பலனாம்
நெரிக்கி யேரவி நூற்றினி லிட்டிட வொன்றே (57)

ஒன்று இட்டிட வுறுதியாம் எட்டுமாம் உசத்தி
கண்டு தானெடு கயிலையும் உன்னிது கருது
நன்றுமே யிதை வைத்துமே ஞானத்தைப் பாரு
சென்று தான்மலை ஏறியே சஞ்சரி சித்தாய் (58)

## 52 – 58 உரை

நாகத்தை இலுப்பெநெய்யில் உருக்கிச் சாய்த்துத் தூயதாக்கி நாலு பலம் எடுத்து ஒரு பலம் சூதமும் சேர்த்து உருக்கு. உருகிச் சேரும் வேளை இலுப்பெண்ணெய் ஊற்றிச் சேர்த்து உருக்கி ஆட்டி எடுத்து வை. பின்பு வெடியுப்புத் திராவகம் இறக்கிக் கல்வத்தில் ரசம் விட்டுத் திராவகம் ஊற்று. உப்பாகப் பூக்கும் வெயிலில் வைத்து எடுத்து ரசநாகப் புட்டுடன் எடைக் கெடை சேர்த்துப் புகைநீர் விட்டரைத்துக் காசிக் குப்பியிலிட்டு எரி சிவப்பாகும். (சிவக்குமளவு எரி) செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு எட்டு வயது கயிலையும் உனதாம். ஞானம் பார். மலையேறி உலாவி வாழ்வாயாக.

## அய காரீயச் செம்பு

சித்த ருக்குளே செயமுறச் செம்பையுந் தேடு
பத்த னாய்த்திரி குருபணி விடையது செய்து
முத்த னாயயச் செம்பையுங் கற்றுக்கொள் முடிவில்
நத்தி னால்ரச வாதமும் கிடைக்குமே நவின்றேன் *(59)*

நவின்ற வாதத்தை முன்செய நாடிடில் நல்கும்
கவிய வேயயம் பெருமையைக் கனிவுடன் சொல்லத்
தவசு மாதவர் முனிவரும் தயங்கியே திரிந்தார்
அவம தான்கோடி சித்தரும் நல்கின நயமே *(60)*

நலய தாமம்அயச் செம்பையு நவிலவே கேளு
பயமி லாமலே அரப்பொடி பத்துமே நிறுத்துக்
கயம தாகவே காரியும் அயமெடை தட்டித்
தயவ தாகவே நாற்றமும் அவ்வெடை சேரே *(61)*

சேர்த்து அந்தெடை நிறுத்துமே அரைத்துட னயத்தில்
பார்த்து மேபுட மிடவது காத்துமே நிற்கும்
சாத்து வீரய மெடுத்துமே நீரப்பால் வைத்து
நேர்த்தி யாகவே உருக்கிடக் களங்கமாம் நேரே (62)

நேரதாகவே யுருக்கின களங்கத்தை வைத்துப்
பாருமேபலம் செம்பது பத்துமே நிறுத்துக்
காரு தான்குகை தன்னிலே யுருக்கிடு முகத்தில்
தாரு தாகவே கெந்தியும் ஏழரை நிறுத்தே (63)

நிறுத்து வீரனும் பண்ணையும் அரையுடன் காலாய்
இறுத்துத் தான்கல சத்தினின் பாலினா லரைத்துக்
கறுத்துப் போனபின் மிளகு போ லுண்டையும் பண்ணி
வறுத்து மேரவி வறுக்கிற முகந்தனி லீயே (64)

ஈய வேரவி யீம்போல் நொறுங்கிடு மேதான்
தீய வேபுடம் சிவக்க மட்டுமே போடு
காய முன்னய வெட்டையில் ரெண்டுக்கு ஒன்று
பாயச் சேர்த்துமே யரைத்துமே பொற்றலை நீரால்
தாய வேசிவக் கமட்டுமே (புடமது) போடே (65)

போட்டுத் தானெடு சிவக்குமே பொடித்துமே புகைநீர்
காட்டுத் தான்விடு ஓடவே பீங்கானில் காய்ச்சு
தாட்டு மாகவே குப்பியில டைத்துமே லெரிநீ
பாட்டு மாகவே யிப்படிக் கஞ்சுமே யெரியே (66)

எரித்தெ டுத்துமே செவ்வல்லிப் பூநிற மாகும்
வரித்து மேயெடு லோகத்தில் தனித்தனி யாகும்
நரித்து மேவய தெட்டரை புடத்தினி லிருக்கும்
கரித்த செந்தூரம் வேதையாம் முடிவினிற் கொள்ளே (67)

கொள்ள வேயயச் செம்பைப் போல் சாத்திரம் பாரு
துள்ள வேகொங்கை மீதினி லழகு போல் வாதம்
கள்ள மாகவே திரிந்திடப் பலனெனக் கருத்து
வள்ளல் சொன்னது வாதத்தை நிறுத்திடப் பாரே (68)

பார்த்தெடுத்திட அயமது செம்பையும் பரிவாய்க்
கோத்த நாலினில் பரியது பாஷையாம் குவியச்
சேர்த்துப் பாடினார் அதைநடப் பிச்சுட பலர் கோடி
காத்து யூகியும் வடமொழிக் கிரந்தத்தைப் பார்த்தே (69)

பார்த்த கொங்கைபோல் இரும்பையு நாடியே பாரு
சேர்த்துப் பெண்பெணும் அடுத்திட ருசியது இல்லை
காத்திடக்குருச் சொல்லுவார் கனிந்துமே நூலை
ஏத்தி னால்வரும் எளிதல்ல நூலையும் பாரே (70)

பார்த்துத் திட்டமாய் நிறையது பாகமாய்ச் செய்தால்
சேத்தி னாவரி யரிக்கின்ற வன்களை பாரு
நாத்து நட்டது போலவே நளினமாம் வாதம்
காத்திடரச வாதமாம் கனிந்துமே தேடி (71)

தேடி னேனயச் செம்பையுங் காண்கிலேன் சிறப்பாய்ப்
பாடி யேபல நூலுமே பார்த்துமே மயங்கி
வாடி னேன்வகை தொகையுடன் பதினெட்டுப் பேரும்
நாடி யேதொழு திறைஞ்சியே நன்மையாய் நடந்தேன் (72)

நடந்தயச் செம்பைக் கேட்டுமே பாகமாய் நவிலத்
தொடர்ந்து பாகமுஞ் சேர்க்கிற இனங்களும் துடியாய்
அடர்ந்து வேலையைப் படித்திட்டு அயச்செம்பை எடுத்துக்
கடந்து லகத்தில் மானிடம் பிழைக்கவே கூர்ந்தேன் (73)

கூர்ந்து புத்தியாய்க் கூட்டி யேயயச் செம்பைத்
தேர்ந்தெ டுத்துமுன் செலவுக்குத் தக்கதாய் எடுத்து
ஆர்ந்து பின்புநீ ஆடிடு அதிசய மாகச்
சோர்ந்தி டாமலே குளிகையைச் செய்துமே சுத்தே (74)

## *59 – 74 உரை*

இனி அய காரீயச் செம்பு சொல்வேன். அரப்பொடி பத்துப் பலம் காரீயம் பத்துப் பலம் கெந்தி பத்துப் பலம். அயப்பொடியும் ஈயமும் தட்டிக் கெந்தி சேர்த்து அரைத்துப் புடமிடு. எடுத்து உருக்க களங்காகும். பின்பு கெந்தி ஏழரை வீரம் அரை லிங்கம் கால் இவற்றைக் கலசப்பால் விட்டரைத்துக் உருண்டையைத் தூவு. செம்பி ஈயம் போல் நொறுங்கும். எடுத்துச் சிவக்கு மளவுப் புடமிடு. முன் அயவெட்டையில் இரண்டுக்கு ஒன்று சேர்த்துப் பொற்றலை நீர் விட்டு அரை. சிவக்கும் வரைப் புடமிடு. எடு. பொடி. பீங்கானில் புகைநீர் விட்டுப் பொடியை விட்டுக் காய்ச்சு. இங்ஙனம் ஐந்து முறை எரி. செவ்வல்லிப் பூ நிறமாகும். உலோகத்தில் தனித் தனி கொடு. எட்டரை மாற்றாகும்.
*68 - 74* அறிவுரை.

## தரிசுச் செம்பு

சுத்த வேயயச் செம்பையுஞ் சொல்லுவேன் சுருதி
பத்தி யேயதைச் செய்திட ஞானமும் பலிக்கும்
முத்தி வந்திடும் நீலனும் முனியறு பத்துச்
சித்த மாகவே கெந்தியும் பலமினிச் சொல்வேன் (75)

சொல்ல வேபலம் பத்துடன் சேருநீ (கெந்தி)
நல்ல தாகுமே சூடனும் அதிலெடை பாதி

வெல்ல வேயரை வீரனம் அதிலிடு கால்தான்
மெல்ல வேயரை அரைத்திட புகை நீரினால் அரையே (76)

அரைத்து வில்லையாய் ரவிதனி விட்டுமே (பின்பு)
நிரைத்துச் சுண்ணமும் உப்புமே நேருடன் சேர்த்து
வரைத்த ரைத்தமே புடமிடு எடுத்துப் பின் கேளு
பரைத்து முன்வில்லைக் கங்கியு மிட்டுமே புடமே (77)

புடமு மிட்டுமே யெடுத்துடன் சுண்ணத்தைப் பிரித்துக்
கடம தாக (வே) யுள்ளதில் மருந்ததைப் பாரு
இடம தாமிது கருத்துமே நின்றிடு மிதனை
நடம தானரப் பொடியதி லெடையெச் சேரே (78)

சேர்த்த ரைத்திடு செவ்வல்லி ரசத்தினா லரைத்துப
பார்த்து வில்லையாய்த் தட்டியேரவி தனில் வைத்துக்
காத்துத் தான்படி எடுத்து முன் சுண்ணத்தில் கலசம்
சாத்தியே புடம் தீயவே போட்டுமே யெடுத்தே (79)

எடுத்து மேமேல் கவசத்தைப் பிரித்துமே பாரு
அடுத்துத் தான்கரு செப்பதா யிருக்குமே யதிலே
தொடுத்துத் தான்புகை நீரையும் விட்டுமே துடியாய்க்
கடுத்துத் தானுமி நெருப்பினில் வறுத்துமே காசி (80)

காசி மேரடை கிடமதில் மணலது விட்டு
வாசி னாலக்கி னியையிட்டு அதினடு மேலே
தாச னாகவே குப்பியைவைத்துமே யெரிநீ
பேசி னால்வரு மோ இது சிகப்பது முருக்கே (81)

முருக்கம் பூவென இப்படி அஞ்சுமே எரிக்க
திருக்கு மேபவ ழத்திடை நீறும தூக்கும்

பெருக்க வேயிடு செம்பினில் நூற்றுக்கு ஒன்று
பருக்க மாற்றுமே பத்துத்தான் காணுமே பகர (82)

பகர்ந்த செந்தூரம் பதிவுடன் மண்டலங் கொள்ள
நகர்ந்து நோயறும் நானிலம் முழுவதும் நாட்டில்
உகர்ந்து காட்டிடும் உண்மையாம் திரேகமும் சித்தி
வகர்ந்து யூகிமா தவமுனி யருளிய பரிசே (83)

## 75 – 83 உரை

துரிசு பத்துப் பலம். கெந்தி பத்துப் பலம். சூடன் ஐந்து பலம் அரை. அதில் வீரம் இரண்டரைப் பலமிடு. அரை புகைநீர் விட்டு அரை. வி. த. கா. சுண்ணாம்பும் உப்பும் சேர்த்தரைத்துப் புடமிட்டெடுத்து அந்த வில்லைகளுக்குக் கவசமிடு. புடமிடு எடுத்து அதனெடைக்கு அரப்பொடி சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டு நன்றாய் அரை. வி. த. கா. முன் சுண்ணக் கவசமிடு புடமிடு. எடுத்து அதில் புகை நீர் விட்டு அரைத்து உமி நெருப்பினில் வறுத்துக் குப்பிக்குள் போட்டுப் பானைக்குள் மணலிட்டு அதன்மேல் குப்பியை வைத்து எரி முருக்கம் பூவாகும். இங்ஙனம் ஐந்து முறை எரி எடுத்துச் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு பத்தரை மாற்று. நாற்பது நாள் உண். உடல் வலுக்கும்.

## அயச் செம்பு

பரிசு இன்னொரு அயத்தினின் செம்பையும் பகரப்
பிரிய மாகவே சொல்லுவேன் உலகவா திகளே
துரிய மாகிட உரைசெய்வேன் தொல்லுல குள்ளே
பரிய தாகவே பார்த்திட மோகங்கள் தீரும் (84)

தீரும் பெண்ணையும் கண்ணினால் காவே மோகம்
ஆரும் போகமே யாசையுந் தீர்ந்திடும் அதனால்
சாருந் தாயைச் செம்பையுஞ் சாத்திர மதனில்
பாரும் பாருமே சொல்லினால் முடி யுமோ பாரே (85)

பார்த்தெ டுத்திட மாற்றுக ளாகுமே பதிவாய்
சேர்த்து மேசெய்ச் சிறப்பதாம் மாத்துக ளேழு
நேர்த்தி யாகவே யயமது நிர்ணய மாகும்
கார்த்திடக்கரும் பொன்னையுங் காணவே முடியும் (86)

முடிவு மாதவர்க் கிட்டிடும் அயமது செம்பு
வடிவு மாகவே யுழைத்திட வருமென ஏமம்
துடிய தாகவே யெத்தினால் சொன்னதி னாலே
கடிது கண்டிடே காரண விதமினிச் சொல்லே (87)

சொல்ல வேபல தோஷமே போக்கிடுஞ் செம்பை
மெல்ல வேசொல்வேன் மேன்னமயாங் காரியு மொன்று
நல்ல தாகுமே ரவியதி லெடைசரி சேர்த்து
மல்ல தாகவே உருக்கிடு மயமதா யுருகம் (88)

உருக்கி யேமுகந் தனிலெடை உருக்கிற முகத்தில்
நெருக்கி நாத்தமும் இரதமும் நேரதாம் கிராசம்
பெருக்க வேகொடு கரியது தூளது வாகும்
நருக்கி யேகொட்டி கறுப்பியை யிடையது சேரே (89)

சேர்த்த வைத்துநீ யுருக்கியே யூதிடச் செம்பாம்
பார்த்தத் தான்மதி யெட்டுக்கு ஒன்றிட ஏழாம்
நாத்தி சையெலாம் புகழுவார் நாதர்கள் பாரு
ஏத்த வாருனை யின்பமாய்ச் செய்திடு பாகே (90)

பாகந் தப்பினால் பாகத்தை யின்னொரு தரம்பார்
யோக சாதனை செய்திடில் இரும்பினில் பாரு
ஆக மானதோர் அன்புடன் களங்கினில் சோதி
ஏக மாகவே யிருக்கலாம் முத்தியு மிதுவே (91)

இதுவே சத்தியம் சரக்கெடு சத்துரு வாலே
அதைத்த கர்த்திடு கற்மிசம் விலகியே யேற்கும்
பதைய மித்துரு பக்குவ மாகவே சேரு
கதைய தாகவே செம்பொனு மாகுமே கணக்காம் (92)

## 84 – 92 உரை

(84 - 87 அறிவுரை) காரீயம் செம்பும் வகைக்கு ஒரு பலம் எடுத்து உருக்கு. உருக்கு முகத்தில் ரசமும் கெந்தகமும் நேர் எடை கிராசமிடு கரிய தூளாகும். கொட்டி அதனெடை காரீயம் சேர்த்து அரைத்து உருக்கியூது செம்பாம். வெள்ளியது எட்டுக்கு ஒன்றிட ஏழு மாற்று. பாகம் தப்பினால் மீண்டும் ஒருமுறை செய். இரும்பிலும் செய்து பார். களங்கினை ஆய்ந்துபார் இது சத்தியம். பகைப் பொருள் கொடுத்து நொறுக்கு. நட்புப் பொருள் கொடுத்து உயிர்ப்பி செம்பொன்னாகும்.

## துருசுச் செம்பு

கணக்க தாகவே துரிசினி லொருபல த்துக்கு
இணக்க மாகவே காற்பலம் இருந்திடும் ரவியாம்
துணக்க மாயெடு ரவிநிறு தூக்கியே நிறையாய்
உணக்க மில்லாமல் சரக்கிடச் சகலமும் சித்தி (93)

சித்தி யாகவே நிறைசரி யாகிட ல் செயமாம்
முத்தி யாகவே சத்துமா யுருகிடு மூசை
பத்தி யாகவே நிறைதப்பில் சீர்தட்பும் பாதை
வெத்தி யில்லையாம் வெறுமரம் புதையெயா வாறே (94)

வாறு கேளயச் செம்பையும் பார்த்திட வலுவாம்
தேறு வார்களாம் வாதத்தில் சிறிதுபேர் தாமும்
நீறிட் டரவி ரசமது கட்டியே நிமிஷம்
சாறி டப்பெரி யோர்களு மாவரே சத்தில் (95)

சத்தெ டுத்திடி ல் சகலரும் வாழ்வர்கள்
முத்தி யாகுவர் சுழிமுனை யறிந்தவர் போல
எத்தி னால்முடி யாதுமே அயத்தினில் பெருமை
சத்தி டச்செம்பு தானது நீலனைப் பாரே (96)

பாத்திடச்சவுக் காரத்தை நீற்றிடத் துருசு
எத்திடச்செம்பு நீறிடும் வேதையு மாகும்
கோத்தி ரஞ்செயம் குணம்தாய் வாழ்வுமே உண்டாம்
சேத்திடச்செய சின்மய மாகுமே சிறப்பாம் (97)

சிறப்பு நல்குமே முன்னேதான் களங்கத்தைப் பாரு
நறப்பு டன்பின்னை நாடியே வழலையைப் பேசு
அறப்பு டன் நிறை பாகத்தை விட்டிடா வாதி
துறப்ப தாகுமே வாதமும் வசியமு மாமே (98)

வசிய மாகவே யிரும்பதை யுழைத்திடப் பலனாம்
கசிவு வந்திடும் காரணம் விதமினிக் காணும்
பசியும் வந்திட இரும்பதை விற்றுமே செலவு
வசிக ரம்பெறு மாதவ யூகியும் வகுத் தாரே (99)

வகுத்த தோர் ரவி விடைப்பாக ரேயம் மைக்கும்
பகுத்த ருத்த அம்மையு நந்திக்குச் சொல்லிட (கெந்தி)
பகுத்த விசுவனிக் கருளிடப் பாகாய் . . .
முகுத்துத் தன்மந்திரி கேட்டுமே நிமிஷத்தில் சொன்னார் (100)

சொன்ன போதுதன் மந்திரிக் கருளின சுருதி
நன்ன யம்பெற்ற தன்மந்திரி அகத்தியம் நவில
கன்னல் போலவே அகத்தியர் புலத்தியர்க் கருள
இன்னி லத்தினில் புலத்தியர் தேரருங் கேட்டார் (101)

கேட்ட போது தேரரும் யூகிக்கங் கருளி
நாட்டி லேசொல்ல நாட்டினில் வாதிகள் நம்பிப்
பாட்டி லேபடி பார்த்திடத் தங்கமு மாகும்
கூட்டி லேயேடைத் திலதுபோ லவேயிரு நீயே (102)

இருந்திடரச வாதமும் கண்டாய்ந் தொருவர்
வருந்திட வொரு வாதிக்குச் சொல்லவும் வேண்டாம்
நருந்தி டச் செயமுனிவரும் நம்பிட நாளும்
திருந்து மாதவ சொல்லிடத் தண்மையு மாமே (103)

## வேறு

ஆமேதான் வாதத்தைக் கண்ட போது
அடிதொழுது கற்பூர தீபத் தாலே
வாமேதான் சோடசமாம் உபசா ரத்தை
வடிவாகப் பண்ணியே வைத்துக் கொள்ளு
ஏமேதான் ஒருவரிடம் சொல்ல வேண்டாம்
எளியனா யிருந்தமே யுண்டு தேறு

தாமேதான் தருது ரும்பாய்த் திரிய வேண்டாம்
தாட்டிகமாய்த் திரிந்தாக்கல் பொய்யாப் போமே (104)

பொய்போகா யூகியைத்தான் நித்தம் பூசி
போக்கோடே கைபாகம் புலன றிந்து
மெய்யாகச் செய்திடவே ஏம மாகும்
மேதினியி லுசத்தியாய் இருக்க லாகும்
வையத்தி லுனைப்போல ஈடுண்டா மோ
வகையாகப் பாகத்தை மருவிப் பாரு
செய்பாகந் தப்பினால் பொய்யாய்ப் போகும்
சிறப்பாக வாதத்தைச் செய்தி டாயே (105)

## 93 – 105 உரை

ஒரு பலத்துரிசில் காற்பலச் செம்பு இருக்கும். எடுத்துச் சரக்கில் இட எல்லாம் வாய்க்கும். அளவு நிறை வாய்த்தால் வெற்றி நிறைதப்பில் சீர் தப்பும். அயச்செம்பைப் பார். நீறிய செம்பு ரசம் கட்டும். சத்தெடுத்தால் எல்லா வாழ்வும் வரும். அயத்தின் பெருமை மிகுதி. சத்திடத்துரிசினைப்பார். சவுக்காரத்தை நீற்றத் துரிசு செம்பு இவை நீறும். முதலிற் களங்கு பார். பின் வழலையைப் பேசு. அதன்பின்பு நிறைபாகம் அறி. வாதமும் வசியமுமாகும். இறைவன் இறைவிக்கு அருள். அதன்பின் வழிவழியாய் முன்போல் தேரர் யூகிக்கு உரைக்க அவர் உலகிற்கே உரைத்தருளினார்.

வாதம் கண்டவுடன் தாயின் அடிதொழுது கற்பூர தீபம் (சோடச உபசாரம்) பதினாறு வகை ஆலாத்தி காட்டி வைத்துக் கொள் வெளியே சொல்லாதே யூகியைப் பூசை செய். உலகில்

உனக்கு ஈடு உண்டோ? உலகில் உயர்வாக இருக்கலாகும் செய்பாகந்
தப்பினால் தானே பொய் சிறப்பாக மாற்றுச் செய்

## திரு மூர்த்தி பற்பம்

செய்திடவே திருமூர்த்தி பற்பந் தன்னைச்
சிறப்பாக உலகத்தில் மானிடர்க்கு
எய்திட்ட நோயெல்லாம் ஓடிப் போக
எனையாண்ட மூர்த்தியுமே இயம்பினார்பார்
கைதிடவே வாதங்கள் செய்யு முன்னே
கடிதாக இதைவைத்து வைத்தி யஞ்செய்
பைதிடவே பணங்காசு சம்பா தித்துப்
பரிவாக வாதத்தைப் பார்த்தி டாயே (106)

பார்த்திடவே வீரமது பலமோ பத்து
பதிவாகத் தண்டவாளம் பலமும் ரெண்டு
சேர்த்திடவே இவைரெண்டும் நேக ரைத்துச்
சிறப்பாகப் பார்த்திடவே ரசமுங் சுக்கும்
நாத்திடவே ரசமெடுத்து அப்பால் வைத்து
நலமான இலிங்கமது பலமும் பத்து
ஏத்திடவே திராவகத்தை விட்டு ரொம்ப
இழுத்த ரைத்துக் கல்வத்தி லிதமா யாட்டே (107)

ஆட்டிட்டும் பீங்கானில் இட்டு மெல்ல
அன்பாக உமிநெருப்பில் வறுத்துப் போடு
நாட்டிடக் கிடமிதிலே போட்டு மூடி
நலமான ஏழுமண் சீலை செய்து

ஒட்டிட்டு அடுப்பேற்றிச் சாமந் தானும்
இதமாக எரித்திடவே ரசமும் ஏறிக்
காட்டியிடும் மயிர்க்குச்சி தன்னி லேதான்
கனிவாக வழித்துமே எடுத்துக் கொள்ளே (108)

கொள்ளவே வீரரசம் பலமும் அஞ்சு
கொடியாக இலிங்கரசம் பலமும் அஞ்சு
மெள்ளவே பூரமது பலமும் அஞ்சு
மிடுக்காகத் திரிரசமும் ஆச்சு தப்பா
கள்ளமாய் இதுமூன்றுஞ் சேர்த்த ரைத்துக்
கனிவாக இருசாமம் பொடியாய்ப் பண்ணித்
துள்ளவே இருசட்டி உரஞ்சிச் சேரு
துடியாக வொருசட்டி நிறைய வுப்பே (109)

உப்பெல்லாம் வறுத்துமே சட்டி யிட்டு
உண்மையாய் நடுவதனில் ரசத்தை விட்டு
நப்பாக மேற்சட்டி கவிழ்த்து மூடி
நலமாக ஏழுமண் சீலை செய்து
சுப்பாக அடுப்புதனி லேத்தி நீயும்
கனிவாகக் கண்பதியும் பூசை பண்ணி
மெய்ப்பாகக் கடிகைதான் நூறெ ரிப்பு
மேன்மையாய் எரித்திடவே பதங்க மாமே (110)

பதங்கத்தை மயிர்க்குச்சி தன்னால் கிண்டிப்
பதிவாகக் கிண்டியே வைத்துக் கொள்ளு
நிதமயமாய்ச் சித்தர்களைப் பூசை செய்து
நிர்ணயமாய்ப் பணவெடை தான் வெல்லத் திட்டுக்
கதம்பமாய் மண்டலத்தில் தீர்ந்து போகும்
காரியமாய்ச் சிவனாணை யெல்லாந் தீரும்

விதம்படாய் குட்டம்பதி னெட்டுந் தீரும்
· விருப்பமாய் அம்மையின்மே லாணை யாமே (111)

ஆணையாம் குன்மங்கள் எல்லாம் தீரும்
அடைவாக நந்தியின்மேல் ஆணை யாகும்
காணலாம் வாதம்எண் பதுவுந் தீரும்
கடிதாக அசுவனிமேல் ஆணை யாகும்
மாணலாம் பித்தமெலாம் தீர்ந்து போகும்
பதிவாகத் தன்வந்திரி தன்மே லாணை
வாணலாம் காசமெலாம் தீர்ந்து போகும்
வடிவான வகத்தியர்மே லாணை யாமே (112)

ஆமேதான் விஷப்பாண்டு அணைத்துந் தீரும்
ஆதியாம் புலத்தியர்மே லாணை யாகும்
சாமேதான் விஷபேதி கிராணி தீரும்
கனிவான தேரரின்மே லாணை யாகும்
தாமேதான் முப்பத்து முக் கோடி தேவர்
தம்மேல் ஆணையுண்டு தப்பா வாறு
வாமேதான் திருமூர்த்தி பற்பத் தாலே
வகையாகத் தீர்ந்திடுமே யவிழ்தஞ் செய்யே (113)

செய்யவே கைபாக மாக வைத்துச்
சிறப்பாக வைத்தியங்கள் மிகவும் பண்ணு
வையகத்தி லுனைப்போலே செய்வா ருண்டோ
வடிவாக வயித்திங்கள் பலிக்கும் பாரு
மெய்யாகச் சொல்லிவிட்டேன் வயித்தியம் பாரு
மேன்மையாய் வாதங்கள் மிகவும் பாரு
பையவே பார்த்தாக்கால் எல்லா மாகும்
பதிவாக வயித்தியந்தான் பண்ணித் தேறே (114)

தேறவே சிறிதுபேர் இலிங்கந் தன்னைத்
திறமாகத் கட்டியாய் வைத்துப் பார்த்து
தாறவே வியாதிகட்குக் கொடுத்துப் பார்த்துத்
தாட்டிகமாய்ப் பொய்யாகும் வியாதி போகா
ஆறவே பதங்கந்தான் ஆதி யாகும்
அடைவாக வியாதிதான் ஓடிப் போகும்
வாறவே பதங்கத்தை வைத்தால் வியாதி
வலுவாகப் போகுமென்று உரை செய்தாரே (115)

உரைசெய்தார் சிறிது பேர் பதங்கந் தன்னை
உற்றுணர்ந்து பாராமல் தள்ளி னார்கள்
வரைசெய்த கட்டியாய் நீற்றி னாக்கால்
வலுவாகும் வியாதிகள்தான் போகு மென்று
நிரைசெய்து யோசிக்க நினைத்துப் பார்த்து
நீடூழி காலமெல்லாம் அலைந்து சுற்றி
கரையேற மாட்டாமல் பேராசைப் பட்டுக்
கலங்கியே திரிந்தலைந்து மாளு வாரே (116)

மாளாமல் பதங்கத்தை வைத்துத் தேறு
மதியழிந்து போகாமல் வியாதிக் குத்தான்
நீளாகக் கொடுத்துமே நோய்கள் போக
நிர்ணயமாய்ப் பதங்கமென்று தள்ள வேண்டாம்
மாளாகக் கட்டியாய் நீற வென்று
பண்பாக வலைந்துமே திரியா தப்பா
வாளாக வெல்லுமே பதங்கந் தானும்
வகைதொகையாய் வைத்துமே மதித்தி டாயே (117)

மதித்திட்ட சூதத்தை முன்னே வைத்து
மனதார வியாதிக்குக் கொடுத்துத் தேறி

விதித்திட்ட பதங்கத்தில் வெகுகோடி வித்தை
விதமென்னால் சொல்லவுமே முடியா தப்பா
கதித்திட்டுக் கட்டியாய் நிறுத்து மென்று
கருத்தாலே நினையாதே பதங்கம் வைத்து
நிதித்திட்டு வியாதிகட்குக் கொடுத்துத் தேறு
நிர்ணயமாய்ப் பதங்கத்தை வைத்துத் தேறே (118)

## ஆனந்தக் களிப்பு

வேதையைச் சொல்லுவன் கேளு - நல்ல
வேதாந்த சற்குரு பாதம் நினைத்து
பாதையாய் நீலனெடுத்து - இதில்
பத்துவெங் காரிதான் பலமது பத்து (119)

ஆதர வாக நிறுத்து - ரெண்டும்
அப்புரம் பாணியை விட்டு அரைத்து
காதலாய் வில்லையாய்க் கட்டி - ரவி
காயவே வைத்திட்ட கலினுள் ளிட்டு (120)

சேதம்வா ராமல் புடத்தில் - அதைத்
திட்டமாய் இட்டுக் குகைதனில் வைத்து
ஊதி யுருக்கிடச் செம்பாம் - ரெண்டு
உற்று நிறுத்துச் சுத்திசெய் தோழி (121)

## செம்பு சுத்தி

செம்பைத் தகடாகத் தட்டி - எடை
சேர்த்திடு தான்வெடி சீனமு நேரே

வம்புசெய் யாம லுருக்கிச் - செம்பை
வாகாகக் கரியோட்டில் தாழ்த்து தோழி (122)

ஊதியே யெடுத்துப்புத் தன்னில் - அதை
யுற்றுமே தோய்ச்சிடச் செம்பது கட்டும்
பாதி மதியணி சொன்ன - நல்ல
பாகம தாகுமே யேமமு மாகும் (123)

## தாம்பரம் நொறுங்க

நாத்தமு மொன்றரை யாகும் - இதில்
நல்ல சுடர்க்கொடி யோனுமே பாதி
சேர்த்திட வீரமுங் காலாம் - இதைச்
சித்திர மாகவே பாணி தனிலே (124)

நேக அரைத்துமுச் சாமம் - ரவி
நேர்த்திய தாகவே மேலி கவசம்
பாகமாய் மேற்சீலை சுற்றிப் - புடம்
பத்தினைப் போட நொறுங்குமே தோழி (125)

## அயச்செம்பு

நொறுங்கின சத்தை யெடுத்து - எடை
நேராகத் தானே கருப்பியைச் சேர்த்து
நறுங்கிடத் தானே யரைத்து - வில்லை
நாடியே தான்ரவி காயவே வைத்து (126)

பெரும்புடந் தன்னிலே போடு - எடு
போக்கோடே தான்மூசை தன்னிலே யிட்டு

வரும்படி சேரவ்வு ருக்கக் - காவி
வந்திடுஞ் செம்பது தானது கட்டு (127)

கட்டின செம்பை யெடுத்து - மதி
காட்டிடப் பத்துக்கு ரெண்டுமே சேரு
கெட்டியாய்த் தங்கமும் ரெண்டு - அதில்
சேர்த்துக் கரியோடு தன்னிலே யூது (128)

அத்துமே தானேழு காணும் - ஏமம்
ஆகுமே உப்பிக்குங் காவிக்கும் நிற்கும்
வித்துச் செலவுகள் செய்து - ஞானம்
வீரிய மாகவே யோகமும் பாரு (129)

## அயச் செம்புச் செந்தூரம்

செந்தூரம் செய்யவே கேளு - அயச்
செம்புமே நாலு நிறுத்திடு வாதி
முந்திய தங்கமும் ரெண்டு - இதை
முக்கிய மாக வுருக்கு முகத்தில் (130)

ஈந்திடு நாகமு மொன்று - ரண்டு
மின்பமாய்த் தானே யுருகியே நிற்கும்
பாய்ந்திடு முன்னயச் செம்பு - இதில்
பாய்ச்சிடு நாலு பரிவதா யெல்லாம் (131)

தானே யுருகியே நிற்கும் - முகந்
தன்னிலே தான்ரண்டு கெந்தியும் சூதம்
வானேகத் தானே கொடுநீ - உடை
வாகாகத் தானுடை கல்வத்தி லிட்டு (132)

இட்டு கருப்பிடை சேர - அரை
இன்பம தாகவே தான்புகை நீரை
விட்டு அரைத்து தோழி - காசி
வீரிய மாகவே தானே எரிக்க (134)

எட்டரை மாற்று இருக்கும் - இதை
இன்பமாய் வைத்துநீ செலவுகள் செய்து
திட்டமாய்த் தான்வழி யேறு - சிவன்
தீர்க்கமாய் வந்துமே நிர்த்தஞ்செய் வானே (135)

## குரு பரம்பரையாய் வாதம் உபதேசம் செய்தது

சித்தர் மரபினில் நில்லு - சிவ
சித்தம் பலத்தையு நித்தத் துதியே
..........................................................................
.......................................................................... (136)

ஆதி சிவனும் உமைக்கு - இதை
அன்பாகத் தானே யருள வுமையும்
மாதுமை நந்திக்குச் சொல்ல - நந்தி
மாட்டியே தான்விசு வனிதேவர்க் கருள (137)

கேட்டு விசுவனி தேவர் - இதைக்
கெட்டியாய்த் தன்வந்திரி தன்னிடம் சொல்ல
முட்டிட மாமுனிக் கருள - முனி
மூர்த்தியும் தான்புலத் தீசர்க் கருள (138)

அருளப் புலத்தியர் கேட்டு - இதை
அன்பான தேரருக் கருளவே தேரர்

திருவருள் யூகிக்குச் சொல்ல - அவர்
திட்டமாய்த் தானுலகத்தினில் சொல்ல (139)

உலகத்து மானுடர் பார்த்து - இதை
உண்மையாய்ப் பாகம் நிறையது கண்டு
பலகலை நூலையும் பார்த்துச் - செய்யப்
பாலிக்கும் வாதமும் சித்தியாந் தோழி (140)

## யாருக்கும் பாகஞ் சொல்லாதே

சொன்னதொரு பாகமெல்லாம் சொன்னா னாகில்
சொற்பெரிய தலைதெறிக்கும் இடியும் வீழும்
கன்னல்போல் பேசியே கழுத்த றுப்பார்
காட்டிலே திரிந்தாலு மகப்ப டாது
இன்னிலத்தில் விலைக்குவிற்கும் பொருளே யல்ல
இடும்பரெல்லாம் பணங்கொடுப்பார் நூவீ யாதே
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் நற்சீ டர்க்கு
நாடியே சொல்லிவிடு நயம தாமே (141)

## சீடருக்குச் சொல் அயத்தையே உழைத்துப் பார்

நயமாகப் பொய்யாத பாவி யர்க்கு
நாடியே சொல்லாதே நந்தி யாணை
பயமான சீடனென்றால் ஆணை யில்லை
பதிவாகப் பாகமாய் முறைகள் சொல்லு
மயமான வகாரந்தான் சிவசொத் தப்பா
மயங்காமல் செய்திடுநீ மதிபோ காதே
அயமான தன்னையே உழைத்திட் டாக்கால்
அருள்பெருகும் சிவஞானம் வருகும் பாரே (142)

## 106 – 142 உரை

வீரம் பத்துப் பலம். தண்டவாள இரும்பு இரண்டு பலம் இவற்றை நெகிழ அரைத்துப் பார்க்க ரசம் கக்கும். எடுத்து வை பின்பு பத்துப் பல இலிங்கத்தில் திராவகம் விட்டு இழுத்தரைத்துக் கல்வத்தில் மெல்ல ஆட்டு. பீங்கானில் போட்டு உமி நெருப்பில் வளு குடத்திலிட்டுக் கவிழ் சட்டி மூடிச் சீலை மண் செய்து அடுப்பேற்றி இன்பமாக எரி ஒருச் சாமத்தில் ரசம் மேலே எறி இருக்கும். மயிர்க்குச்சு கொண்டு வழி.

வீரரசம் அஞ்சு பலம் இலிங்க ரசம் ஐந்து பலம் பூரம் ஐந்து பலம் திரிரசமாச்சு. இரண்டு சட்டி எடுத்து வாய்வாயைப் பொருத்து நன்றாய் உரசிச் சேர்த்து ஒரு சட்டியில் நிறைய வறுத்த உப்பிட்டு நடுவில் பள்ளம் செய்து திரிரசம் வைத்து மேற்சட்டி மூடி ஏழு மண் சீலை செய்து உலர்த்தி அடுப்பேற்றி நூறு நாழிகை எரி கணபதிக்குப் பூசை செய்து எரி. பதங்கமாகும். மயிர்க்குச்சியினால் கிண்டி எடு. சித்தர்களைப் பூசை செய். பணவெடை வெல்லத்தில் கொடு. மண்டலத்தில் எல்லா நோயும் நீங்கும் பதினெட்டுக் குட்டமும் போய்விடும். அம்மையின் திருவடியாணை கன்மங்கள் எல்லாம் தீரும் நந்தியின் மேல் ஆணை அசுவனி மேல் ஆணையாகச் சொல்கின்றேன் வாதம் எண்பதுவும் போயே போகும். தன்வந்திரியாணையாகப் பித்தம் நாற்பதுவும் ஓடிப் போகுமய்யா.

அகத்தியர் ஆணையாகக் காசமெல்லாம் அகன்றே போகும். புலத்தியர் ஆணையாக விட பாண்டு விட்டுப் போகும் தேரர் ஆணையாக விட பேதி கிராணி போகும். முப்பத்து முக்கோடி தேவர் ஆணை தப்பாது. வகையாக மருந்து செய். 114 - 118 அறிவுரை.

## இனி மாற்று உரைப்பேன்

துரிசு பத்துப் பலம் வெங்காரம் பத்துப் பலம் பாணி விட்டரை. வி. த. கா. அகலிலிடு. சேதப்படாமல் புடமிடு. குகையில் போட்டு உருக்கு செம்பாகும். அதனைத் தகடாகத் தட்டு. வெடியுப்பும் சீனமும் உருக்கி அதில் போட்டு ஊதி எடு. எடுத்துச் சீனமும் வெடியுப்பும் குழப்பிய குழம்பில் தோய்த்திடச் செம்பு கட்டும். சிவபெருமான் சொன்ன பாகம். செம் பொன்னுமாகும்.

கெந்தகம் ஒன்றரைப் பலம் சூடன் முக்காற் பலம் வீரம் காற்பலம் பாணி விட்டரைத்து செம்பிற்குக் கசவசமிடு. சீ. ம. செ. பத்துப் புடமிடு. நொறுங்கும். நொறுங்கின சத்தை எடுத்து அதனெடை காரீயம் சேர்த்து அரை வி. த. கா. பெரும்புடமிடு. உருக்கு செம்புகட்டும். வெள்ளி பத்துக்கு இரண்டு இச்செம்பும் தங்கம் இரண்டும் சேர். கரியோட்டில் வைத்து ஊது. ஏழு மாற்று அயச்செம்பு நாலு தங்கம் இரண்டு சேர்த்து உருக்கிநாகம் ஒன்று கொடுக்க உருகி நிற்கும். கெந்தியும் சூதமும் வகைக்கிரண்டு கொடு. உடை. கருப்பி ஒன்றிடு. எட்டரை மாற்று. இது சிவன் முதலாக முன்போல் வழிக்கு வழி நல்மாணாக்கர்க்குச் சொல். ஆணையில்லை.

## சூதத்தை நீற்றினால் செம்பு பழுக்கும்

வருகவே சூதத்தை முன்னே வைத்து
வகையாக நிறுத்திட்டால் வாத மாகும்
தருகமே பொன்மயமாய் வந்து சேரும்
தக்கதொரு செம்பதுதான் பழுக்கும் பாரு
கருகவே செய்தாக்கால் ஒன்று மில்லை
கணக்காகப் பார்த்திடிலோ ஒன்றம் போகா
பருகவே பலிக்கமது வாதம் பாரு
பார்க்காட்டால் ஒன்றுமில்லை பாரு பாரு (143)

பாருநீ யிந்தநூல் பற்றிப் பாரு
பாக்கியங்கள் மிகவ ருங்காண் வேதை யாகும்
சேருநீ நிறைபாகம் கைபாக மாகச்
சிறப்பாகச் செய்திடிலோ சித்தி யாகும்
தாருமா றாகவே செய்தா யானால்
தலைதெறிக்கும் வாதமது தலைகீ ழாகும்
வேருமே தொடுத்துமே வெட்டிச் சோதி
விருப்பமாய் எல்லாமும் சித்தி யாமே (144)

## கல்லுப்பில் ரசக் கட்டு

சித்தியாய் இன்னமொரு லிங்க மார்க்கம்
செப்புகிறேன் கேளுங்கள் உலகத் தோரே
பத்தியாய் இலிங்கமொரு சேரு வாங்கிப்
பதியவே கல்லுப்புச் சேரு போடு
நத்தியாய் வேப்பிலையுஞ் சேரு போடு
நலமாக வில்லையாய் அரைத்துக் கட்டி
முத்திபெறச் சட்டிதனில் நடுவி லிட்டு
முக்கியமாய் மேற்சட்டி மலர்த்தி மூடே (145)

மூடியே சந்துக்க ஏழு சீலை
முக்கியமாய்ச் செய்துமேல்சட்டி தன்னில்
பாடியே தண்ணீரை விட்டுக் கேளு
பதிவாக அடுப்பிதனில் எரித்திட் டாக்கால்
நாடியே படித்தூரில் மேலே யேறி
நலமாகச் சிவந்துமே கரிபோல் காணும்
தேடியே சுரண்டிடவே வாலை யாகும்
திறமாகச் சூதமெல்லா மெடுத்துக் கொள்ளே (146)

## ரச பதங்கஞ் செய்ய உப்பு சுத்திசெய்

எடுத்துமே செய்கின்ற பாகங் கேளு
இன்பமாய்க் கல்லுப்புப் படியு நாலு
நடுத்துமே கடல்தண்ணீர் படியு நாலு
நலமாக விட்டுமே தெளிவி றுத்த
விடுத்துமே யடிகனத்த சட்டி யிட்டு
விருப்பமாய்ப் பொங்காமல் திராவிக் காய்ச்சு
படுத்துமே யுப்பாக விழுகும் பாரு
பதிவாக வகப்பையால் மொண்டி டாயே (147)

## இலிங்க ரச பற்பம்

மொண்டுமே படிநாலு அளந்து கொண்டு
முக்கியமாய்க் கடல்நுரையை யளந்து நீற்றிக்
கண்டுமே காற்படியு மொக்க விட்டுக்
கனிவாக வரைத்துமே யுப்போ டொக்கப்
பண்டுமே சட்டிதனில் நிறைய இட்டுப்
பதிவாக நன்மையாய் அழுக்கிப் பின்பு
தொண்டாக நடுவதனில் ஏழிப றித்துத்
துப்புரவாய் நடுவின்னி ரசமும் வையே (148)

வைத்துமே மேற்சட்டி கவிழ்த்து மூடி
வகையாக மண்ணேழு சீலை செய்து
நைத்துமே யடுப்பேற்றி கடிகை நூறு
நலமாக எரித்திடவே பதங்க மேறிச்
செத்துமே தந்தம்போல் இருக்கம் பூவாய்ச்
சிறப்பாகப் பிரித்துமே யதையெ டுத்து
பத்தியாய்ச் சுரண்டியே வாங்கிக் கொள்ளு
பதிவாகச் செய்கின்ற பாகங் கேளே (149)

## இலிங்க ரச பற்பச் செந்தூரமும் அதன் பெருமையும்

பாகமாந் திராவகமு மொருசே ரூற்றிப்
 பதிவாகப் பீங்கானில் வறுத்துக் கொண்டு
தாதமாய் முன்னுப்பில் நடுவே வைத்துத்
 தாக்கியே மேற்சட்டி மூடிச் சீலை
வேமாய் எழுசீலை செய்து கேளு
 விருப்பமாய் அடுப்பேற்றிக் கமலம் போல
யோகமாய் எரித்திடவே சிவக்கு மட்டும்
 ஓழுங்காக எரித்திடவே சிவந்து போமே (150)

போமேதான் செந்தூ ரம் முருக்கம் பூப்போல்
 பொருளாகும் தவமாகும் பெருமை மெத்த
காமேதான் உருத்திரனாம் மயேச்சுரனு மாகும்
 காரணமாய்க் காண்பரிது வேதை மெத்த
வாமேதான் சகலமுந்தான் சித்தி யாகும்
 வடிவான செம்பதனில் நூற்றொன் றிட்டால்
நாமேதான் வஸ்ததுவாய் ஏம மாகும்
 நலமான எட்டரையாய் நயக்கும் பாரே (151)

நயக்குமே பணவெடைதான் தேனி லுண்ண
 நமன்றானும் விலகுவான் காய சித்தி
பயக்குமே மேனிசெவ் வலரி போலாம்
 பதிவான காயசித்தி லோக சித்தி
சியக்குமே இம்முறைகள் பொய்யென் றெண்ணில்
 சிவமென் றும் பரமென் றும் சேரப் பொய்யாம்
வயக்குமே வயித்தியத்தி லுப்புத் தன்னை
 வகையாகப் பாராமல் அலைந்து போனார் (152)

### மேற் சொல்லிய முறை சரியானதெனச் சத்தியம்

அலையாம லிம்முறையோ பொய்யோ இல்லை
ஆதியாம் சிவன்பேரி லாணை யுண்டு
மலையாம லம்மையின்மே லாணை யாகும்
மயமான தன்மந்திரி நந்தி யாணை
கலையாம லகத்தியர்மே லாணை யுண்டு
கனமான புலத்தியர்மே லாணை யாகும்
உலையாமல் பதினெட்டுச் சித்த ராணை
உண்மையாய்ச் சொல்லிவிட்ட னுலகத் தோர்க்கே (153)

உலகத்தில் வாதமொடு வயித்தியம் ரெண்டும்
உண்மையில்லை யென்றுசொல்வார் உலுத்த வாதி
கலகத்தில் திரிந்தாக்கால் வாத மாமோ
கருத்தாலே செய்தாக்கால் எல்லா மாகும்
நிலமொத்த நிலந்தனிலே பயிரு மாகும்
நிகரில்லா நிலந்தனிலே பயிரா காது
வலையற்ற விடந்தனிலே மீன்கள் போகும்
வடிவான கைபாக மாகச் செய்யே (154)

### உபதேச பரம்பரை

செய்யவே சிவன்றானம் மைக்குச் சொல்ல
செப்பரிய வன்மைநந் திக்குச் சொல்ல
வையவே நந்திதன் வந்திரிக்குச் சொல்ல
வகையாகத் தன்வந்திரி யகத்தியர்க்குச் சொல்ல
பையவே அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்லப்
பதிவாகப் புலத்தியரும் தேரருக்குச் சொல்ல
நையதொரு தேருமே யூகிக்குச் சொல்ல
நலமான யூகியுமே உரைசெய்தார் தாமே (155)

சொல்லிடவே யுலகத்தில் மனிதர்க் காகச்
சுருக்காகப் பிழைக்கவே சொன்னா ரையா
முல்லையரும் பதுபோல் சாத் திரங்க ளெல்லாம்
முழுதுமே வடமொழியைச் சோதித் துப்பார்
தில்லை நட ராசனைப்போல் சுருக்கிச் சொல்லத்
திடமாக முறைகளெல்லாம் கருத்தி லூணு
வெல்லவே வாதசித்தி நிசம தாக
விருப்பமா என்னூலை விரும்பிப் பாரே (156)

## கல்லுப்பு விட்டால் சூதங்கட்டாது

விரும்பிய யின்னமொரு சூத பற்பம்
விருப்பமாய்ச் சொல்லுகிறேன் உலகத் தில்தான்
நரும்பவே கல்லுப்பை விட்டால் வாதி
நலமான சூதமது இறந்தி டாது
தரும்பவே சட்டியிட்டு உப்புப் காய்ச்சித்
தண்மையாய் ரசபதங்கம் வைத்து அஞ்சு
விரும்பியே யெரியிடவே யேற ஏற
விருப்பமாய் ரசமடியும் இன்னங் கேளே (157)

இன்னமொரு ரசபற்பந் தீக்கு நிற்க
இன்பமாய்ச் சொல்லுகிறோம் வாதி கேளு
நன்னயமாய்க் கடல்நுரையும் பலமும் பத்து
நலமாகக் கரியில்வைத்து ஊத நீறும்
பன்னகமாய்க் கடுங்கார மாக வூதிப்
பக்குவமாய்க் கல்லுப்பு இடையே சேர்த்து
கன்னல் போல்மேனியில்லைச் சாற்றா லாட்டிக்
கடுகவே வில்லைபண்ணிக் காய வையே (158)

(நவரத்தின சிந்தாமணி 550 காண்க)

## கல்லுப்புச் சுண்ணச் செயநீர்

காயவைத்துக் கரியோட்டில் குமுற வூது
கருணைபெறக் கடுஞ்சுண்ண மாகும் பாரு
மாயமாய்ப் போகாமல் சாரம் நேரே
மயமாகச் சேர்த்தரைக்க நீர தாகும்
தாயகமாய்க் கலையத்தில் வாரி வைத்துத்
தகுந்ததோர் புடம்போட்டு எடுத்துக் கொண்டு
வாயகமாய்ப் பனியில் வைக்க நீர தாகும்
வளமான இந்நீரி லெல்லாம் நீறே (159)

## 143 – 159 உரை

(2 பாட்டு அறிவுரை) இலிங்கம் ஒரு சேர் கல்லுப்பு ஒரு சேர் வேப்பிலை ஒரு சேர். அரை வி. த. கா. சட்டியிலிட்டு மேற்சட்டி மலர்த்தி மூடி சீ. ம. செ. மேற்சட்டியில் தண்ணீர் விட்டு எரி. அடித்தூரில் ஏறிப்பற்றும் சுரண்டி எடு. வாலையாகும் நாலுபடி கல்லுப்பும் நாலுபடி கடல் நீரும் சேர்த்துத் தெளிவிறுத்து அடி கனத்த சட்டியில் விட்டுக் கிண்டிக் காய்ச்சு. உப்பாக விழும். இதில் நாலுபடி எடுத்து கடல் நுரையை நீற்றிக் காற்படி சேர்த்து அரைத்துச் சட்டியில் போட்டு அமுக்கி நடுவில் குழி பறித்து அதில் இலிங்கத்தை வை. கவிழ் சட்டி மூடு. சீ. ம. செ. அடுப்பேற்றி நூறு நாழிகை எரி. பதங்கம் தந்தம்போல் மேலேறிருக்கும். எடுத்துப் பீங்கானிற் போட்டுத் திராவம் ஊற்றி வறுத்து முன்னுப்பின் நடுவே வைத்துச் சீ. ம. செ. (7) தாமரைத் தீ எரி. சிவக்கும் முருக்கம் பூப்போல் செந்தூரம் சிவனோடொக்கும் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. எட்டரை. பணவெடை தேனில் உண். கூற்றும் ஓடிப் போகும். மேனி செவ்வலரி போலாம். இது பொய் எனின் சிவமும் பொய்யே. முன்போல் சிவன் முதலியவரின்

மேல் ஆணை. பொய்யே இல்லை சிவன் முதல் முற்கூறிய இந்த முறை வந்தது.

கல்லுப்பை விட்டால் சூதம் சாகாது. சட்டியில் கல்லுப்புப் போட்டுக் காய்ச்சி ரசபதங்கம் செய். ஐந்துமுறை எரிக்க ரசம் மடியும் ரசபற்பம் தீங்கு நிற்க வழியுரைப்பேன். கடல் நுரையை ஊதி எடுத்துக் கல்லுப்பின் எடை சேர்த்து மேனியிலைச் சாறு விட்டரைத்து. வி. த. கா. கரியோட்டில் ஊது. கடுஞ்சுண்ணம் சாரம் சேர்த்து அரை. நீராகும் கலையத்தில் வைத்துப் புடமிட்டெடுத்துப் பனியில் வைக்க நீராகும். இந்நீரில் எல்லாம் நீறும்.

## ரச பதங்கம்

எல்லாமும் நீறாகச் சொல்லக் கேளு
        இதமாகக் கல்லுப்பை முன்போற் காய்ச்சி
நல்லாகச் சட்டிதனில் நீற்றைப் பார்த்து
        நலமாக நடுவினிலே பள்ளம் பண்ணி
கல்லாகச் சூதமுமே நாலுபல மிட்டுக்
        கணக்காக மேற்சிலை ஏழுஞ் செய்து
பொல்லாமை யில்லாமற் கடிகை நூறு
        போக்கோடே எரித்திட்டு எடுத்துக் கொள்ளே (160)

## சுய ரச பற்பம்

எடுத்துமே பாாத்தவுடன் உயர ஏறி
        இருக்குமே வெள்ளையாய்ப் பதங்கந் தானும்
அடுத்துமே மயிர்க்குச்சி யால்வ ழித்து
        அடைவாக கல்வத்தி லிட்டுத் கேளு

நடுத்துமே செயநீரால் நாலு சாமம்
நலமாக வரைத்துவில்லை காய வைத்து
படுத்துமே முன்சட்டி யுப்பிற் சேளு
பதிவாக நடுவில் வைத்து மேலே மூடே (161)

மூடியே எழுசீலை மண்ணுஞ் செய்து
முடிவாக அடுப்பதனில் வைத்தெ ரிக்க
நாடியே யுயரவே யேறி னாக்கால்
நலமான மயிர்க்குச்சி யால்வ ழித்துக்
காடியே யடியில் நின்ற பற்பத் தோடே
கனமாகச் செயநீரா லரைத்து முன்போல்
பாடியே சட்டியிட்டு மேலே மூடிப்
பதிவாகச் சந்துவாய் பொருந்தப் பாரே (162)

பொருந்தவே கமலம்போ லெரித்தெ டுக்கப்
போரான ரசமதுதா னடியில் நிற்கும்
அருந்தவே அக்கினிக்கு நிற்கும் பாரு
அதையெடுத்துச் செம்புதனில் நூற்றொன் றிட்டால்
நருந்தவே பத்தரைதான் மாற்றுக் காணும்
நலமான பற்பத்தைத் தேனி லுண்ணு
கருந்தவே மண்டலத்தில் சித்தி யாகும்
காயமெல்லாம் செவ்வலரிப் பூப்போ லாமே (163)

## திடங்கூறல்

ஆகுமே இம்முறைகள் தப்பா மற்செய்
அருள்பெருகும் வாதமெல்லாம் கைக்குள் ளாகும்
ஏகாம லச்சிவன்மேல் ஆணை யாகும்
இன்பமா மம்மைமே லாணை யாகும்

வாகுமே நந்திமே லாணை யாகும்
வடிவான தன்வந்திரி தன்மே லாணை
பாகுமே யகத்தியர்மே லாணை யாகும்
பதிவான புலத்தியர்மே லாணை யாமே (164)

ஆணையாம் தேவர்மே லாணை யாகும்
அதீதமாய்ப் பதினெட்டுச் சித்த ராணை
வாணையா மிம்முறையும் பாக மாக
வழியோடே செய்துமே பாகம் பாரு
காணையாம் சுடுவாதி பேச்சைக் கேட்டுக்
கலக்கமாய்ச் சுட்டுமே தவிக்க வேண்டாம்
தூணையே துரும்பாக்கு மாறு போல
துடியான கல்லுப்பை முந்திப் பாரே (165)

## கல்லுப்பை முந்திப் பார்த்தால் ரவி பழுக்கும்

பாருமே கடல் நுரையை கல்லுப்பைக் *கூட்டிப்
பதிவானகடல்துண்ணீராலேயுப்பைக்
கோருமேதந்தும்போலிறுத்துக்காய்ச்சிக்
குணமான சூதத்தையதிலேவைத்து
காருமேஎரியிடவேசூதஞ்சாகும்
காரணமாய்ரவிதானும்பழுத்தநேர்மை
ஆருடனேசொல்லிமுறையிடுவேன்பாரு
அப்பனே கருத்தாகப் பார்த்தி டாயே (166)

* கட்டி (பாட வேறுபாடு)

## ஒருமுறை தப்பின் மறுமுறை செய்யச் சரியாகும்

பார்த்திடவே வாதமது நிலைக்கும் பாரு
பதிவாக வாதமது தப்பிற் றானல்

காத்திடவே யின்னமொரு திறமும் பாரு
கருணையாய் வந்திடுங்காண் வாத வித்தை
சேர்த்திடேவே பிறவிசா கரமு மில்லை
சிறப்பான கல்லுப்பை முந்திக் கட்டிச்
சார்த்திடவே யாடினா லெல்லா முண்டு
சதியாக விட்டாக்கா லெல்லாம் போச்சே (167)

போச்சென்று விடுகாதே கல்லுப் பைத்தான்
பிரியமாய்த் தெறிப்படங்கக் கட்டி யாடு
நீச்சென்ற நீச்செல்லாம் நிலைக்கும் பாரு
நேரான சூதமது சேர்ந்தால் வாதம்
ஆச்சென்று அகப்படுமே யில்லாப் போனால்
ஆனையென்ற சூதமதுவசப்ப டாது
காச்சென்ற உப்பினா லெல்லா மாகும்
கருணைபெறச் சொல்லிவிட்டே னுப்பை யப்பா (168)

## உப்பைக் கடல்நீரில் காய்ச்சிக் கொள்

உப்பிரண்டு கல்லினால் ருசியு மாச்சு
உண்மையாய் அறுசுவையும் உப்பா லாச்சு
தப்பிதமு மில்லையடா குருவுக் கொப்பாம்
தாட்டிகமா யோட்டமெல்லா முப்பி னாலே
ஒப்பிவித்தே னுங்களுக்கப் புத்தி யில்லை
ஒருவருடன் பேசாம லுண்மை பாரு
கப்பியே யுப்போதா வென்று சொல்லிக்
கருத்திலே நினையாதே காய்ச்சிக் கொள்ளே (169)

## உப்பைக் கடல்நீரில் காய்ச்ச பாஷாணமெல்லாங் கட்டும்

காய்ச்சிடவே பாஷண மெல்லாங் கட்டும்
கருத்துறவே சூதமது பற்ப மாகும்

பாய்ச்சிடவே ரவிபமுக்கும் வேதை யாகும்
பலனுண்டு பாகத்தைப் பார்த்துத் தேறு
வாய்ச்சிடுமே தங்கத்தை நொடிக்குள் ளாக்கும்
வடிவாக ஞானத்தில் மனத்தை யூனு
போச்சுதே யென்றுசொல்லி நினைக்க வேண்டாம்
புகழ்ந்துமே யுப்பாலே யெல்லா மாச்சே (170)

## உப்பை உலகுக்கு உபதேசித்த வழி

ஆச்சப்பா இந்த வுப்பைப் போலே காணேன்
அருள்பெருகும் சிவன்தானும் அம்மைக்குச் சொன்னார்
காச்சப்பா அம்மைநந்திக் கருளிச் செய்தார்
காரணமாய் நந்தியசு வனிக்குச் சொல்ல
மூச்சப்பா அசுவனியும் விசுவனிக்குச் சொல்ல
முதிர்ந்து நின்ற விசுவனியும் தன்மந்திரிக்குச் சொல்ல
நாச்சப்பா தன்மந்திரி யகத்தியர்க்குச் சொல்ல
நலமான அகத்தியரும் புலத்தியர்க்குச் சொன்னார் (171)

சொன்னதொரு புலத்தியரும் தேரருக்குச் சொல்லச்
சிறப்பான தேரருமே யூகிக்குச் சொல்ல
கன்னதொரு யூகியுமே சந்தோ ஷித்துக்
கருத்தாக மானிடர்கள் பிழைக்க வேண்டி
நன்னயமாய் உலகத்தில் சொன்னேனப்பா
நலமாகச் சொன்னமுறை போலே வைத்து
உன்னியே தெறிப்படங்க வுப்பைக் கட்டி
உறுதியாய் வைத்திடவே செயமு மாமே (172)

## 160 - 172 உரை

கல்லுப்பை முன்போற் காய்ச்சிச் சட்டியிலிட்டுப் பள்ளம் செய்து நாலு பலம் ரசம் விட்டெரி. 7 சீ. ம. நூறு நாழிகை எரி.

ஏறிப் பதங்கமாகும். மயிர்க்குச்சியால் வழித்துச் செயநீர் விட்டு அரைத்து எரி. முன் உப்பில் வைத்து எரித்துப் பதங்கமாக்கி மீண்டும் செயநீர் விட்டெரி. பின்பு அடியில் நின்ற பற்பத்துடன் சேர்த்து எரி. அடியில் நிற்கும். தீக்கு ஓடாது. (வெற்றியாகும் வரை எரி) செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. பத்தரை தேனிலுண். மண்டலத்தில் உடல் வலுக்கும். சிவன் முதல் வழியினர் ஆணை பதினெண் சித்தர் ஆணை, பொய்யாது.

கடல் நுரையால் கல்லுப்பைக் கட்டி (அல்லது இரண்டும் கூட்டி) கடல் தண்ணீர் விட்டிறுத்துக் காய்ச்சி அதன் நடுவில் சூதம் வைத்து எரி. கட்டும் செம்பு பழுத்த நேர்மையை யாரிடம் சொல்லி முறையிடுவேன். உண்மை உண்மை ஒருமுறைத் தப்பின் மீண்டும் பார். கல்லுப்பைத் தெறிப்படங்கக் கட்டியாடு. உப்பினால் பாடாணம் கட்டும். சூதம் பற்பமாகும். செம்பு பழுக்கும் தங்கம் நொடிக்குள் உண்டாக்கும். சிவன் முதல் முன்சொன்ன வழிப்படி சொற்பெற்று வந்தது.

## இன்னமொரு உப்புக் கட்டு

செயமான இன்னமொரு உப்புக்கேளு
செப்பரிய அகத்தியர்தா னாடு முப்பு
பயமாகக் கல்லுப்பு படிதான் பத்துப்
பதிவாகக் கடல்தண்ணீர் நாலு பத்து
நயமாகக் கடல்நுரைதான் சுண்ணங் கேளு
நலமான படியொன்று அளந்து விட்டுக்
கயமாக அடுப்பேற்றிக் கொதிக்க விட்டுக்
கருத்தாக அடுப்பேற்றி யுப்பாய்க் காய்ச்சே (173)

காய்ச்சிடவே யகப்பையால் திராவிக் காய்ச்சு
கருணைபெறப் பொங்காமல் காய்ச்சும் போது

பாய்ச்சிடவே பாணிதான் குறைந்து உப்பாம்
பதிவாக உப்பெல்லாம் அடிபற் றாமல்
நாச்சிடவே ஒட்டவே காய்ச்சு காய்ச்சு
நலமாக அகப்பையால் கிண்டிக் காய்ச்சு
வாய்ச்சிடவே தந்தம்போல் தெறிப்ப டங்கும்
வகையாக நீர்சுண்டக் காய்ச்சிக் கொள்ளே (174)

### (மேற்கோள்)

வேலை யமுரிதணை விட்டு முறிக்கக்கேள்
ஆலை போல் யடுப்பேற்றிக் --காலை
யெரிசுத்த நீராமே யின்பரச வாதி
முரிவேதை யாக முடி (தீட்சாவிதி 189 காண்க)

தாக்கும் பூமியைத் தானறிந் தாலலோ
வாய்க்கும் ஈசன் மகிமையும் பாமது
காய்க்குங் காலத்தில் கண்டிடா வாதியே
யேய்க்கும் ஏய்க்கும் இறக்கு முடலிதே

### ரச பதங்கஞ் செய்யக் கல்லுப்பைப் பாத்திரத்திலமைக்கிறது

கொள்ளவே புலபுலப்பாய் மறுசட்டி யிட்டுக்
கூறாக நிறையமட்டும் அமுக்கிக் கேளு
நள்ளவே நடுவிலே பள்ளம் பண்ணி
நலமாகச் சூதமது பத்துச் சேரு
கள்ளவே யதிலிட்டுப் பொருந்தப் பார்த்துக்
கருணைபெற மறுசட்டி மூடிக் கொண்டு

துள்ளவே சீலைமண் ணேழுஞ் செய்து
துப்பரவாய் அடுப்பதனி லேற்றிக் கொள்ளே (175)

## கல்லுப்பில் ரசமெரிப்பு

ஏத்தியே கமலம்போல் கடிகை நூறு
இதமாக எரித்திட வே யுயர ஏறும்
பார்த்துமே யெடுத்திடவே பதங்க மேறும்
பதிவாக மயிர்க்குச்சி தன்னால் தானே
சோத்துமே எடுத்துப்பின் சொல்லக் கேளு
செயமா கிரதமிரு சேரு வாங்கு
காத்துமே யடி தனிலே நின்ற வுப்புக்
கணக்காக இரண்டுசேர் நிறுத்துக் கொள்ளே (176)

## கல்லுப்பும் இரசபதங்கமும் சேர்த்து எரிப்பு

நிறுத்துமே நேர்சரியாய் நிறுத்துக் கொண்டு
நிர்ணயமாய்க் கடல்தண்ணீர் குழம்பை விட்டு
வறுத்துமே பதமாக வொட்டக் காய்ச்சி
வலுவாக மேற்சட்டி மூடிக் கேளு
கறுத்துமே மண்ணேழு சீலை செய்து
கசகாம லெரித்திடவே கமலம் போலாம்
நறுத்துமே சூதமது பாதி யேறும்
நலமாகச் சுரண்டியே அடியிற் போடே (177)

## கல்லுப்பும் ரசபதங்கமும் சேர்த்து மடக்கு

போட்டுமே முன்போல எரித்து மூடி
பலமாக மண்சீலை ஏழு செய்து

காட்டுமே கமலம்போல் எரிநால் தாமம்
கருவாக அஞ்சுதர மிப்படியே செய்ய
தாட்டுமே சூதமது வோட்டம் தப்பித்
தாட்டிகமா மேலேறா தடியில் நிற்கும்
வாட்டுமே யுப்புப்பும் சேர்ந்து கட்டி
வகையாகத் தெறிப்படங்கிக் கனமு மாமே (178)

## உப்புக் கதை செய்ய

கனமான வுப்பைத்தா னுருக்கும் போது
கரியில் நின்றாடுமே பொன்போ லாகும்
இனமான வுப்பைத்தான் மறைத்தார் சித்தர்
என்குலமும் முனிகுலமாம் சொல்லிப் போட்டேன்
தனமான மெழுகுகட்டிக் கதைபோற் பண்ணி
தன்மையாய் உப்புருக்கி யதிலே வாரு
நனமாகக் கதைபோலப் பாய்ந்தி ருக்கும்
நன்மையாய்க் கதையெடுத்து வைத்துக் கொள்ளே (179)

## உப்புக்கட்டு வேதை

வைத்துமே வறுமைதான் வந்த போது
வழியாகச் செம்புருக்கி நூறொன் றிட்டால்
தைத்துமே பத்தரைதான் குறையா தப்பா
காவிக்கு முப்புக்குங் கருவாய் நிற்கும்
பத்துமே புடமிறங்குந் தங்கந் தானும்
பதிவான சிவசொத்தாம் வறுமமைபோ லுண்ணு
நைத்துமே யொருவருடன் சொல்ல வேண்டாம்
நாடாத சித்தியெல்லாம் நலம தாமே (180)

### (மேற்கொள்-மதிவெண்பா)

ஆழி கடைந்தமுதம் ஆக்கறியார் அச்சலத்தில்
ஊழிபர னுப்பெடுத்து ஊட்டறியார்- ஏழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகடாம் வையகத்தில்
தூங்கி- விழு வாரெனவே சொல்

### வேறு

ஓது பூரண சந்திர னுப்பினால்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் தெழுந்திடும் பூவினால்
சூத மாமணி யாடித் துலங்குமே

அலையி லேவழிந் தாடியசைந்தது
சிலைய தாய்மதி யாகத் திரண்டது
மலையி லேவரும் மங்கை மகத்துவம்
தலையி லேசிவ சத்தியின் தீட்சையே

### வெண்பா

உப்புந் திரைகடலில் ஊசரம் மண்மேலே
அப்புங் கனலிரண்டும் ஆகாசம்- இப்புவியில்
வாதிகளே சூதம் மடக்கறியீர் வீண்கரிசுட்
டோதினா லுண்டோ வுயிர்

காந்தண் மலருங் கடலுப்புற வானால்
ஏந்து தனமிரண்டிங் கெய்தாவோ - காந்தட்பூ
காட்டிலே பூப்பூக்கும் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கேட்டிருப்போம் நாம்

## ஞானவெட்டி

கடலும் பாவது கடல்நரை கட்டினால்
கல்லுப் பாவதுங் காணு மாத்துக்கள்
சடல வுப்புச் சிவகங்கை கூடினால்
அவனிமீது அட்டசித் தாடுமே

உப்பென்றா லுருவான வுப்பேது காண்
செப்பினார் தெக்கினாயன அருளினால்
கைப்பு மாறிக் கடனுரை கட்டியும்
வைப்புக் காண்கடல் வாரிக்கல் லுப்பதே

காந்த மாமலர் காட்டினி லுப்புக்காண்
அய்ந்துபார்க்க அடிமூலச் சுண்ணமாம்
மாய்ந்து மாய்ந்து வரும்புளி மாறினால்
தோய்ந்து அப்புவுந் தோய்ந்து சொக்குமே

அமுரி யுப்புமப் பூவுங் கடசலம்
அமுரி யுப்பு மடிமூலம் புக்கினால்
அமுரியுப்பு மம்மண்ணத்தில் பூக்குமாய்
அமுரியே மதீதசுண் ணங்களே

காந்த மாமலர் கதிரெனுஞ் சூரியன்
ஆய்ந்து பாரு வதுபுளிமண்ணுந் தான்
சேர்ந்துதான்கட லுப்புவுங் கூடினால்
ஈந்துதானு மிகநிக ரில்லையே

வறுமை யேன்வரும் வாதிக ளுங்கட்கு
கறுமை யில்லைகாண் கல்லுப் பறிந்தால்
உறுமை யாய்அரு வானகல் லுப்புத்தான்
கிறுமை யேன்வரும் சித்தர் சொன்னார்களே

## 173 - 180 உரை

அகத்தியர் கையாண்ட உப்புக்கட்டு இங்கே கூறுவேன். கல்லுப்பு பத்துப்படி. கடல் தண்ணீர் நாற்பது படி. கடல் நுரைச் சுண்ணம் ஒருபடி எல்லாம் சேர்த்துக் காய்ச்சு. நீர் குறைந்து உப்பாகும். அடிபற்றாமல் கிண்டிக் காய்ச்சு. உப்பாகும். எடுத்து மறுசட்டியிலிட்டு அமுக்கி நடுவில் குழித்து சூதம் பத்துச் சேர் விட்டு. சீ. ம. செ. (7). தாமரைபோல் நூறு நாழிகை எரி மேலே ஏறும். ஏறிய பதங்கத்தை மயிர்க்குச்சியினால் வழித்துவை அதில் இரண்டு சேர்எடு. அடியில் நின்ற உப்பு இரண்டு சேர் எடு. கடல் தண்ணீர்க் குழம்பு விட்டு வறு. சட்டியிட்டு 7 சீ. ம. செ. முளரித்தீ எரி. சூதம் பாதி மேலேறும். சுரண்டி அடியில் போடு. முன்போல் எரி. இங்ஙனம் ஐந்து முறை செய்ய உப்பும் உப்பும் சேர்ந்து கட்டிப் போகும். உப்பை உருக்கப் பொன் போலாகும். சித்தர் இதனை மறைத்தார். மெழுகினால் கருவமைத்துச் செங்கோல் வடிவாக்கி மண்பூசி யுருக்கி உள்ளே உப்புருக்கி யூள்றிச் செங்கோல் செய்து கவசமிட்டு வைத்துக் கொள். வறுமை வந்தால் செம்புருக்கி நூற்றுக்கு ஒன்றிடப் பத்தரை.

## வாதிகள் மூடத் தன்மை

நலம்தாம் சிவசொத்து என்ற பேச்சு
நலமான கல்லுப்பில் சூதம் சேர்ந்தால்
பில மதாம் சிவசொத்து என்ற பேரு
பிரபலமாம் தங்கமது எளிதி லாகும்
கலமதாம் வாதிகள்தான் செய்ய மாட்டார்
கலக்க முண்டாம் கல்லுப்பு மிதுவே யல்ல
தலம்தாம் விசாரித்துக் கேட்டுக் கேட்டுத்
தடையறவே முழிப்பார்கள் வாதி தானே (181)

## சுவேதவனத்துக் கல்லுப்பைக் காய்ச்சிக் கட்டச் சொல்லியது

வாதிதா னென்றாக்கால் சொல்லக் கேளு
வடிவாகச் சுவேதவன வுப்பை வாங்கு
நீதியாய்க் கடற்றண்ணீர் விட்டுக் காய்ச்சு
நிலவரமாய்ப் பொங்காமற் காய்ச்சிக் கொண்டு
சோதியாய்ச் சூதத்தைச் சேர்க்கச் செம்பு
சுயமான தங்கமாம் சூச்சம் மெத்த
போதித்தேன் புவிதனிலே பிழைக்க வேண்டிப்
புத்தியுள்ள வாதிகளே சொல்லக் கேளே (182)

## புத்தியுள்ள வாதி யுப்பைக் கட்ட வேணும்

புத்திமா னென்றாக்கா லுப்பைக் கட்டு
புத்திகெட்ட வாதியென்றால் மூலி தேடி
சித்தியாய்ப் போகுமென்று அலைவான் பாரு
சித்தியில்லை மூலிகையி லுப்புச் சேர்ந்தால்
முத்தியாஞ் சரக்கெல்லாஞ் சொன்னாற் கட்டும்
முதிர்ந்ததொரு வாதசித்தி காய சித்தி
புத்தியாய்ச் செய்திடிலோ எல்லா மாகும்
புத்தியில்லார்க் கொன்றுமில்லை பார்த்தி டீரே (183)

பார்த்திடவே முன்கட்டு உப்புத் தன்னை
பதிவாக வுருக்கியே மேரு பண்ணு
காத்திடவே மேலுவினில் ரசத்தை விட்டுக்
காரியமாய் எரிக்கச் செந் தூர மாகும்
சாத்திடவே நவலோகம் பொன்ன தாகும்
சரிவரவே வாதமாம் தாழிச்சி யில்லை

முத்தாள்தான் முகத்திருந்த பேருக் கப்பா
முடிவான வாதமில்லை யென்பர் பாரே (184)

## கல்லுப்பில் சூதம் சேராவிட்டால் கட்டாது

வாதந்தாதனில்லை யென்று கோடி பேர்கள்
வகையில்லை சாத்திரத்தி லென்பார் கோடி
வேதந்தான் பொய்யாகு மென்பார் கோடி
வேதத்தி லுண்மையில்லை யென்பார் கோடி
காதந்தான் வழிநடக்க மாட்டா மல்தான்
கடைகெட்ட வாதிமார் புலம்பு வார்பார்
சூதந்தான் கல்லுப்பில் சேரா விட்டால்
துப்புரவாய்க் கட்டாது கல்லுப் பாமே (185)

## வகையறிந்து கடல் நீரில் காய்ச்சாவிட்டாலும் கல்லுப்புடன் சூதம் சேராப் போனாலும் வாதமில்லை

கல்லுப்பைச் சாத்திரத்தில் காய்ச்சச் சொன்னார்
கருத்தில்லா மானுடரே காய்ச்சிக் காய்ச்சி
நல்லொத்த வா ருதியி னீரி னாலே
நலமாகக் காய்ச்சலே சொன்னா ரென்று
மல்லுற்று வெண்மையாய்க் காய்ச்சிக் கொண்டு
வகையறிந்து சூதமது சேரா தாலே
வல்லுற்று வாதமது இல்லை யப்பா
வடிவாகச் சேர்த்தாக்கா லெல்லா மாமே (186)

ஆமேதா னொருமுறைதான் சொன்ன மார்க்கம்
அடங்கலுமே இப்படிக்கு எல்லாம் செய்து

நாமேதான் வாதத்தை நிலைக்கப் பண்ணி
நலமான யோகமுதல் ஞானம் பாரு
காமேதான் பொருளாகும் வேதை யாகும்
கருணைபெறச் சூதத்தை முன்னே செய்து
தாமேதான் நிலையாக நின்று தேறு
தாட்டிகமாய்ச் சிதம்பரத்தில் மனத்தை யூனே (187)

ஊணவே வழியோடே சென்ற றிந்து
உற்றுமே சிகாரத்தை மதியி லேற்று
காணவே கயிலையுறை நாத னைத்தான்
கண்டுமே தரிசிக்க முத்தி யாகும்
தோணவே வாதந்தான் நிலைத்த மட்டும்
தொல்லுலகி லரசரா யிருந்து தேறு
வாணவே வகையெல்லாம் வந்து தோன்றும்
வடிவான யோக மெல்லாஞ் சித்தி யாமே (188)

## வாதம் புரண்டு போனது சத்துரு மித்துருச் சேர வேண்டியபடி சேராததால்

சித்தியாம் வாதந்தான் புரண்டு போன
சிறிதான வகையென்ன சொல்லக் கேளு
முத்தியாஞ் சரக்குத்தா னொன்றோ டொன்று
முடிவாகச் சேராதே போன தாலே
பத்தியாய்ச் சத்துருவைக் கானா தாலே
பதிவான மித்துருவுஞ் சேரா தாலே
புத்தியாய் ஒன் றுமில்லை வாத சித்து
புட்டாகும் வாதமெல்லாம் விழலாய்ப் போமே (189)

## சத்துருவால் கொன்று மித்துருவால் எழுப்பப் பொன்னாகும்

விழலாகப் போகாமல் வாத மார்க்கம்
விடிவிப்பேன் சத்துருவால் கொன்ற பின்பு
நழலாக மித்துருவைச் சேர்க்க வாதம்
நன்மையாய்ப் பொன்னாகும் நயப்பு மெத்த
உழவான காளையப்போ லெண்ணிப் பாரு
ஒழுங்காகும் வாதமெல்லாங் கைக்குள் ளாகும்
நிழல் கண்ட பாவனைபோ லெல்லா மாகும்
நீடூழி காலமெல்லாம் வாழ்வீர் காணே (190)

## வாதம் உலகில் இல்லையென்று மூடர் நரகில் அழிவர்

காணவே தெரியாத வாதி தானும்
கருணைபெற வுலகத்தில் வாத மில்லை
தோனாத தனமாகச் சொல்லிச் சொல்லிக்
குருதியிலே யில்லையென்று சொல்லிச் சொல்லி
வானாலே வாங்குவார் வாதி மார்கள்
வகையில்லா மானுடர்கள் புத்தி யில்லார்
கோனாத படியாகச் சொன்னால் தோஷம்
கொடுநரகில் வீழ்ந்துமே மாளு வாரே (191)

## வாதத்திற்கு வேண்டியவைகளைச் சொல்லுகின்றது

மாளாம லிருக்கவன்றோ வயத்தைச் சொன்னேன்
மறைத்துவைத்த வுப்பினுட மார்க்கஞ் சொன்னேன்
தாளாகச் செந் தூரம் பாகம் சொன்னேன்
தாட்டிகமாய்ச் செம்பெடுக்கும் பாகஞ் சொன்னேன்
தேளாக கொட்டியதோர் சுண்ணம் சொன்னேன்
திடமான புத்தியுள்ளோர் கண்டு கொள்வர்

வாளாக மனமொன்றி நினைவில் பாரு
வகையாகுந் தொகையாகும் மருவிப் பாரே (192)

## 181 – 192 உரை

சுவேதவன உப்பை வாங்கு. கடல் தண்ணீர் விட்டுப் பொங்காமல் காய்ச்சு. ஒளிபெறச் சூதம் சேர்க்கத் தங்கம் செய்யலாம். உலகம் பிழைக்கப் போதித்தேன். முன்கட்டிய உப்பினை மேரு (குப்பி) உண்டாக்கு. அதனுள் ரசத்தை விட்டு (சீ. ம. செ. மேல் மூடி) எரிக்கச் செந்தூரம் ஒன்பதும் செம் பொன்னாம். சூதம் சேராவிட்டால் கல்லுப்பும் கட்டுப்படாது. கல்லுப்பைக் காய்ச்சியதில் சூதம் சேராததனால் மாற்றுக்கலை மாறிப் போயிற்று. சரக்கு ஒன்றோடு ஒன்று சேராததனாலும் பகைப்பொருள் நட்புப் பொருள் சேரா மையாலும் தவறுண்டது. மற்றவை அறிவுரைகள்.

## அயச்செம்பு

மருவவே இன்னமொரு செம்பு சொல்வேன்
மகத்தான வேதையாம் மருவிப் பாரு
கருவாகப் பார்த்தாக்கா லெல்லாந் தோணும்
கருணைவைத்தா லயச்செம்பு காணுங் காணும்
தீருவாக நல்லசெம்பு பலமோ பத்து
திடமாக நாற்றமது முக்கால் போடு
உருவான சுடர்க்கொடியோன் * பலமும் போடு
ஒழுங்கான வீரமது பலமுங் காலே (193)

* குறிப்பு: "பலமும் என்றது ஏட்டிலுள்ளபடி எழுதப்பட்டது. பலமரையுமென்றிருக்கலாம் என்பது யூகம்" என்பது சிவயோகியவர்கள் குறிப்பு. அச்சிட்ட நூலில், "சுடர்க் கொடியோனரையும் போடு" என்றுளது 206ல் அரையும் போடு என்றுளது.

காலாக இவைமூன் றும் பழச்சாறு விட்டுக்
கருணைபெற விருசாமம் ஆட்டிப் பின்பு
பாலாக ரவிமேலே கவசம் கட்டிப்
பக்குவமாய்ப் புடம்போட நொறுங்கிப் போகும்
நாலாக நொறுங்கினதைப் பார்த்தாற் கேளு
நலமாகக் கரிபோலே தூளாய்ப் போகும்
காலாக வெடுத்துமே யப்பால் வைத்துக்
கருணைபெற இன்னமொரு சேதி கேளே (194)

கேளுமே யயமதுதான் பலமோ பத்துக்
கெடியாகப் பழச்சாற்றி லூற வைத்து
நாளுமே யலம்பியே காயப் போட்டு
நலமான ரவிகரியி லெடையே சேர்த்துக்
காளுமே எலுமிச்சம் பழச்சாற் றாலே
கருணைபெற வொருசாமம் ஆட்டி வில்லை
தாளுமே காயவைத்துப் புடத்தைப் போடு
தடையறவே பெரும்புடமாய்ப் போட்டுக் கொள்ளே (195)

## செம்பு பிரித்தெடுக்கும் வழி

போட்டுமே வெங்காரங் கொஞ்சஞ் சேர்த்துப்
பொடிபண்ணி யுருக்கிடவே கரிசெம் பாகும்
நாட்டுமே நாளம்வைத்து ஊதிப் போடு
நலமான வெங்கரா மடிக்க டிக்குக்
காட்டுமே யூதிடவே கக்கும் பாரு
கருணைபெற ரவியென்ன வலரிப் பூப்போல்
வாட்டுமே யிருக்குமே நல்ல செம்பாம்
வகையாக மதியிலிட மாற்று ஆறே (196)

## அயச் செம்புச் செந்தூரம்

ஆறான செம்பெடுத்துப் பலமு நாலு
அதிகமாந் தங்கமொன்று நாக மொன்று
காறான தங்கத்தை யுருக்கிக் கொண்டு
கருணைபெற நாகத்தைக் கூடச் சேரு
வேறான பிட்டுப்போ லிருக்கும் பாரு
விருப்பமாய் முன்செம்பில் சேர்த்து ருக்கித்
தாறாக ராவியே கெந்தி யொன்று
தடையறவே சூதமொன்று நிறுத்துக் கொள்ளே (197)

நிறுத்துமே பொற்றலையின் சாற்றா லாட்டி
நேராகப் புடம்போடக் கருத்துப் போகும்
அறுத்துமே கரிஎடைக்கு அயத்தைச் சேர்த்து
ஆதியாய் அரைத்துவில்லை ரவியில் வைத்து
நறுத்துமே புடம்போட்டுத் திராவ கத்தில்
நலமாகக் காசியென்ற மேரிற் போடு
வறுத்துமே பனிரெண்டு சாமம் தீத்தான்
வகையாக எரிக்கச் செந் தூர மாமே (198)

## அயத்தாம்பர செந்தூர வேதை

ஆமேதான் ரவிதனிலே நூற்றொன் றிட்டால்
ஆதியாம் செம்புகட்டித் தங்கமாகும்
காமேதான் உப்புக்குங் காவிக் குந்தான்
கலங்கா து வேதைதான் கருவாய்ப் பாரு
நாமேதான் பணவெடைதான் தேனி லுண்ணு
நாமுண்ட கற்பமா மிதுபொய் யா து
வாமேதான் மண்டலத்தில் காய சித்தி
வளமாக லோகசித்தி மருவிப் பாரே (199)

## செம்பு குறிப்பிட்ட இடங்களில் மேற்சொல்லியவாறு போல் மடக்கிச் செந் தூரித்தால் சாயமேறும்

மருவிப்பார் செம்புவந்த இடத்துக் கெல்லாம்
மயங்காம லிப்படியே செந்தூ ரம்செய்
பருகவே வாதமெல்லாங் கைக்குள் ளாகும்
பதிவான செந்தூரம் பண்ணி யுண்ண
நருகவே நமுவினா லொன்று மில்லை
நயமாக மடக்கினால் சாய மேறும்
வருகுமே காயசித்தி வாத சித்தி
மன்மதன் போல் வடிவாகும் வகையாம் பாரே (200)

### 193 - 200 உரை

நல்ல செம்பு பத்துப் பலம். கெந்தி முக்கால் சூடன் அரை. வீரம் கால் இம்மூன்றும் இருசாமம் பழச்சாறு விட்டு அரை. செம்பின் மேல் கவசமிடு புடமிடு. நொறுங்கும் கரித்தூள் போலிருக்கும். பின்பு அயம் பத்துப் பலம் எடுத்துப் பழச்சாற்றில் ஊற வைத்து அலம்பிக் காய வைத்தெடுத்து அந்த செம்புக் கரியில் சேர்த்து எலும்மிச்சம் பழச்சாறு விட்டு ஒருசாமம் அரை. வி. த. கா. பெரும் புடமிடு. வெங்காரம் சேர் உருக்கு. கரிச் செம்பாம். வெங்காரம் சேர்த்து அடிக்கடி ஊது. செவ்வலரி போலாகும். வெள்ளியில் இடு. ஆறுமாற்று அச்செம்பு நாலு பலம். தங்கம் ஒரு பலம். நாகம் ஒரு பலம். முதலில் தங்கத்தையுருக்கு. அதில் நாகம் சேரு. பிட்டாகும். முன்செம்பில் சேர்த்துருக்கு பின்பு செம்பு கெந்தி சூதம் இவற்றில் வகைக்கு ஒரு பலம் எடு. பொற்றலைக் கரிப்பான் சாற்றால் ஆட்டு. புடமிடு. கருக்கும். அதனைட அயம் சேர். அரை. வி. த. கா புடமிடு எடு. திராவகம் விடு. அரை

குப்பியிலிடு. பனிரண்டு யாமம் எரி. செந்தூரம் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு செம்பு கட்டித் தங்கமாகும் பணவெடை தேனில் உண். நாற்பது நாளில் உடல் உரம் பெறும். செம்பு வந்த இடமெல்லாம் இப்படியே செய் மாற்று கைவசமாகும்.

## முட்டாள் வாதிகளின் செய்கை

வகையில்லா வாதிகள்தான் செம்பெடுக்க
மாட்டாமல் அயத்துடனே செம்பைச் சேர்த்து
தொகையில்லா வெள்ளிதனிற் கொடுத்து ஊதித்
துடியாக மாற்றைப் போல் கண்டே னென்பார்
பகையாக வாதம்பொய் யென்பார் கோடி
பதைத்துமே யொன்றுமில்லை யென்று சொல்லி
உகமாக ரெம்பவுந்தான் கண்டே னென்பார்
உறுதியில்லா ரயச்செம்பைக் காண மாட்டார் (201)

மாட்டார்கள் ரசவாதி சுட்டுப் பார்த்து
மயங்கியே ஞானம்வந்தால் வாத மாகும்
பாட்டாக ஞானத்தைப் பார்த்துக் கேட்டுப்
பதையாமல் அடையோகம் பண்ணிக் கொள்வார்
தேட்டாமை யாகலே யதிலு மில்லை
திறமாகப் பிண்டத்தி லிருக்கு தென்று
கோட்டாவி கொண்டுமே கொண்டு வந்து
குரூரமாய்ச் செய்வார்கள் உலுத்தர் தாமே (202)

உலுத்தராய்ப் போகாமல் அயத்தைப் பாரு
உண்மையாய்ச் செம்பை முந்திக் கரியாய்ப் பண்ணி
வலுத்துமே கறுப்பியைத்தான் சேர்த்து ஊது
வகையாக மாண்டிறந்து அயச்செம் பாகும்

நலுத்துமே மதிதனிலே கொடுத்த மட்டம்
நலமான பொன்சேர்த்தால் பொன்னே யாகும்
அலுத்துமே திரியாமல் பாடு பட்டு
அதிகமாய்ச் செந்தூரம் பண்ணி யுண்ணே (203)

## முதல் அயச்செம்பெடுத்துத் தங்கத்தில் கொடுத்து வெள்ளியிற் கொடுக்கவும்

உண்ணவே அயச்செம்பைக் கண்ட போது
உறுதியாய்த் தங்கத்தை எடைதா னீயத்
தண்ணமாய்ச் செம்புகட்டு மெடுத்துப் பாரு
திடமாக வதின்பின்னே மதியில் தாக்க
வண்ணமாய்ப் பொன்னாகும் பொன்னை விற்று
வடிவாகச் செலவுதான் செய்து கொண்டு
எண்ணமாய்ச் செந்தூரம் பண்ணி யாடு
இன்பமாய் யோகமெல்லாம் எளிதி லாமே (204)

## அடியிற் சொல்லப்படுகின்ற வயச் செம்பு வெகு சுளுவு

எளிதாக வின்னமொன் றுசேதி கேளு
இன்பமாய் அயத்தினுட செம்பைத் தானும்
வளியாகச் சொல்லுகிறேன் உற்றுப் பாரு
வகையான செம்பப்பா வாதி மாரே
துளியான விந்துதான் பாய்ந்தாற் போல
சூட்சமப்பா கருக்குருவாய் கணக்காய்ப் பாரு
களயாகக் கண்டெடுத்தா லெல்லா மாகும்
கடிதென் று விட்டக்கா லெல்லாம் போமே (205)

## அயச்செம்பு

போச்சென்று எண்ணுதே செம்பைத் தானும்
போக்கோடே சொல்லுகிறேன் தேரர் சொன்ன
நீச்சென்ற விடுகாதே ரவிதான் பத்து
நிறையான நாறும்பூ முக்கா லாகும்
வாச்சுதே சுடர்க்கொடியோன் அரையும் போடு
வலுவான வீரமப்பா கால தாகும்
ஆச்சுதே இவைமூன்றும் பழச்சாறு விட்டு
அடைவாக விருசாமம் அரைத்த டாயே (206)

அரைத்துமே இருசாமம் கல்வத் தில்தான்
அன்பான கரும்பொரைப் பொடிதான் பத்து
பரைத்துமே அதினோடே கூடப் போட்டுப்
பதிவாக வரைத்து ஒரு சாமந் தானும்
வரைத்துமே ரவிமேரே கவசங் கட்டி
வளமான ரவியிலிட்டுக் காயப் போட்டு
நிரைத்துமே சுண்ணாம்பு உப்பு நேரே
நிலையாகக் கட்டியே சொல்லக் கேளே (207)

## அயச் செம்புக்குக் கவசமும் புடமும்

சொல்லவே சுண்ணாம்பு கவசம் செய்து
சுருக்காகக் கசபுடத்தில் போட்டு வாங்கு
நல்லவே செத்துமே தூளாய்ப் போகும்
நலமான கரியெடுத்துச் சொல்லக் கேளு
வல்லமையாய் அயந்தானும் பச்சை யாக
வடிவாகக் கால்வாசி சேர்த்துக் கொண்டு
செல்லவே பழச்சாறு விட்ட ரைத்துச்
செயமான எருரெம்பப் புடத்தைப் போடே (208)

## புடம் போட்ட அயச்செம்பை உருக்கவும் வெள்ளிக் கியவும் இந்த முறைபோல் சித்தர்கள் சரியாய்ச் சொல்வார்கள்

போட்டுமே யுருக்கிடவே ரவியு மாகும்
போக்கோடே ரவியெடுத்து நாளம் வைத்துத்
தாட்டுமே வெண்காரம் போட்டு ஊது
தடுத்துமே வெள்ளிபொன்போல் கண்விட் டாடும்
தீட்டுமே அயச்செம்பு சுருக்க மெத்தத்
திறமாகச் சொல்லார்கள் சித்தர் தாமும்
வாட்டுமேமதி பத்துக் கொன்றிட் டாலே
வளமான மாற்றென்ன ஏழு மாமே *(209)*

## செம்பெடுத்துச் செலவுக்கு வைத்துக் கொண்டு குளிகைக்குச் சாரணையைத்தீர்

ஆமேதான் செம்பெடுத்துச் செலவு செய்து
அடைவாகக் குளிகைக்குச் சத்தே யீந்து
காமேதான் உபரச நூற் றிரண்டு பத்தும்
கருணைபெற வூட்டியே கவன மோடு
வாமேதான் ருசிசித்தர் பேரே கேளு
வடிவாகக் கேட்டாக்காற் சொல்ல வேண்டாம்
நாமேதான் மலைதனிலே சஞ்ச ரித்து
நலமாகக் காயத்தைச் சித்தி யாக்கே *(210)*

## செம்பைக் கொன்றபின் அயஞ்சேர்க்கும் விதமும் அதை மறுபடியும் ஊத வேண்டிய வழியும்

சித்தியாம் செம்புதான் தீய்ந்த போது
சிறப்பான அயமுடனே சேர்த்துக் கொண்டு

பத்தியாம் பெரியபுடம் போட வேணும்
பதிவாகத் தீய்ந்தபின்பு பாகங் கேளு
முத்தியாய் உருக்கியே யதன்பின் கேளு
முடிவாக வெங்காரம் கொடுத்து ஊது
நத்தியே செம்புதான் காந்தி மெத்த
நலமான போக்கறிந்து நாடிப் பாரே (211)

## வெள்ளியையூதி நொறுக்கியருக்கி ரவி சேர்க்க வேதையாம்

நாடிப்பார் மதிதனிலே பழுப்புப் போக
நலமாக வூதிவெள்ளி நொறுக்க வேணும்
கூடிப்பார் உருக்கிமதி தன்னிற் கேளு
குறியுள்ள செம்புதனி வீய வேணும்
மூடிப்பார் நிறமாகும் வேதை யாகும்
முடிவாகும் புடமிறங்கும் தங்க மாகும்
வாடிப்பார் சொன்னபடி செய்யாப் போனால்
வகையாகப் பாடுபட்டு மிசைவா காதே (212)

## செம்புக்குப் புடம் வெகுவாய்ப் போட்டால் களிம்பு போகாது

இசைவாக இன்னமொரு சேதி கேளு
என்தாயார் சொன்னதுதான் சொல்லக் கேளு
பசையாகப் புடம்வெகுவாய்ப் போட்டா யானால்
பதிவாகக் களிம்புதான் போகா தப்பா
நசையாக மதிதனிலே ஏறும் போது
நாடியே ஊறலுண்டாம் கலினமாகும்
விசையாகப் புடம்போட்டால் களிம்பு போகும்
விருதாகப் பார்த்தாக்கா லிசைவா காதே (213)

## செம்பை அவரமில்லாமல் பாகமாய்க் கைமுறை தப்பாமல் செய்

ஆகவே கைமுறையாய்ப் பண்ணித் தேறு
அடுக்காறு தலத்திலே வாசி யேற்று
போகவே சுழிமுனையில் மனத்தை யூணு
போக்கோடே யாறுதலம் வெளியாய்க் காணும்
பாகமாய்ச் செய்தாக்கால் எல்லா மாகும்
படபடத்துச் செய்தாக்கால் மோசம் மோசம்
யோகமாய்க் கைதப்பில் வரிசை தப்பும்
உய்த்துணர்ந்து பார்த்துமே செம்பைச் செய்யே (214)

## சத்தியமாய்ச் சொன்னேன். செம்பை நொறுக்கிச் செந்தூரித்தால் எளிதலாகும்

செய்யவே செம்பைத்தான் நொறுக்கி யாடு
செயமாகும் வாதமெல்லாம் எளிதி லாகும்
நையவே செந்தூரம் முன்சொன் னாற்போல்
நாடியே பார்த்துமே செய்து கொள்ளு
வையகத்தி லுனக்கீடோ வந்த தானால்
வார்த்தையது போனாக்கா லென்ன சொல்வேன்
மெய்யாகச் சத்தியமாய்ச் சொல்லி விட்டேன்
மிதமாகப் போகாமல் பார்த்தி டாயே (215)

## 202 – 215 உரை

செம்பைக் கரியாக்கு. அயத்துடன் சேர்த்து ஊது. அயச்செம்பாகும் வெள்ளியில் கொடு. மட்டம் பொன்சேர் பொன்னேயாகும். செந்தூரம் செய்து தின்னு. அயச்செம்பில்

தங்கம் சேர். செம்பு கட்டும். அதன்பின் வெள்ளியில் தாக்கு. பொன்னாகும். செலவிடு. உண். வாழ். செந்தூரம் பண்ணி ஆடு.

கெந்தி முக்கால் சூடன் அரை வீரம் கால இம்மூன்றும் பழச்சாறு விட்டரைத்து மெழுகான பதத்தில் இரும்பு அரப்பொடி பத்துப் பலம் சேர்த்து ஒரு சாமம் அரைத்து பத்துப் பலம் செம்பின் மேல் கவசமிட்டு வெயிலில் காயவைத்துச் சுண்ணாம்பும் உப்பும் அரைத்து அதன்மேல் பின்னுமொரு கசவசமிட்டு கெசபுடத்தில் போடு. செந்தூரம் தூளாய் இருக்கும். இந்தக் கருந்தூளை எடுத்து அதனுடன் பச்சை அயப்பொடி காற்பாகம் சேர்த்துப் பழச்சாறு விட்டு ஒருசாமம் அரைத்துப் புடமிடு. உருக்கு. செம்பாகும் எடுத்து வெங்காரம் சேர்த்து நாளத்தால் ஊது. (குழலால்) வெள்ளி பொன் போல் கண் விட்டாடும். வெள்ளியில் பத்துக்கு ஒன்று சேர். ஏழு மாற்று செலவிடு உபரசங்கள் நூற்றிருபதனையும் குளிகை செய்து ஊட்டு. விண்ணில் பற. மலையில் இயங்கு. வெளியில் இயம்பாதே. செம்பு தீஞ்சவுடன் அதனொடு அயம் சேர்த்துப் பெரும்புடமிடு. மீண்டும் தீஞ்சவுடன் உருக்கி வெங்காரம் கொடுத்து ஊது. செம்பில் ஒளி மிகுதி. நொறுக்குவெள்ளியிலே தான் கொடுக்க வேண்டும். சிறுபுடம் போட்டால் செம்பின் களிம்பு நீங்காது வெள்ளியில் ஏறும் போது ஊறல் உண்டாகும். பெரும்புடமிட்டால் நலம். மெய்யாக உண்மையாகச் சொல்லி விட்டேன்.

## அயச் செம்பு செய்து கொண்டால் உலகில் நெடுநாளிருக்கலாம்

பார்த்துமே அயச்செம்பைச் சொன்னே னப்பா
பதிவாக ஆகாதே போனாற் கேளு
ஏற்குமே இவ்வுலகி லிருக்க லாமோ
ஏழையைப்போல் வாய்குழறித் திரிய வேணும்

பார்க்குமே சாத்திரத்தைப் பார்த்து மெல்லப்
பண்பான புத்தியிலே பதிய நில்லு
காக்குமே கண்ணொளிவு இல்லாப் பேர்க்குக்
கருத்தான வுலகத்தில் காட்சி யில்லை (216)

## தீச்சை விதியில் அயச்செம்பை மறைத்துச் சொன்னேன் என்றது

காட்சியாய் அயச்செம்பை முன்னே சொன்னேன்
கருத்தான யூகிமுனி சொன்ன வார்த்தை
தாட்சியில்லா வடமொழியைப் பார்த்துத் தேறித்
தடையறவே சொல்லிவிட்டே னுலகத் துள்ளே
மோட்சமாய் எல்லார்க்கும் முடிவு காட்டி
முடிவான கட்சியிலே நிசமாய்ச் சொன்னேன்
தீட்சைவிதி தன்னிலே மறைத்துச் சொன்னேன்
திறவான அயச்செம்பைச் சொன்னேன் பாரே (217)

## வாதி உபதேசக் கிரமம்

பார்க்கவே சிவன்சொல்லத் தேவி கேட்டுப்
பதிவான நந்திக்கு அருளிச் செய்ய
ஏற்கவே நந்தியசு வனிக்குச் சொல்ல
எளிதான அசுவனி விசுவனிக்குச் சொல்ல
மூர்க்கமாய் விசுவனியும் தன்மந்திரிக்குச் சொல்ல
முக்கியமாய்த் தன்மந்திரி அகத்தியர்க்குச் சொல்ல
கார்க்கவே யகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்லக்
காரியத்தைச் சொல்லுகிறேன் கண்டு பாரே (218)

## இந்தக் காண்டத்தின் கடைசியில் அயச்செம்பு கைபாகமாகச் சொல்லியிருக்கிறது

கண்டுபார் புலத்தியர் தேரருக்குச் சொல்லக்
கனிவான தேரரும்யூ கிக்குச் சொல்லப்
பண்டுதான் யூகிமுனி யுலகத் தோர்க்கும்
பரிசையாய்ப் பிழைக்கவயச் செம்பைச் சொல்லத்
துண்டுபார் கைபாகம் வரிசை யாகத்
துடித்துமே கடைசியிலே யிந்தக் காண்டம்
ஒன்றுமே சொல்லிவிட்டேன் முடிவு சொன்னேன் (219)

## இந்நூல் தகாவதர்களுக்குக் கொடுத்தால் கோடி நரகம் வரும். சகல பாகமுமிதற்குளிருக்கிறது

பலனாக இந்நூலை யொருவ ருக்கும்
பதிவாகக் கொடுத்தாக்கால் நரகம் கோடி
பிலனாகச் சித்தரிட்ட சாப மப்பா
பிரபலமாய்ப் பாகமெல்லா மிதுக்குள் ளாகும்
கலனாக வில்லாமல் சொல்லி விட்டேன்
கருத்துவைத்துப் பார்த்துமே செய்து கொள்ளு
வலமான ஈசுவரியைப் பாகம் வைத்த
வடிவான * சிவன் சொன்னார் கிரந்தந் தானே (220)

* சிவன் பேரி லாணை யாமே பா. வே.

## வாதம் பொய்யென்று சொன்னால் நரகத்தில் வீழ்வான்

தானான சிவன் சொன்னா ராணை யாகும்
தர்க்கமாய்ப் பேசாதே செம்பைப் பாரு

கோனான குருவருளால் வாத மாகும்
கொள்கையிதை விட்டாக்கால் செம்பை யாகா
பானான வாதம்பொய் யென்று சொன்னால்
பதிவான நரகுதனில விழுவான் பாவி
வானான நூலைத்தான் சோதிச் சேறு
வடிவான வாதமெல்லாம் எளிதி லாமே (221)

## 216 – 221 உரை

தீச்சை விதியில் அயச்செம்பை மறைவாகச் சொன்னேன். இந்நூலில் உண்மை சொன்னேன். இக்காண்டத்திறுதியில் பாகமும் சொன்னேன். செய்து பொன்கண்டால் வெளி விடாதே. சித்தர் சாபம் இட்டுள்ளனர். சிவன்முதல் என்வரை வழி வழிவாய் வந்த முறை.

## அயச்செம்பு அயத்தொட்டிப் பாடாணத்தாலாகும்

ஆகுமே யின்னமொரு கரும்பொன் மார்க்கம்
அடைவாகச் சொல்லுகிறேன் வாதி கேளு
ஏகுமே யிச்செம்பைப் பார்த்தா னானால்
இகபரமுங் கைக்குள்ளாய்ச் சிக்கும் பாரு
தாகுமே நூல்தனிலே சித்தர் சொன்னால்
டையற்ற செம்பொன் று சொல்லக் கேளு
பாகுபோ லிருக்குமந்தப் பாகந் தானும்
பதிவான கைமுறையாய்ப் பார்த்தி டாயே (222)

பார்த்திடவே துரிசியொரு பலமும் பத்துப்
பதிவாக வெங்கார மெடைபொ ரித்துச்
சேர்த்திடவே யிரண்டுமொன்றா யரைத்து ருக்கச்
செயமாகச் செம்பாகும் பின்பு கேளு

காத்திடவே செம்புநிறை முக்கால் கேளு
கனிவாக நாற்றமது நிறுத்துக் கொண்டு
சாத்திடவே சுடர்கொடியோன் அரையும் சேரு
சரியான வீரமது காலும் கூட்டே (223)

கூட்டியே பொற்றலையின் சாற்றா லாட்டிக்
குணமாகச் சுண்ணாம்பு உப்பு நேரே
வாட்டியே யரைத்திட்டு மேலே கூட்டி
வலுவாகப் புடம்போட்டுப் பிரித்துப் பாரு
நாட்டியே கரிபோல அதராய்ப் போகும்
நலமாக எடுத்துமே நாட்டக் கேளு
தாட்டியே யயத்தொட்டிப் பாடா ணத்தைத்
தடையாக எடைசமனாய்ச் சேர்த்துக் கொள்ளே (224,

சேர்த்துமே பாணியா லரைத்து வில்லை
செயமாக வில்லைகட்டி ரவியிற் போட்டுப்
பார்த்துமே கனவெருவிற் புடத்தைப் போட்டுப்
பதறாம லெடுத்துமே காலம் கூட்டிக்
கார்த்துமே யுருக்கிடவே செம்பாய்ப் போகும்
கனமான பொன்னொளியை யென்ன சொல்வேன்
நாற்றுமே நட்டாற்போல் வேதை காணும்
நலமான போக்கிதுவே வேதை யாமே (225)

## முன்சொன்ன அயச்செம்பை வெளியிற் மகாசத்தியம் சொல்கின்றேன்

ஆமேதான் சிவனாணை நந்தி யாணை
அன்பான விசுவ்னிமே லாணை யாகும்
தாமேதான் அசுவனிமே லாணை யாகும்
தப்பாமல் தன்மந்திரி தன்மே லாணை

காமேதான் அகத்தியர்மேல் ஆணை யாகும்
கனிவான புலத்தியர்மேல் ஆணை சொன்னேன்
வாமேதான் தேரர்மேல் ஆணை யாகும்
வகையான யூகியின்மே லாணை யாமே (226)

## இந்தச் செம்பைச் செந்தூரஞ் செய்தால் வேதை ரெம்ப

ஆணையாம் மதியுருக்கி யிருய தொன்றில்
வகையாக இட்டிடவே தங்க மாகும்
வாணைதான் இம்முறைதான் நிசம தாகும்
வலுவான செந்தூரம் செய்யில் ரெம்ப
தாணைதான் கைமுறையாய்க் கருத்தாய்ப் பாரு
கருத்துவைத்துச் செந்தூரம் பண்ணித் தின்னு
நாணைதான் கோடியுக மிருக்க லாகும்
நன்மையாய்க் கண்டறிந்தோன் வாதி யாமே (227)

## அயத் தொட்டிப் பாடாண வடையாளம்

வாதியாம் அயத்தொட்டி நிறத்தைக் கேளு
வகையாகக் கல்லிலுரை பொன்போ லாகும்
சாதியாம் இனவழியாய்ப் பார்த்தெ டுத்து
சதிராகச் செயின்வாத சித்தி யாகும்
மோதியே யினமறிந்து செய்தால் நல்ல
முத்தியாய் மோட்சங்கள் மிகவு மாகும்
பாதிசேர் மதியணிவார் சொன்ன வித்தை
பதிவாக அறிந்தவனே வாதி யாமே (228)

## சரக்கைப் பார்த்துச் செய்தால் தப்பாது

வாதியாம் சிறிதுபேர் வாதம் பார்க்க
வகையாக வொன்றுவிட்டே யொன்று வாங்கி
நீதியாஞ் சரக்குகள் தான் சுட்டுக் கெட்டு
நிலையில்லை யென்பார்கள் உலக வாதி
நீதியாய்ச் சரக்கைப்பார் நிலையைப் பாரு
நேராக வுருக்கவே நினைவும் பாரு
கோதியே மனம்நின்றா லெல்லா மாகும்
குணமாக வேணுமென்றால் தொட்டி பாரே (229)

## அயத் தொட்டி நல்லது

தொட்டியே யயத்தொட்டி சுருக்கு மெத்தத்
துடியாகப் பரிபாஷை நாம மெல்லாம்
செட்டிபோல் நிறைசரியாய்ச சொல்லிப் போட்டேன்
சிறப்பாக நிறைதப்பின் வாதம் பொய்யாம்
பட்டிபோல் மேயாதே யுன்னிப் பாரு
பதைக்காதே என்னுடைய நூலைப் பாரு
திட்டமதாய் வாதமதே யுடனே வந்து
திறமாக வாதமது ஏவ லாமே (230)

## 222 – 230 உரை

இன்னமொரு வழி கூறுவர். இம்மையும் மறுமையும் கைக்குள்ளாகும் சித்தர் சொன்ன தடையற்ற செம்பொன் வழி. துரிசு பத்துப் பலம் வெங்கராம் பத்துப் பலம் பொரித்து அதனொடு சேர். அரை உருக்கு செம்பாகும். செம்பு நிறைக்கு முக்காற் பாகம்

கெந்தி அரைப் பாகம் சூடன்காற் பாகம் வீரம். இவற்றைப் பொற்றலைக் கரிப்பான் சாற்றலாட்டு சுண்ணாம்பு உப்பும் அரைத்துக் கவசமிடு. புடமிடு கரிபோல் அதராகும். அதனெடைக்கு அயத் தொட்டிப் பாடாணத்தைச் சேர். பாணியால் அரை வி. த. கா. கனபுடமிடு. காரங் கூட்டி யுருக்கு. செம்பாகும் சிவன்முதல் என்வரையுள்ள மரபினர் மேல் ஆணையாகச் சொல் கின்றேன் வெள்ளியையுருக்கிப் பத்துக்கு ஒன் று வகையாகக் கொடு. செம்பொன் உண்மை செந்தூரம் செய். உண். கோடியுகம் இருக்கலாம். அயத்தொட்டிப் பாடாணத்தைக் கல்லில் உரைத்துப் பார். பொன் போலாகும். தெரிந்தெடுத்துச் செய் பிறை சூடிப் பெருமாள் அருளியது. நிறை ஒழுங்காகச் சொல்லி விட்டேன் பட்டிபோல் அலையாதே ஊன்றிப் பார்.

### முதலில் அயம்செய். பின்பு உப்பு அதன்பின் சவுக்காரம்

ஏவலாம் அயத்தையே யுழைத்துப் பாரு
இதமாக வதன்பின்னே யுப்பைப் பாரு
காவலாய் அதன்பின்பு முறையைப் பாரு
கருத்தாக வதன்பின்னே கருத்து வைத்துத்
தாவவே சவுக்காரச் சுண்ணம் பாரு
தயவாக வதன்பின்னே யோகம் பாரு
பாவவே யதன்பின் னேசுழியி லேற்று
பதிவாக ஞானமெல்லாங் கைக்குள் ளாமே (231)

### வாதம் கைக்குள்ளானால் வாயை மூடிப் பத்திப்படுத்தவும்

கைக்குள்ளாய்ச் சிக்கு மட்டும் நூலைப் பாரு
கனகம்வந்த வுடனேதான் வாயை மூடு

பைக்குள்ளே பணம்போட்டாற் போலே கட்டு
பதிவான இருதயத்தைப் பதனம் பண்ணு
செய்க்குள்ளே யுரம்போட்டா லுரமு மாகும்
சிறப்பாகக் கெட்டியாய் நிலையை யுன்னு
வைக்கவே யெல்லாமும் சித்தி யாகும்
வையகத்தில் சித்தரென்று வகையாய்ச் சொல்வார் *(232)*

## நன்றாயிருந்தால் சித்தரென்பர்

சொல்லவே மனதுதா னாங்கா ரத்தால்
சித்தம்வைத்துச் சொன்னாக்கால் உயர்ந்து போகும்
வல்லமையாய்ச் சொல்லாதே வாழ்வு மில்லை
வறுபோல் உண்டாக்கால் ஒன்று மில்லை
நல்லாக இந்தாக்கால் சித்த ரென்பர்
நமனுண்டா லென்னபலன் நாடிப் பாரு
வில்லாக வளைந்தரிக்கா லம்பு தைக்கும்
வெறுமரத்தா லம்புதையா வாறு தானே *(233)*

## எளியவன் கல்லுப்பைச் செய்க. செல்வன் சவுக்காரம் செய்து வங்கம் நீற்று வேதையாம்

வாறாகப் போகாமல் சொல்லக் கேளு
வளமாக எளியவன்தான் கல்லுப் பைப்பார்
கூறான ரசம்சாகும் வேதை யாகும்
குணமாகும் பொருளாகும் குறிப்பு மாகும்
நூறான பணக்கார னானாற் கேளு
உயர்வான சவுக்காரச் சுண்ணம் பண்ணு
காறான வங்கத்தை நீற்றிக் கொண்டு
கருணைபெறத் துரிசைநீ நீற்றி டாயே *(234)*

### வாதம் தெரிந்தோன் பிச்சைக்காரனைப் போலிருப்பான். கேட்டோருக்குப் பிண்டமென்றும் வழலை யென்றும் சொல்வான்

நீற்றிட்டால் ரசம்சாகும் வேதை யாகும்
நிலவரமாய்ப் பொருளாகும் சுண்ண மாகும்
காத்தியட்டால் ஒன்றமில்லை பிச்சைக் காரன்
கருத்தாக வொன்றுமில்லை சொல்ல மாட்டான்
பார்த்திடவே வழலையென்பார் பிண்ட மென்பார்
பதிவாக அலைச்சலாய்ச் சொல்லு வார்கள்
சேர்த்திட்டே னென்றுசொல்வார் பொல்லாச் சித்தர்
சிறப்பாக நூலைத்தான் விரும்பு வாயே (235)

### அறிவில்லார் பிண்டமென்பதைப் பிணமென்றும் ஐங்கோலமென்றும் அலைவார்கள் பிண்டமென்பது அயம்

விரும்புவார் அறிவில்லார் பிண்ட ந் தன்னை
விருப்பமாய் அலைவார்கள் பிணத்தி னோடே
அரும்புவார் ஐங்கோல மென்று சொல்லி
அதுவாச்சு வழலைதான் என்பார் பொல்லார்
கரும்பைப் போற் சொல்வார்கள் புத்தி யில்லார்
கருத்தாக நம்பவே வேண்டா மப்பா
நறும்பூவை நம்பினாற் பலனு மாகும்
நாடியே அயமுந்திப் பார்த்தி டாயே (236)

### உண்மை உபதேசம் பெற நூறாண்டாகும். அதற்குள் வாழ்வு போய்விடுமே

பார்த்திடவே மனம்நிலைத்துப் பாதை யாகப்
பதிவாகச் சாத்திரத்தை யுன்னிப் பாரு

கோத்திடவே ரசவாதம் நிலைக்கும் பாரு
கொள்கியே கட்டாலே நிலைத்துப் போகும்
சேர்த்திடவே யினத்தோடே செம்பு மாகும்
சிறிதென்று விட்டாக்கால் செயமா காது
காத்திடவே நூறாண்டில் சொல்வா ரப்பா
கருணைபெற வதற்குள்ளே சாவார் தானே *(237)*

## *231 – 237* உரை

முதலில் அயம் பின்பு உப்பு பின்பு சவுக்கராச் சுண்ணம் அதன் பின்னர் யோகம் அதற்கு மேல் சுழியிலேற்றி ஞானம் பார். கைக்குள்ளே மாற்று முறை சிக்கும் வரை நூலைப் பார். பொன் வந்தவுடன் வாயை மூடு. எளியவன் கல்லுப்பைப் பார். செல்வனெனில் சவுக்கராச் சுண்ணம் செய். வழலை என்றும் பிண்டமென்றும் சொல்வார். அவர் பொல்லாச் சித்தர். என் நூலை விரும்பு. காத்துக் கிடந்த கேட்டால் அவருக்கு நூறு வயது வந்த பின் சொல்வார். இன்றேல் அதற்கு முன் சாவார். அவரால் பயனில்லை.

சாகாமல் சாத்திரத்தில் மனத்தை யூணு
சமுசயங்கள் எண்ணாதே யூகி நூலை
யோகமாய்ப் பார்த்திடவே செம்பு தோன்றும்
உறுதியாய் மதிதனிலே கொடுத்துத் தேறு
பாகமாய்ச் செய்தாக்கால் சித்தி யாகும்
பதறினா லொன்றுமில்லை பதியு மில்லை
வேகமாய்க் கல்லுப்பை விரும்பிப் பாரு
விதமான தங்கமது நிலைக்கும் பாரே *(238)*

## கல்லுப்புச் சுண்ணம்

நிலைக்கவே யுப்பொன்று சொல்லக் கேளு
நேரான சுண்ணமப்பா வேதை யாகக்

கலைக்கவே கல்லுப்பு பலமோ பத்து
கனிவாக நிறுத்துமே யப்பால் வைத்து
தலைக்கவே கட ல்நுரைதான் பலமும் பத்து
தடையறவே கரியில்வைத்து ஊதச் சுண்ணம்
வலைக்கவே கல்லுப்பிற் சுண்ணம் சேர்த்து
வாகாக நாயுருலிச் சாற்றா லாட்டே (239)

## கல்லுப்புச் சுண்ணச் செயநீர்

ஆட்டியே வில்லை செய்து கரியி லூது
ஆகாகா கடுஞ்சுண்ணம் நீறிப் போகும்
தாட்டியே சுண்ணமெடை சாரம் சேர்த்து
தாக்கியே நெட்டடங்க வரைத்துக் கேளு
வாட்டியே கலசத்தில் வாரியிட்டு
வகையாகப் புடம்போட்டுப் பனியில் வைக்க
காட்டியே பலபலெனச் செயநீ ராக்கும்
கனிவான இந்நீரில் வீரம் போடே (240)

போட்டுமே பூரமொடு கலக்கிக் கொண்டு
போராகப் பார்க்கையிலே சிவந்து காணும்
காட்டுமே சிவப்பான நீரைச் சொல்ல
கணக்கேது என்னாலே சொல்லப் போகா
தாட்டுமே நீரதுவும் பலமு மொன்று
தாக்கியே பீங்கானி லிறுத்துக் கேளு
வாட்டுமே சூடனொடு பச்சைப் பூரம்
வகையாகப் பல் நிறுத்துக் கல்வத் திட்டே (241)

(பச்சைப் பூரம் - பச்சைக் கற்பூரம்)

**சூடன் பச்சைக் கற்பூரம் சுண்ணம். சாரணம் சேர்த்த செயநீர்**

இட்டுமே முன்செயநீர் கூட விட்டு
இழுத்தரைக்க மூன்றுநாள் அரைத்து வில்லை
கட்டுமே ரவியில்வைத்துக் காய வைத்துக்
கணக்காக ஐஞ்சுண்ணக் குகையில் வைத்து
நட்டுமே பத்தெருவில் புடத்தைப் போடு
நலமாகப் பூரமது சுண்ண மாகும்
சட்டுமே சகலமுந்தான நீறிப் போகும்
தாக்கியரை சாரத்தைச் சலமாய்ப் போமே *(242)*

**பூரச் செயநீர் நிமிளைச் சுண்ணம் அதனால் துரிசுச் சுண்ணம் அதனால் சூதச்சுண்ணம்**

போகுமே இந்நீரில் நிமிளை தோய்த்துப்
புடம்போட்டுக் கரிதனிலே யூதச் சுண்ணம்
ஆகுமே கண்டர்மேல் பூசிப் போட
அன்பாகப் புடம்போடக் கண்டர் சுண்ணம்
தாகுமே துரிசதுதான் நீற்றைச் சூதந்
தாக்கிடவே வீறிட்டுச் சூதஞ் சாகும்
பாகுமே சூதமது செயநீர் பட்டால்
பதிவான செயச்சுண்ணம் சூதத்தாட்டே *(243)*

**இந்நீரால் உபரசங்ளெல்லாம் நீறும். உப்புகளெல்லாம் கட்டும் மெழுகாகும்**

ஆட்டுமே இந்நீர்தான் துறைகள் தோறும்
அன்பாகத் தோய்த்தூதச்சுண்ண மாகும்
காட்டுமே சரக்கெல்லாம் இப்படியே நீறும்
கனமான பாஷாணம் அறுபத்து நாலும்

வீட்டுமே யுபரசங்கள் நூற்றிரண்டு பத்தும்
விதமாக நீர்தோய்த்து ஊத நீறும்
தீட்டுமே யுப்புமுத லிருபத் தைந்தும்
திடமாகக் கட்டாகும் மெழுகு மாமே (244)

### உப்பைக் கட்டிச் சுண்ணஞ் செய்தால் எல்லாம் சித்தி

மெழுகாகும் வேதையாம் செந்தூர மாகும்
மேதினியில் ரசவாதம் ஏவல் கேட்கும்
வழுவாத படிசெய்தால் எல்லாஞ் சித்தி
வழுவினால் ஒன்றுமில்லை மார்க்கம் பாரு
தழுதாகப் போகாமல் பாக மாகத்
தனையறிந்து உப்பைத்தான் கட்டி யாக்கு
அழுதாக்கால் என்னபயன் சுண்ணம் பாரு
அடைவாக விட்டாக்கால் எல்லாம் போமே (245)

### இந்நச் சுண்ணம் எல்லாத் துறை களிலேயும்புகட்ட வேதையாகும்

போகுமே யிச்சுண்ணம் துறைகள் தோறும்
போக்கோடே புகட்டவே வேதை யாகும்
ஆகுமே இச் சுண்ணம் போலே காணேன்
அடைவாக நாவினால் சொல்லப் போகா
ஏழுமே சகலமுந்தான் சித்தி யாகும்
எனைப் போல சொல்லுவார் உலகில் உண்டோ
தாகுமே துறைதோறும் பூட்ட நன்று
சகலசித்தும் ஆடலாம் தாக்கி டாயே (246)

### கல்லுப்பைச் சுண்ணஞ் செய்தால் கசலமும் சுண்ணமாகும்

தாக்கிடவே கடல்நுரையால் கல்லுப்பை நீற்று
தன்மையாய்ப் போகாமல் வாதந் தானும்

பாக்கிடவே சிவப்பாகும் பருவங் கேளு
பதிவான சுண்ணமெல்லாம் ஆகும் பாரு
வாக்கிடவே கட்டியே சுண்ணம் பண்ணு
வகைகெட்ட வாதியே கருவாய்ப் பாரு
தாக்கிடவே சகலமுந்தான் சித்தியாகும்
தடையில்லா யூகிமுனி சொன்ன வாறே (247)

## உப்புச் சுண்ணத்தால் சாரச் சுண்ணம்

வாறுகேள் உப்புடனே யுப்பைச் சேர்த்து
வகையாக வூதிடவே சுண்ண மாகும்
தாறிடவே சுண்ணத்தில் சாரம் சேர்த்துத்
தப்பாமல் புடம் போடச் சாரச் சுண்ணம்
காறிடவே கண்டரைத்தான் நீறு பண்ணு
கடிதாகச் சூதமது கட்டிப் போகும்
பாறுகேள் சகலமுந்தான் சித்தி யாகும்
பதிவான சித்தியெல்லாஞ் சூத மாமே (248)

## 238 – 248 உரை

கடல் நுரை பத்தப் பலம் எடுத்துக் கரியில் வைத்து ஊது. சுண்ணமாகும். அதனைப் பத்துப் பலம் கல்லுப்பிற் சேர்த்து நாயுருவிச் சாறுவிட்டு அரை. வி. த. கா. கரியில் வைத்து ஊது கடுஞ்சுண்ணமாகும். அதனெடைசாரம் சேர். அரை. கவசமிடு. புடமிடு. பனியில் வை. செயநீராம் வீரம் போடு பூரமும் போடு கலக்கு சிவக்கும். ஒரு பலம் நீரைப் பீங்கானில் ஊற்று. சூடமும் பச்சைக் கற்பூரமும் ஒருபலம் நிறுத்துக் கல்வத்தில் போட்டுச் செயநீர் விட்டு மூன்று நாள் அரை. வி. த. கா. ஐந்து சுண்ணக் குகையில் வைத்துப் பத்தெருப் புடமிடு பூரம் சுண்ணமாகும். எல்லாமும் நீறும் சாரம் சேர். தண்ணீராகும். இந்நீரில்

நிமிளையைத் தோய்த்துக் கரியில் வைத்தூது சுண்ணம். துரிசின்மேல் பூசிப் புடமிட அதுவுஞ் சண்ணமாம். அதனைச் சூதத்தில் தாக்க அது கட்டும். அதில் செயநீர் பட்டால் அதுவும் சுண்ணமாம். இங்ஙனம் சரக்கெல்லாம் நீறும். பாடாணம் 64ம் நீறும். உபரசங்கள் 120ம் நீறும் உப்பு முதல் இருபத்தைந்தும் கட்டாகும். மெழுகாகும், செந்தூரமாகும். மாற்றாகும். எனைப்போல சொல்லுவார் உலகில் உண்டோ? உப்புடன் உப்புச் சேர்த்து ஊது. அது சுண்ணமாகும். அதில் சாரம் சேர்த்துப் புடமிடு. அது சண்ணமாகும். துரிசினை நீற்று. ரசம் கட்டுப்படும்.

## மோன நிச்சயம்

ஆகுமே யகண்டபரி பூரணத்தை
அடுத்துமே நோக்கிநீ யடுக்காய்ப் பாரு
ஏகுமே யடுக்காறு தலத்தில் நிற்கும்
இன்பமாய் அக்கரத்தைப் பார்த்துக் கொண்டு
தாகுமே சிதம்பரத்தின் நடனந் தானும்
தாக்கியே தரிசித்துக் கங்கை தன்னில்
வாகுமே மூழ்கியபின் சுழினை நேரே
வடிவமென்ற கேசரியாம் மௌனத் தாடே (249)

## சிதம்பர தரிசனம்

ஆடியே பிருதிவியி லாரூர் எல்லை
அடைவாக மௌனமாய் நின்று கொண்டு
தேடியே சித்தென்ற பரம்நி னைந்து
திரமான காயசிதம் பரத்தை நாடி
பாடியே சித்தர் முனி யோகி நிற்கும்
பதிவான நாதாந்த புண்ட ரீகம்
வாடியே யப்புரத்தில் சித்தர் பாரு
வகையாகச் சிதம்பரந்தான் கண்டு தேறே (250)

## முத்தித் துறை

தேறவே பிண்டவிரு தயவா காசம்
சிவசாட்சி யென்றாமே பெரிய தான
ஆறவே விராட்டினிரு தயந்தா னென்றும்
ஆர்க்கமாம் பிரமமென்றும் ஐக்கிய மென்றும்
வாறவே யிரண்டற்று நிற்பார் யோகி
வகையறிந்தால் சிதம்பரத்தி னுண்மை தோணும்
ஏறவே யக்கணத்தி லறிந்து பாரு
இதமாகும் சித்திமுத்தி யாகுங் காணே (251)

## ஆறாதாரத்தில் வேதமூர்த்தி விளக்கம்

காணவே பிருதிவியாம் சுவாதிட் டானம்
கமலைநின்று ருக்வேத மாரூ ராகும்
மாணவே மணிபூரகம் எசுர் வேதம்
மகத்தான வப்புதிரு வானைக் காவல்
ஆணவே அநாகதந்தான் சாம வேதம்
அக்கினிதா னிருப்பிடந்தா னருணை யாகும்
பூணவே விசுத்தியதர் வணமாம் வேதம்
போரான மாருதங்கா ளத்தியாமே (252)

## சித்தர் "உறையும் தலம்" தில்லை

ஆமென்ற வாகாசஞ் சிதம்பரமு மாகும்
அக்கினிமேல் சிவகங்கை சிரந்தா னாகும்
தாமென்ற தங்குசபா பதியுந் தானாய்
தத்பதமும் தொம்பதமும் கடந்து நின்றோர்
தேமென்ற சித்த ருறை தலமே தில்லை
சுயமாகுஞ் சபைதமக்கோ ரிருப்பி டந்தான்
காமென்ற தராதலமு மதுதா னப்பா
கனகசபை நாதரீச் சுரர்தாம் காணே (253)

## சிவனுறையுமிடஞ் சித்தரிருதயம்

தாமென்ற அவனைவிடத் திக்கு முண்டோ
தனித்துநின்ற வாங்காரஞ் சலனந்தீர்ந்து
போமென்ற பொறிபுலனால் அறிவ தெல்லாம்
போகமாங் கரணத்தா லறிவ தல்ல
ஆமென்ற நெறிய யன்மால் அறிவதல்ல
அப்பொருளே சிதம்பரமாய் அறிவார்வல் லோர்
தேமென்ற சராசங்கள் ஆண்பெண் ணாகிச்
சிறந்திருந்தார் சித்தருட நினைவில் தானே (254)

## மயக்கத்தால் மனங்கெடாமல் பூசை செய் சிதம்பர பூசை செய்

தானான துரைச்சியைத்தான் பூசை பண்ணி
சாங்கமாய் மதுவுண்டு மேலே நோக்கி
தேனான சிற்சபையில் நடன வோசை
தெரிசித்துச் சிதம்பரத்தைப் பூசை பண்ணு
பானான லாகிரியில் மனது வேறாய்
பாழான மாய்கைதனில் மனம்போக் காதே
ஊனான வுள்மூலம் பார்த்து ரைத்து
உருகுகின்ற பின்பு மேல் மூலம் பாரே (255)

## மூலத்தில் இறுத்தில் எத்தனை யுகமானாலும் கணம் போலாகும்

மூலத்தில் கீழக்கினி மண்ட லத்தில்
மூழ்கியே ஏகனாய் முத்தி பெற்று

மூலத்தின் நடுவான சிகார வீட்டில்
முனையான ஆதித்த மண்ட லத்தில்
மூலத்தில் நடுமூலம் பிரா்ண மூலம்
மூழ்கியே சிதம்பரத்துட் பாதம் பார்த்து
மூலத்தில் மேன்மூலம் சந்திரன் வீட்டில்
மூழ்கிடவே மூன்றுயுகம் கணத்தி லாமே (256)

## தைரியத்தோடு மனத்தைக் கட்டி ஆசாரியன் வழியாய் இருதய கமலத்தில் பரைபூசை செய்

செணத்திலே மனந்தன் னைத் திடாக ரிந்து
தேசிக்குச் சிங்கென்ற கடிவாளம் பூட்டி
கணத்திலே குருபதத்தில் குதிரை கட்டிக்
கண் காணவொளிதானுங் கருத்தி லுற்றால்
குணத்திலே சைதன்னியம் பாலை யுண்பாய்க்
கொடிமின்னல் போலான இதழுக் காக
மணத்திலே முண்டகமாம் பூவைக் கொய்து
மாதாவின் பாதத்தில் அர்ச்சித் தேற்றே (257)

## பூசா விதி

ஏற்றியே வஸ்துவொடு சுத்தி தானும்
எளிமையாய்ப் பூசித்து எட்டெ ழுத்தைப்
போற்றியே கும்பித்து நடுமூ லத்தில்
புகழ்ந்துநின்ற உருத்திரன்றன் பாதம் போற்றி
மாற்றியே காயசித்தி யோக சித்தி
மகிழ்ச்சிதரும் வாதசித்தி மகிழ்ந்தெ னக்குத்
தோற்றியே தரவேண்டு மென்று சொல்லித்
தொழுதுமே அருள்தரவே துதித்து உண்ணே (258)

### வெடியுப்புச் செயநீர் உப்புக் கட்ட

உண்ணவொரு உப்பினுட கட்டுச் சொல்வேன்
உண்மையாய் உலகத்தோர் பிழைக்க வேண்டி
நண்ணவே வெடியுப்பு பலமோ எட்டு
நலமான சீனம்ரெண்டு சாரம் ரெண்டு
கண்ணவே எலுமிச்சம் தோலும் நாலு
கடிதாகப் போட்டுக்கல் லூரலில் தானே
துண்ணவே மிடித்துப்புதுச் சட்டி தண்ணில்
துடியாக எரித்திடவே சுண்ண மாமே (259)

### கல்லுப்புக் கட்டு. எரிப்பு முறை

சுண்ணத்தைப் பனிதனிலே வைத்தா யானால்
சுயம்பான நீராகும் பின்பு கேளு
நன்னயமாய்க் கடல் நுரையை யூத நீறும்
நலமாச ரெண்டுபடி சட்டி யிட்டுக்
கன்னல்போல் கல்லுப்புக் கட்டி யாகக்
கனிவாக வொருசேரு அதிலே வைத்துப்
பன்னகமாய் மேலுமந்தக் கடல்நுரையின் சுண்ணம்
பதிவாக ரெண்டுபடி போட்டுக் கேளே (260)

போட்டுமே அழுத்திவைத்து எரிநேர் பாகம்
போக்கோடே எரியிட்டுச் சாமம் நாலு
தாட்டிகமாய் எடுத்துப்பார் தெறிப்ப டங்கித்
தழலிலே நீர் அண்டி வரண்டி ருக்கும்
காட்டியே யெடுத்துமே செயநீர் தோய்ச்சுக்
கருத்தான செயநீரை யுண்ணும் உண்ணும்
வாட்டியே பின்பொருக்கால் சட்டி யிட்டு
வகையாகச் சாமமொன்று எரிக்கக் கேளே (261)

## ரச பதங்கமும் கல்லுப்புஞ் சேர்த்தெரிப்பு

எரித்துமே யெடுத்துப்பார் கல்லுப் பைத்தான்
இதமாகத் தந்தம்போல் உப்புக் காணும்
அரித்துமே ரசபதங்க மெடையே சேர்த்து
அன்பாகச் செயநீரால் ஆட்டிக் கொண்டு
கரித்துமே சட்டியிட்டுமேற் சட்டி மூடிக்
கருத்தாக எரிமெல்ல இறக்கிப் பாரு
நரித்துமே யுப்பாலே யுப்புக் கட்டும்
நலமாக சிறுகும்ரசம் பெருமை கேளே (262)

பெருமையாங் கரியில் வைத்து உருக்கிப் பாரு
பேசரிய வயிரம்போல் கண்விட் டாடும்
அருமையாய்ச் செம்புருக்கி நாலொன் றிட்டால்
அன்பான மாற்றென்ன பத்து மாகும்
திருவான லட்சுமியும் முன்னே நிற்பாள்
தேவியவள் வந்துமே திறஞ்சொல் வாள்பார்
கருவான மதுதனிலே யுண்பா யானால்
காயசித்தியோகசித்தி கடிதி லாமே (263)

## கல்லுப்பால் சூதம் கட்டும் பதிவெட்டுச் சித்தரும் உப்பினால் சூதம்கட்டினார்கள்

கடுசாகக் கல்லுப்புச் சூதம் கட்டும்
கடைகெட்ட வாதிகளே வேதை யாகும்
படுசாகச் சித்தியாம் தங்க மாகும்
பதிவாகும் உறவாகும் பதியில் நில்லு
வடிவான வுப்பினால் சூதம் கட்டி
வழக்கமாய்ப் பதினெட்டுச் சித்தர் பார்த்தார்

நொடியாக வேதையாம் ஆடச் சொன்னேன்
நுணுக்கத்தைப் பார்த்துமே செய்தி டாயே (264)

## கல்லுப்புக் கட்டுச் சத்தியம் எனல்

செய்திடவே சாத்திரங்கள் ரெம்ப வுண்டு
சிறப்பான மறைப்பெல்லா மிதிலே சொன்னேன்
வையகத்தில் மானிடர்கள் பிழைக்கச் சொன்னேன்
வடிவாக முடிந்தாக்கால் எல்லா மாகும்
மெய்யுடனே சொன்னதிந்தக் கல்லுப்புத் தான்
மேதினியில் ரசவாதி செய்து தேறு
பொய்யல்ல பொய்யல்ல சிவன்மே லானை
பொருந்துமே வைத்திட்டா லெல்லா மாமே (265)

## கல்லுப்பும் ரசமும் சேர்த்து மணி செய்து செபஞ் செய்தால் தேவி பிரசன்னமாவாள்

ஆமெனவே கல்லுப்பைக் கட்டிக் கொண்டு
அப்பனே சூதத்தை இடையே சேர்த்துக்
காமெனவே சட்டியிட்டு மூடித் தானே
கருனைபெற எரித்திடவே கட்டிப் போகும்
தாமெனவே வேதையாய் மணியாய்ப் பண்ணித்
தாழ்வடங்கக் கோத்துமே செபத்தைப் பண்ணி
வாமெனவே தேவியவள் பிரசன்ன மாவாள்
வடிவான இதுபோக்கு மெத்தக் காணே (266)

## கடல்தண்ணியால் சுத்தி செய்த உப்பு ரசத்தைச் செந்தூரிக்கும்

### வேறு

காண வேகடல் தண்ணீரி லுப்பிடு
தோண வேயதைத் துப்பறக் காய்ச்சியே

வான லிங்க ரசத்தை யெரித்திடு
ஊண நல்ல வுயர்ந்த பவழமே (267)

## கடலுப்பினால் சூதம் கட்டலாம்

சுத்த சாகரத் துப்பினாற் சூதமும்
வித்தை யாக விரும்பியே கட்டிடும்
முத்தன் சொன்னது மூவுல கானவை
நத்திச் செய்தால் நலமது வாகுமே (268)

## தாளக பற்பம்

ஆகுஞ் சீனத்தை யன்பாக வூதிட
பாகு மேயது தான்கடுஞ் சுண்ணமாம்
ஏகு மேயரி தாரமேற் கட்டிட
தாக மானதோர் தாளகம் நீறதே (269)

## செம்பைக் கரியாக்கினால் தங்கமாம்

செம்பு தான்கரி யாகிடில் தங்கமாம்
வம்பு சொன்னால் வழக்கது என்சொல்வேன்
நம்பு னால்ரச வாதமும் சித்தியாம்
கொம்பில் தான்பழம் போலது வாகுமே (270)

## கடல் நுரையை யூதி அதிலுப்பை எரிக்கக் கசிவுபோம்

உப்புத் தானே கடல்நுரை யூதிடு
நப்புத் தானே கடுஞ்சுண்ண மாகிடும்
துப்பு வாகத் துடியறக் கல்லுப்பை
அப்ப னேயெரி தானே கசிவுபோம் (271)

## சீன வெடியுப்புச் சுண்ணம்

சீன மூதிடத் தான்கடுஞ் சுண்ணமாம்
வான மாவெடி யுப்புடன் சேர்த்தரை
கானத் தான பழச்சாறு விட்டரை
தானே தான்கரி யூதிடப் பூக்குமே (272)

## சீன வெடியுப்புச் சுண்ணச் செயநீர் வெடியுப்புக் கட்டு

பூக்க வேபனி வைத்திட நீரதாம்
தாக்க வேவெடிக் கம்பியைத் தோய்த்திடு
ஆக்க மாய்ரவி தன்னிலே போட்டிடு
பாக்க வேஎரி தந்தத்தி லிட்டிடே (273)

## தந்தத்தில் வெடியுப்பு வைத்தெரிக்கக் கட்டும் கரியிலாடும்

இட்டெ ரிக்கவே யின்பமாய்க் கட்டிடும்
வட்ட மான கரிதனி லாடிடும்
தொட்ட செம்பது தானது ஏமமாம்
வட்ட மார்பன் வகையிது சொன்னதே (274)

## நான் செய்த பதினாயிரம் பாடலில் இவ்வாயிரம் பாடல் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது

சொன்ன தான பதினா யிரந்தனில்
கன்னல் போலக் கனிந்தஇவ் வாயிரம்
நன்னி யேயிதை நாடியே பார்த்திட
பின்னை யோர்பொருள் பேசவும் வேண்டுமோ (275)

## இவ்வாயிரத்தில் யாதொரு மோசமுமில்லை வாதம் தப்பாது சித்தியாகும்

பேசத் தக்கது பேசினே னாயிரம்
பாசை யில்லை பதிவுடன் பார்த்திடு
மோச மில்லாமல் முற்றிலும் பார்த்திடு
ஆசை யான வருள்வாதம் சித்தியே (276)

## புத்தியாகச் செய்தால் சித்தியாம்

சித்தியாகவே சின்மய யூகியும்
முத்தி யாக மொழிந்த நல் வாதமாம்
பத்தி யாகவே செய்திடச் சித்தியாம்
நத்தி யேதிரி நாடிட வாதமே (277)

## அயச் செம்பைக் கண்டுபிடி

வாதம் வாதம் வருமென்று சொல்லியே
சேதப் பட்டுத் திரிந்திட வேண்டாங்காண்
போத மான புதிய வயந்தனை
காதல் செய்துநீ கண்டு பிடித்திடே (278)

## செம்பைக் கரிசெய்து அயத்தைச் சேர்த்து அயச்செம்பு செய்

பிடித்தி டரவி பேரான கெந்தியும்
அடித்தி டப்பண்ணி யாதியாய்ச் சூடனும்
துடித்தி டக்கூட்டத் துப்புர வாய்க்கரி
நடித்தி டவயம் நாடியே சேர்த்திடே (279)

சேர்த்துச் செவ்வல்லிச் சாற்றி லரைத்திட
பார்த்து மேபுடம் பத்திடத் தீய்ந்திடும்
கோர்த்துத் தாளெடு கூட்டிடு காரணத்தை
காத்து ருக்கக் கடுஅயச் செம்பதே (280)

### கருத்த செம்புக்கு வெங்காரமிட்டூதச் சிவப்பாகும்

செம்பு தான்கருப் பாக விருந்திடும்
வம்பு செய்யா வகையுடன் காரத்தை
நம்பி யேயிடு நாட்டியே யூதிடு
தம்பி ரானருள் தான்சிவப் பாகுமே (281)

### சிவந்த செம்பை வெள்ளியிற் கொடுக்கவும்

சிவக்கத் தான்ரவி செம்பையு மூதிடு
பவக்கத் தாக்கவே பற்றி மதிதனில்
நவக்க மாகவே நாடியே யெட்டொன்றாய்த்
தவக்க மில்லாமல் தாக்கிடப் பொன்னதே (282)

### அயச் செம்புச் செந்தூரம்

பொன்ன தாறு வயதாகு மிச்செம்பை
சொன்ன நாலு தொகையாய் நிறுத்திடு
பின்னை யோர்தங்கம் நாக மிரண்டிடு
நன்ன யமாய் உருக்கி யுடைத்திடே (283)

உடைத்து மேரச கெந்தியுஞ் சேரெடை
கடத்துத் தாயை மொன்றிடு தானரை
விடத்தின் முன்னயச் செம்பினில் மேலிடு
நடத்துத் தான்புடம் போடச் சிவக்குமே (284)

போட வேதாம் பரத்தின் கரியெலாம்
ஆட வேகையான் நீரி லரைத்திடு
கூட வேபுடம் பத்துமே போட்டிட
ஓட வேமுருக் கம்பூவோ டொக்குமே (285)

## அயத் தாம்பரச் செந்தூர வேதை

ஒக்க வேயெடு செந்தூ ரம் நூற்றொன் று
மிக்க வேகொடு பத்தரை மாற்றுமாம்
துக்கப் பட்டுத் திரிந்தாற் பலனேது
தக்க வேயிந்தச் செந்தூரம் தின்றிடே (286)

## அயத் தாம்பரச் செந்தூரம் உண்ணக் காயம் உறுதியாம்

தின்றி டச்சடம் திட்டமாய் மேனியாம்
வென்றி டவுடல் வித்தகர் போலவே
கன் று மேனி கனிந்துமே சித்தியாம்
நன் று நன் று நவ மிகப் பார்த்திடே (287)

## பார்த்துச் செய்தால் எல்லாம் பலிக்கும் நாற்று நட்டதுபோல் ஒன்றிட்டால் பலவாகும்

பார்த்துச் செய்திடத் தானே பலிக்குமே
சேர்த்தி டரச வாதம் பலித்திடும்
ஊற்றுப் போலவே யுண்மையு மாகுமாம்
நாற்று நட்டது போலவே யாகுமே (288)

## இரசவாதம் பலித்தால் மகாயோகமாம்

ஆகு மேரச வாதம் பலித்திடும்
யோகம் வந்து ஒளியது மீறுமே

பாக மாகவே பற்றியே செய்திடு
யூகி மாமுனி சொன்னது பாகமே (289)

பாகங் கண்டிடப் பட்டு உழைத்திடு
யோக மாக உறுதியும் வந்திடும்
தாக மானபோ தர்க்கிடச் சித்தியாம்
ஆக மாக அதில்வரும் பாகமே (290)

## வேறு - அறிவு கூறல்

பாகமாய் உழைத்திடவே பலனுண் டாகும்
பாக்கியங்கள் வந்திடுமே காய சித்தி
யோகம் வரும் உண்மைவரும் பொருளுண் டாகும்
உய்த்துணர்ந்து பார்த்திடவே சித்தியாகும்
தாகமாய் அலைந்தாக்கால் பலனு மில்லை
தாட்டிகமாய்ச் சரக்கையெல்லாம் சுட்டுத் தேறு
ஆகமா மதிசொன்னேன் வகார மார்க்கம்
அடவுடனே பாகமாய்ச் செய்து தேறு (291)

தேறவே பொல்லாத பாவிக் குத்தான்
சொன்னாலும் தெரியாது தோசம் தோசம்
தூறவே பார்ப்பார்கள் பொய்யென் பார்கள்
துடியாக அவர்தமக்குச் சொல்ல வேண்டாம்
நாறவே சாத்திரத்தை முயன்று பார்த்தால்
நற்சீடர் தங்கட்டுச் சொல்ல வேணும்
வாறவே மனத்தைத்தான் சோதித் தேநீ
வகையாக அவர்களுக்கு முறையைச் சொல்லே (292)

## நாலுபதேசக் கிரமம்

சொல்லிடவே தேவிக்குச் சிவனுந் தானும்
துரிசாகச் சொலிலிடவே தேவி தானும்

மெல்லவே நந்திக்கு விரும்பிச் சொல்ல
விருப்பமாய் நந்தியசு வனிக்குச் சொல்ல
நல்லவே அசுவனிதான் விசுவனிக்குச் சொல்ல
நாட்டிலே விசுவனி தன்மந்திரிக்கு
வல்லமையாய்ச் சொல்லிடவே அகத்தியர் கேட்டு
வாகாகச் சொல்லிவிட்டார் புலத்தியர்க்கே (293)

## வாதம் வரும்

புலத்தியர்க்குச் சொல்லிடவே புலத்தியர் தாமும்
பூதலத்தில் தேரருக்குச் சொன்னா ரப்போ
தலத்தியலாய் யூகிமுனி கேட்டுத் தேரி
தடையறவே யுலகமா னிடர்க்குத் தானும்
பலத்தியாய்ச் சொல்லிடவே பாகந் தன்னைப்
பதிவாக இக்காண்டங் கடைசி தானும்
கலத்தியே யாயிரத்தைப் பார்த்தால் வாதம்
கனகமாம் கைபாகம் வருகும் பாரே (294)

## என் நூல் பதினாயிரமும் பார் வாதம் மருத்துவம் முற்றும் வரும்

பாரேது வென்றாக்கால் சொல்லக் கேளு
பரிவாக மனமூன்றிக் கருதிப் பாரு
காரேதென் நூல்பதினா யிரமு மொன்றாய்க்
கருதினால் வேதையாம் வயித்திய மாகும்
வாரேது பொருளெல்லாம் வந்து சேரும்
வடிவாகத் தங்கமாம் வித்தை பாரு
தாரேது புலம்பாமல் பதிந்து பாரு
தாட்டிகமாய் வாதம்வந்து நிலைக்கும் பாரே (295)

## முதலில் அயம்பின் உப்பு பின் சவுக்காரம் செய்முறை இது

நிலைக்கவே அயந்தன்னை முன்னே பாரு
நேராக அதன்பின்னே யுப்பைப் பாரு
கலைக்கவே அதன்பின்னே வழலை பாரு
கருத்துறவே வழலைசவுக் காரச் சுண்ணம்
முலைக்குமேல் ரவிக்கைதான் போட்டால் தொங்கா
முடியுமட்டு மதுபோல நூலைப் பாரு
நிலைக்குமே வாதந்தான் சுருக்கி லாகும்
நிச்சயமாய் இந்நூல்தன் தெளிவாய்ப் பாரே *(296)*

## *259 – 296* உரை

இனி உப்புக் கட்டு வெடியுப்பு எட்டுப் பலம் சீனம் சாரம் இரண்டும் வனக்கு இரண்டுபலம் எலுமிச்சம் தோல் நாலு பலம். இவற்றைக் கல்லுரவில் போட்டு இடித்துப் புதுச்சட்டியில் போட்டு எரிக்கச் சுண்ணமாம். பனியில் வை செயநீராகும்.

கடல் நுரையை ஊது. நீறும் ஒரு சட்டியின் அடியில் இரண்டு படி போடு. அதன் மேல் கட்டியாக வுள்ள கல்லுப்பு ஒரு சேர் வை. அதன் மேல் இரண்டு படி கடல்நுரைச் சுண்ணமிடு. அழுத்தி வைத்து நாலு சாமம் எரி. தெறிப்பு அடங்கி நீர் சுண்டி வறண்டு இருக்கும். எடுத்துச் செயநீர் தோய்த்துச் சட்டியிலிட்டு ஒரு சாமம் எரி. கல்லுப்பு தந்தம்போல் கட்டியிருக்கும். அதனெடை ரச பதங்கம் சேர்த்துச் செயநீராலாட்டிச் சட்டியில் இட்டுக் கவிழ் சட்டி மூடிக் கருத்தாக எரி. உப்பாலே உப்புக் கட்டும். இறுகும். கரியில் வைத்து உருக்கு வயிரம் போல் கண்விட்டாடும். செம்பில் நாலுக்கு ஒன்றிடு பத்து மாற்று. திருவின் அருளுண்டாகும். தாய்த் தெய்வம் வந்து திறம் கூறும். தேனில் உண், உடல் நிலைக்கும், கல்லுப்பு சூதம் கட்டும் தங்கமாகும். பொய்யன்று பொய்யன்று சிவன் மேல் ஆணை.

கல்லுப்பைக் கட்டி அதனொடை ரசம் சேர்த்துச் சட்டியில் இட்டு மூடி எரிக்கட்டும். மணியாம், மாற்றுண்டாம், தாழ்வடம் கோத்து அணி தாய் வந்து பேசுவாள்.

கடல் தண்ணீரில் உப்பிட்டுக் காய்ச்சு. இலிங்கரசம் சேர்த்து எரி பவழம் போலாகும். கடலுப்பினால் சூதம் கட்டும். முத்தன் சொன்னது. மூவுலகு ஆள்வாய். சீனத்தை யூதிச் சுண்ணமாக்கித் தாளகத்தின் மேல் கவசமிட்டு புடமிட நீறாகும். செம்புகரியானால் தங்கமாகும். கடல் நுரையை யூதிச் சுண்ணமாக்கி அதனுள் வைத்துக் கல்லுப்பை எரி. கசிவு நீங்கும். சீனத்தை ஊது சுண்ணமாகும். வெடியுப்புடன் சேர்த்துப் பழச்சாறு விட்டரைத்துக் கரியிலிட்டு ஊதப் பூக்கும். பனியில் வைக்க நீராகும். கம்பியுப்பை (வெடியுப்பை) அதில் தோய்த்து எடுத்துக் காய வைத்து யானைத் தந்தமும் குன்றி மணிப்பருப்பும் அரைத்துப் பூசி எரி. கட்டும். செம்பைச் செம்பொன்னாக்கும். யான்கூறிய பதினாயிரம் பாடலில் இந்நூல் கரும்பு போல் கனிந்த ஆயிரமாகும். வேறு ஒரு பொருள் பேச வேண்டியதில்லை. முற்றும் பார். அருள்மாற்று ஆகும். செம்புத் தகட்டில் கெந்தியும் சூடனும் அரைத்துப் பூசு. புடமிடக் கரியாகும். அதனொடு அயம் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்துப் புடமிடு. கருக்கும். காரங்கட்டியுருக்கு அயச் செம்பாகும். பலமுறை பாரம் சேர்த்துருக்கு சிவந்து விடும். வெள்ளியில் எட்டுக்கு ஒன்றிடு. ஆறு மாற்றுச் செம்பொன்னாகும் இச்செம்பு நாலு தங்கமும் நாகமும் இரண்டிரண்டு உருக்கியுடைத்து ரசமும் கெந்தியும் சேர்த்து அயம் ஒன்றும் இட்டுச் செம்பிலிடு. புடமிடு. தாமிரத்தின் கரியைக் கையான்சாறு விட்டரைத்துப் புடம் பத்துப் போடு. முருக்கம் பூப் போல் சிவக்கும். நூற்றுக்கு ஒன்றிடு. பத்தரை மாற்று உன். உடல் வலுக்கும். மற்றவை அறிவுரை. நூல் வந்த வழி கூறல். என்னூல் பதினாயிரமும்பார்.

## வங்க ரசச் செயநீர்

தெளிவாக இன்னமொரு சேதி கேளு
திரமாக வங்கத்தின் செயநீர் தன்னை
களிபாய மாரசந்தான் சேர தொன்று
கனிவாகத் தீட்டியே கல்வத் திட்டுத்
துன்பாய வீரத்தை எடையே சேரு
துப்புரவாய் நாளொன்று அரைத்து வைக்கத்
தளியாகப் பனிப்படவே செயநீ ராகும்
தடையறவே நீர்மகிமை சொல்லப் போகா (297)

குறிப்பு: சிவ யோகியவர்கள் சுவடியின்படி தலைப்பு "வங்க ரசச் செயநீர்" என்பது அச்சிட்ட நூலில் "வங்கச் செயநீர்" என்றுளது. பாடலில் வங்கம் கூறப் பெறவில்லை. மாரசம் என்பதனை "வங்கம்" என்று பொருள் கொண்டால் ரசம் குறிப்பாய்ச் சேர்த்தல் வேண்டும் (ந. சே.)

சொல்லவே துரிசதனைப் பூநீறு தன்னில்
சுயம்பாக நடுவில் வைத்துச் சாமம் ஒன்று
மெல்லவே எரித்திடவே வெளுத்துப் போகும்
மேன்மையாய் அதையெடுத்துச் செயநீர் தோய்த்து
நல்லவே மேற்கவசம் சொல்லக் கேளு
நலமாக அண்டோட்டை யூதி நீற்று
கல்லவே வீரமது நாலத் தொன்று
கருத்தாகச் சேர்த்தரைக்க மஞ்சளாமே (298)

மஞ்சளாந் துரிசதனின் மேலே கட்டி
மயமாகக் * குக்குடத்தில் சுண்ண மாகும்
தஞ்சமாம் துரிசதுதான் சுண்ண மாச்சு
தாக்கான தங்கசித்தி குளிகை சித்தி
கெஞ்சுமே சூதமது கட்டிப் போச்சு
கெடிபடிவே வாதசித்தி குளிகை சித்தி

வஞ்சகமாய்ச் சொல்லவில்லை போக்கு மெத்த
வகையான பாகமிதைக் கண்டு கொள்ளே (299)

* சூடத்தில் (பா. வே.)

## இரசக் கட்டு

கொள்ளவே முன்வைத்த துரிசுச் சுண்ணம்
கொடிபடவே விராயிலைக் கிட்டால் நீராம்
துள்ளவே சூதமது பலந்தான் * நாலு
துடியாக வயக்கரண்டி தன்னி லூற்றிக்
கள்ளவே துரிசுஇட்ட சாற்றை விட்டுக்
கனமாகக் கொதியிடவே சூதங் கட்டும்
வள்ளலார் சொன்னபடி யானுஞ் சொன்னேன்
வகையாகச் சாரணையைத் தீர்த்து கொள்ளே (300)

* நூறு - பா. வே.

கொள்ளவே கவனமது தாண்டி யோடும்
கெடியாரம் போடலாம் வாத மாகும்
துள்ளவே முன்னேதான் சொன்னேன் பாரு
துப்புரவாய் அப்படியே சாரணையைத் தீரு
மெள்ளவே செய்தாக்கால் குளிகை சித்தி
மேன்மையாய் வாதசித்தி யோக சித்தி
கள்ளமாய்ப் பரபரப்பாய்ச் செய்தா யானால்
கடிதாகும் வாதசித்தி யில்லை யாமே (301)

## 297 - 301 உரை

தூய வங்கம் ஒரு சேர் ரசம் ஒரு சேர் வீரம் ஒரு சேர் சேர்த்து அரைத்துப் பனியில் வைக்கச் செய நீராகும். துரிசினைப்

பூநீற்றுக்குள் வைத்து ஒருச் சாமம் எரி. வெளுக்கும். அதனை எடுத்துச் செயநீர் தோய்த்து, அண்டச் சுண்ணமும் அதற்கு நாலிலொரு பங்கு வீரமும் சேர்த்து அரைத்துப் பார் மஞ்சள் நிறம். அதனைத் துரிசின் மேல் கவசமிடு. கோழிப் புடமிடு. சுண்ணம் தங்கம் வாய்க்கும் குளிகை வாய்க்கும். விராலியிலையில் துரிசுச் சுண்ணமிட்டுச் சாறெடுத்து இரும்புக் கரண்டியில் விட்டு நாலு பலம் ரசமும் விட்டுக் காய்ச்சு ரசம் கட்டும். சாரணை செய். பறக்கவுதவும்.

## இலிங்கக் கட்டு மாரசச் செயநீர்

இல்லையென்று போகாமல் இலிங்கந் தன்னை
இதமாக மாரசத்தின் செயநீர் தானும்
கல்லையென்று ஒருசாமம் சுருக்குப் போடு
கட்டியே யிருக்குமது இலிங்கந் தானும்
தில்லைநட ராசர் சொன்ன நேர்மை வித்தை
திடமாக ரவிதனிலே நூறொன் றிட்டால்
நல்லரசத் தங்கமது வாகும் பாரு
நலமாகப் பாகத்தை நயமாய்ப் பாரே (302)

## அயமே வழலை. பிணமன்று

நலமாக வழலையென் றிதற்கே பேராம்
நந்தீசன் சொன்னதுதான் நாடிப் பாரு
பொலமாக வழலையைத்தான் மறைத்தார் கோடி
புரட்டாக வழலையென்று பிணத்தைத் தானும்
கலனாகச் சொல்லிவிட்டார் சித்தர் தாமும்
கருத்தாலே பார்த்தாக்கால் அயமு மாச்சு
தலமாகப் பிணம்பிடுங்க வேண்டா மையோ
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகத் தோரே (303)

## கலைஞர் அயமே வழலை என்பர். கட்குடியர் பிள்ளை என்பர்

உலகவா திக்குத்தான் நினைவு மில்லை
உயர்த்துணர்ந்து பார்த்தாக்கால் புத்தி தோன்றும்
கலகமாய்க் கள்ளையுண்டு பிள்ளை யென்பார்
காரணமாய்த் தீச்சைதான் செய்வேன் என்பார்
பலகலை நூல் பார்த்தவர்கள் அயத்தைத் தானும்
பதிவாக வழலையென்பார் நிசம தாகும்
நலமாகச் சொல்லிவிட்டேன் பாத்துத் தேறு
நாடினால் வழலையது அயமு மாமே *(304)*

## கடைசியிற் சுருக்கமும் பாகமும் காண்க

அயமில்லை கருவித்தை யென்பார் கோடி
அலைந்துமே திரியாமே அயத்தைப் பாரு
நயமில்லை கருவிலொன்று மில்லை யப்பா
நாடியே கரும்பொன்னின் வேதை யாகும்
பயமாக எண்ணாதே கருப்பி பாரு
பருவமாய் அடிக்கடிக்குச் சொல்ல மாட்டேன்
சுயமாக நூலைத்தான் கடைசிதன்னில்
சுருக்கமாய்ப் பாகமாய்ச் சொல்லி விட்டேன் *(305)*

## பிண்ட வித்தை யென்பது பொய். அயவித்தை சத்தியம்

சொல்லிவிட்டேன் திருமூர்த்திக் கொப்பாய்ச் சொன்னேன்
சுருதியைத்தா னாராய்ந்து சுருக்கிப் பாரு
நல்லிவிட்டேன் பிண்டவித்தை பொய்யே யாகும்
நலமான அயவித்தை சத்திய மாகும்

கல்லிவிட்ட கஞ்சாவும் அபின்தின் போர்கள்
கலனாகச் சொல்வார்கள் பிண்ட வித்தை
வல்லிடவே ஈசுவரன்தான் அறியச் சொன்னேன்
வகையான பிண்டவித்தை பொய்ய தாமே (306)

## அயச் செம்பு

ஆமேதான் செம்பொன்று சொல்லக் கேளு
ஆதியாய்ச் செம்பான்று பலமுந் தூக்கிக்
காமேதான் அரப்பொடியாய் ராவிக் கொண்டு
கலங்காமல் லிங்கமது இடையே சேர்த்துத்
தாமேதான் பொற்றலையின் நீரா லாட்டித்
தயங்காமல் சேர்த்தரைத்து வில்லை தட்டி
நாமேதான் பெரும்புடமாய்ப் போட்டு ருக்கி
நலமாக ஈயம்தாம் நாடிப் பாரே (307)

## ஆயத்தினெடை காரீயம் சேர்த்துப் புடமிடுக

நாடியே ஈயத்தி னெடைக ரும்பொன்
நலமாகச் சேர்த்தரைத்துப் புடமே பத்து
வாடியே போட்டுமே காரம் கூட்டி
வகையாக வுருக்கிடவே செம்பு மாகும்
பாடியே இச்செம்பை மதியிற் பத்து
பாய்ச்சிடவே யொன்றுதான் ஏழு மாற்று
காடியே ஏமமது புடமி றங்கும்
கருத்தாகப் பார்த்திடவே சித்தி யாமே (308)

## அயச்செம்பை முன்னே பார் அதிலே தான் வேதை

சித்தியாம் அயச்செம்பை முன்னே பாரு
சிறிதென்று விட வேண்டாம் காய சித்தி

முத்தியாம் சத்தியமாய்ச் சொல்லிப் போட்டேன்
முடிவாகும் அயத்திலே நல்ல வேதை
பத்தியாங் குடிகாரம் வழலை யென்று
பார்தனிலே பிள்ளையைத்தான் கொண்டா வென்பான்
நத்தியே தலைமண்டை யோட்டைப் பிட்டு
நலமாக *ஐந்துக்குள் இருக்கு தென்பான் (309)

*இதுக்குள்ளே பா. வே.

## அயத்தை விட்டால் தங்கமில்லை குடியர் பேச்சை நம்பாதே

இருக்கிறதோர் குடிகாரம் பேச்சை நம்பி
யிதமாகத் திரியாதே கருவி லில்லை
பருக்கிறதோர் பாவம்வரும் நரக மாகும்
பாவியென்று உடன்படா திருக்க வேதான்
அருக்கிறதோர் அயமதைத்தான் பார்த்துத் தேறு
அடைவாகப் பொன்னெல்லாம் கைக்குள் ளாகும்
நருக்கிறதோர் கரும்பொன்னை விட்டால் தங்கம்
நாடாது ஒன்றுமில்லை நாட்டம் பாரே (310)

## பிண்ட வித்தையில்லை

பார்க்கவே யுலகத்தில் வாதி தானும்
பருகியே பிண்டத்தி லிருக்கு தென்று
ஏர்க்கவே நாய்தானும் பசியால் தானே
இதமாக வெள்ளெலும்பு கடித்தாற் போலே
வார்க்கவே *கடிக்கவரில் ரத்தம் வந்து
வருகிறது போலவே எலும்பி னுள்ளே
கார்க்கவே வருகுதென்று நினைப்பான் பாவி
கருதிப்பார் பிண்டவித்தை யில்லை தானே (311)

* கடைகவரில் ரத்தம் வந்து - பா. வே.

## 302 – 311 உரை

இந்த மாரசச் செயநீரை இலிங்கம் ஒரு பலத்துக்கு ஒருச்சாமம் சுருக்கிடு. கட்டும். செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. தங்கமாகும். அயமே வழலை. அதனை. மறைத்தனர். பிணம் வழலையன்று. ஒரு பலம் செம்பு அரப்பொடியும் ஒரு பலம் இலிங்கமும் சேர்த்துப் பொற்றலை நீராலாட்டி வி. த. கா. பெரும்புடமிடு. ஈயம். அதனெடை கரும்பொன் சேர்த்தரைத்துப் பத்துப் புடமிடு. காரம் கூட்டியுருக்கு. செம்பாகும். வெள்ளியில் 10க்கு ஒன்றிடு. ஏழு மாற்று.

### அயத்தை விட்டால் விழலாய்ப் போகும் பிண்டத்தை யெடுத்துச் செய்தால் நரகம் வரும்

தானேதான் அயச்செம்பைக் கண்டு தேறு
சமுசயங்கள் எண்ணாதே செம்பைப் பாரு
வீணேதான் திரியாதே கரும்பொன் பாரு
வேதையாம் பொன்னாகும் விரும்பிப் பாரு
காணாத பிண்டவித்தை பார்த்தா யானால்
கருணையாய் ரவிகோடி நரகம் எய்தும்
வீணிலே திரியாதே அயத்தைப் பாரு
வேதையெல்லாம் அயத்தைவிட்டால் விழலாய்ப் போச்சே
(312)

### பிணத்தை நினையாதே பிண்டத்தில் வேதை சுத்தமாய் இல்லை

பேச்சென்று விடுக்காதே ஞானந் தன்னைப்
போற்றியே மனத்தாலே பேணிப் பாரு
நீச்சென்று வாதத்தை விடவும் வேண்டாம்
நேராக வாதத்தை நினைவாய்ப் பாரு

ஆச்சுதே வாதமது எளிதில் வேதை
அன்பாகப் பிண்டமென் று நினைந்தா யானால்
தாச்சுதே ரவிகோடி நரகம் எய்தும்
தாட்டிகமாய்ப் பிண்டத்தி லில்லை யாமே (313)

## வாத சித்தியானால் ஞான சித்தி தனக்குத் தானே வரும்

ஆமேதான் ஞானத்தைப் பார்த்தால் வாதம்
அடைவாக இல்லையப்பா வுலகத் துள்ளே
காமேதான் போகாமல் வாதம் பாரு
கனிவாக அயந்தன்னைப் பார்த்திட் டாக்கால்
நாமேதான் பொன்னுண்டு லோகம் மெச்சும்
நலமாகும் பின்னேதான் ஞானந் தானே
தாமேதான் வருகுமென் று யூகி சொன்னார்
தடையில்லை சாத்திரத்தைப் பார்த்தி டாயே (314)

## எல்லோரும் பொன் செய்துவிடக் கூடாதென் று கருதித் தாமிர பற்பத்தை மறைத்தார்

பார்த்திடவே பின்னமொரு கருவைக் கேளு
பதிவான செம்பதுதான் நீறப் பண்ண
சார்த்திடவே சித்தர்பதி னெட்டுப் பேரும்
தடையறவே மறைத்தார்கள் நூலி னுள்ளே
ஏர்த்திடவே மறைத்துத்தான் ஏதென் றாக்கால்
இடும்பரெல்லாம் பொன்செய்வா ரென் று சொல்லி
கார்த்திடவே யிதைமறைத்துச் சொன்னா ரப்பா
கருணைபெற யூகிமுனி திறந்திட் டேனே (315)

## தாமிர பற்பம் நல்ல மாணாக்கர்க்காகச் சொல்லியது

திறந்திட்டேன் செம்பதனை நீறு பண்ணத்
திறமாகச் சொல்லுகிறேன் உலகத் தோர்க்கு

நறந்திட்டேன் தேரர்தான் சொன்ன நேர்மை
நலமான யூகியென்று பேர்ப டைத்து
கறந்திட்ட பால்போல செம்பு நீறக்
கருணைபெற வுலகத்தில் சொன்னேன் பாரு
அறந்திட்ட ஆத்தாள்தான் சொன்ன நேர்மை
யதையறிந்து நற்சீடர்க் காகச் சொன்னேன் (316)

## தாமிர பற்பம்

சொன்னதொரு தாமிர பற்பங் கேளு
சுளிவாகச் சொல்லுகிறேன் உலகத் தோர்க்கு
நன்னயமாய்ச் செம்புபலம் நால்நி றுத்து
நலமான தகடாகத் தட்டிக் கொண்டு
கன்னதோர் ராட்டமுரி சேர தொன்று
கனிவாக வெடியுப்புச் சீனஞ் சேரு
வன்னதொரு வகைக்கொன் று பலம்நி றுத்து
வடிவாக அமுரிதனில் போட்டுக் கொள்ளே (317)

போட்டுமே மூன்றுநாள் வைத்துக் கொண்டு
பொலிவாகத் தெளிவிறுத்துப் பீங்கா னிட்டுக்
காட்டுமே கரியோட்டில் செம்பை வைத்துக்
கனிவாக மேலூத்தாய் ஊதி நல்ல
தாட்டுமே யெலிக்குஞ்சு வர்ணம் போல
தனையெடுத்து அமுரிதனில் தோய்த்துப் போடு
நாட்டுமே வெட்டையாய்ப் போகு மட்டும்
நலமாகப் பதம்பார்த்துத் தோய்த்துக் கொள்ளே (318)

## செம்பு வெட்டையாகாவிட்டால் கரியாய்ப் போகும் வெளுக்க மாட்டாது

தோய்த்துமே செம்புவெட் டை யாகும் மட்டும்
திடமாகச் செம்பிருந்தால் நீற மாட்டா

வாய்த்துமே பதம்பாரு சொல்லக், கேளு
வ்கையாக வுயிரிருந்தால் கரியாய்ப் போகும்
நாத்துமே யெக்கவசம் கட்டி னாலும்
நலமாகக் கருப்பேறும் வெளுக்க மாட்டா
காத்துமே கடினமாய்த் தோய்த்துக் கொண்டு
கடிதாக வின்னமொரு கருச்சொல் வேனே (319)

கருச்சொல்வேன் ஆட்டெலும்பைச் சுட்டுக் கொண்டு
கருணைபெறச் சேரொன்றை யடுப்பி லிட்டு
வருச்சொல்வேன் தோய்த்தசெம்பை யதிலே வைத்து
வளமான கோணிதனிற் சுற்றிக் கொண்டு
திருச்சொல்வேன் கசபுடமாய்ப் போட்டுத் தீரு
திருவாகச் செம்புநீறு தந்தம் பேலாம்
உருச்சொல்வேன் இதையெடுத்துப் பூசை செய்ய
உண்மையாய் நிலவரமாய்ச் சொல்லக் கேளே (320)

## தாமிரபற்பத்தால் ரசமணி

சொல்லக்கேள் செம்புநீறு பணவெடைதான் கேளு
சுயமான சூதத்தில் விட்டுக் காய்ச்சு
மெல்லக்கேள் இட்டலிபோல் ஆகும் பாரு
மெதுவாக வதையுருட்டி மத்தங்காயில்
நல்லக்கேள் நூறுஅவி புடமாய்ப் போட்டு
நலமாக ரசமணியாம் நல்ல வித்தை
வல்லமையாய் மணிகோத்துச் செபத்தைச் செய்தால்
வடிவான இலக்குமிதான் குடிகொள் வாளே (321)

## மணியால் வேதை

கொள்ளவே ரசமணிதான் இருந்தாற் கேளு
கொடியான காயசித்தி லோக சித்தி
துள்ளவே யெட்டெட்டுச் சித்தி யாகும்
துடியான வாதமெல்லாம் ஏவல் கேட்கும்

மெள்ளவே செம்புருக்கி யதிலே தாக்கு
மேன்மையாய்த் தங்கமாம் என்ன சொல்வேன்
வள்ளலார் சொன்னவித்தை மணியின் நேர்மை
வகையாகச் சத்தியமாய் மருவிப் பாரே (322)

## ரசமணியால் கமனம் செய்ய

பாறுமே சூதமணிப் பெருமை தன்னைப்
பகரவே முடியாது போக்கு மொத்த
ஏறவே வாசியைநீ இறுத்தி யூது
ஏறுமே குளிகையது கொடிய வேகம்
மாறவே யோடையிலே மறிக்கப் போகா
மார்க்கமாய் ஓடியே மருவிப் பாரு
வாறவே குளிகையிட்டு ஓடும் போது
மாசற்ற நிர்க்குணத்தை மருவிப் பாரே (323)

## 312 – 323 உரை

### செம்புநீறு

செம்பு நாலு பலம். தகடு தட்டு. ஆட்டமுரியில் ஒருசேர் விட்டு அதனுள் வெடியுப்பும் சீனமும் வகைக்கு ஒருபலம் போட்டு மூன்றுநாள் கழித்துத் தெளிவிறுத்துப் பீங்கானில் ஊற்றி வைத்துக் கொண்டு முன்கூறிய செம்புத் தகட்டைக் கரியோட்டில் வைத்து ஊதி எலிக்குஞ்சு நிறம்போல் சிவந்த நிலையில் எடுத்து முன்கூறிய சீனவெடியுப்பாட்ட முரிக்குழம்பில் தோய்த்திடு. வெட்டையாகும் பருவம் வரை அங்ஙனம் செய். செம்பில் களிம்பிருந்தால் நீறாது. சுட்ட ஆட்டெலும்பு ஒரு சேரிலுள்ளே செம்பு வெட்டையே வைத்துக் கோணியால் சுற்றி கெசபுடமிடு தந்தம் போல் நீறி விடும். சூதத்தில் பணவெடை செம்பு நீறு போட்டுக் காய்ச்சு. வெண்ணெய் ஆகும். ஊமத்தங்காயினுள் வைத்து அவிபுடமாக நூறு புடமிடு. மணியாகும். தாழ்வடம் கோத்து செவித்துக் கொள். இலக்குமி குடி கொள்வாள். மணியால் உலோகம்

வலுக்கும் உடல் வலுக்கும் மாற்று உண்டாகும். செம்பில் தாக்கு தங்கமாம். இதன் பெருமை சொல்லுக்கு அடங்காது. வலியை இறுத்தியயூது. குளிகை கொடிய விரைவு. குளிகையிட்டுப் பறக்கும் போது குணங்கடந்த பொருளை மருவிப் பார்.

## ஆட்டெலும்புச் சுண்ணத்தால் சாரக் கட்டு

பாருமே யின்னமொரு சாரக் கட்டு
பதையாமல் சொல்லுகிறேன் பரிந்து செய்து
சேருநீ ஆட்டெலும்பு சுட்டுக் கொண்டு
செம்மையாய்ப் படிரெண்டு அளந்து கொண்டு
காருநீ சட்டியிட்டுச் சாரம் வைத்துக்
கருத்துறவே மேல்மூடி எலும்பைத் தானும்
சேருமே யடுப்பில்வைத் தெரித்தால் கேளு
செப்பமாய் உருகியே கட்டும் பாரே (324)

## இதனாலிதுவாகும் எனல்

கட்டுகின்ற சாரத்தில் வேதை கோடி
கரையற்ற துரிசினால் களங்கு கோடி
தட்டுகின்ற கெந்தியினால் வர்ணங் கோடி
தாட்டிகமாம் தங்கத்தால் தங்கங் கோடி
கொட்டுகின்ற நாகத்தால் தங்கங் கோடி
குணமான வுப்பினால் வர்ணங் கோடி
பட்டுகின்ற மனம்நிலைத்துக் கட்டைப் பாரு
பதிவாக எல்லாமும் சித்தி யாமே (325)

## நாகக் கட்டு

சித்தியாம் நாகத்தைக் குகையி லிட்டுச்
சிறப்பாக இலுப்பநெய் இரண்டு பத்து
முத்தியாய் உருக்கியே சாய்த்துக் கொண்டு
முயற்சியாய் முன்சார முகத்திற் றூவப்

பத்தியாய் நாகமது கண்விட் டாடும்
பதிவான கீறலறும் எண்ணெய் கக்கும்
சத்தியமாய் இறுகியது புகைச்ச லற்றுச்
சட்டமாய் இருக்குமது தண்மை பாரே (326)

## நாகச் செந்தூரம்

தண்மைபார் கட்டினதோர் நாகந் தன்னைத்
தடையறவே தங்கத்தி லெடைய தாக்கு
வண்மையாய் எட்டியே முழுங்கும் பாரு
வகையான கந்தகமும் சூதம் நேரே
உண்மையாய்ச் சேர்த்துமே யரைத்துக் கையான்
உறுதியாய் நீராலே யுலர்த்திக் காய்ச்சித்
துண்மையாய் அதில்வைத்து எரிக்க வேதான்
துடியான செந்தூர மாகும் பாரே (327)

## நாகச் செந்தூர வேதை

ஆகுமே செந்தூரம் ரவியில் நூறு
அன்புடனே கொண்டிடவே யதிக வேதை
பாகுபோல் பத்தரையாம் ஆணிக் கொக்கும்
பதிவான தேனிலுண்ண வாலை யாகும்
நாகுமே செவ்வலரிப் பூப்போ லாகும்
தாக்கிடவே மேனியது காய சித்தி
வாகுபோல் நாகந்தான் ஆடும் ஆட்டு
வடிவான தங்கமடா பார்த்தி டாயே (328)

## நாகம் சேர் நவலோகம் செம்பொன்

பார்த்திடவே நாகந்தான் ஆடும் ஆட்டம்
பதிவான அண்டரண்டம் கிழிய வாடும்
காத்திடவே சொர்ணத்தின் வேதை தோணும்
கடிதென்றால் வேதையொன் றும் இல்லை யப்பா

சேர்த்திடவே நவலோகம் தங்க மாகும்
சேர்க்காட்டா லொன்றுமில்லை சித்தி யில்லை
சார்த்திடவே யிந்தவர் யிரத்தில் தானே
தாட்டிகமாய்ப் பார்த்தெடுக்கச் சித்தி யாமே (329)

## அறிவுடையோர்க்கு எல்லாம் உண்டு. இல்லார்க்கில்லை

சித்தியாம் வாதத்தைச் செய்து கொள்ளு
சிறப்பாக ஞானயோ கங்கள் பாரு
முத்தியாம் கற்பத்தை யுண்டு தேறு
முடிவான நூல்களையே விரும்பிப் பாரு
பத்தியாய்ச் சிவயோகி யென்று பேரு
பதியவே யெடுத்திட்டுப் பதமாய் நில்லு
புத்தியாய்ச் செய்தாலோ வெல்லாம் ஆகும்
புத்தியிலார்க் கொன்றுமிலை புதுமை யாமே (330)

## *324 - 330* உரை

சுட்ட ஆட்டெலும்பு ஒரு சட்டியில் ஒருபடி போட்டு அதன்மேல் ஒரு சேர் சாரம் வைத்து மேலும் ஒருபடி ஆட்டெலும்பு போட்டு மூடி. சீ. ம. செ. எரி. உருகிக் கட்டும். அதனால் மாற்று கோடி. துரிசினால் களங்கு கோடி கெந்தியால் வண்ணம் கோடி. தங்கத்தால் தங்கம் கோடி. நாகத்தாலும் தங்கம் கோடி. உப்பினாலும் வண்ணம் கோடி. நாகத்தை இலுப்பெண்ணெய்யில் இருபதுமுறை சாய்த்து உருக்கிச் சாரக்கட்டினைத் தூவு. கட்டும். கண் விட்டாடும். கிறலறும் எண்ணெய்க் கக்கும். இறுகும் புகைச்சலறும். கட்டிய நாகத்தைத் தங்கம் உருகுமுகத்தில் எடைக்கு எடை தாக்கு. விழுங்கும். அதனெடை கெந்தியும் சூதமும் சேர்த்துக் கையான் நீரால் அரைத்து உலர்த்தி எரி. செந்தூரமாகும். செம்பில்

நூற்றிற்கு ஒன்றிடு. பத்தரை. தேனிலுண் உடல் இளமை பெறும் செவ்வலரி போலாகும். ஒன்பது மாறும்.

### முன்கட்டிய கல்லுப்புக்கு ரசபதங்கஞ் செய்யக் கல்லுப்பு சுத்திசெய்து காய்ச்சு

ஆமேதான் முன்சொன்ன கல்லுப் புக்கு
அடைவான ரசபதங்கம் சொல்லக் கெளு
நாமேதான் நாலுபடி யுப்பைக் காய்ச்ச
நலமான கடற்றண்ணீர் இரண்டு பத்து
வாமேதான் கடல்நுரையை யூதி நீற்று
வடிவாகத் தானரைதான் கூடப் போட்டுக்
காமேதான் பொங்காமல் காய்ச்சிக் கொள்ளு
கருத்தாக வடிதனிலொட் டாமற் காய்ச்சே (331)

### ரச பதங்கம்

காய்ச்சிடுநீ புலபுலப்பாய்த் துழாவிக் காய்ச்சு
கருணைபெறக் கல்லுப்பில் சூதம் விட்டு
பாய்ச்சிடுநீ சட்டிகொண்டு மூடித் தீபம்
பகரவே கமலக்கா டாக்கினி தன்னில்
வாய்ச்சிடுநீ யெரித்திடுநீ ரசமும் *சேர்த்து
வகையான **பற்பமது தந்தம் போலாம்
தாழ்ச்சியில்லாக் கடிகைநூ றெரித்துக் கொள்ளு
தாக்கிடுநீ கல்லுப்பி லெடையே தானே (332)

* செத்து. ** பதங்கமென்றிருப்பின் பொருந்தும்.

### கல்லுப்பும் ரசபதங்கமும் சேர்ப்பு

எடைபோடு இரண்டையுந்தா வரைத்து உண்டை
இதமாகத் துணியிலிட்டுப் பந்து போல

தடையறவே இறுக்கியே கட்டிப் போடு
தனைப்பிரித்துத் தூரவெறி பாகங் கேளு
கடையாக வதன்பேரில் கவசங் கேளு
கடல்நரையுஞ் சீனமொடு மேனிதானும்
நடையாகக் கட்டிடவே இடையே தானும்
நன்மையாய்ச் சுண்ணாம்புக் கவசம் போமே (333)

போட்டுமே பத்தெருவிற் புடத்தைப் போடு
பின்புதான் நாலுபுடம் போட்டுத் தீரு
ஆட்டுமே புர, ண்டுருண்டு மணியாய் நிற்கும்
அடைவாக எடுத்துமே மூசை யிட்டுக்
காட்டுமே யுருக்கிடவே மணியு மாகும்
கருத்தான மணியெடுத்து ரவியில் தாக்கு
வாட்டுமே ஏழுதான் மாற்றுக் காணும்
வடிவான பொன்னாகும் மகிழ்ந்து பாரே (334)

## சூதஞ் சேர்த்துக் கட்டாத உப்பை உருக்கினால் கரிகுடிக்கும்

பாருநீ இப்படியே யிந்த வுப்பைப்
பதிவாகச் செய்தாக்கால் கட்டும் கட்டும்
காருநீ வேறுப்பைக் காய்ச்சி னாக்கால்
கருதியே புடம்போட்டால் வெள்ளை யாகும்
தாருநீ கரியில் வைத்து உருக்கி னாக்கால்
தாக்கான கரிகுடிக்கும் வீண்பா டாகும்
சேருநீ மனதுதான் எரிச்ச லாசிச்
சிறப்பாகத் திரியாமல் சூதஞ் சேரே (335)

## சூதம் வாதத்தில் ஆதிப் பொருள். அதைக் கட்டுவது கல்லுப்பு

சூதமென்ன வாதத்தி லாதி யாச்சு
சூழ்ச்சமாய் அதையடக்கக் கல்லுப் பாச்சு

வாதமென்ன தங்கமென்ன அரிதுமல்ல
வடிவாகச் சொன்னபடி போலே பாரு
வேதமென்னில் வாதமது அஞ்சாம் வேதம்
விருதாவாய்ச் சுட்டலைந்தால் என்னசெய்வேன்
நீதமென்ன நீதியா மிந்த நூலு
நிர்ணயமாய்ச் சொல்லிவிட்டேன் நிசம்பெற்றோரே (336)

## 331 - 336 உரை

இருபதுபடி கடல்நீரில் நாலுபடி கல்லுப்பும் நீற்றின கடல்நுரைச் சுண்ணம் இரண்டுபடியும் போட்டுத் துழாவிக் காய்ச்சி அதனுள் இரசம் (ஒரு சேர்) விட்டு சீ. ம. செ. முத்தீயும் எரி. நூறு நாழிகை எரிக்கத் தந்தம் போலாகும். அதனைக் கல்லுப்பினெடை சேர்த்து அரைத்துத் துணியிலிட்டுப் பந்துபோல் இறுக்கிக் கட்டி இறுகின பின்பு துணியை அவிழ்த்து விட்டு அதன் மேல் கடல் நுரையும் சீனமும் மேனியும் அரைத்துக் கவசமிட்டு மேலும் சுண்ணாம்புக் கவசமிட்டுப் பத்தெருப் புடமிட்டுப் பின்பும் இதுபோல் நாலுபுடமிடப் புரண்டுருண்டு மணியாகும். மூசையிலிட்டுருக்க மணியாகும். ஏழுமாற்றுப் பொன்னுண்டாக்கும். இருபாடல் அறிவுரை.

## கெந்திச் செம்பு

நிசமாக வின்னமொரு கெந்திச் செம்பை
நிலவரமாய்ச் சொல்லுகிறே னுலகத்துள்ளே
வசமாகக் கெந்தகத்தைப் பாலில் சுத்தி
வடிவாக்கி யிந்தஎடை சூத பற்பம்
தசமாக முலைப்பாலால் ஆட்டி யுண்டை
தடையறவே குன்றியெடை ரவியிற் காய
இசைவாகக் காயவைத்து எடுத்துக் கொண்டு
இன்பமாய்ப் பலமிரண்டு நிறுத்துக் கொள்ளே (337)

## கெந்தியும் ரசபதங்கமும் கிராசங் கொடுக்கும் பதம்

கொள்ளவே செம்பதுதான் பலமிரண்டு
கூறான குகைதனிலே வைத்து ருக்கி
மெள்ளவே யெட்டிப்பார் பச்சை யாகும்
மெதுவான பதத்திலே கந்த கத்தை
துள்ளவே கிராகமிடு அதராய்ப் போகும்
துடியான அதரெடுத் தப்பால் வைத்து
உள்ளபடி பின்பொருக்கால் கொடுக்க வெல்லாம்
உறுதியாய் எல்லாந்தா னதராய்ப் போமே (338)

## கெந்திச் செம்பால் அயச் செம்பு

போனதொரு அதரெல்லா மெடுத்துக் கொண்டு
போராக வெங்காரம் கொடுத்து ருக்க
வானதொரு களங்காகும் உருக்கிக் கல்வம்
வகையாகக் கொட்டியே பின்பு கேளு
கானதொரு களங்கினெடை அரப்பொடியை
கருத்தாக எலுமிச்சம் பழத்தி லூறப்
பானமாய் மூன்றுநாள் ஊற வைத்துப்
பதிவாக வலம்பியே களங்கில் சேரே (339)

சேர்த்துமே செவ்வல்லிப் பூச்சாற் றாலே
செழுமைபெற வரைத்துமே வில்லை தட்டிப்
பார்த்துமே கசபுடமாய்ப் போட்டெ டுத்துப்
பதமாக எடுத்துமே பின்பு கேளு
கார்த்துமே பின்பொருக்கா வரைத்து வில்லை
காயவைத்துச் சிவக்குமட்டும் புடத்தைப் போடு
சேர்த்துமே யெடுத்துமே யுருக்கித் தீரு
செயமுள்ள செம்பாகு மூதிப் போடே (340)

## கெந்திச் செம்பாலான அயச்செம்பைச் செந்தூரஞ் செய்ய

போடவே அயச்செம்பு அலரிப் பூப்போல்
போராக எடைக்கெடையே தங்கந்தாக்கு
வாடவே மதியெட்டி லிரண்டு தாக்கு
வளமாக எடுத்துப்பார் ஏழு மாற்று
நாடவே இதைவிற்றுச் செலவு செய்து
நலமாகச் செந்தூரம் செய்யக் கேளு
காடவே அயச்செம்பு பலமு மொன்று
கருவான தங்கமொன்று நிறுத்துக் கொள்ளே (341)

நிறுத்துமே தகடாக்கிப் பூச் கேளு
நேர்மையாய் ரெண்டெடைக்குக் கெந்தி சேரு
அறுத்துமே கெந்திக்குக் காலு வீரம்
அடைவாகக் கெந்தியெடை யரப்பொடியைச் சேர்த்து
கறுத்துமே யரப்பொடியைப் பழச்சாறு விட்டுக்
கழுவியே சேர்த்தரைத்துப் பாணியாலே
ஒறுத்துமே சாமமிரண் டரைத்துப் பூசு
உண்மையாய் ரவிதனிலே காய வையே (342)

வைத்துமே நொறுங்குமட்டும் புடத்தைப் போடு
வளமாக அயச்செம்பு செந்தூர மாகும்
செத்துமே முருக்கம்பூ போற்சி வக்கும்
செயமான கருஞ்சிவப்பாய் இருக்கும் பாரு
முத்துமே மதியெட்டி லொன்று சேரு
முடிவான தங்கமாய் இருக்கும் பாரு
வித்துமே செலவுசெய்து ஞானம் பார்த்து
விருப்பமாய்ச் சுழிமுனையை நாடி டாயே (343)

## முன் மறைத்த கெந்தச் செம்பு இங்கே உண்மையாய்ச் சொல்லப்பட்டுள்ளது

நாடவே யிப்பாகம் நீசம தாகும்
நந்தீசர் தன்பேரி லாணை யாகும்
வாடவே முன்காண்டந் தன்னில் தானம்
வளமாகச் சொல்லவில்லை மறைத்துச் சொன்னேன்
பாடவே இந்த நூல் ஆயிரத்தில்
பதிவாகச் சொல்லிவிட்டேன் குழந்தை செய்யும்
போடவே வாதந்தான் நிமிட மாகும்
போக்கோடே கண்டறிந்தால் வாதி யாமே (344)

### 337 - 344 உரை

தூயதாக்கிய கெந்தகம் எடுத்து அதனெடை சூதபற்பம் சேர்த்து முலைப்பால் விட்டரைத்துக் குன்றியளவாக உருண்டையாக்கி எடு. இதில் இரண்டு பலம் எடுத்து இரண்டு பலம் செம்பு உருகிப் பச்சையாய் நிற்கும் வேளையில் கிராசமிடு அதராக நொறுங்கும். மிச்சச் செம்பிற்கும் இவ்வாறு செய்து அதரெல்லாம் எடுத்து வெங்காரம் சேர்த்து உருக்கு. களங்காகும். இதனெடைக்கு எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறிய அரப்பொடியைச் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு ஊற்றியரைத்து. வி. த. கா. கசபுடமிடு. மீண்டும் ஒருமுறை போடு. உருக்கு செம்பாகும். எடைக்கெடை தங்கம் சேர். வெள்ளி எட்டில் இரண்டு கொடு. ஏழு மாற்று அயச்செம்பு பலம் ஒன்று தங்கம் பலம் ஒன்று. இவற்றின் எடை கெந்தி. அதனெடை யரப்பொடி. கெந்திக்குக் கால்வீரம் (அரப் பொடியைப் பழச்சாற்றில் சுத்தி செய்) எல்லாம் இரண்டி யாமம் அரை. அயத் தங்கச் செம்பைத் தகடாக்கிப் பூசி வி. த. கா. புடமிடு. செந்தூரம். மதி எட்டுக்கு ஒன்றிடத் தங்கம் நந்தீசாரணையிது உண்மை. முன்காண்டத்தில் மறைத்தேன். இதில் உண்மை சொன்னேன்.

## சித்தர்மறைப்பு காண அரிது. இந்நூலைப் பார்த்தால் நிமிடத்தில் வாதம் செய்யலாம்

வாதியா வாதமென்றால் எளிதி லாமோ
　　வடிவான சித்தரெல்லாம் மறைத்துச் சொன்ன
வீதியா மொருவ ரால் செய்யப் போமோ
　　வீணிலே கரிச்சுடுவார் தலைகா ணாமல்
நீதியாய் இந்தநூல் கண்ட பேர்கள்
　　நிமிடத்தில் செய்திடுவார் வாத மார்க்கம்
பேதியா திருந்துசெய்தா வெல்லா மாகும்
　　பிரட்டருக்க முடியாது பொய்யாய்ப் போமே (345)

## புரட்டுவாதிகள் செய்யும் மோசம்

பொய்யாகச் சிறிதுபேர் வாதந் தன்னை
　　பிரபலமாய் நான்செய்வேன் என்று சொல்லி
மெய்யாக அபின்கஞ்சா கள்ளை ரெம்ப
　　விருப்பமாய்க் கொண்டுவந்து பூசை செய்வார்
நய்யவே சாராயம் கோழி யாடு
　　நாடியே கொண்டுவந்து சமைத்துப் பூசை
செய்துமே பெண்ணைத்தான் பாதந் தொட்டுச்
　　சிறப்பாகக் குழம்பிடுவார் செழிப்பில் லாரே (346)
இல்லாமற் பூசைசெய் தெட்டு நாளில்
　　இடும்பாக வாதம்வரும் என்று சொல்லி
வல்லமையாய்ச் சொல்லியவர் நாகந் தன்னை
　　வலுமையாய்ச் செம்புதனி லீந்து காட்டி
கொல்லாமல் கொன்றுமே பணம்பி டுங்கிக்
　　கொடுமையாய் ஓடுவார் அவன்பின் னோடே
நல்லாகப் பணம்போட்ட வாதி தானும்
　　நாடியே யோடியே பிடிப்பான் பாரே (347)

பிடித்துமே மடியைத்தான் பிடித்தி ழுத்துப்
　　பொல்லாத மோசந்தான் செய்தார் என்று

படித்துமே பல்லைத்தான் வைது திட்டி
கனமான வாதந்தான் எனக்கு வேண்டாம்
படித்துமே செலவழித்த பணத்தைத் தாரும்
பதிவாகக் கேட்கையிலே வாதி சொல்வான்
விடுத்துமே என்னைவிட்டால் தாரேன் என்பான்
விடுபட்டு ஓடியே போவான் தானே (348)

ஓடியே மின்னொருவ னிடத்திற் சென்று
உறுத்தாக வாதிகளே தங்கம் ரொம்ப
ஆடியே எனக்குத்தான் தெரியு மென்று
அடைவுடனே சொல்லியே பிண்டங் கொண்டா
தேடியே பிண்டத்தைக் கொண்டு வந்து
திறமாகக் கத்தியால் அறுத்துக் கீறி
வாடியே கொடிச் சுண்ணம் ஈரற் சுண்ணம்
வகையாகச் சுண்ணமென்பான் மட்டி தானே (349)

சுண்ணமாய்ச் செய்துமே சரக்குக் கட்டிச்
சூழ்ச்சமாய்ச் சரக்கைத்தான் கட்டிப் பார்த்து
நன்னயமாய்ச் செம்பிலே கொடுக்கும் போது
நலமாக வொன்றுமில்லை யின்ன மொன்று
வன்னமாய்க் கொண்டுவந்தால் செய்வேன் என்பான்
வகையில்லா மானுடர்கள் அலைந்து தேடி
சின்னமாய்ப் பேசிவிட்டு அலைவார் பாவி
சிறப்பின்றித் திரிந்த லைந்து மாளு வானே (350)

## பதினாறு ஆண்டானாலும் யூகிமுனி நூலைப் பார்த்துச் சோதித்தால் வாதம் தோன்றும்

மாண்டிறந்து போகாமல் யூகி நூலை
மயமாகப் பார்த்திடவே வாதம்
காண்டுமே புத்தியிலே நூலைப் பார்த்துக்
கருத்தாகச் செய்தாக்கால் எல்லாம் ஆகும்

ஆண்டுமே பதினாறு வருடம் நூலை
அடவுடனே பார்த்துநிறை சோதித் தேறி
தூண்டுபோல் சரக்கெடுத்து வாதம் பாரு
தொல்லுலகில் அரசாள்வீர் சூழ்ச்ச மாமே (351)

## 345 – 351 உரை

அறிவுரை. பொய்வாதியை நம்பற்க. பிண்டவித்தை பிழை என்க யூகி நூலைப் பதினறாண்டு படித்துழைத்தேனும் பயன் பெறுக.

சூழ்ச்சமாய் அகத்தியரும் சொன்ன மார்க்கம்
கூட்டியே உட்கருவாய்ச் சூத்தி ரத்தை
ஆட்சியாய்ப் பாடினால் வாதி மார்கள்
அதைப்பார்த்துப் பிண்டவித்தை யலைவா ரையோ
காட்சியாய் ராமதேவர் கருவைக் காட்டிக்
கனமான பிண்டமைங் காய மென்று
ஆட்சியாய்ப் பாடினால் நூல்கள் தோறும்
அவலைநினைத் துரலிடித்த அடவு தானே (352)

அடவாகக் கருச்சொல்வார் வேதை சொல்லார்
அண்டமென்பார் பிண்டமென்பார் அநீத மாகத்
திடமாக வதுவிதுவு மல்ல வென்பார்
திட்டமாய் அலையவே பாடி வைத்து
வடம்போல கருக்கிடையுங் குருக்கிடையுஞ் சொல்வார்
வடிவாகப் பரிபாஷை தெரியா மல்தான்
படபடத்துச் சுட்டுமே கெட்டுப் போவார்
பாரிப்பார் பூரிப்பார் உலகத் தோரே (353)

## உலகத்தில் சுடுவாதி கெடுவது

உலகத்தில் வாதமில்லை என்று சொல்வார்
உண்மையாய்ப் பிண்டவித்தை செய்தேன் என்பார்
கலகத்தில் கருக்கிடக்குங் கொண்டா வென்பார்
கனமாக நான்சுட்டேன் ஒன்று மில்லை
துலகத்தில் சாத்திரமும் பொய்யெ யென்பார்
சுருதியைத்தான் ஆராய மாட்டா மல்தான்
வலையிற்குள் ளகப்பட்ட வாதி மார்கள்
வகையான பரிபாஷை யறியார் தானே (354)

அறியாத வாதிகள்தான் சாத்தி ரத்தை
ஆராயா மல்தானும் கேட்டுச் சுட்டுப்
பிறிவாக நான் கெட்டேன் என்பார் கோடி
பிரட்டுத்தான் சாத்திரமும் என்பார் கோடி
நெறியாகப் பூசிப்பார் கோடிப் பேர்கள்
நிர்மூடத் தனம்செய்வார் கோடிப் பேர்கள்
அறிவாலே யறிந்தாக்கா லிந்த நூலை
அடைவாக ஏதேனுங் கிடைக்கும் பாரே (355)

## காரீயச் செம்பு

கிடைக்கவே காரீயச் செம்பு சொல்வேன்
கேட்டிடுவீர் புத்தியுள்ள வாதி மாரே
மடைத்தனமாய்த் திரியாதே காரீ யத்தை
வகையாகச் சேரொன்று நிறுத்துக் கொள்ளு
படைத்துடனே மூசைதனில் வைத்து ருக்கு
பதிவான முன்னெந்தி யிடையே தாக்கு
சடைத்துமே கரிபோலே தூளாய்ப் போகும்
சாத்தியே யெடுத்துமே பாகங் கேளே (356)
பாகமாய்ச் சொல்லுகிறேன் துருசு ஐந்து
பத்துடனே பலம்நிறுத்து இடையே சேர்த்துத்

தாகமாய் இரண்டுங்கற் றாழம் பாலால்
தாக்கியே யரைத்துவில்லை காய வைத்து
வாகமாய்க் கசபுடத்தில் போட்டு வாங்கும்
வகையாகச் சிவக்குமட்டும் புடத்தைப் போடு
யோகமாய் எடுத்துமே யுருக்கி யூது
ஒளியாகும் காரீயச் செம்பு மாமே (357)

## ரசக்களங்கு அல்லது ரசக்குளிகை அல்லது கட்டு

செம்புமாம் இச்செம்பைக் கிண்ணி பண்ணு
செயமாக ரசம்விட்டு எரித்தாற் கேளு
நம்பிடவே யிரதமது கட்டிப் போகும்
நலமான குளிகை யாம் நாடிப் பாரு
பின்புதான் செய்வமென் றெண்ண வேண்டாம்
பிரபலமாய் மோதிரங்கள் குண்ட லங்கள்
தெம்பாகப் போட்டுமே * சிவத்தைப் பண்ணு
திறமாக இலுக்குமிதான் குடிகொள் வாளே (358)

* செபத்தை

## காரீயக் கரி செயசெம்புக் கரி சேர்த்து எடுத்தால் செம்பு திடமாயிருக்கும்

குடிகொள்ளக் கெந்திரசத் தாலே வாதி
கூட்டியே காரீயம் வழியாய்க் கொன்று
படிகொள்ளச் செம்பைத்தா னெடையே சேர்த்துப்
பதிவாகப் பெரும்புடமாய்த் தீயைப் போடு
துடியாக இருந்திடுமே செம்பு தானும்
துப்புரவாய்ச் செம்புசெத்த உயிருமானால்
அடியாக மதிபழுக்கும் உலகத் தோரே
ஆடவே வேதையிதில் ரெம்பத் தானே (359)

## முடிவில் காரீயக் கரியுடன் செம்புக் கரி செய்து சேர்த்துச் செம்பெடுத்தால் வேதை முடியும்

தானென்ற சாத்திரத்தில் சித்தர் சொன்ன
தாக்கான களங்குசெந் தூர மெல்லாம்
கானென்ற விழலாகப் பாடிப் போட்டார்
கலக்கமில்லா ரிசிதானும் சொன்ன சொல்லு
வானென்ற காரீயச் செம்பு தன்னை
வகையாக மதிஎட்டுக்கு ஒன்று இட்டு
பானென்ற தங்கமொன்று சேர்க்க ஏழு
பதிவான வயதாகும் பற்றிப் பாரே (360)

பற்றியே காரீயச் செம்பு தன்னைப்
பதியவே சொல்லிவிட்டேன் உலகத் துள்ளே
நந்தியே செம்பை வைத்து நாடித் தேறு
நலமாகக் கெந்தியால் ரசத்தைக் கொல்லு
முத்தியே யீத்தைக் கொன்று தேறு
முடிவாகும் வேதையாம் மூர்க்க மாகும்
சத்தியமாய் இவ்வேதை பற்றிப் பார்த்தால்
சகலசித்தும் ஆடலாம் தாக்கிப் பாரே (361)

## சரக்கில் உழைத்தால் முடிவு பெற்று வேதை காண்பான்

பாருமே சரக்குகளில் உழைத்த வாதி
பதிவான கெதியடைவான் ஏமம் காண்பான்
வாருமே வழலைபிண்டந் தனிலு ழைத்தால்
வகைகாணான் தொகைகாணான் ஏற மாட்டான்
காருமே நூல்பார்த்து உழைத்தால் மைந்த
கருவாகும் நல்லறிவு மிகவும் தோன்றும்
வேருமே யிருந்தாலே மரமும் உண்டு
வேரில்லா மரமில்லை விதிகாண்பா யே (362)

## விதியாளி நினைத்துப்பார்த்தால் அவர் மனத்தில் வேதைகாணும்

காணவே விதியாளி காண்பா னப்பா
கருத்தில்லா விதியாளி காண மாட்டான்
தோணவே சுடுவாதி காண மாட்டான்
சுட்டுமே தவித்துமே மனம்வேறாகி
வானவே துரோகியவன் காண மாட்டான்
வகையுடனே பார்த்தாக்கால் எல்லா மாகும்
ஊணவே மனசு ஊனில் வேதை காணும்
உய்ந்துணர்ந்து பாராமல் கெட்டார் தாமே (363)

கெட்டபேர் உலகத்தில் அநேகங் கோடி
கெடாத -பேர் சாத்திரத்தைப் பார்த்துத் தேறிச்
சுட்டபேர் உலகத்தில் வேதை கோடி
சுடாவிட்டால் வருமோதான் வாதங் கோடி
முட்டவே பார்த்தாக்கால் எல்லா மாகும்
முடியுமட்டுஞ் சோதித்தால் தோணும் தோணும்
கிட்டுமே ரசவாதம் தனக்குத் தோணும்
கிருபையாய் என் நூலைப் பார்த்திடாயே (364)

## செம்பைச் செய்து தேரெனல்

பார்த்திடவே பொன்னுண்டு பார்த்துத் தேறு
பதிவான வாதம்வரும் யோக மாகும்
சேர்த்திடவே களங்காகும் செம்பு மாகும்
சேராட்டா லொன்றுமில்லை சிறப்பு மில்லை
கோத்திடவே நூல்பாரு குணங்கள் பாரு
குடிகெடுத்த வாதிகளே கொள்ளை கொள்ளை
நார்த்திட்ட நாறுபோல் நன்மை யாகும்
நலமறிந்து செம்பைத்தான் வைத்துக் கொள்ளே (365)

## வாதந்தெரிந்தபின் ஒருவருடனும் சொல்லாமல் விழிப்பாக இரு. சொன்னால் உயிர்போய் விடும்

கொள்ளவே உன்னுடைய ஆங்கா ரத்தால்
கொடுமைபல சொல்லியே கெடுக்க வேண்டாம்
மெள்ளவே செம்பைத்தான் களிம்பைப் போக்கு
மேதினியில் ரசவா தம் கைக்குள் ளாகும்
கள்ளமாய்த் திரிந்திடுநீ சொல்லி டாதே
கருத்தாகச் சொல்வதினால் உயிர்கள் போகும்
வள்ளலார் சொன்னவித்தை வாத மப்பா
வையகத்தில் மனதடங்கி நில்லு நில்லே (366)

## மனமூன்றிப் பார்த்தால் எப்பொருளும் காணலாம்

நில்லென்றால் மனமிரங்கிச் சொல்லு வாரோ
நிர்ணயமாய்ச் சாத்திரத்தைப் பார்த்தா லாகும்
சொல்லென்றால் சொல்வாரோ வாத மார்க்கம்
சொற்பெரிய பெரியோர்கள் சொல்லு வார்கள்
வில்லென்றால் வளைத்தாலே அம்பு தைக்கும்
விருப்பமாய் வளையாத மரத்தாலென்னாம்
கல்லைத்தான் எறிந்தாலோ தூர வோடும்
கருணைவைத்தால் எப்பொருளும் காண லாமே (367)

## வாதத்திற் குடையவனாக விருந்தால் இடைவிடாமல் அந்த வாதத்திலுழைக்கப் புத்தி கொடுக்கும்

காணவே யுன்னுடைய பொருளே யானால்
கருத்துவைத்துச் சாத்திரத்தி லுழைக்கச் சொல்லு
பூணவே யுன்னுடைய பொருளே யானால்
புதிதான அயத்திலே உழைக்கச் சொல்லு

தோணவே யுன்னுடைய பொருளே யானால்
துடியான கெந்திதனி லுழைக்கச் சொல்லு
வாணவே யுன்னுடைய பொருளே யானால்
வடிவான செம்புதனி லுழைத்தி டாயே (368)

## களங்கு செய்தால் முதன்மையான செம்பாகும். பிண்டத்தை நினைத்தால் நரகம் கிடைக்கும்

உழைத்திடவே பிண்டத்தி லுழைத்தா யானால்
உண்மையாய் ரவிகோடி நரகம் எய்தும்
தழைத்திடவே பிண்டவுப்பை யெடுத்தா யானால்
தாட்டிகமாய் அவன்குடும்பம் நாச மாகும்
பிழைத்திடவே இவ்வார்த்தை பொய்யோ இல்லை
பதிவான யூகிமுனி சொன்ன நேர்மை
அழைத்தாக்கால் வாதத்தில் களங்கு செய்தால்
ஆதியாம் செம்பாகும் அறிந்து பாரே (369)

## நூலை முற்றும் பார்த்தால் வேதை கிடைக்கும்

அறிந்துபார் அயச்செம்பைக் கண்ட போது
ஆதியாம் தங்கமது நிறையும் பாரு
பிறிந்துபார் உலகேவல் நிரம்ப வுண்டு
பிதற்றியே திரியாதே வாயை மூடு
எறிந்துபார் கவணின்கல் தூர ஓடும்
எறியாட்டால் ஓடாது இனிமை யாளா
விறிந்துபார் சாத்திரத்தை முழுதும் பாரு
வேதையுண்டு வித்தகரே ஒழுங்க தாமே (370)

## செம்புத் தொட்டிச் செம்பு

ஒழுங்காக இன்னமொரு செம்பு கேளு
உறுதியாம் அயமதுதான் பலமும் ஒன்று
நழுங்காக வீரங்கால் இடையே போட்டு
நாட்டியே அரைத்திடவே நாலு சாமம்
கழுங்காமல் இளவறுப்பாய் வறுக்க வேதான்
காரணமாய்ச் செந்தூர மாகும் பாரு
தழுங்காமல் செந்தூர யிடைக்கே நல்ல
தடையறவே தொட்டியைநீ சேர்த்துக் கொள்ளே *(371)*

## ஆயச் செந்தூரத்தோடு செம்புத் தொட்டிப் பாடாணம் சேர்த்து அயச்செம்பு எடுக்க

சேர்த்துமே செம்பினால் தொட்டி வாங்கிச்
சிறப்பாகச் சேர்த்துமே யரைநேர் சாமம்
பார்த்துமே செவ்வல்லிப் பூச்சாற் றாலே
பதையாமல் அரைத்துவில்லை ரவியிற் காயக்
காத்துமே கசபுடமாய்ப் போட்டெ டுக்கக்
களிம்பற்று இருக்குமே செம்பு தானும்
மூத்துமே மூசைதனில் இட்டுருக்கு
முடிவான செம்பாகும் அயச்செம் பாமே *(372)*

## அயச்செம்பின் மாற்று

செம்பைத்தான் நாவினால் சொல்லப் போகா
செம்மையாய் ஊதியதை யெடுத்துக் கொண்டு
நம்பியே மதிதனிலே பத்துக் கொன்று
நலமாக இட்டாக்கால் வயது ஏழு

தும்பிமுகன் தன்னாணை சொல்லிப் போட்டேன்
சொரூபமுள்ள அசுவனியின் தன்மே லாணை
வம்பிலே சொன்னாக்கால் என்ன செய்வான்
வழிபாடு உடைய வன்தான் காண்பான்பாரே (373)

## *352 - 373* உரை

காரீயம் ஒரு சேர் உருகு முகத்தில் அதனெடை கெந்தி தாக்கு. கரிபோல் தூளாகும். அதனொடு ஐம்பது பலம் துரிசு சேர்த்துக் கற்றாழம் பால் விட்டரைத்து வி.த.கா. கெசபுடமிடு. சிவக்கும் வரை நன்றாய்ப் புடமிடு. உருக்கு. செம்பாகும். இச்செம்மைப் கிண்ணி செய். அதனுள் ரசம் .விட்டெரிக்கக் கட்டும். குளிகையாகும். மோதிரமும் குண்டலமும் செய்து போடு. செவித்துக் கொள். கெந்தி ரசத்தாலே காரீயத்தைக் கொன்று செம்பை அதனெடை சேர்த்துப் பெரும்புடமிடு. செம்பு சாகும். செம்பு செத்து உயிர்பெற்றால் மதி புழுக்கும். காரீயச் செம்பை மதி எட்டுக்கு ஒன்றிட்டுத் தங்கமொன்று சேர்க்க நலமாம். ஏழு வயது.

அயம் ஒரு பலம் வீரம் ஒரு பலம் ஒன்றாய்ச் சேர்த்து நாலு யாமம் அரை. இளவறுப்பாய் வறு. செந்தூரமாகும். அதனெடை செம்புத் தொட்டிப் பாடானும் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து, வி.த.கா. கசபுடமிட்டுருக்கு. அயச் செம்பாகும். மதியில் பத்துக்கு ஒன்று சேர்க்க வயது ஏழு.

## மாற்றுக்கிடையாவிட்டால் மருத்துவம் செய்து பணம் சேர்த்து பின்மாற்றுப் பார்க்க வலுக்கும்

காணவே வாதந்தான் கிடையா விட்டால்
கருத்தாக வைத்தியத்தைப் பார்த்துத் தேறு

பூணவே பணம்வருகும் வாதம் பாரு
புத்தியாய் இருந்தாக்கால் எல்லாஞ் சித்தி
ஆணவத்தால் அலையாதே நூலைப் பாரு
அறிவுகெட்ட வாதிக்குப் புத்தி சொல்லு
வேணபடி சொன்னாக்கால் என்ன லாபம்
விரும்பியே பாத்தெடுக்கச் சித்தி யாமே (374)

## மாற்றுக் கற்பித்த வழி

சித்தியாய் அரன்சொல்லத் தேவி சொல்லச்
சிறப்பான நந்திசொல்ல அசுவனியுங் கேட்டுப்
புத்தியாம் விசுவனி தன்வந்திரிக்குச் சொல்ல
புகழ்பெறவே யகத்தியரும் புலத்தியர்க்கு
நத்தியே தேரருமே கூடச் சொல்ல
நலமான யூகிமுனி கேட்டுத் தேறி
சத்தியாய்ச் சொல்லிவிட்டேன் உலகத் கோர்க்குச்
சாட்சியாம் திருமூலர் சாட்சி யாமே. (375)

## வாதம் ஞானம் மோகம் நூல்கள் கணக்குகள் இவைகளில் ஒன்றும் பொய்யன்று உண்மை

ஆமேதான் உலகத்தில் வாதம் பொய்யோ
அருள்பெருகும் ஞானங்கள் யோகம் பொய்யோ
நாமேதான் சாத்திரங்கள் கணக்குப் பொய்யோ
நாடினால் எல்லாமும் வந்து சேரும்
காமேதான் கண்கெட்ட வாதிக் குத்தான்
கருத்தாக வாதங்கள் பொய்யென் பார்கள்
தாமேதான் சுட்டாக்கால் ஒன்றும் பேசார்
தறிதுரம்பன் வாதிதான் சொல்வான் பாரே (376)

பார்க்கவே மனத்தினால் சாத்தி ரத்தைப்
பதிவாகப் பார்த்தாக்கால் எல்லாம் தோன்றும்
ஏர்க்கவே கைபாகம் முன்னே பாரு
இயற்கையாய் வாதசித்தி காய சித்தி
பார்க்கவே மனத்தினால் சாத்தி ரத்தைப்
பதிவாகப் பார்த்தாக்கால் எல்லாம் தோன்றும்
ஏர்க்கவே கைபாகம் முன்னே பாரு
இயற்கையாய் வாதசித்தி காய சித்தி
பார்க்குள்ளே இருந்தாக்கால் வாதம் பாரு
பதிவாக ஞானத்தை யுழைத்துப் பாரு
ஆர்க்குள்ளே சொல்லாதே பாகம் பாரு
அலைந்தலைந்து போகாமல் விதியைப் பாரே *(377)*

## செம்பை விட்டால் வழியில்லை

விதியாக வேணுமென்றால் அயத்தைப் பாரு
விதிகெட்டுத் திரியவென்றால் பிண்டம் பாரு
சதியாச் சொன்னாக்கால் பெரியோர் தங்கள்
சரித்திரத்தை யென்னாலா சொல்லப் போகா
நதிதனிலே மூழ்கினால் பலது முண்டு
நந்தீசர் சொற்படிக்கு நாடிப் பாரு
கதிவேறு மில்லையடா செம்பைப் பாரு
கருவத்தை யடைந்துதிரியாதே யப்பா *(378)*

## *374 – 378* – அறிவுரை

## இனி முப்பூ குரு. சவுக்காரச் சுண்ணம்

அப்போதே சொல்லிவிட்டேன் வேதை மார்க்கம்
அருள்பெருகு மயமதனை நாடிப் பாரு

தப்பிதமாய்ச் சொல்லவில்லை சிவன்மேல் ஆணை
தன்பேச்சுப் பெரிதென்று பேச வேண்டாம்
முப்பூவின் மார்க்கங்கள் இனிமேற் சொல்வேன்
மோசங்கள் வாராமல் செய்து பாரு
எப்படியும் துருசுகுரு வாகும் பாரு
ஏழைமதி போகாமல் சுண்ணம் பாரே (379)

## சவுக்காரச் சுண்ணம்

சுண்ணமென்ன ஆவதற்குச் சவுக்காரச் சுண்ணம்
சொல்லுவேன் உலகவா திகளே கேளும்
கன்னமென்ற திறவுகோல் ஆகும் பாரு
கருணைவைத்துச் சுண்ணமதைக் கருத்தாய்ப் பாரு
நன்னமென்று நாடியே பார்த்துத் தேறு
நலமாகப் பார்த்துணர்ந்தால் நயமாம் பாரு
சின்னமாம் என்றுநீ இருந்தி டாதே
சிறப்பான வாதசித்தி யாகும் பாரே (380)

## சுக்கான் எடுக்கவும் சுடவும் ஆமுரியிற் கரைக்கவும்

பாரேநீ சவுக்காரச் சுண்ணங் கேளு
பஞ்தையாமல் பூநீறு விளையும் பூமி
காரேநீ பதினாறு முழத்தின் கீழே
கல்லிருக்கும் அதைவெட்டி யெடுத்துவந்து
வாரேநீ சுண்ணாம்புக் காள வாயில்
வைத்துமே சுட்டெடுத்து மார்க்கங் கேளு
தாரேநீ யமுரி*பதி னெட்டு வாரு
தடையறவே நீறிவிடுந் தண்மை தானே (381)

*குறிப்பு: படிரெட்டி - என்றிருக்கலாம் என்பது கருதத்தக்கது முன்னளவு பின்னளவு சொல்லாமையால்.

### சுக்கானுப்பெடுத்துக் கல்லுப்புச் சேர்த்த சுண்ணம்

தண்மையாய் மண்டலத்தில் வைத்து மூடு
தடையறவே யுப்பாகும் அதைவ ழித்து
வண்மையாய்ப் படிநாலு எடுத்துக் கொண்டு
வகையாகக் கல்லுப்புப் படியு மொன்று
உண்மையாய் இதுரெண்டும் ஒக்க ரைத்து
உறுதியாய் வில்லைபண்ணி ரவியிற் போடு
துண்மையாம் ஐந்துசுண்ணந் தன்னி லிட்டுத்
துடியாகப் புடம்போட்டு எடுத்துக் கொள்ளே (382)

### சுக்கானுப்பும் கல்லுப்பும் சேர்ந்ததை ஐந்து புடம்போட சவுக்காரச் சுண்ணமாகும்

எடுத்துமே நாலிலொன்று வீரம் சேர்த்து
இழுத்தரைத்து வில்லைபண்ணி ரவியிற் காய
அடுத்துமே ஐந்துசுண்ண மதிலே யிட்டு
அன்பாகப் புடம்போட்டு எடுப்பா யப்பா
நடுத்துமே பின்னுமதில் நாலத் தொன்று
நலமாகச் சேர்த்தரைத்து வில்லை பண்ணி
படுத்துமே ஐந்துதரம் இப்படியே செய்யப்
பதையாமல் சவுக்காரம் சுண்ணமாமே (383)

### முன்னே செம்பை முடித்துப் பின்னே சவுக்காரம் பார்

சுண்ணமாம் சவுக்காரச் சுண்ணமாகும்
துடியான சரக்கெல்லாம் நீறிப் போகும்
நன்னயமாய் உப்புமுதல் *இருபத் தைந்தும்
நாடியே கண்டவுட னேவல் கேட்கும்

முன்னமே செம்பைத்தான் முக்கிய மாக
முடித்துமே சவுக்காரச் சுண்ணம் பாரு
கன்னல்போல் இருக்குமது நேர்மை தானும்
காயசித்தாம் யோகசித்தாம் கண்டு பாரே (384)

(*அறுபத்தைந்தும் பா.வே.)

## துருசுச் சுண்ணம்

பாருமே முன்வைத்த சவுக்கா ரத்தைப்
பதையாமல் வாய்நீரால் துருசுக் கப்பி
நாருமே புடம்போடத் துரிசு நீறும்
நலமாகச் சவுக்காரம் ஆடும் ஆட்டு
காருமே சவுக்காரச் சுண்ணந் தொட்டுக்
காட்சியாய் *இரமது கட்டிப் போகும்
வாருமே சுண்ணத்திற் காதி யாகும்
வடிவான துறையெல்லாம் சுண்ணப் போக்கே (385)

(*ஐந்துமது - பா.வே.)

## இந்தச் சவுக்காரச் சுண்ணத்தைப் பிண்டமென்றும் வழலையென்றும் குருவென்றும் சித்தர்கள் மறைத்தார்கள்

போக்கான சுண்ணத்திற் கிதுவே யாதி
போகோடே யிதைவைத்துத் துரிசு நீறத்
தாக்கான நீறுபண்ணி ரசத்தைக் கட்டு
தடையறவே குளிகைக்கு இதுவே யாதி
வாக்கான சகலமுந்தான் இதுவே போகம்
வடிவான பிண்டமென்றும் வழலை யென்றும்

தாக்கான மூதண்ட குருவு மென்றும்
சாடையாய்ச் சொன்னார்கள் சித்தர் தாமே (386)

## கற்சுண்ணம், அதை நீரிற் கதைத்த பின் அதில் விளைந்த சுண்ணம், கல்லுப்பு இம்மூன்றும் முப்பு

சித்தர்தாம் ஒன்றுசொன்னார் மறைப்ப தாகச்
சிறப்பாக மறைப்பெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
பத்தர்தான் சிவனுக்கு ஒப்பச் சொன்னேன்
பதிவான முப்பூவின் மார்க்கங் கேளு
வித்தகர்தான் சொன்னதிது *கல்லுச் சுண்ணம்
விருப்பமாய்க் ** கல்லுக்குள் விளைந்த சுண்ணம்
சித்திரத்தை யென்னசொல்வேன் கல்லுப்புத் தான்
சிறப்பாக இம்மூன்று முப்பு வாச்சே (387)

## மூத்திரநீரில் மேற்படி மூன்றுப்பும் சேர்ந்தால் வழலை

முப்பூவாம் சமுத்திரத்தி னுப்புச் சேர்ந்து
மடிவான தொகையாச்சு வழலை யாச்சு
தப்பிதமாய்ச் சொன்னார்கள் சித்தர் தாமும்
தாட்டிகமாய் *முடிவதனிற் பிரித்துச் சொன்னேன்
அப்பவே இப்படிக்கு வைத்தால்நீலம்
அடைவாக நீறுமது வங்கம் நீறும்
கப்பலைப்போல் ஓட்டலாம் வாத மாடும்
கருணைபெறச் சித்தியாம் கண்டு பாரே (388)

* கடைசியிலே விரித்துச் சொன்னேன் - பா.வே.

## சித்தர்கள் சவுக்காரம் செய்யச் சொல்லிய புரட்டு

கண்டுபார் சித்தரெல்லாம் மறைத்துச் சொன்னார்
கருணைபெறச் சவுக்காரம் பாடினார்கள்
வண்டுபார் எண்ணெயைத்தான் விட்டு எண்ணெய்
வகையாக வாங்கவே சொன்னா ரையா
தொண்டுபார் எண்ணெயைத்தான் வாங்க மாட்டார்
துடியாக மல்லியிலை பரப்பி வாங்கித்
துண்டுபார் பரிதவித்து நிற்பார் ஐயோ
துடித்துமே பொருள்தோற்றுப் போவார் தானே *(389)*

## அமுரி என்பது சமுத்திர நீர்

தானேதான் **அமுரியென்று மூத்திரத்தை விட்டுத்
தாட்டிகமாய்ச் சொன்னார்கள் பெரியோர் தாமும்
கானேதான் பொய்பேசும் மாண்பர் தம்மைக்
கட்டியே படித்தாக்கால் பாவ மில்லை
வானேதான் *மூத்திரந்தான் சமுத்திர நீராம்
வகையாகப் பார்த்தாக்கால் தோணும் தோணும்
ஊனிட்டுச் செய்தாக்கால் பாவம் பாவம்
உற்றுணர்ந்து போகாமல் நூலைப் பாரே *(390)*

**அமுரியென்று சமுத்திரத்தை விட்டு - பா.வே.
*சமுத்திரந்தான் சமுத்திர நீராம் - பா.வே.

நூல் பார்த்த வாதிக்குச் சுண்ணம் தோணும்
நூலில்லா வாதிக்குப் பிண்டம் தோணும்
ஆல்காத்த கிளிக்குப்பழச் சுவைகள் தோன்றும்
அடுத்துநின்றால் சவுக்காரச் சுண்ண மாகும்

வால்காத்தால் என்னஅது தொகைக்குள் ளாகும்
வடிவெல்லாஞ் சவுக்காரச் சுண்ணம் பாரு
பால்பார்த்தால் போலவே நிறங்கள் தோணும்
பகரரிது சவுக்காரச் சுண்ண மாமே (391)

## சவுக்காரச் சுண்ணமானால் வங்கம் சுண்ணமாகும். அதனால் துரிசு சுண்ணமாகும்

சுண்ணமாம் சவுக்காரம் இந்த நூலில்
துடியாகச் செய்தாக்கால் வங்கம் நீறும்
சுன்னமாம் கோல்போலே வங்கம் நீறும்
கருணையாய்ச் செய்தாக்கால் துரிசு நீறும்
என்னமோ வென்றுதான் இருந்தி டாதே
எனையாண்ட தேரருமே சொன்ன சொல்லை
வின்னமா நினையாதே விரும்பிப் பாரு
வித்தகமாய்ப் பொருளாகும் விரும்பிப் பாரே (392)

## உலகர் பொய் சொன்னால் மெய் என்பார்கள். அது போலவே மெய்சொன்னால் பொய் என்பார்கள்

விரும்பிப்பார் பொய்சொன்னால் மெய்யி தென்பர்
விருப்பமாம் மெய்சொன்னால் பொய்யி தென்பர்
அரும்புபோல் இருந்தாக்கால் விரியும் போது
அடர்ந்துமே வாசனைதான் மிகவு முண்டாம்
துரும்புதான் தூணான வா று போலத்
துடியாகப் பார்த்தாக்கால் எல்லாம் சித்தி
வரும்படிக்குச் செய்தாக்கால் எல்லா மாகும்
வடி வான பொருளெல்லாம் வருகும் தானே (393)

## *379 – 393 உரை*

பூநீறு விளையும் பூமியில் பதினாறு முழத்தின் கீழிருக்கும் கல்லைத் தோண்டி எடுத்து வந்து சுண்ணாம்புக் காளவாயில் வைத்துச் சுட்டு எடுத்து அமுரி கல்லுக்கு இரு மடங்கு ஊற்றிப் பார்க்க நீறிவிடும். ஒரு மண்டலம் மூடி வை. உப்பு பூக்கும். அதில் நாலுபடி எடுத்துக் கல்லுப்பு ஒருபடி சேர்த்து அரைத்து வி.த.கா. ஐந்து சுண்ணக் குகைக்குள் வைத்துப் புடமிடு. எடுத்து நாலிலொன்று வீரம் சேர்த்து அரைத்து வி.த.கா. ஐந்து சுண்ணத்தினுள் வைத்துப் புடமிடு. புடந்தோறும் நாலிலொன்று வீரம் சேர்த்து அரைத்து ஐந்து முறை புடமிடு. சவுக்காரச் சுண்ணமாகும். உப்பெல்லாம் சரக்கெல்லாம் நீறும். வாய்நீர் சேர்த்துத் துரிசிற்கு அப்பிப் புடமிடத் துரிசு நீறும். இரசம் கட்டும். இதனைப் பிண்டமென்றும் வழலை என்றும் மூதண்டக் கரு என்றும் மறைத்தனர். கற்சுண்ணமும் அதனை நீறிற் கரைத்து வைத்த பின்பு விளைந்த சுண்ணம் கல்லுப்பு இம் மூன்றும் முப்புவாகும். இதனொடு கடலுப்புச் சேர்த்து வழலையாச்சு. இதனால் துரிசும் வங்கமும் நீறும். அமுரி என்பது கடல் நீர். அதனை மூத்திர நீர் என்று மாற்றியுரைத்தார். பொய்யரைக் கட்டி வைத்தடித்தாலும் குற்றமில்லை.

*யூகி முனிவர் கும்மி. மேற்கோள் காண். (16-16)*

*பத்து எட்டுமுழத் துள்ளிருக்கும்நல்ல பாராங்கல்லை எடுத்துவந்து*
*சுத்திமரக் கரிதான் போட்டுக்கல்லைச் சுருக்காய்ஊதி எடுத்திடவே*

*நாலுபடிநீறு சட்டி தனிற்போட்டு நன்னயமான திராவகமும்*
*காலால் படியெட்டு தானிட்டு வைத்துமே காரணமாய் மண்டந்தனிலே*

மேலாக வேயுப்பு பூக்குமதையெடு மேதினியில்ரச வாதிகளே
சீலைம தாக எடுத்திடு முப்பதைத் தினமும் ரவியில்வை வாதிகளே

என்பன காண்க. இந்த உப்பும் ரசவுப்பும் சேர்த்துக் குருவாக்கும் முறை கூறுகின்றார்.

### முயற்சி செய்தால் தான் வரும் இல்லாவிடில் வராது

வருகுதென்று ரசவாதம் யோக மார்க்கம்
வருந்தினால் வந்துவிடும் வருந்தா தாலே
உருகுதென்று கரிபோடா விட்டால் மைந்தா
உருகுமோ பாருநீ யுண்மை யாகும்
பருகுதென்று மனம்வந்தால் எல்லா மாகும்
பாஷாண்டி யாயலைய வேண்டா மப்பா
கருகுதென்று கொக்குப்போல் மடையி லேறக்
கனிவான மச்சந்தான் பிடிக்கும் பாரே (394)

### படித்துக் கொண்டேயிருந்தால் எல்லாம் வந்துவிடும்

பிடிக்கவே சவுக்காரச் சுண்ணம் பாரு
பிரட்டுருட்டுச் செய்யாதே பின்பு கேளு
கடிக்கவே பல்பாயும் கணக்குப் போல
கருணைவைத்துப் பார்த்தாக்கால் எல்லாம் சித்தி
தடிக்கவே சொன்னாக்கால் என்ன லாபம்
தனித்திருந்து பார்த்தாக்கால் தோன்றும் தோன்றும்
படித்தாக்கால் வந்துவிடும் புத்தி மான்கள்
பலதாலும் படித்தாக்கால் வித்தை யாமே (395)

## மாற்று அறிவினால் கண்டுபிடித்தல் வேண்டும்

வித்தையாம் வாதமெல்லாம் கருத்தி லாகும்
விடுபட்ட வாதிகளே என்ன சொல்வேன்
புத்தியாய் இருந்தாலே வாத மாகும்
புரட்டுகள்தான் சொன்னாக்கால் என்னலாபம்
சத்தியே திரிந்தாலே கழுதை யாகும்
கடைகெட்டுத் திரியாதே வாதம் பாரு
எத்தினா லொன்றுமில்லை செம்பைப் பாரு
எளியனா யிருந்தாக்கால் அயத்தைப் பாரு *(396)*

## உப்பைவிட்டால் கட்டில்லை சுண்ணமில்லை

பாருமே கல்லுப்புச் சவுக்கா ரத்தைப்
பாடுகின்றேன் உலகத்தில் பண்புள்ளோர்க்கு
காருமே யிதைக்கட்டில் எல்லா மாகும்
கருணைபெறத் தெறிப்படங்கப் பாடா ணங்கள்
தூருமே கட்டுமது சுண்ண மாகும்
தொட்டதெல்லாம் பழுக்குமப்பா சுருக்கில் எல்லாம்
வாருமே யுப்பைவிட்டால் சுண்ணம்போக
வகையான கட்டில்லை மருவிப் பாரே *(397)*

## கல்லுப்புச் சவுக்காரம்

மருவவே கல்லுப்பு படிதான் நாலு
மயங்காமல் கடல்தண்ணீர் இருபதாகும்
அருவவே படியளந்து அதிலே போட்டு
அளவான கடல்நுரைதான் சுண்ண மொன்று
திருவவே படியளந்து அதிலே போட்டுத்
திறமாக அடுப்பில்வைத்துக் கொதித்த பின்பு

துருவவே வடிகட்டிக் கடச கற்றித்

துடியாகக் காய்ச்சியே துழாவிக் கொள்ளே (398)

## பாஷாணங் கட்டப் பாத்திரம்

கொள்ளவே தந்தம்போல் நிறமு மாகும்

கூறான தெளிப்படங்கும் வறுத்துப் போடு

துள்ளவே சட்டியினில் நிறைய முத்தித்

துடியாக நடுவினிலே குழியப் பண்ணி

கள்ளமாய் அடுப்பில்வைத் தெரிக்கத் தானும்

கடிதாக இறுதியது இருக்கும் பாரே

வள்ளமாய்ப் பாஷாணக் கட்டு வந்த

வகையான இடமெல்லாம் இதிலே வையே (399)

## பாடாணங் கட்டும் முறை

வைத்துமே எரியிடவே யுயர வேறி

வகையாகப் பதங்கமாய் இருக்கும் பாரு

கத்துமே பதங்கத்தை வழித்தரைத்துக்

கனமான வில்லைகட்டி யதிலே வைத்துப்

பைத்துமே எரியிடவே யடியில் நிற்கும்

பதிலாக நெருப்புக்குச் செயிக்கும் பாரு

தெத்திடவே ரசங்கட்டச் செம்பு தானும்

திரமாகப் பழுக்குமடா திண்ணந் தானே (400)

இருபது படி கடல்நீரில் கல்லுப்பு நாலு படியும் கடல் நுரைச் சுண்ணம் ஒருபடியும் போட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டிக் காய்ச்சத் தந்தம் போலாகும் தெறிப்படங்கும். வறுத்துப் போட்டு எரிக்க இறுகும். பாடாணம் கட்ட வேண்டிய

இடத்திலெல்லாம் இதனுள் வைத்து எரிக்கப் பதங்கம் ஏறும். வழித்து அரைத்து வி.த.கா. எரியிட அடியில் நிற்கும். நெருப்புக்கு ஓடாது. ரசம் கட்டும். செம்பு பழுக்கும்.

## வெள்ளி வித்தை

திண்ணமாய்ப் போகாமல் வெள்ளி மார்க்கம்
திறமாகச் சொல்லுகிறேன் திறம்பெற் றோர்க்கே
நண்ணயமாய் அண்டோடு பலமும் பத்து
நலமாக வெண்கருவால் அரைத்து வில்லை
பண்ணவே ரவிதனிலே காய வைத்துப்
பதிவாகக் கரியில்வைத் தூத நீறும்
கண்ணவே திரும்பவுமே வெண்கருவால் ஆட்டிக்
கனக்கவே கரியில்வைத் தூதி டாயே (401)

## அண்டச் சுண்ணம்

ஊதிடவே ஐந்துமுறை வெண்கருவி னாலே
உற்றுமே யரைத்துவைத்துக் கரியி லூது
காதிடவெண் கருச் சேர்த்துக் கருவா லாட்டிக்
கனிவாக வில்லைரவி காய வைத்துப்
பாதிடவே கடுஞ்சுண்ணம் அண்டச் சுண்ணம்
பதியவே அந்தளடை *வெள்ளை தானும்
நாதிடவே யிருசட்டி உராஞ்சிச் சேர்த்து
நடுவினிலே வில்லைவைத்து மேலே மூடே (402)

மூன்றாவது அடி இரண்டாவதாகவும் இரண்டாவது அடி மூன்றாவதாகவும் பாட வேற்றுமை உளது. அதுவே பொருட் பொருத்தம்) ஊத்திடவே என நான்கு எதுகையும் ஒற்றமைந்த பாடமும் உண்டு. *வெள்ளை - வெள்ளிப் பாடாணம்.

மூடியே எழுசீலை மண்ணுஞ் செய்து
முக்கியமாய் அடுப்பேற்றித் தீயை மூட்டு
காடியே நிழல்போலே யிரண்டு சாமம்
கருத்தாக எரித்திடவே யுயர வேறும்
வாடியே திரியாதே சட்டி யைத்தான்
வலமாக மல்லாத்தி மயிர்க்குச் சாலே
நாடியே வழித்திட்டுச் சொல்லக் கேளு
நலமாக அரைப்பதற்குப் பாகங் கேளே (403)

## முன் கல்லுப்புச் சவுக்காரம் என்று சொல்லிய உப்பில் பாஷாண வில்லையை வைத்து எரிக்கவும்

கேளுமே வெண்கருவும் எருக்கம் பாலும்
கெடியாக எடைக்கெடைதான் சேர்த்து மூன்று
ஆளுமே நாள்வைக்க முறிந்து போகும்
அடைவாக எடுத்துமே பதங்கந் தன்னில்
வாளுமே விட்டரைத்து வில்லை செய்து
வடிவாகக் கல்லுப்புச் சட்டி யிட்டு
நாளுமே உப்புநடுக் குழியில் வைத்து
நலமாக மேல்மூடி எரித்துக் கொள்ளே (404)

## மேலேறும் பதங்கத்தை மடக்கி எரிக்கவும்

எரித்திடவே யுயரவே ஏறிற் றானால்
இதமாக வழித்துமே யரைத்து வில்லை
பரித்திடவே ரவிதனிலே காய வைத்துப்
பதிவாக வுப்புநடுத் தனிலே வைத்து

நரித்திடவே மூடியே ரெண்டு சாமம்
நலமாக எரிக்கவே அடியில் நிற்கும்
வரித்திடவே எடுத்துப்பார் சுண்ண மாகும்
வடிவாக வெள்ளீயம் வண்மை கேளே (405)

## வெள்வங்க சுத்தி

வண்மையாய் வெள்ளீயம் பலமும் பத்து
வகையான மூசைதனில் வைத்து ருக்கி
உண்மையாய் முன்னண்டச் சுண்ணம் போடு
உற்றுமே யுருகையிலே போட்டுக் கிண்டு
நண்மையாய் வெட்டையாய் இருக்கும் பாரு
நலமாக மேலூத்தில் சாரம் போட்டு
இண்மையாய் ஊதிடவே சுத்தி யாச்சு
இன்பமாய் எடுத்துப்பார் வெளுமை யாமே (406)

## ரசித வேதை

வெளுமையாம் வெள்ளீயம் உருக்கிக் கொண்டு
விருப்பமாய் நூற்றிற்கு ஒன் று தானும்
நளுமையாம் பாடாணச் சுண்ணம் போடு
நாடியே வெள்ளீயம் நீரை வாங்கும்
அளுமையாம் வெள்ளியது பத்து மாற்று
அன்பாக வங்கத்துக் கோடா தப்பா
உளுமையாய் ரசிதமது வேலைக் காகும்
உண்மையாய்ச் சத்தியமாம் உற்றுப் பாரே (407)

## வாதிகள் பேதமை

உத்துப்பார் ரசவாதி வெள்ளி செய்ய
உருவாக வெள்ளைப்பா ஷாணங் கட்ட

சித்துப்பார் கட்டியாய் வாங்கி வந்து
சிறப்பான சுண்ணத்தில் வைத்துக் கொண்டு
முத்தியாய்ப் பனங்கள்ளை விட்டு நீற்றி
முடிவாகக் கசடகற்றிச் சுருக்குப் போட்டு
புத்தியில் லாமல்தான் அலைந்தார் பாவி
புதுமையாய்க் கட்டுவகை தெரியார் பாரே (408)

பாருமே செம்புதனில் கொடுக்க வெள்ளை
பதிவாகக் கண்டுமே மனமகிழ்ந்து
காருமே வங்கத்தைக் கொடுத்து ஊதக்
காணாமல் ஓடிவிடும் கள்ளமென்பார்
வாருவார் பேராசைப் பட்டுக் கொண்டு
வழியில்லை சாத்திரமும் மறைத்த தென்பார்
ஆருவார் தேருவார் தெரியா மல்தான்
அடைவுகெட்டுத் திரியாமல் பாகம் பாரே (409)

## வெள்ளியிப்படிச் செய்தால் ஆகும்

பாகமாய்ப் பாஷாணப் பதங்கம் செய்து
பரிவான அண்டத்தை யலர நீற்று
ஆகமாய் அதினோடே சேர்த்த ரைத்து
அன்பாகக் கல்லுப்பில் வைத்தெ ரித்து
வேகமாய்க் கட்டியே சுண்ணமாகும்
விருப்பமாய் வெள்ளீயம் சுத்தி செய்து
தாகமாய் அதிற்கொடுக்க வெள்ளி யாகும்
சரிகைபோல் வெள்ளியது இருக்கும் பாரே (410)

இருக்கவே வெள்ளிவித்தை யின்ப மாகும்
இனிதான சாத்திரத்தில் சொன்னா ரில்லை

பருக்கவே யூகியெனப் பேர்ப டைத்துப்
பதிவாகப் பதினெட்டுச் சித்த ரோடே
நெருக்கமாய் நெருங்கியே பாகம் பார்த்து
நிலைக்கவே இந்தவா யிரத்தில் சொன்னேன்
வருக்கமாய்ப் பாகமாய்ச் செய்து தேறு
வகையான கல்லுப்பை வளமாய்ச் செய்யே (411)

## வழிதப்பிச் செய்தால் வெள்ளி கரியாய்ப் போகும் உப்பை வளமாகச் செய்தால் வெள்ளி யாகும்

வளமாகச் செய்திட்டால் வெள்ளி யாகும்
வழிதப்பில் ஒன்றுமில்லை வளமாய்ப் பாரு
களமாகச் செய்தாக்கால் கரியாய்ப் போகும்
கடைகெட்ட வாதிகளே கட்டும் மார்க்கம்
துளமாக இப்படித்தான் செய்தாற் கட்டும்
தொகைகெட்டால் வகைகெட்டுப் போகும் பாரு
உளமாகச் செய்திட்டு வெள்ளி பாரு
உய்த்துணர்ந்து பார்த்தாக்கால் எல்லா மாமே (412)

## இந்நூல் உலகத்திற்குக் கொடுத்தது

ஆகவே சிவன்சொல்லத் தேவி கேட்டு
அன்பாக அடியார்க்குப் பாகங் காட்டி
யோகமாம் மலை முழைஞ்சில் இருந்து கொண்டு
ஓர்ந்துமே தேரருமே தானி ருந்து
பாபமாய்ச் செய்துமே சோதித் துத்தான்
பத்தியாய் இருந்துமே சிறிது காலம்
நாகமாம் குளிகைகட்டிப் பொதிகை வந்து
நாடியே யிருந்துமே நல்கினோமே (413)

## இந்நூலைச் சித்தர் மறைக்கச் சொல்லியும் கேளாமல் உலகத்திற் கொடுத்தது

நல்கினோம் இக்காண்டம் ஆயி ரத்தை
நலமாகப் பாகமாய்ச் சொன்னேன் பாரு
மல்கினோம் சித்தர்தான் கண்டு பேச
மருவான சித்தர்தான் சொன்னார் பாரு
வல்கினோம் இந்தஆ யிரத்தைத் தானும்
வடிவாக மறையென்று சொன்னார் பாரு
அல்கினோம் மறைத்தாக்கால் பாவ மென்று
அடைவாக வுலகத்தி லீந்து விட்டோம் (414)

### 401 - 414 உரை

முட்டைத்தோட்டை வெண்கருவால் ஒவ்வொரு முறையும் தனித் தனியரைத்து ஐந்து முறை யூதுக. சுண்ணமாகும். அந்த எடை வெள்ளைப் பாடாணம் சேர்த்து வெண் கருவிட்டாட்டி வி.த.கா. வில்லையைச் சட்டி நடுவைத்து மேற்சட்டி மூடி ஏழு சீலை மண்டும் செய்து 2 யாமம் எரி. எடு. வழி. வெண்கருவும் எருக்கம் பாலும் சேர்த்து மூன்றுநாள் வைத்திருந்து பதங்கத்தில் ஊற்றியரைத்து எரி. மீண்டும் ஒருமுறை அங்ஙனம் எரி. சுண்ணமாகும். பத்துப் பலம் வெள் வங்கம் உருகுமுகத்தில் அண்டச் சுண்ணம் போட்டுக் கிண்டிச் சாரமிட அது தூயதாகும். வெள்ளீயத்தையுருக்கு. உருகுமுகத்தில் பாடாணச் சுண்ணம் நூற்றுக்கு ஒன்று கொடு. வெள்ளியாகும். 408-414 அறிவுரை.

## வீரரச செந்தூரம் செப்பாகம்

ஈயவே வீரரச செந்தூரத்தை
என்தாயார் எனக்குத்தான் சொன்ன சொல்லை

வாயவே சொல்லுகிறேன் பாக மாக
வடிவாக இப்புவியில் மாந்தர்க் கெல்லாம்
தாயவே கைபாக விவர மாகத்
தண்மையாய் உலகத்தில் வேதை யாக
ஆயவே சொல்லுகின்றேன் வீரத் தைத்தான்
அன்பாக வீரத்தை வைத்தி டாயே (415)

## வீரத்தில் ரசமெடுக்க

வைத்திடவே வீரமது பலமோ பத்து
வகையாகத் தண்டவா ளத்தைத் தானும்
உய்த்திடவே யுடைத்துமே யொன்று போடு
உண்மையாய் இதுவிரண்டும் அரைக்கச் சாமம்
மெய்த்திடவே இரசமது கக்கும் பாரு
மேன்மையாய்ப் பாதரச மெடுத்துக் கொண்டு
மெய்த்திடவே முன்கட்டி யுப்பில் வைத்து
மிதமாக எரித்திடவே கடிகை தானே (416)

## வீரரச பற்பம்

கடிகைதான் நூறுக்குப் பாதி தானும்
கனமாக எரித்திடவே கமலத் தீயால்
வடிவாக எரித்திடவே யுயர வேறி
வகையாகத் தந்தம்போல் இருக்கும் பாரு
துடியாகப் பிரித்திட்டு மயிர்க்குச் சாவே
துயரமாய்ச் சுரண்டியே சொல்லக் கேளு
படியாகத் திராவகத்தை வைக்கக் கேளு
பதமாக வெடியுப்பு பத்து மாமே (417)

## வெடியுப்புத் திராவகம்

பத்துமே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
பதிவாகச் சீனமது இருபத் தைந்து
உத்துமே இவைரண்டும் பொடித்துத் தானே
உறுதியாய்க் கடத்திலரை வாசி யிட்டு
நத்தியே வாலையென்ற சட்டி மூடி
நலமான முன்னீரை வீசிப் போடு
சித்துமே சிவந்தசலம் வருகும் பாரு
சிறப்பாக வதைவாங்கிச் சொல்லக் கேளே *(418)*

## திராவகத்துக்குப் பேர்

சொல்லவே இந்நீர்க்குப் பேரே தென்னில்
சிறப்பாக *அண்டநீர் வாலை நீராம்
நல்லிடவே வாய்நீராம் குமரி நீராம்
நலமான ஆகாச கங்கை நீராம்
வல்லிடவே இந்நீரை வாங்கிக் கொண்டு
வளமான வீரரசப் பற்பத் திட்டு
எல்லிடவே மிதப்பாக விட்டுக் கேளு
இதமாகப் பீங்கானில் வைத்துக் கொள்ளே *(419)*

* பிண்டநீர் (பா.வே.)

## வீர ரச பற்பச் செந்தூரம்

வைத்துமே யுமிதனிலே வறுத்துப் போடு
வாகாக முன்சட்டி யுப்பி லிட்டு

நைத்துமே சட்டிக்கொண்டு மேலே மூடி
நலமான கவசமது ஏழுஞ் செய்து
வைத்துமே சாமம்நால் எரிக்க வேதான்
வளமாக அடியில்நிற்கும் முருக்கம் பூப்போல்
கைத்துமே இதையெடுத்துப் பத்தில் ஒன்று
கனமான தங்கத்தைச் சேர்க்கக் கேளே (420)

## மேற்படி செந்தூரத்தில் தங்கம் நாகம் சேர்ந்த செந்தூரம்

தங்கத்தைத் தகடடித்துப் பழச்சாறு தன்னில்
தடையறவே கற்காவி தன்னில் தோய்த்து
நங்கமாய்க் கரியோட்டில் பழுக்கக் காய்ச்சி
நலமாக ஏழுதரம் காய்ச்சித் தோய்நீ
துங்கமாம் நாகமது பலமும் ஒன்று
துடியான இலுப்பைநெய் உருக்கிச் சாய்நீ
அங்கமாம் இருபதுக் கொன்று தாக்க
அடவாகக் கட்டுமது நாகந் தானே (421)

## நாகம் தங்கம் வீர செந்தூரம் சேர்த்து முன் கல்லுப்புச் சவுக்காரம் செய்து சட்டியிலிட்டுப் பாஷாணம் எரித்ததுபோல் எரிக்க

நாகமாம் கட்டியதோர் நாகந் தன்னை
நலமாகத் தங்கமது இடையே ஈயப்
பாகமாய் முழுங்கியே வெள்ளை யாகும்
பதிவாக வீரசெந் தூரம் பத்து
யோகமாய்ச் சேர்த்தரைநீ திராவ கத்தால்
ஒக்கவே சேர்த்துமே அரைவ றுத்து

வாகமாய் முன்சட்டி யுப்புத் தன்னில்
வகையாக எரித்திடச்செந் தூர மாமே (422)

## வீரரச செந்தூ ரத்தின் பெருமை சொல்ல யாராலும் முடியாது

ஆமேதான் செந்தூர மகிமை சொல்ல
அரனாலும் முடியாது ரிஷிகள் தேவர்
வாமேதான் பஞ்சகர்த்தாள் இவர்கள் எல்லாம்
வளமாக வாயினால் சொல்லப் போகா
காமேதான் சித்தர்பதி னெட்டுப் பேரும்
கருணைபெறச் சொல்லவே போதா தப்பா
நாமேதான் சொல்லிவிட்டேன் உலகத் தோர்க்கு
நலம்பெற்றோர் செய்துமே கொள்ளு வாரே (423)

## வீரரசச் செந்தூர வேதை

கொள்ளுவது செம்புசேர் நூறு ருக்கிக்
குணமாக வொருசேரு கூடப் போடே
துள்ளுவது மாற்றென்ன பத்து மாகும்
துடியாகச் சிவன்பேரில் ஆணை யாகும்
தள்ளுவது பெண்ணாசை தள்ளிப் போடு
தடையற்ற சாராயம் கள்ளைத் தள்ளு
விள்ளுவது நூல் வழியே பார்த்துத் தேறு
விடுபட்ட தங்கமென்ன வெளிதி லாமோ (424)

## இந்நூலைப் பார்த்தால் சிறுபிள்ளையும் தங்கம் செய்யும்

எளிதாகச் சிறுபிள்ளை தங்க மார்க்கம்
இதமாகச் செய்வார்கள் இந்த மார்க்கம்

தளிசாகப் பார்த்தாக்கால் செய்ய லாகும்
தடையில்லை நந்திமேல் ஆணை யாகும்
களிசாக வீரரச செந்தூ ரத்தைக்
கருத்துவைத்துப் பணவெடைதான் பாலிற் கொள்ளு
நளிசாக பாலைப்போல் இருக்க லாகும்
நாடியே செவ்வல்லி நிறம தாமே (425)

நிறமாகும் முருக்கம்பூ நிறம தாகும்
நினைவாக வீரரச செந்தூ ரத்தில்
அறமாகும் நோயெல்லாம் தவிடுபொடி யாகும்
ஆதித்தன் உள்ளளவும் உண்டுடுக்க லாகும்
தறமாகும் வேதையாம் காயசித்தி யாகும்
தாட்டிகமாய்ப் பொன்னொளிவாம் தடையோ இல்லை
வறமாகும் பொருளாகும் வடிவு மாகும்
மகததான வீரரச செந்தூரந் தானே (426)

## வாதிகள் அறிவின்மை

தானேதான் சிறிதுபேர் வாதி மார்கள்
தாக்கான வீரத்தைப் பலமும் வாங்கி
வானேதான் இலைதழையால் சுருக்குப் போட்டு
வகையாகச் சுண்ணத்தில் சுருக்குப் போட்டு
கானேதான் செந்தூர மாகு மென்று
கருத்தாகப் புடத்திலே வைக்க வோடிப்
பானேதான் கெட்டிடவே யேங்கி யேங்கிப்
பதிவாக நின்றலைந்து மாளு வாரே (427)

## வீர செந்தூரப் பெருமை

மாளாமல் வீரத்தை நிரம்ப வைத்து
வளமாகச் செந்தூரம் செய்தால் வேதை

தூளாகும் நோவெல்லாம் தவிடே யாகும்
துப்புரவாய்க் காயசித்தி கணத்தி லாகும்
ஆளாக வீரசெந் தூரம் பாரு
அடைவாகச் சொன்னமுறை போலே பாரு
நாளாக நாட்சென்று வைத்துத் தேற
நலமான செந்தூரம் ஆகும் பாரே (428)

## 415 – 428 – உரை

வீரம் பத்துப் பலம் அதில் ஒரு பலம் தண்டவாளத்தை யுடைத்துப் போட்டு ஒரு சாமம் அரைக்க வீரத்திலுள்ள இரசம் வெளியாகும். அந்த ரசத்தை எடுத்து முன்கூறிய வண்ணம் சட்டியில் உப்புக்குள் வைத்து மெல்ல எரித்துப் பின் முளரித் தீ ஐம்பது நாழிகை எரிக்க உயர ஏறிக் கவிழ் சட்டியின் உட்புறம் தந்தம்போல் இருக்கும். மயிர்க்குச்சியினால் சுரண்டி எடுத்து வை. பின்பு வெடியுப்புத் திராவகம் இறக்கு. அதற்குப் பிண்ட நீர் வாலை நீர் வாய் நீர் குமரி நீர் ஆகாச கெங்கை என்றெல்லாம் பெயருண்டு. வீர ரசத்தைப் பீங்கானிலிட்டு அதன்மேல் திராவகம் விட்டுப் பூக்கச் செய்து உரி நெருப்பில் வைத்து வறுத்து எடுத்து முன்சட்டியுப்புக்குள் வைத்துக் கவிழ் சட்டி மூடி 7 சீ.ம.செ. நாலு சாமம் எரிக்க அடியில் முருக்கம் பூப்போல் இருக்கும். தங்கத்தைத் தூயதாக்கி நாகத்தையும் தூயதாக்கு. நேர் எடை ஒன்றாய்ச் சேர்த்துப் பத்துப் பங்கு வீரரசம் சேர்த்துத் திராவகம் விட்டு அரைத்து முன்சட்டி உப்பில் வைத்து ஒழுங்காக எரித்துப் பார்க்க முருக்கம் பூப்போலிருக்கும். இதன் பெருமை ஈசனாலும் சொல்ல முடியாது. செய்து கொள். நூறு சேர் செம்பு உருக்கிச் செந்தூரம் ஒரு சேர் போடு. பத்து மாற்று. நந்தி மேல் ஆணை. பணவெடை பாலில் உண்ணு. வாலை வயதாகும். உடல் செவ்வல்லி நிறமாகும். முருக்கம்

பூ நிறமேயாகும். ஞாயிறு உள்ளளவும் உண்டுடுத்து வாழலாம். மற்றவை அறிவுரை.

### வாதிகள் பற்பல செய்கையாற் கெடுவது

பாருமே சிறிதுபேர் வாதந் தன்னைப்
பதைபதைத்துக் கெட்டுப்போய் யாச்சு தென்பர்
சேருமே சிறிதுபேர் வாதி மார்கள்
செயலான தழைபிடுங்கிப் பொய்யிதென்பர்
காருமே சிறிதுபேர் வாதி மார்கள்
கனிவாக வழலையென்பார் பிண்டந் தன்னை
வாருமே சிறிதுபேர் வாதி மார்கள்
வகையறியா மல்தானும் கெட்டா ரையோ (429)

### உறுதியாய் வீரரசத்தைச் செந்தூரம் செய்ய

கெட்டுமே போகாமல் வீரம் பாரு
கெடியாகச் செந்தூரம் செய்து தின்னு
கட்டுமே மேனியெல்லாம் தங்கம் போலாம்
கருத்துவைத்தால் வேதையாம் கண்டு தேறு
நட்டுமே தூடணித்துத் தள்ள வேண்டாம்
நலமான உறுதியைத்தான் கண்டு தேறு
முட்டுமே குனிந்துநீ நின்றாய் புத்தி
முடிவாக நினைவுவரும் நினைவு தானே (430)

### வீர செந்தூரத்திற்குப் பத்தியம்

நினைவாக வீரரச செந்தூ ரத்தை
நினைவாகப் பணவெடைதான் தின்றாற் கேளு

கனவாகும் புளியாகா கடுகு மாகா
கனமாக எருமைமோர் பெண்ணா காது
நனவாக மண்டலந்தான் கொண்டாய் ஆனால்
நலியவே இருக்காமல் செந்தூர ரத்தின்
தனதாக வுணக் காயசித்தி யாகும்
தடையற்றுச் செய்திட்டே வுண்டு தேறே *(431)*

## இலிங்கச் செந்தூரம் செய்பாகம்

தேறவே இலிங்கச்செந் தூரம் சொல்வேன்
திறமாக இலிங்கமது பலகை யாக
ஆறவே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
அப்பனே முன்சொன்ன திராவ கத்தால்
வாறவே விட்டுமே யரைத்துச் சாமம்
வகையாக இரண்டுமே யரைத்துப் பீங்கான்
நாறவே கரியுமியில் வறுத்துப் போட்டு
நாரியா மிருதோண்டி வாங்கிக் கொள்ளே *(432)*

கொள்ளவே யிருதோண்டி உராய்ந்த சேரு
கொடிதாக அரைத்தலிங்க மதனுள் வைத்து
மெள்ளவே சீலைமண் ணேழு செய்து
விருப்பமாய் எரியிடவே நாலு சாமம்
துள்ளவே மேலேறிக் கரியாய் நிற்கும்
துடியாக விரலினால் தேய்க்கத் தேய்க்க
வள்ளலே ரசமதுதா னாகும் பாரு
வடிவாக ரசமதனை யெடுத்துக் கொள்ளே *(433)*

எடுத்துமே கால்வாசி கரியாய் நிற்கும்
இதமாக முன்போலே திராவ கத்தைப்

படுத்துமே விடுத்துத்தான் வறுத்துக் கொண்டு
பதையாமல் முன்போலே எரிக்க வேணும்
நடுத்துமே தோண்டியையமல் லாத்திப் பார்க்க
நலமான சூதமது கருப்பே யாகும்
படுத்துமே பின்னுமே விரலினாலே
பண்பாகத் தேய்த்திடவே ரசமுமாமே (434)

## கரியை எரிக்க எரிக்க ரசமாகும்

ரசமாகப் போகாதே போச்சு தென்றால்
நலமாகக் கரியதனை யெரித்தா யானால்
பிசகாமல் ரசமாகும் பேணிப் பாரு
*பின்னுமே யெரித்திடவே ரசமு மாகும்
நிசமாகச் சொல்லுகிறேன் ரசமெ டுக்க
நிலவரமாய் வாலைஎன்ற ரசமு மாகும்
கசகாமல் ரசமெல்லாம் எடுத்துக் கொண்டு
கைவிட்ட சூத்திரத்தைக் கருவாய்ப் பாரே (435)

* புத்தியாய்

## இலிங்ரச பற்பம்

பாரேநீ வன்னிரசம் தன்னைத் தானும்
பக்குவமாய் முன்சட்டி யுப்புத் தன்னில்
காரேநீ நடுவைத்து மேலே மூடிக்
கருத்தாக எழுசீலை மண்ணுஞ் செய்து
நாரேநீ கடிகையது நூறு தானே
நலமாக் எரித்திடவே பதங்க மேறும்
வாரேநீ மயிர்க்குச்சி யாற்சு ரண்டி
வகையாகச் செந்தூரப் புகைநீர் கேளே (436)

## இலிங்கரச பற்பச் செந்தூரம்

கேளுமே விட்டுமே நிரம்பத் தானும்
கெடியாக உமிநெருப்பில் வறுத்துப் போடு
நாளுமே முன்சட்டி யுப்பில் வைத்து
நலமாக மேல்மூடி எரித்தா யானால்
காளுமே கடிகையது நூறு சென்று
கருத்தாக எரித்திடவே யுயர ஏறி
பாளுமே செந்தூரம் ஆகும் பாரு
பதையாமல் எடுத்துமே சொல்லக் கேளே (437)

சொல்லவே யிப்படிக்கு ஏறு ஏற
சுப்பிரமாய்ச் சுரண்டியே யரைத்து வில்லை
நல்லவே எரித்திடவே யடியில் நிற்கும்
நலமான லிங்கசெந் தூரம் பாரு
வில்லவே ரவிசேரு நூறு வாங்கி
விருப்பமாய் ஒருசேர்தான் கொடுத்தாய் ஆனால்
கல்லவே மாற்றுத்தான் எட்டரையு மாகும்
கனமான சிவசொத்தால் கண்டு பாரே (438)

## கடல்நீரால் உப்பைக் காய்ச்ச எல்லாமாகும்

கண்டுதான் உப்பைத்தான் கடல்நீர் விட்டுக்
கனமாகக் காய்ச்சினால் பாஷாணங்கள்
பண்டுபார் உப்பதுவு மிருபத் தைந்து
பதிவாக இம்முறைபோற் செய்தா யானால்

துண்டுபார் கட்டாகும் வேதை யாகும்
துடிப்பாகச் சொன்னமுறை போலே பாரு
வண்டுபார் கன்னமாம் வழக்க தில்லை
வடிவாகப் பாகத்தை மருவி டாயே (439)

**ஒன்றுக்குச் சொல்லியது போலவே மற்றக் களங்குகள் செந்தூரம் சுண்ணங்களுக்குமாகும்**

மருவவே யொருகளங்கிற் சொன்ன பாகம்
மருவியே கோடிக்குங் குறித்துக் கொள்ளு
உருவவே யோரிடத்தில் செந்தூ ரங்கள்
உய்த்துமே கோடிக்குங் குறித்துக் கொள்ளு
திருவவே சுண்ணங்கள் சொன்ன மார்க்கம்
திடமாகக் கோடிக்குங் குறித்துக் கொள்ளு
வருகவே இப்படிக்கு ஒன்று செய்தால்
வகையாக எல்லாமும் குறித்துக் கொள்ளே (440)

**முன்சொன்ன கல்லுப்பு மிக வேகம் உடையது அதனைப் பாகமாகச் செய்தால் மாற்று ஆகும்**

கொள்ளவே முன்வைத்த கல்லுப் புத்தான்
கொடியதொரு வேகமாங் குறித்துக் கொள்ளு
நள்ளவே கைபாக மாகச் செய்தால்
நலமாக வேதையாம் நயப்பு மெத்த
துள்ளியே வெறும்பேச்சுப் பேசா தப்பா
துடிப்பாகச் சொன்னமுறை போலே பாரு
கள்ளியைப் போல் திரியாதே நூலைப் பாரு
கருத்துவைத்து இந்நூலைக் கருதிப் பாரே (441)

## இன்ன தின்னது இந்நூலிற் சொன்னேன்

கருதிப் பார் அயச்செம்பு கணக்குச் சொன்னேன்
கருத்துவைத்து உப்பினுட மார்க்கஞ் சொன்னேன்
நருதிப்பார் சவுக்காரச் சுண்ணஞ் சொன்னேன்
நலமாக வீரசெந் தூரஞ் சொன்னேன்
வருதிப்பார் இலிங்கசெந் தூரஞ் சொன்னேன்
வகையாகக் கட்டுவகை மார்க்கஞ் சொன்னேன்
பருதிப்பார் கடைசியிலே சொன்னே னெல்லாம்
பதிவாகப்-பார்த் தாக்கால் எல்லாம் ஆமே *(442)*

## ஆணவத்தை விட்டு எப்போதும் நூலைப் பார்

ஆமேதான் இந்நூலிற் சொன்ன வேதை
ஆதிதொடுத் தந்தமுநீ பார்த்துத் தேறு
காமேதான் பார்த்திடவே எல்லாம் தோணும்
கலக்கமாய் நின்றாக்கால் தோணாதப்பா
வேமேதான் திரியாமல்-காலத் தைத் தான்
விருதாவிற் போக்காமல் நூலைப் பாரு
நாமேதான் அணுவத்தைச் சொல்லா மற்றான்
நாடியே செந்தூ ரம் செய்து உண்ணே *(443)*

### *429 – 443 உரை*

பத்துப் பலம் இலிங்கத்தைத் திராவகம் விட்டு அரைத்து உமி நெருப்பில் வறுத்துச் செந்தூரத் தோண்டிக்குள் இட்டு 7 சீ.ம.செ. நாலு சாமம் எரி. மேலேறிக் கரியாய் நிற்கும். விரலினால்

தேய்த்துப் பார்க்க ரசமாகும். முன்போல் திராவகம் விட்டு வறுத்து எரி. ரசமாகும். ஆகாவிட்டால் மீண்டும் ஒருமுறை எரி. ரசமாகும். முன்சட்டி உப்புக்குள் வைத்து நூறு நாழிகை எரித்து எடுத்து மீண்டும் புகைநீர் விட்டரைத்து வறுத்து முன்போல் எரி. செந்தூரமாகும். செம்பு நூற்றுக்கு ஒன்று கொடு. எட்டரை உப்பைக் கடல்நீர் விட்டுக் காய்ச்சினால் உப்பு இருபத்தைந்தும் பாடாணங்களும் சுட்டவுதவும். ஆணவம் விட்டுச் செந்தூரம் செய்து உண்.

### பாகந் தப்பாமற் செய். வரிசை தப்பிற் பாகந் தப்பும்

உண்ணவே யுடலதுதான் கற்போ லாகும்
உகாந்தவரை யிருக்குமே தேகந் தானும்
கண்ணவே லோகசித்தி யாகும் பாரு
கனமாக மலைதனிலே வாசம் பண்ணு
பண்ணவே பாகங்கள் தப்பா மார்க்கம்
பதிவாகச் செய்துமே யுலகத் தோர்க்கு
வண்ணவே சொல்லிவிட்டேன் இந்த நூலை
வரிசைதப்பில் பாகமது தப்புந்தானே (444)

### ஒருமுறை தப்பிற்றானால் மூன்று முறையிற் சரியாகும்

ஒருமுறைதான் தப்பினால் பாகந் தன்னை
உண்மையாய் மூன்றுமுறை யுற்றுப் பாரு
வருகுமே பாகமெல்லாம் எளிதில் தானும்
மதம்பிடித்துத் திரியாமல் வேதை பாரு
கருவாளி யானாக்கால் கண்டு கொள்ளு
கலங்கியே வேதைதான் இல்லை என்று

திருவாகச் சொல்லாதே யுற்றுப் பாரு
திறமுடையோன் ஆனாக்கால் வாதம் பாரே (445)

## கல்லுப்பைக் கட்டினால் வாதமாகும்

வாதந்தான் எப்படிக்கு வருவ தப்பா
மகத்தான கல்லுப்பைக் கட்ட வேணும்
காதந்தான் வழிநடந்தால் தொலையு மப்பா
கடிதென்று நடவாமல் தொலையு மோதான்
நீதந்தான் நீதியாய் நடந்தாற் கேளு
நிலவரமாய் எல்லாரும் நம்பு வார்கள்
வேதந்தான் சொன்னதுதான் புத்தி மார்க்கம்
விருப்பமாய்ச் சித்தியெல்லாம் உண்டாம் பாரே (446)

## செம்பெல்லாம் இவ்வாயிரத்தில் சொல்லியிருக்கிறது

பாருமே இந்தவா யிரத்தைத் தானும்
பதிவான செம்பெல்லாம் சொல்லிப் போட்டேன்
காருமே கடையாக இன்ன மொன்று
கருணைபெறச் செம்பொன்று தேரர் சொன்ன
வாருமே பாகமாய்ச் செம்பு சொல்வேன்
வடிவான பாகமது அறிந்து கொள்ளு
ஆருமே சொல்லார்கள் என்ற னைப்போல்
அறிவாகப் பார்த்திடவே சித்தி யாமே (447)

## அயச் சத்துச் செம்பு

சித்தியாம் அயம்பத்து நிறுத்துக் கொண்டு
சிறப்பாக வெங்காரம் பலமும் பத்து

முத்தியாய் எலுமிச்சம் பழச்சாறு விட்டு
முகிவாக அரைத் தரைத்துப் புடத்தைப் போடு
பத்தியாய் ஐந்துமுறை புடத்தைப் போடு
பதிவாக வெங்காரம் பாதி சேர்த்து
நத்தியே அரைத்துஅரைத்துப் புடத்தைப் போடு
நலமாக எரித்திடவே கருப்பு மாமே (448)

கரு ' ராகப் போச்சுதென் றெண்ணி டாதே
கருத்தான கனகமப்பா வேதை யாகும்
இருப்பாக இருந்தல்லோ எடுத்து வைத்து
இன்பமாய்ச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு
வெருப்பாகப் போகாமல் கெந்தி தன்னால்
விருப்பமாய் ரவிதன்னைக் கரியு மாக்கி
நெருப்பாகப் பூச்சாற்றால் அரைத்து ருண்டை
நேராகச் செய்துமே காய வையே (449)

காயவே வைத்துமே யப்பாற் கேளு
கருணைபெறச் சத்தான அயத்தைத் தானும்
நாயவே யுண்டை-யெடை மேலே கட்டு
நலமாக அதின்பேரிற் சுண்ணங் கட்டு
வாயவே மண்கவச மதின்மேற் கட்டு
வடிவாகக் கசபுடமாய்ப் போட்டு வாங்கு
தாயவே கருப்பாக இருக்கும் பாரு
தனையெடுத்து வெங்காரம் பாதி சேரே (450)

சேர்த்துமே மூசையிட் டுருக்கிப் போட
செயமாக *மணிபோலே யுருகும் பாரு

பார்த்துமே மயங்காதே வெங்கா ரத்தைப்
பதிவாக அடிக்கடிக்குக் காரந் தாக்கு
நாத்தியே யூதியெடு பொன்போ லாகும்
நலமான செம்பதுதான் சுருக்கு மெத்த
காத்துமே நொறுக்குவெள்ளி பத்துக் கொன்று
கருத்தாகக் கொடுத்திடவே யேழு மாற்றே (451)

*களிம்பு போல்

மாற்றான பொன்னைத்தான் விற்று நீயும்
மதியோடே செந்தூரம் செய்து தின்னு
கூத்தாடி யாயிருந்து அலைய வேண்டாம்
குபேரனைப்போல் இருந்துமே வாழு வாழு
பூத்தாலே தாழம்பூ வாசனையு மாகும்
பூக்காட்டால் வாசனைதான் ஏது ஏது
காத்திருந்து செய்தாலே வாதம் ஆகும்
காக்காட்டால் வாதமது இல்லை தானே (452)

## அயச் செம்பு

இல்லையென்று போகாமல் அயமும் பத்து
இதமான வீரங்கால் சேர்த்த ரைத்து
நல்லையென்று காட்டாமணக்குப் பாலை விட்டு
நலமாக வரைத்துப்பில்லை காய வைத்துத்
தொல்லையாய்ப் புடம்லகுவாய்ப் போட்டுக் கொண்டு
துப்புரவாய் ரவிக்கரியில் கூடச் சேர்த்துக்
கல்லையாய் உருக்கிடவே பாக மாகும்
கருத்துவைத் தயத்தைத்தான் கொன்றி டாயே (453)

கொன்றிடவே செம்பாகும் சிவப்பு மெத்த
கொள்ளை கொள்ளை வாதமது தங்க மாகும்
உண்ணிடவே செந்தூரம் செய்யில் வேதை
உத்தமனே மித்துருவின் நேர்மை பாரு
கன்றைவிடப் பால்கறந்து குடிக்கு மாப்போல்
கனமான வொன்றோடே யொன்று சேரு
விண்ணிலிடி விழுமப்பா சொல்ல வேண்டாம்
விருப்பமாய் அயத்தைமுந்திப் பார்த்தி டாயே (454)

பார்த்திடவே பிழைப்பாகும் வாழ்வும் ஆகும்
பண்பாகச் செலவுக்கு வந்து சேரும்
கோத்திடவே யுலகத்தில் வாழ்வுண் டாகும்
குணமாகும் மணமாகும் கூட்ட மாகும்
வார்த்திடவே வழக்குத்தான் சொல்ல வேண்டாம்
வடிவாக வொருவருடன் பேச வேண்டாம்
பார்த்திடவே பலகலைநூல் கற்று ணர்ந்தால்
பரிவாகப் புத்திவரும் பரிசு தானே (455)

## அயச் செம்புக்கு அயம் உருக்க

பரிவாக அயப்பொடியும் பலமும் பத்து
பதிவான கெந்தியதை யெடையே சேர்த்து
விரிவாகப் பூச்சாறு விட்டு ஆட்டி
விருப்பமாய் நாற்சாமம் அரைத்து வில்லை
கருவாகக் காயவைத்துப் புடத்தைப் போட
கனமாகக் கரிபோலே தானி ருக்கும்
வருவாக மூசையிலே யுருக்கிப் போடு
வளமாக எடுத்துமே வைத்துக் கொள்ளே (456)

## அயவுருக்கும் செம்புக் கரியும் சேர்த்துப் புடமிட்டுருக்கிச் செம்பெடுக்க

கொள்ளவே உருக்குஅயம் எடையே தானே
குணமாகச் செம்புகரி எடையே சேர்த்து
நள்ளவே பூச்சாறு விட்டு ஆட்டி
நலமாகப் புடம்போடக் கரியாய்த் தானே
உள்ளபடி வெங்காரம் சேர்த்து ருக்க
உண்மையாய் உருக்கிடவே யருணன் போல
கள்ளமாய்ச் சொல்லவில்லை மதியிற் பத்து
கனமாக *நேரிடைவை பொன்ன தாமே (457)

*ஒன்றிடவே

பொன்னாகும் செலவிற்கு வைத்துக் கொள்ளு
போக்கோடே செந்தூரம் செய்து தின்னு
நன்றாக நவலோகம் எட்டி யோடும்
நாடினால் ஏமமது எளிதி லாகும்
முன்னமே செம்புதான் கரியெ டுக்க
முக்கியமாய்ச் சொல்லிவிட்டேன் ரவியைச் சேர்த்து
உன்னாக இரும்பதுவே கரியாய்ச் செய்து
உறுதியாய் இரண்டொன்றாய்ச் சேர்த்தி டாயே (458)

## செம்பைக் கரிசெய்தபின் அயத்தைக் கரி செய்து புடம்போட்டுருக்கச் செம்பாகும்

சேர்த்திட்டுப் புடம்போட்டு உருக்கிப் போடு
செயமான செம்பாகும் பெருமை மெத்த
காத்திட்டுச் செம்பதனைக் கொல்லு முன்னே
கருத்தாகச் சொன்னதைத்தான் கண்டு பார்த்து

காத்திட்டுப் பின்னேதான் இரும்பைக் கொல்லக்
கருணையாய்ச் சொல்லிவிட்டேன் கண்டு பாரு
நாத்திட்டு இரண்டுந்தான் சேர்க்க வாதம்
நலமாகும் பலமாகும் நாட்டம் பாரே (459)

## முன்பின்னாகச் சொல்லியிருக்கும் கருத்தையறிந்து செய்தால் தங்கமாகும்

நாட்டம்பார் கருத்துத்தான் முன்பின் சொன்னேன்
நலமாகக் கருத்தறிந்தால் தங்க மாகும்
வாட்டம்பார் தளர்ச்சிபார் பாகம் பார்த்து
வகையாகச் செய்திடவே பொன்னே யாகும்
கூட்டம் பார்த் தொருவருடன் சொல்ல வேண்டாம்
குணங்கெட்டுத் திரியாதே போதை வேண்டாம்
தோட்டம்பார் போதையாய் இருந்தாய் ஆனால்
தொல்லுலகில் அரசரால் வினையுண்டாமே (460)

## கருத்துவைத்து அயத்தைச் செய்து சீவனம் செய் பொய் பேசாதே

உண்டாகத் தில்லு முல்லாய்ச் செய்ய வேண்டாம்
ஒருவருடன் பேசாதே அயத்தைப் பாரு
கண்டாலோ ஒருவருடன் சொல்லா தப்பா
கருத்துவைத்துப் பலம்இரும்பை யாட்டிப் பின்பு
வண்டாகச் சீவனத்தைப் பண்ணி யுண்ணு
வகையாகப் பலன் கொடுக்கும் மருவிப் பாரு
முண்டாகத் திரியாதே நூலைப் பாரு
முக்கியமாய்ப் பார்த்தாக்கால் எல்லாம் ஆமே (461)

### அயரோம சுத்தியும் அதனைச் செம்பு செய் வகையும்

ஆமேதான் அயமதுதான் பலமும் பத்து
அன்பான ரோமமது ஐம்ப தாகும்
காமேதான் சீயக்காய்க் கியாழந் தன்னில்
சுதிபெறவே ரோமத்தைக் கொதிக்கப் போட்டு
நாமேதான் எடுத்திடவே சுத்தியாச்சு
நலமாக அயச்சட்டி யிட்டுக் கேளு
வாமேதான் அரப்பொடியைப் போட்டுக் கொண்டு
வகையாக நல்லெண்ணெய் விட்டுக் கேளே (462)

### அயரோமக் கரியோடு செம்புக் கரி சேர்க்க

விட்டுமே யரப்பொடியை யடுப்பில் வைத்து
விதமாக வுண்ண வுண்ணப் புரட்டிக் கொண்டு
கட்டுமே ரோமத்தின் தைலந் தானும்
கனமாக அரப்பொடிதான் இழுத்துக் கொண்டு
செட்டுமே சேர்ந்துமே கரியாய்ப் போகும்
சிறப்பாக கரியெல்லாம் எடுத்துச் சேரு
பட்டுமே கரிச்செம்பு இடையே சேர்த்துப்
பதிவாக வெங்காரம் பாதி சேரே (463)

### அயம் ரோமம் இந்தக் கரிகள் சேர்த்துப் புடமிட்டுருக்கச் செம்பாகும்

சேர்த்துமே செவ்வல்லிச் சாற்றா லாட்டிச்
சிறப்பாகப் புடமொன்று போட்டெடுத்து
பார்த்துமே குகையிலிட் டுருகும் போது
பதிவாகக் கருப்பாக இருக்கும் பாரு

சீர்த்து மூசைதனில் வைத்து ஊது

சிறப்பாக அடிக்கடிக்குக் காரம் தாக்கி

நார்த்தியே யூதியெடு அருணன் போலாம்

நலமான செம்பதுதான் நாட்டம் பாரே (464)

## அயரோமச் செம்பு வேதை

நாட்டவே நொறுக்குவெள்ளி யெட்டி லொன்று

நலமாகக் கொடுத்திடவே வயது ஏழு

பாட்டவே செந்தூரம் செய்ய வேதை

பதையாமல் நூற்றுக்கு ஒன்று பாயும்

கூட்டமாய்ப் பேசினால் ஒன்று மில்லை

கூட்டியே செய்திடுநீ வேதை பாரு

தீட்டியே அம்பரத்தைச் செதுக்கி ஓடம்

திடமாகக் கடைசிதனிற் சொன்னேன் பாரே (465)

## அயம் செம்பைக் கொடுக்காவிட்டால் அல்லது பிரியாவிட்டால் செய்யும் வகை

பாருநீ அயமதுதான் செம்பைத் தானும்

பதைத்துமே கொடுக்காமல் போனாற் கேளு

வாருநீ வெங்காரம் கொடுத்து ஊது

வகையாகச் செம்பதுதான் வந்து தோன்றும்

சேருமே காரமது கொடுக்கா விட்டால்

செயமில்லை பயமுண்டு திறம தாகும்

வாருமே வெங்கார மெல்லா வற்றும்

வடிவாகத் தானுருக்கும் வண்மை தானே (466)

## வெங்காரத்தைச் சேர்த்து ஊதி உருக்கினால் அயம் செத்துவிடும். செம்பு வெளியாம்.

தானேநீ வாதியென்றால் வெங் காரத்தைத்
தாக்கினால் செம்புண்டு சித்தி யுண்டு
பானேநீ காரமது அயத்தைக் கொல்லும்
பதிவாகத் தவிடுபொடி யாகும் பாரு
கானேநீ சேர்த்தாக்கால் வாத மாகும்
கருத்தாகச் சொன்னமுறை போலே பாரு
வானேநீ பேய்த்தனமாய்த் திரிய வேண்டாம்
வகையாகச் செம்பை முந்திக் கொன்று பாரே (467)

## செம்பைக் கொன்றால் வேதையாம்

கொன்றிடவே தங்கமாம் வேதை யாகும்
குடிகெடுத்த வாதிகளே கொள்ளை கொள்ளை
நன்றிடவே யினங்கண்டு சேவை கண்டால்
நாட்டிலே பசும்பொன்னாம் மெத்த வுண்டாம்
கன்றிட்டுக் கறந்தாற்போல் வேதை யாகும்
கருத்தில்லா வாதிகளே வேதை பாரு
பண்ணிடவே யுழைத்தாக்கால் எல்லாம் சித்தி
பாரமாய் இருக்குதென்றால் ஆகா தென்னே (468)

## முன்னே பொன்னைக் கொடுத்துப் பொன்னை உண்டாக்குக

என்னவே பிரயாசைப் பட்டால் வாதம்
எளிதாகும் வேதையாம் இனிமை யாகும்
பொன்னிட்டால் பொன்னாகும் வாதப் போக்கு
பொன்னிடாப் போனாக்கால் பொரிந்து போகும்

உன்னவே ஊன்றியே பார்த்துத் தேறு
உண்மையாய்க் கடைசியிலே சொன்னேன் பாரு
தன்னிடத்தே சரக்குகளை வைத்துக் கொண்டு
தாட்டிகமாய்ச் சோதியா தென்ன தானே (469)

## எல்லாம் செய்து பார்த்தால்தான் முடியும்

சோதித்தால் செம்பாகும் சிவப்பு மாகும்
சுடுவாதி செம்பைத்தான் பார்க்க மாட்டான்
வாதித்தால் அருணநிறம் ஆகும் செம்பு
வாதிக்கா தேபோனால் கசட றாது
போதித்தால் மந்திரமாம் போதிக் காட்டால்
புலம்பினால் பயித்தியக் கார னாவான்
சாதித்தால் யோகசித்தி காய சித்தி
சாத்திரத்தைப் பார்த்தாக்கால் எல்லா மாமே (470)

## செம்பு நல்ல காந்தியாய் இராவிட்டால் ஒன்றுமாக மாட்டாது

ஆமேதான் செம்புதான் காந்தி யில்லா
தடைவாகப் போனாக்கால் உட்கொள் ளாது
போமேதான் உட்கொண்டு பழுக்க மாட்டா
பொறுமையாய்ப் புடமிறங்கா துண்மை வார்த்தை
காமேதான் உரைதனிலே களிம்பு ஊறும்
கசமுண்டு பொரிந்துபோம் வர்ணம் இல்லை
நாமேதான் வேலைக்கு வரமாட் டாது
நாட்டிலே சித்தியில்லை நலம்பெற் றோரே (471)

## நன்மை யுடையோர் நம்மையை யடைவர்

நலம் பெற்றோர் உறுதியர்ச் செய்து கொள்வார்
நலமில்லார் குணமில்லை என்று சொல்வார்

நிலம் பெற்றோர் வீட்டுக்கு வேலை செய்வார்
நிலமில்லா ரகத்துக்கு வேலை ஏது
கலம்பெற்றார் ஒன்றுந்தான் செய்ய மாட்டார்
கலனில்லார் எல்லாந்தான் செய்து பார்ப்பார்
தலம்பெற்றோர் ஓரிடத்தில் இருப்பா ரப்பா
தலமில்லார் உலகமெல்லாம் அலைகு வாரே (472)

## இந்நூலில் இன்னின்ன கூறப் பெற்றுள்ளன எனல்

அலையாமல் உப்பினுட கட்டுச் சொன்னேன்
அலைந்தலைந்து போகாமல் செந்தூரம் சொன்னேன்
நிலையாக வயச்செம்பு சொன்னேன் பாரு
நிற்கவே திராவகமும் நிலைக்கச் சொன்னேன்
மலையாக இலிங்கரச பற்பம் சொன்னேன்
மாண்டிறந்து போகாமல் உண்ணச் சொன்னேன்
கலையாமல் தேசத்தில் திரிந்து சுற்றக்
கணக்காக வேதையெல்லாம் வருகும் தானே. (473)

## உபதேசித்த கிரமம்

வருகவே சிவன் சொல்லத் தேவி கேட்க
வகையாக நந்திசொல்ல வகைகள் எல்லாம்
தருகவே அசுவனியும் விசுவனியும் சொல்லத்
தாட்டிகமாய்த் தன்வந்திரி கேட்டுத் தேறிப்
பெருகவே யகத்தியர்க்கு உபதே சிக்கும்
பெருமையுள்ள அகத்தியரும் புலத்தி யர்க்கு
அருகவே புலத்தியரும் தேரர்க்குச் சொல்ல
அடைவுடனே தேரருமே சொன்னார் தாமே. (474)

## இந்நூலில் யாதொரு சிக்கும் சொல்லவில்லை

சொன்னதொரு யூகிமுனிக் கருளிச் செய்யச்
சொற்பெரிய யூகிமுனி யுலகத் தோர்க்கு
நன்னயமாய் வாதங்கள் வயித்தியங்கள் சொல்ல
நலமாகப் பிழைக்கவே யெல்லார்க் குந்தான்
கன்னல்போல் யாவர்க்கும் சொல்லிப் போட்டேன்
கருணைவைத்துப் பார்த்தாக்கால் எல்லாம் சித்தி
பின்னல்போல் இல்லையப்பா என்னூல் தானும்
பிரபலமாய் வாதத்தைச் செய்தி டாயே *(475)*

### *444 - 475* உரை

*444 - 447* அறிவுரை. அயமும் வெங்காரமும் வகைக்குப் பத்துப் பலம். எலுமிச்சம் பழச்சாறு விட்டரைத்துப் புடமிடு. இங்ஙனம் ஐந்துமுறை போடு. வெங்காரம் பாதி சேர்த்தரைத்துப் புடமிடு கருப்பாகும். கருப்பென்று மயங்காதே. கனகமாகும். கெந்தியையும் செம்பையும் சேர்த்துக் கருப்பாக்கிப் பூச்சாறு விட்டரைத்து உருண்டை செய்து காயவைத்து அதன்மேல் அயச் சத்தினைக் கவசமிட்டு அதன்மேல் சுண்ணக்கவசமும் மண் கவசமும் கட்டிக் கெசபுடமிடு. கருப்பாகும் அதில் பாதி வெங்காரம் சேர்த்து மூசையிலிட்டு உருக்கிப் போடு. களிம்பு போலே உருகும் வெங்காரம் அடிக்கடி கொடுத்து உருக்கி ஊதி எடு. பொன் போலாகும். நொறுக்கு வெள்ளியில் பத்துக்கு ஒன்று கொடு. ஏழு மாற்று. செந்தூரம் செய்து தின்னு.

அயம் பத்துப் பலமும் வீரம் இரண்டரைப் பலமும் சேர்த்துக் காட்டாமணக்குப் பால் விட்டரைத்து வி. த. கா. சிறு புடமிடு செம்புக் கரியொடு சேர்த்துருக்கு. அயத்தைக் கொன்று விடு. செம்பாகும். சிவப்பு மிகுதி மாற்றுக் கொள்ளை

கொள்ளையாகக் கிடைக்கும். செந்தூரம் செய்தால் மாற்று. நட்புப் பொருளால் இங்ஙனமாகின்றது. இடி விழும். கண்டதைக் சொன்னால் சொல்லாதே இனி அயச் செம்புக்கு அயம் உருக்கும் வகை கேள். அயப்பொடி பத்துப் பலம் கெந்தியும் அதனெடைச் சேர்த்துப் பூச்சாறுவிட்டு. அரை வி. த. கா. புடமிடு கரி. மூசையிலிட்டுருக்கு அதனெடை செம்புக் கரி சேர்த்துப் பூச்சாறு விட்டரை. கரி வெங்காரம் சேர்த்துருக்கு. அருணன் போலாம். மதியிற் பத்துக்கு ஒன்றிடு. செம்பொன்னாம் செந்தூரம் செய்து தின்னு முன்பின் சொன்ன முறை யறிந்து பார்த்து வாதம் செய்.

அயம் பத்துப் பலம் மயிர் ஐம்பது பலம். சீயக்காய் கியாழத்தில் மூடியைப் போட்டுக் கொதிக்க வைத்துத் தூயதாக்குக. அயச்சட்டியில் போட்டு அரப்பொடியும் சேர்த்து நல்லெண்ணெய் விட்டு அடுப்பேற்றிக்கிண்டு. உண்ண உண்ணக் கிண்டு. கருப்பாகும் கரிச்செம்பை அதனெடை சேர். செவ்வல்லிப் பூச்சாறு விட்டரை. புடமிடு உருக்கு. கருக்கும் காரமிட்டு உருக்கு ஊது. சிவந்த செம்பாகும் மதியில் எட்டிலொன்று கொடு. ஏழு வயது செந்தூரம் செய். நூற்றுக்கு ஒன்று கொடு.

அயம் செம்பினைக் கொடாமல் திகைத்தால் வெங்காரம் கொடுத்து ஊது. செம்பாகும். காரம் அயத்தைக் கொல்லும். கொன்று மாற்றுப் பார். பொன்னிட்டால் பொன்னாம் ஆதலால் பொன் சேர்த்துச் செய் செம்பில் நிறம் வராவிட்டால் பலியாது, செம்பினை ஒளிறும் வண்ணம் செய்து கொள். உலகம் பிழைக்க சொன்னேன். நூலில் பின்னல் இல்லை.

## அயத்தாம்பரக் களங்கு

செய்திடவே களங்கொன்று சொல்லக் கேளு
சிறப்பாக வகத்தியரும் சொன்ன தாலே

வைதிடவே யரப்பொடிதான் பலமோ பத்து
வதிவாகச் செம்புஅரப் பொடிதான் பத்து
கைதிடவே கெந்திமுக்கால் சூடன் தானும்
கனமாகப் பலமரைதான் கூடப் போடு
வைதிடவே வீரமது காலும் போட்டு
வகையாகச் சம்பீரப் பழச்சா றாட்டே (476)

### அயத்தாமிரக் களங்கு புடமிட

ஆட்டியே சாமம்முச் சாமம் ஆட்டி
அருள் பெருகும் அகத்தியரைத் தொழுது போற்றி
மூட்டியே வில்லைகட்டி ரவியிற் காய
முக்கியமாய் அதன்பேரிற் சுண்ணங் கட்டிக்
காட்டியே மண்கவசம் மேலே கட்டி
காரியமாய்ப் பத்தெருவில் புடத்தைப் போட்டு
நாட்டியே யெடுத்துப்பார் கரிபோ லாகும்
நலமான வெங்காரம் சமனாய்ச் சேரே (477)

### அயத்தாமிர களங்கு உருக்கிச் செம்பெடுக்க

சேர்த்துமே பொரித்தெடுத்து இடையே சேர்த்து
செம்மையாய் அரைத்து ஒரு சாமம் ஆட்டி
பார்த்துமே யுண்டைசெய்து ரவியிற் காயப்
பதறாதே மூசைதனில் வைத்து ருக்கக்
கார்த்துமே குமுறவே யுருக்கி னாக்கால்
கசடாகச் செம்புவரும் சடு மெத்த
பேர்த்துமே நாளம்வைத்துக் கார மிட்டுப்
பிசகறவே யூதிடவே செம்பு மாமே (478)

## அயத் தாமிரக் களங்கு வேதை

ஆமேதான் ஆதித்தன் போற்செம் பாகும்
அடைவாக மதியுருக்கிப் பத்துக் கொன்று
நாமேதான் கொடுத்திடவே யேழு மாற்று
நலமாக இருக்குமது காவிக் கேதான்
காமேதான் வேதைமுதம் கலங்கா தப்பா
கருத்துவைத்துச் செந்தூரம் பண்ணித் தின்னு
வேமேதான் காயமது சித்தி யாகும்
விருப்பமாய்த் தங்கசித்தி யாகுந் தானே (479)

## அயத் தாமிரச் செந்தூரம் செய்பாகம்

சித்தியாய்ச் செந்தூரம் செய்து கொள்ளு
சிறப்பாக வயச்செம்பு பலமு *நாலு
வித்தாய் நாகமொன்று தங்க மொன்று
விருப்பமாய் இரண்டுமொன்றுசேர்க்கப் பிட்டு
புத்தியாய் அயச்செம்பி னோடே சேர்த்துப்
புழுங்கிடவே யுருக்கியே யிடைத்துக் கொண்டு
நத்தியே யின்னமொரு சேதி கேளு
நலமாகக் கெந்தியது பலமும் பத்தே (480)

*சுவடியில் மூன்று என்றிருந்து திருத்தல் என்பது சில. குறிப்பு

## ரச செந்தூரம்

பத்துமே நிறுத்துமே சூதம் பத்துப்
பதிவாகக் கரண்டியினிற் போட்டு ருக்கு
நத்தியே யுருகிரண்டும் கருப்பாய் கருப்பாய் நிற்கும்
நலமான தாளகமும் நாலத் தொன்று

புத்தியாய் உடைத்துமே கருப்பிற் போடு
போராக அயத்தினால் கிண்டும் போது
செத்துமே செந்தூரம் முருக்கம் பூப்போல்
*செங்கீரை போலவே யிருக்கும் பாரே (481)

* சிறு கதிரைப் போலவே (பா. வே.)

## அய தாமிர தங்க நாக ரச செந்தூர மாற்று

இருக்குமே செந்தூரம் பலமும் பத்து
இதமாக ரவிதங்கம் நாகம் சேர்ந்து
பருக்குமே களங்கதுவும் பலமும் பத்து
பதிவாகச் சேர்த்துமே திராவ கத்தால்
நருக்குமே யரைக்கையிலே முருக்கம் பூப்போல்
நலமாகத் தானிருக்கும் வறுத்துப் போடு
வருக்குமே முன்சட்டி உப்புத் தன்னில்
வகையாக வைத்துமே எரித்தி டாயே (482)

எரித்திடவே பனிரண்டு சாமம் தீதான்
தேமாக எரித்திடவே செந்தூர மாகும்
நரித்திடவே நவலோகம் நூற்றுக் கொன் று
நலமாகக் கொடுத்திடவே மாற்றுப் பத்தாம்
பருத்திடவே யுப்புக்கங் காவிக்கும் நிற்கும்
பதிவான நவலோகந் தன்னிலீய
நருக்கிடவே யொன்பதிலும் தனியே வேதை
நலமாகச் செந்தூரம் குன்றி யுண்ணே (483)

உண்ணவே மண்டலத்தில் சட்டை கக்கும்
உகந்தவரை தானிருக்குந் தேகந் தானும்

நண்ணவே மேனியுமே கத்தூரி வீசும்
நலமாகப் பொன்னொளிவாம் மேனி தானும்
கண்ணவே விந்துதான் கீழோ டாது
கருணைபெற அயமாடும் வித்தை தானும்
துண்ணவே யொருவருக்குஞ் சொல்ல வேண்டாம்
துடியாகப் பாகமெல்லாம் கண்டு செய்யே (484)

## களங்கு செந்தூரம் உருக்கினங்கள் ஒவ்வொன்று வாய்த்தால் அவ்வதுபோல் ஏனையளவும் வாய்க்கும். அவ்வவை போற் செய்க

செய்யவே யொருகளங்கு சொன்ன பாகம்
சிறப்பாக எல்லாமும் களங்கு மாகும்
பையவே செந்தூரம் ஒன்று செய்தால்
பறியிது போல் எல்லாமும் ஆகும் பாரு
நய்யவே யுருக்கினங்கள் ஒன்று செய்யில்
நலமாக எல்லாமும் ஒருமார்க் கந்தான்
கையினாற் செய்ததுதான் ஒளிந்து போகும்
கருணையில்லா வாதிகளே கண்டு கொள்ளே (485)

## பெரியோர் சொல்லியன எல்லாம் அறிவு அமைதியுடையோர்க்கே. துடியால் கெடும்

கொள்ளவே நூல்களிலே நாதாக்கள் எல்லாம்
கூறியவை எல்லாமும் அறிவுக் காக
துள்ளவே அறிவினொடு பொறுமை வேண்டும்
துடியுள்ள புத்தியினால் ஒன்றும் இல்லை
வள்ளலார் எனக்குரைத்த மார்க்கம் சொன்னேன்
வடிவான வுப்பினுட சுண்ணந் தன்னை

மெள்ளவே சொல்லுவேன் பின்பு தானும்
மேன்மையாய் வெடியுப்புச் சுண்ணம் பாரே (486)

### 476 – 486 உரை

அகத்தியர் கூறிய களங்கிது கேள். அரப்பொடி பத்துப்பலம், செம்பு அரப்பொடி பத்துப் பலம் கெந்தி முக்காற் பலம் சூடன் அரைப் பலம் கூடப் போட்டு வீரம் காற் பலமும் சேர்த்துப் பழச்சாற்றாலாட்டு. வி. த. கா. சுண்ணக் கவசம் கட்டு. அதன்மேல் மண் கவசமிடு. பத்தெருவிற் புடமிடு. கரி போலாகும். நேர் எடை வெங்காரம் பொரித்துச் சேர்த்து ஒருசாமம் அரைத்து வி. த. கா. குகையில் வைத்து. உருக்கு செம்பாகும் அதன் கசடு நீங்க வெண்காரமிட்டு மேலும் ஊது. நல்ல செம்பாகும். வெள்ளியில் பத்துக்கு ஒன்றிடு ஏழு மாற்று செந்தூரம் செய்து உண் உடல் உறுதியாகும்.

இந்த அயச் செம்பு நாலு பலம் நாகம் ஒன்று தங்கம் ஒன்று இரண்டும் சேர்த்துப் பிட்டாக்கி அதனொடு சேர்த்து உருக்கியுடைத்து வைத்துக்கொள்.

கெந்தகம் பத்துப் ப்லமும் ரசம் பத்துப் பலமும் சேர்த்துருக்கு கருப்பாகும் தாளகம் நூலில் ஒன்று உடைத்துப் போட்டு அயத்துடுப்பினால் கிண்டு முருக்கம் பூப்போல் செந்தூரமாகும் இச்செந்தூரம் பத்துப் பலமும் செம்பும் தங்கமும் நாகமும் சேர்ந்த முற்கூறிய களங்கு பத்துப் பலமும் சேர்த்துத் திராவகத்தால் அரை. வறு முன் சட்டியுப்புக்குள் வைத்துப் பன்னிரண்டு யாமம் எரி செந்தூரமாகும். ஒன்பதிலும் நூற்றுக்கு ஒன்றிடு பத்து மாற்று. குன்றியளவாக ஒரு மண்டலம் உண். உடலில் சட்டை கழலும் உகந்த வரை உடலழியாது உடல் கத்தூரி மணக்கும் உடல் பொன் போல் ஒளிறும் விந்து கீழோடாது ஒருவருக்கும் சொல்லொறாது.

வெடியுப்பால் வேதை கெந்தியால் செந்தூரம் சீனத்தால் கட்டு, அயத்தால் செம்பு கல்லுப்பால் கட்டு, சாரத்தால் செயநீர் பாடாரணத்தால் வெள்ளியாகும்.

வெடியுப்புச் சுண்ணத்தால் வேதை கோடி
விருப்பமாய்ச் சீனத்தால் கட்டு கோடி
துடியாகச் சாரத்தால் செயநீர் கோடி
சொற்பெரிய கெந்திசெந்தூரங் கோடி
படியாக அயத்தினால் செம்பு கோடி
பகரறிய கல்லுப்பில் கட்டு கோடி
முடிவான பாடாண ரசித வித்தை
முடிந்திடுமே எல்லாமும் சித்தி யாமே (487)

## வெடியுப்பு சுண்ணமானால் எல்லாமாகும்

சித்தியாம் வெடியுப்பு சுண்ண மானால்
சிறப்பான அண்டரண்டம் துளைத்து ஆடும்
பத்தியாய்ச் சரக்கெல்லாம் கட்டிப் போகும்
பதையாமல் லோகமெல்லாம் சத்துமாகும்
முத்தியாய்ப் பூநீறு சுண்ண மாகும்
முடிவாக வாதமது மூர்க்கம் மெத்த
புத்ததியாய்ச் சகலமுந்தான் சித்தி யாகும்
புத்தியுள்ள வாதிகளே சுண்ணம் பாரே (488)

## வெடியுப்புச் சுண்ணம் ஆனந்தக் களிப்பு

பொட்டளைச் சுண்ணமுஞ் சொல்வேன் - இதைப்
புத்தியாய் வைத்திடச் சித்திய தாகும்

திட்டமாய்த் தான்வெடி யெட்டுச் -சீனம்
சேர்த்திட ரெண்டுடன் சாரம் இரண்டு (489)

முட்டவே தான்பொடி யாக்கு- பழம்
முற்றின தோல்நாலு கூடவே போட்டு
வட்டமாய்த் தான் கல்லுரலில் - இதை
வாகாய் இடித்துமே வில்லையாய்த் தட்டித் (490)

தானே ரவிதனிற் காயச் - சட்டி
தன்னிலே வைத்து எரித்திடு தோழி
தானேதான் பற்றி யெரிந்து - சுண்ணம்
தாட்டிக மாக இருக்குமே தோழி (491)

## வெடியுப்புச் சுண்ணச் செயநீர்

எடுத்துப் பனிதனில் வைக்க - ஆறு
இன்பமாய் நீர்போல வந்திடும் வாதி
அடுத்துமே பீங்கானில் விட்டு - இது
அன்புடன் போகும் வழியது சொல்வேன் (492)

## சீனச் சுண்ணம்

சீன மொருசேரு சட்டி - இட்டுச்
சீக்கிர மாகப் பொரித்துப்பின்கேளு
ஞானமாய்ப் பொட்டளைச் சுண்ணம் - நீரை
நாட்டியே விட்டு அரைத்தபின் வில்லை (493)

## சீனச் சுண்ணச் செயநீர்

செய்து ரவிதனிற் காயப் - புடம்
திட்டமாய் இட்டிடத் தாள கடுஞ்சுண்ணம்

பையவே சுண்ணத்தின் காலாய்ச் - சாரம்
பாய்ச்சி யரைத்துப் பனிப்பட வைக்க (494)

## மடக்க வெடியுப்புச் சுண்ணம்

நீரது வாகுமே நீரை - வெடி
யுப்புனிற் சேரொன்று விட்டு அரைத்துக்
காரது தான்கரி யோட்டில் - ஊதக்
காரண மாகக் கடுஞ்சுண்ண மாகும் (495)

சுண்ணத்தில் தான்வெடி சேர்த்து - இதைச்
சூழ்ச்சமாய் ஊதவே தான்கடுஞ் சுண்ணம்
நன்னய மாகவே பத்துத் - தரம்
நன்மையாய்ச் சேர்த்துநீ யூதி யெடுத்து (496)

## மடக்கு வெடியுப்புச் செயநீர்

சந்திரன் தன்முகம் பட்டால் -நீறும்
தானேநீ ராகுமே அப்பாலி றுத்து
விந்தையாய் வைத்திடு தோழி -நீரை
வித்தக மாகவே யூகி முனியும் (497)

## உப்புக்கட்டும் வெடியுப்பும் கட்டும்

சந்தேக மில்லாமல் சொன்னார் - இது
சத்திய மாகுமே கேளடி தோழி
இந்தச் செயநீரில் உப்பு - கட்டும்
இன்பமாய்த் தான்வெடி யுப்புமே கட்டும் (498)

## துரிசு சுண்ணம்

நந்தீசர் சொன்னார் எனக்கு - நீலன்
நாட்டித் துவைத்துமே தான்ரவி போடு
முந்தவே தான்சரக் காட்டி - இதில்
முக்கிய மாகவே தோய்த்து ரவியில் *(499)*

## சாரக் கட்டு

போட்டுமே காயவே வைத்து- நல்ல
போரான கற்சுண்ணம் நடுவினில் வைத்துக்
காட்டாகத் தானெரி தோழி - சாரம்
கட்டி யுருகியே நின்றிடும் தோழி *(500)*

## நாகக் கட்டு

வட்டமாய் நாகம் உருக்கி- முகம்
வாகான சாரம் அதிலிடு தோழி
கட்டுமே நாகமும்நின்று - கரி
தன்னிலே நின்றுமே ஆடியே நிற்கும் *(501)*

வட்டுப்போ லேநின்றுருகும் - புகை
வாகாகத் தால்கட்டிதி தானிற்கும் வாதி
இட்டிடச் செம்பு பழுக்கும்- புடம்
இன்பமாய்க் காவிக்கும் உப்புக்கி ருக்கும் *(502)*

## நாகக் கட்டு வேதை

இந்தப் படியாகக் கட்டி - வேதை
இன்பமாய்ப் பார்த்துமே நின்றிடு தோழி
சுந்தரந் தானாக வித்தை - ரவி
சூழ்ச்சமாத் தானிரு பத்துக்கு ஒன்று *(503)*

நடடணை யாகவே ஞாலம் - இதை

நாட்டியே பார்த்துமே யோகத்தில் நில்லு

..................................................................................

.................................................................................. (504)

## *487 - 503* உரை

*(487 - 488 அறிவுரை)* இனி வெடியுப்புச் சுண்ணம் கேள். வெடியுப்பு எட்டுப் பலம் சீனம் இரண்டு பலம் சாரம் இரண்டு பலம் தூளாக்கு எலும்மிச்சம் பழத்தோல் (சாறு நீக்கியது) 4 பலம் கூடப் போட்டு இடி. வி. த. கா. சட்டியிலிட்டெரி. சுண்ணமாகும் எடுத்துப் பீங்கானிலிட்டுப் பனியில் வை. நீராகும் பின்பு ஒரு சேர் சீனம் பொரித்து முன் செய்த வெடியுப்புச் சுண்ண நீர் விட்டரைத்து வி. த. கா. புடமிடு கடுஞ்சுண்ணம் அதன் காற்பாகம் சாரம் சேர் பனியில் வை நீராகும் வெடியுப்பு ஒருசேர் எடு. அந்நீர்விட்டரை கரியோட்டிலிட்டு ஊது கடுஞ்சுண்ணம் அதில் வெடி சேர்த்து ஊது இங்ஙனம் பத்து முறை சேர்த்து ஊது நிலவின் முகம்பட்டால் நீராகும் இறுத்து வை இது(சத்தியம்) உண்மை இந்நீரில் உப்பு கட்டும் வெடியுப்பும் கட்டும் இதனை நந்தீசர் எனக்கு உரைத்தார் சாரம் துரிசு இவற்றைத் தனித்தனி தோய்த்து வெயிலிலிடு சுண்ணத்தின் நடுவில் வைத்து எரி சாரம் கட்டுப்பட்டு உருகி நிற்கும் நாகத்தையுருக்கிச் சாரமிடு கட்டியுருகிக் கண் விட்டாடும். செம்பில் இருபதுக்கு ஒன்று கொடு பழுக்கும் காவிக்கும் உப்புக்கும் நிறம் கலையாது.

## கல்லுப்புக் கட்டு

கல்லுப்புக் கட்டதைச் சொல்வேன்- முனி

காட்டினவேதை நிசமிது பாரு

நல்லொத்த வாரிதி தன்னால் - உப்பு
நாடியே காய்ச் சிடக் கட்டியே போகும் (505)

கட்டியு டைத்துக்கல் லுப்பை - யிதைக்
காதலாய்த் தான்கடல் தானுரை யூதி
திட்டமாய்த் தான் சட்டி தன்னில் - இட்டுத்
தீர்க்கம தாகவே தன்னிற் புதைத்து (506)
தீயெரி நாலது சாமம் - எடு
திட்ட மாய் நீரது வற்றியே நிற்கும்
ஆயவே தான்வெடி நீரில் - துவைத்
தன்புடன் எட்டுநாள் தான்ரவி போட்டு (507)

சுண்ணத்தில் வைத்தே எரிக்க -வுப்பு
சுப்பிர மாகவே தந்தம்போல் காணும்
நன்னய மாகப்ப தங்கம் - ரச
பற்ப மெடைசேர்த்துத் தானே யரைத்து (508)

உண்மையாய்த் தான்வெடி நீரால் - அரை
உற்றுமே யுண்டை விதமினிக் கேளு
தண்மையாய் முன்சட்டி யுப்பில் - நடு
தன்னிலே வைத்துமே சட்டியை மூடு (509)

சீலைமண் ணேழுமே செய்து - எரி
தீர்ககமாய் நூறு கடிகை யெரித்து
ஆலையம் போலவே கட்டும் - எடு
அன்பாய்க் கரிதன்னில் வைத்து உருக்கு (510)

கரியது தானுமே குடிக்கா - நல்ல
காரண மாகுமே பொன்போலே யாடும்

பரியது வாகும் ரவியில் - நல்ல
        பாக்கிய மாகுமே தானிது தோழி (511)

பத்து வயதாகும் தோழி - நல்ல
        பாக்கிய மாகுமே தானிது தோழி
சித்துக் கதிகமாம் தோழி - இது
        சித்திர மாகும் சிவசொத்துத்தோழி (512)
வித்தகர் யூகிதான் சொன்ன - நல்ல
        வித்தைய தாக விருந்திடும் வாதி
புத்திய தாகவே செய்து - நல்ல
        புத்திய தாகவே தானிதைக் காணும் (513)

உப்பு மகிமையைச் சொல்ல - இதை
        உண்மையாய்த் தானே யொருவரா லாகா
தப்பித மில்லாமல் சொன்னேன் - ரவி
        தாக்கிடவேதை யொருகோடி யாகம் (514)

## 505 – 514 உரை

இனி கல்லுப்புக்கட்டினைக் கூறுவேன். அகத்திய முனிவர் சொன்னது. உண்மை கல்லுப்பைக் கடல்நீரில் போட்டு எரிக்கக் கட்டும் எடுத்து உடைத்து கடல் நுரை ஊதிய சுண்ணம் போட்ட சட்டியில் சுண்ணத்துள் வைத்துப் பொரிந்து நாலு சாமம் எரிக்க நீர் வாங்கும். எடுத்து வெடியுப்புத் திராவகத்தில் தோய்த்துத் தோய்த்து எட்டுநாள் வெயிலில் காயப் போட்டு மீண்டும் கடல்நுரைச் சுண்ணத்துள் வைத்து எரிக்கத் தந்தம் போல் கட்டும். அதனெடை ரசபதங்கப் பற்பம் சேர்த்து வெடிநீரால் அரைத்து உருண்டையாய் உருட்டி முன்சட்டியில் உப்புக்குள் வைத்து நூறுநாழிகை எரிக்க நன்றாய்க்கட்டும். எடுத்துக் கரியில் வைத்து

உருக்கப் பொன்போல் உருகியாடும். செம்பில் பத்து வயதாகும். இது சிவசொத்து தப்பிதமில்லாமல் சொன்னேன். செம்பில் கொடுக்க ஒருகோடி மாற்றாகும்.

## துருசுச் சண்ணம்

நீல னொருகட்டி தானும் - எடு
நிர்ணய மாகக் கரிதனில் வைத்து
காலமே யூதிட நீறும் - கனல்
காட்டி யெடுத்த வெடிசெய நீரில் (515)

தோய்ச்சு எடுத்து ரவியில் - இதைத்
துப்புர வாகவே எட்டுநாள் இட்டு
வாய்ச்சுதே வங்கம் பலமும் - எடு
வாகாகத் தட்டியே கல்வத்தி லிட்டு (516)

## வங்கச் சுண்ணம்

அரைத்துமே வெடிசெய நீரால் - வில்லை
அன்புடன் காயவே வைத்திடக் கேளு
பரைத்துக் கரிதனி லூத - வங்கம்
பாவித்துத் தான்கடுஞ் சுண்ணமு மாகும் (517)

## துரிசின்மேல் வங்கச் சுண்ணம் கவசம் கட்ட நீறும்

நீலன்மேல் கட்டிப் புடத்தில் - காடை
நித்திய மாகவே பத்தெரு விட்டு
காலனைப் போலேவே நீறும் - சுண்ணம்
காரம தாக விருக்குமே தோழி (518)

சித்தர் முனிவரும் சொல்ல - இதைச்
சித்திர மாகவே நீலனைச் சொன்னேன்
பத்தியாய் மூதண்டம் நீறும் - யூகி
பண்பாகச் சொன்ன முறையிது தப்பா (519)

## வாலை ரசக்கட்டு

சாறு வராத தழையில் - இடத்
தானே சலமாகும் கேளடி தோழி
பாருமே விட்டுப் பிழிந்து - அயப்
பள்ளக் கரண்டியில் சூதத்தை விட்டு (520)
காய்ச்சிட இட்டளி யாகும் - உண்டை
கட்டாய மாகவே செய்து எடுத்துப்
பாய்ச்சிடு தான்பழத் துள்ளே - இதைப்
பாய்ச்சி பத்துப் புடத்தையு மிட்டு (521)

கட்டி மணியாகும் தோழி - நல்ல
கட்டாகும் தானே கவனமும் சித்தி
வட்டியாய்த் தான்மணி செய்து - செபம்
வாகாகச் செய்து உருச்செபி வாதி (522)

எட்டெட்டுந் தானுமே சித்தி - நல்ல
இன்பமாய் நாற்பத்து மக்கோணம் சித்தி
அட்ட கருமமும் சித்தி - நல்ல
ஆதர வாகியே சித்தியாம் தோழி (523)

## 515 – 523 உரை

துரிசு ஒரு கட்டி எடுத்துக் கரியில் வைத்து ஊதிக் கனல்காட்டி எடுத்து வெடியுப்புச் செய நீரில் தோய்த்துத் தோய்த்து

எட்டுநாள் போட்டு எடுத்து வங்கத்தை வெடிநீர் விட்டரைத்துக் கரியில் வைத்து ஊதிச் சுண்ணமாக்கி எடுத்து அந்தத் துருசுக்குக் கவசமிட்டுப் பத்துமுறை காடைப்புடமிடுக. நீறிக் கடுஞ் சுண்ணமாகும். சாறுவராத மூலிகையிலிட்டுச் சாறுபிழிந்து இருப்புக் கரண்டியில் விட்டு ரசம் விட்டுக் காய்ச்ச இட்டலி போல் வெண்ணெய்யாகும். பழத்தினுள் வைத்துப் பத்துப்புடமிடு. நல்ல மணியாகும் வடத்தினில் கோத்துச் செவிப்பாயாக. உறுதியுண்டாம்.

## ரசக் கட்டு வேதை

*கட்டின சூதமு நாலு - கரி*
*தன்னிலே தானே யுருக்கு முகத்தில்*
*திட்டமாய்த் தங்கமு மொன்று - நாகம்*
*திட்டமாய் ஒன்று இதுமூன்றுஞ் சேரு* (524)

*சோதி ரவிதனில் நூற்றுக் - கொன்று*
*சூழ்ச்சமாய்த் தானிடு பத்துமாற் றாகும்*
*வாதிகள் செய்யவு மாட்டார் - பேச்சு*
*வாகாய்ப் புலம்பி யலைந்து திரிவார்* (525)

*பாதி மதியணி சொன்ன - வாதம்*
*பாகமாய்ச் செய்து எடுத்திடு தோழி*
..............................................................................
.............................................................................................................. (526)

*யோகமும் ஞானமும் பாரு - நன்றாய்*
*உற்றுநீ மேலைச் சிதம்பரம் பாரு*
*ஆகுமே நாலுமே பாரு - நல்ல*
*ஆண்மையு முண்டுமே வாதமு முண்டு* (527)

காரண வாதமும் பாரு - புத்திக்
காரிய மாக மதியி லெடுத்து
வாரண மாந்தனைத் துதித்து - வழி
வாகாகக் கேட்டிடச் சொல்லுவார் தோழி (528)

புத்தியாய்ப் பாகமாய்ச் செய்தால் - நல்ல
புத்தியும் அறிவுக்கும் ஒப்பது தோழி
சத்திய மாகவே பாரு - குரு
தாக்கிடக் கிட்டுமே வாதிகள் கேளீர் (529)

## விருத்தம்

### உப்பைக் கட்டி அதனால் பாஷாணத்தைக் கட்டினால் தங்கம் பலிக்கும்

கேளுமே யுலகத்தில் வாதிக் குத்தான்
கெடியான கல்லுப்பைக் கட்ட வேணும்
வாளுமே யுப்பைநன்றாய்க் கட்டி யாக்கு
வடிவாக வதன்பின்பு சட்டி தன்னில்
நாளுமே பாஷாணம் அதிலே வைத்து
நலமாக எரித்திடவே கட்டிப் போகும்
பாளுமே இம்முறையாய்ப் பார்த்தால் வேதை
பலிப்பாகம் தங்கம்வந்து லபிக்கும் பாரே (530)

### வெடியுப்பு மடக்கிச் சுண்ணஞ் செய்து செயநீர் செய்து பாஷாணங் கட்டினால் தங்கமாகும்

பாரேநீ பொட்டளையைச் சுண்ணம் செய்து
பதிவாக வதன்பின்னே சீனச் சுண்ணம்

காரேநீ செய்துமே அதன்பின் கேளு
கருத்தாக வெடியுப்புச் சுண்ணம் செய்து
தாரேநீ பாஷாணங் கட்டத் தங்கம்
தாட்டிகமாய்ச் சகலசித்தும் ஆகும் பாரு
நாரேநீ முறைதப்பில் பாகம் தப்பும்
நலமாக வெடியுப்புச் சுண்ணம் பாரே (531)

சுண்ணமாம் வெடியுப்புச் சுண்ணம் பண்ணச்
சூழ்ச்சமாய்மறைத்தார்கள் சித்தர்தாமும்
அன்னமாம் புளியென்று மறைத்த தாலே
ஆச்சிரியம் வெடியுப்பு பூக்க மாட்டா
நன்னயமாய்க் கெட்டலைந்து வாதி தானும்
நலமில்லை கிட்டானாய் ஆச்சு தென்று
கன்னிகை போல் புலம்பியே திரிவார் ஐயோ
சுக்கத்தில் பிள்ளைவைத்துத் தவித்த வாறே (532)

## புளி என்பது சீனமும் எலுமிச்சந்தோலும் இவை சேராமல்போனால் சுண்ணமென்ற பேரில்லை

வாறேது என்றாக்கால் சொல்லக் கேளு
வன்மையாய் வெடியுப்புச் சுண்ணம் செய்ய
காறேது வந்திடத்தில் புளியைக் கேளு
கனிவான புளிதானும் சீனமப்பா
தாறேது எலுமிச்சம் தோலு தானும்
தாட்டிகமாய்ப் புளியென்று சொல்ல லாகும்
நாறேது இப்புளிதான் சேராப் போனால்
நன்மையில்லை சுண்ணமில்லை நாடிப் பாரே (533)

## சுடுவாதிகள் அறிவின்மையால் மனிதர் மலத்தையும் மூத்திரத்தையும் புளியும் உப்பும் என்பார்கள்

நாடிப்பார் சுடுவாதி புளியைக் கானார்
நாடியே மலந்தானும் புளிய,தென்பார்
வாடியே மனிதர் மூத் திரத்தைத் தானும்
வகையாக அமுரிஎன்பார் புத்தியில்லார்
தேடியே வெடியுப்பு தன்னிற் போட்டுத்
திருத்தமாய்அரைத்து வைத்துப் புடத்தைப் போடு
பாடியே சுண்ணமென்பார் சுடுவாதி தானும்
பரிசுகெட்ட புத்தியாய் அலைகு வாரே (534)

## புளி என்பதன் மறைப்பும் அமுரி என்பதும் இன்னதென்ற வெளிப்படச் சொல்லியது

அலையாமல் இருக்கவல்லோ அமுரி சொன்னேன்
அலைந்துலைந்து போகாமல் புளியைச் சொன்னேன்
நிலையாக இருக்கவல்லோ மறைப்பைச் சொன்னேன்
நீடூழி காலத்திற் கிருக்கச் சொல்லி
கலையாகச் செந்தூரங் கடையிற் சொன்னேன்
கருத்துவைத்தால் பலனாகுங் கண்டு பாரு
சிலைபோல இருந்தாக்கால் என்ன லாபம்
செய்தாக்காற் சகலசித்தும் ஆடலாமே (535)

## செம்பைக் கரிசெய்தால் வாதம் சித்தியாகும்

ஆடலாம் படியாத வாதி பேச்சை
அன்பாகக் கேட்டாக்கால் சித்தி யில்லை

மூடமாய்த் திரியாமல்த நூலைப் பாரு
முட்டாளாய்ப் போகாமல் செம்பைக் கொல்லு
தேடலாம் வெகுகோடி தனமு மப்போ
தேட்டென்ன செய்வதுகாண் அருமையல்ல
நாடெல்லாம் திரிந்தாலே வாத சித்தி
நலமாக வந்திடுமோ வாதி மாரே (536)

## புத்தி சொல்லல்

வாதிமார் இன்னமொரு சேதி சொல்வேன்
வளமாகச் சமைந்தபெண்ணைச் சையோ கித்தால்
சோதியாய் இன்பமாய் இருக்கு மப்பா
சொற்பெரிய பெண்ணுமவள் சமையாப் போனால்
சாதியாய் இருந்தாலும் பலனு மில்லை
சாப்பிட்டால் பசியில்லா வாறு போல
கோதியே கிளிபோல யூகி நூலைக்
கொண்டாடச் சகலசித்தும் உண்டாம் பாரே (537)

## வாதிகளை ஏசுதல்

உண்டாக மண்டபத்தில் நாயைப் போல
உண்மையாய்ச் சித்திரத்தை யெழுதி வைத்தார்
பண்டாக வொருநாய்தான் கண்ணிற் கண்டு
பலகாலும் தொண்டுசெய்து ஊளை யிட்டுக்
கண்டாலும் பேசாத நாயைத் தானும்
கருதியே யழைத்துபோல் வாதி மார்கள்
பண்டோர்கள் சாத்திரத்தைப் படித்து வாதி
பதிவான அறுதலிபோல் அலைகு வாரே (538)

## கல்லுப்புக்கட்டு, வெடியுப்பு, நவச்சாரம் இலிங்கசெந்தூரம், செம்பு, அயம் இவற்றைப்பார்

அழுகாமல் கல்லுப்புக் கட்டுப் பாரு
அலைந்துலைந்து போகாமல் வெடியுப்பைப்பார்
நழுகாமல் சாத்திரத்தை முந்திப் பாரு
நலமாக லிங்க செந்தூரம் பாரு
வழுவாக இல்லாமல் செம்பைப் பாரு
வருத்தந்தான் படாமலே தானும்
தொழுவிலே பூந்தாடு போலே தானும்
துடித்துமே திரியாமல் அயத்தைப் பாரே (539)

## இந்நூலைப் பார்த்தால் அயச்செம்பு அகப்படும் அதனால் வயிற்றிற்கு உணவு அகப்படும்

பாருமே மோகமுற்ற பெண்ணைப் போல
பதைத்துமே திரிந்தாலே வாத மாகும்
சேருநீ தன்னியத்தில் சேர்ந்தாற் போல
சிறப்பாகச் செம்பை முந்திக் கொன்று தேறு
காருநீ குருவினிடம் போல வேதான்
கருணைவைத்து என்னூலைக் கருத்தாய்ப் பாரு
சோறுதான் தந்திடுமே அயச்செம் பாகும்
சுருதியைத்தான் ஆராய்ந்தால் பலனு மாமே (540)

## உப்பை முந்திக்கட்டிக்கொள்ள வேதையாம்

பலனாக வுலகத்தோர் பிழைக்க வேதான்
பரிபாஷை நீக்கியே பாடி னேன்யான்

பிலனாகப் பார்த்தாக்கால் எல்லாம் சித்தி
பிரட்டாகச் சொன்னாக்கால் என்ன சொல்வேன்
தலம்விட்டாற் போலவே யலைய வேண்டாம்
தாட்டிகமாய் உப்பைமந்திக் கட்டி யாடு
நலமான வேதையாம் நாட்டில் தானும்
நன்மையாய் அறிந்திடவே வாதம் சித்தி (541)

## முன்னே வாதத்தைச் செய்து கொண்டால் ஞானம் வரும்

சித்தியாம் என்றுசொல்லின் மூட வாதி
சீரான வாதம்வந்தால் ஞான மாகும்
புத்தியாய்ப் புலம்பியே திரிவார் ஐயோ
புத்தியாய் அவருக்குச் சொல்லிப் போட்டேன்
நத்தியே வாதம்வந்தால் ஞான மாகும்
நன்னையாய் வாதத்தை முன்னே பார்த்துப்
பத்தியாய் ஞானத்தை யதன்பின் பார்த்தால்
பத்திமுத்தி யாகும்மப்பா பரிந்து பாரே (542)

## மூட ஞானிகள் செய்கை

பாரேநீ சிறிதுபேர் ஞானம் பார்த்துப்
பதையாமல் மடங்க ளைத்தான் கட்டிக் கொண்டு
காரேநீ பிச்சையெடுத் துண்பார் போல
கருத்தாகக் காவிவே டங்கள் பூண்டு
வாரேதான் யாசகமாய்ச் சேர்த்துக் கொண்டு
வகையாகப் பெண்ணைத்தான் கூடி வாழ்வார்
வேரேதான் ஞானமில்லை யோக மில்லை
விதமாக இரண்டுமின்றித் திரிவார் பாரே (543)

## 524 – 543 உரை

நாலுபங்கு கட்டிள மணியைக் கரியில் வைத்து உருக்கித் தங்கம் ஒரு பங்கு நாகம் ஒரு பங்கு சேர்த்துச் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு பத்துமாற்று. கல்லுப்பைக்கட்டி அதனுள் பாடாணத்தை வைத்து எரித்துக் கட்ட வாதம் நிலைக்கும் பொட்டனைச் சுண்ணம் செய்து பின் சீனச் சுண்ணம் செய்து பின்பு வெடியுப்புச் சுண்ணம் செய்து பாடாணத்தைக் கட்டுக. தங்கமாம் எல்லா வன்மையுமாகும் பாகந்தப்பில் பயனில்லை. வெடியுப்புச் சுண்ணத்தை மறைத்தார். புளி என்று கூறினார். சீனமும் எலுமிச்சம்பழத் தோலுந்தான் புளி. இவற்றைச் சேர்க்காவிட்டால் சுண்ணம் பூக்காது. சிலர் மலத்தைப் புளி என்பர். மூத்திரத்தை அமுரி என்பர். அலையாமல் இருக்க அமுரி சொன்னேன். புளியையும் சொன்னேன். நெடுங்காலம் வாழச் செந்தூரம் சொன்னேன்.

கல்லுப்பைக் கட்டு. வெடிச் சுண்ணம் செய். இலிங்கத்தைச் செந்தூரி செம்பில் உழை. எல்லாம் வெற்றி. அயச்செம்பு உணவு தரும் . முதலிற் கட்டு.

### எல்லாச் சரக்கையும் கட்டியாடுக

திரிவதற்குச் சித்தர்கள்தான் சாத்தி ரத்தில்
திடமாக மறைபொருளாய்ப் பாடிப் போட்டார்
விரிவாக என்னூலில் வெளியாய்ச் சொன்னேன்
வடிவான எல்லாமும் சித்தி யாகும்
நரிபோலே திரியாதே கட்டி யாடு
நாதாக்கள் ஒளித்ததெல்லாம் நிசமு மாகும்
பரிபோலே நடந்துமே திரியா தப்பா
பலகாலும் சாத்திரத்தைப் பரிந்து பாரே (544)

## வாதத்தால் ஞானம் கடல்நுரை கடல்தண்ணீர் இவற்றால் உப்புக்கட்டு கல்லுப்பால் இலிங்கம் நெருப்பில் நிற்கும். செம்பின் வேலையும் ஆகும்

பரிந்துமே ஞானங்கள் வந்த தேது
பரிவான வாதத்தைப் பார்த்த தாலே
தெரிந்துமே கல்லுப்புக் கட்டு ஏது
திறமான கடல்நுரையால் கடல்நீ ராலே
பிரித்துமே இலிங்கந்தான் நெருப்பில் நிற்றல்
பேரான கல்லுப்பால் நின்ற தப்பா
அரிந்துமே செய்தாக்கால் எல்லாம் ஆகும்
அடைவாகச் செம்பொன்னைப் பார்த்தி டாயே (545)

## செய்வகையாய்ச் செய்தால் சிறுபிள்ளையும் வாதம் செய்யும்

பார்த்திடவே யுழைத்தாக்கால் வாத மாகும்
பரியாசம் சொன்னக்கால் தோசம் தோசம்
சேர்த்திடவே சேருகிற வரிசை யாகச்
சேர்த்தாக்கால் தங்கமாம் பொன்னு முண்டு
சார்த்திடவே சாத்திரத்தைப் படித்துத் தேறு
சரியாகச் சோதித்தால் தோன்றும் வாதம்
வார்த்திடவே வாதந்தான் எளிதி லாகும்
வகையாகச் சிறுபிள்ளை செய்யுந் தானே (546)

**ஆனந்தக் களிப்பு –** ஆனந்தக் கலிப்பா என்றும் வேறு பாடம்

## துரிசுச் செம்பெடுக்கும் வழி

செய்யவே இன்னமுஞ் சொல்வேன்--செம்பு
சித்திர மாகவே புத்தியாய்க் கேளு

பையவே தானீல கண்டன் - இரு
பத்துப்பலத்துடன் சேர்சரி காரம் (547)

கல்வத்தி லாட்டி யுருட்டிப் - புடம்
காட்டம தாகவே போட்டெடு வாதி
ஒல்க எடுத்துமே மூசை - இதில்
உள்ளே செலுத்தி யுருக்கி யெடுத்து (548)

## செம்புக்கரி செய்ய

இரண்டரை தான்பல மாகும் - இதைத்
திட்டம தாய்த்தக டாக அடித்து
உண்டிடக் கந்தகம் முக்கால் - இது
உண்மைய தாகச் சுடர்க்கொடி பாதி
(549)

வீரனுங் காலும் நிறுத்து - அதை
விட்டரை செவ்வல்லிப் பூச்சாறு தன்னால்
பாரமாய் நாற்சாமம் ஆட்டி - இதைப்
பத்தியாய்த் தான்ரவி மேலே கவசம் (550)

கட்டி ரவிதனிற் காய - மேலே
கட்டவே சுண்ணமு முப்பது நேரே
திட்டமாய்த் தானரை கட்டு - ரவி
தர்க்கமாய்த் தானே புடமிடத் தோழி
(551)

இட்டு எடுத்து அடிக்க - அதற்
கின்பமாய்த் தான்விழுங் கேளுமே தோழி
விட்டு அதையும் எடுத்து - வைத்து
வீரியமாக ரவிதனிற் கேளு (552)

அரைத்ததோர் கெந்தகம் அப்பி - இதை
அன்பாய் ரவிதனிற் காயவே வைத்து
புரைத்துமே பத்கெருப் போட்டு - எடு
போக்கோடே தானே நொறுங்கிடுந் தோழி (553)

நொறுங்காமல் நின்ற ரவியை - இன்னம்
நுண்ணிமை யாய்க்கட்டித் தான்புடம் போட
கருத்துமே தானே யிருக்கும் - இதைக்
காரண மாக வுருக்கி யெடுக்க (554)

## அயக்களங்கில் தங்கம் காரீயம் சேர்த்து முடிவான செம்பு எடுக்க

ஈயம்போல் சத்தாய் உருகும் -காரம்
இன்பமாய்த் தாக்கி யுருக்கி யெடுத்துத்
தாயகமாக அயமிதைப் - பழந்
தன்னிலே யூறவே வைத்து அலம்பி (555)
செம்பி லயத்தைநீ சேர்த்து - இடை
தீர்க்கமாய் நாலு கடிகை யரைத்து
வம்புசெய் யாமலே காரி - ஒன்று
வாகாகச் சேர்த்து அரைத்துமே கேளு (556)

மூசையில் வாரி யுருக்க -மூன்று
முக்தியாய் ஆடியே நிற்கும் முகத்தில்
கூசையாய்த் தங்கமும் ஒன்று கொடு
கூக்குர லாகவே யாடியே நிற்கும் (557)

## நொறுக்கு வெள்ளி

கணபதி பூசையும் செய்து - வெள்ளி
காட்டியே பத்து நிறுத்துமே கேளு

மணமான காரீயம் ஒன்று - கொடு
மாட்டியே யூதி யெடுத்துப்பின் வாதி (558)

தட்டித் தகடாய் அடித்து - இதில்
தானெடு நாத்தமு முக்காலுஞ் சேர்த்து
நட்டியே சூட னரையும் - வீரம்
நாட்டியே காலிடு தானே - நிறுத்து (559)

பாணியை விட்டு அரைத்துப் புடம்
பத்திடத் தானே நொறுங்கிடு - மட்டும்
காணிய தாக எடுத்து - இடை
காரத்தைச் சேர்த்து உருக்கிடு - தோழி (560)

பசும் பொன்னு மாகுமே வாதி - இதைப்
பார்த்து நிறுத்துடன் பக்குவங் கேளு
அசும்பு படாமல் உருக்கு - அதில்
அன்புடன் தானீயத் தானது கேளு (561)

## களங்கு வேதை

மதிபத்து நாலு களங்கம் - இதை
வாகாய்க் கொடுத்தெடு தான்கருப் பாகும்
பதியவே யூதி யெடுக்க - நல்ல
பக்குவ மாகவே தானெட்டு மாற்று (562)

பொன்னதை விற்றுச் செலவு - பண்ணு
போக்கோடே ஞான வழிதனில் நில்லு
முன்னிட ஒப்புக்குங் காவி - இது
மூர்க்கமாய் நின்று புடமு மிறங்கும் (563)

சொன்னதோர் செந்தூரம் செய்தால் - நூறு
செம்பினால் ஒன்றிடத் தங்கமும் ஆகும்
நன்னய மாகவே வாதி - இதை
நாடியே செய்திடத் தான்சித்தி யாகும் (564)

செப்பின் பாகத்தைப் போலே - செய்து
சித்திர மாகவே யுண்டிடு தோழி
தப்பித மில்லாமல் காயம் - சித்தி
தானே யிருந்திடும் தேகமும் தானும் (565)

கரும்பொன்னைப் பார்த்திடத் தங்கம் - அது
காரண மாகவே வந்திடுந் தோழி
இரும்பு மெளிதல்ல வாதி - யினி
இன்பமாய்த் தானே யிதுபொன்னு மாகும் (566)

### கடல் நீரால் உப்பு கட்டும், அவ்வுப்பை முன்னே செய்துபார். எல்லாமும் வலுக்கும்

உப்பையு முந்தியே பாரு - நல்ல
உண்மைய தாகவே சித்தியு மாகும்
அப்பிடக் கட்டிடு முப்பு - இதில்
ஆனதோர் பாடாணம் முப்பத்தி ரண்டும் (567)

### முன்னே முப்பூவையும் சவுக்காரத்தையும் செய்யாதே எனல்

முப்பூவைச் செய்யாதே பாரு - நல்ல
மூதண்ட மான குருதன்னைப் பார்த்தால்
தப்பிதம் வந்திடுந் தோழி - சவுக்
காரத்தைப் பார்த்துத் தவிக்காதே தோழி (568)

சொற்படி காட்டுமே வேதை - இனி
சொன்ன படிதங்க மாகிடுந் தோழி
நற்படி யூகி முனியும் - உலக
நாட்டிலே சொல்லிட நாட்டிலுள் ளோரும் (569)

தானே துதிசெய்ய வாதி - பாகம்
நாடிடச் சோதியாம் நன்யையுமாகும்
வானே ருஷிசித்தர் தேவர் - நல்ல
வாகான அட்டமா சித்தருங் கூட (570)

## யூகி முனிவர்க்கு வாழ்த்து

எல்லோரும் கூப்பிட்டு யூகி - வர
இன்பமாய் எல்லோரும் மாமகிழ் வாகி
நல்லா இருமென்று சொன்னார் - விடை
நாடியே தானே யனுப்பினார் தோழி (571)

## *544 - 571* உரை

பொருள்களைக் கட்டி ஆடு. கடல் நுரையாலும் கடல் நீராலும் கல்லுப்பைக் கட்டு. கல்லுப்பின் துணையால் இலிங்கம் நெருப்பில் நிற்கும். இனி துரிசுச் செம்பு சொல்வேன். துரிசு இருபது பல த்துடன் வெங்காரம் நேர் எடை சேர்த்து அரைத்து உருட்டிப் புடமிடு உருக்கி எடு. செம்பாகும். இதில் இரண்டரைப் பலம் செம்பு எடு. அதற்கு முக்கால் பாகம் கெந்தியும் சூடன் அரைப்பாகமும் வீரம் காற்பாகமும் சேர்த்துச் செவ்வல்லிப்பூச்சாறு விட்டு அரைத்து அச்செம்பிற்குக் கவசமிட்டு அதற்குமேல் சுண்ணாம்பும் உப்பும் சேர்த்தரைத்துக் கவசமிட்டு புடமிடு அதராக நொறுங்கும் அதன்மேல் கெந்தியை அப்பிப்புடமிடு கரியாகும்.

உருக்கு ஈயம்போல் சத்தாக உருகும். அயத்தைப் பழச்சாற்றில் ஊறவைத்து எடுத்து நாலு நாழிகை செம்புடன் சேர்த்து அதைத்துக் காரீயம் ஒன்றும் சேர்த்தரைத்து உருக்கி உருகுமுகத்தில் தங்கம் ஒன்றுகொடு எல்லாம் உருகியாடும்.

வெள்ளி பத்துப்பலம் எடுத்துக் காரீயம் ஒருபலம் கொடுத்து ஊதினால் வெள்ளியிலுள்ள ஈயம் போகும். பின்பு அந்த வெள்ளியைத் தகடாகத்தட்டி அத்தகட்டின் மேல் கெந்திமுக்கால் சூடன் அரை. வீரங்கால் பாணிவிட்டரைத்துப் பூசிப்புடமிடு நன்றாய் நொறுங்கும் வரை இங்ஙனம் புடமிட எடுத்து வெங்காரம் சேர்த்து உருக்கு இதில் பத்து முன்னர்கூறிய களங்கு நாலு சேர்த்துருக்கக் கருப்பாகும் ஊதி எடு. எட்டு மாற்று களங்கினைச் செந்தூரம் செய்தால் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடத் தங்கமாகும். செந்தூரம் உண்டுவர உடல் உறதிபெறும். இரும்பு எளிதன்று இன்பமான பொன்னாகும் உப்பினை முதலில் பார். வன்மையாகும். கடல் நீரிற்காய்ச்ச உப்பு நன்றாய்க் கட்டும் இதனால் முப்பத்திரண்டு பாடாணமும் கட்டுப்படும் முதலில் முப்பு முடிக்க முயலாதே முதலில் குருமுடிக்க நினைத்தால் தப்புவரும். சவுக்கராத்தையும் முதலில் பார்த்துத் தளராதே. சொன்னபடி செம்பொன்னாம் உலகிற் சொன்னேன். சித்தர் முனிவர் தேவர் அட்டமாசித்தல் எல்லோரும் யூகியை அழைக்க நீர் நன்றாய் இருப்பீராக என்று வாழ்த்தினர்.

## யூகி முனியைத் துதி செய்தது

அனுப்பினார் யூகிமுனி தன்னைத் தானும்
அன்பாக விடைகொடுத்துச் சித்தர் தேவர்
வனுப்பினார் உலகத்து வாதி கட்கு
வகையாகப் பிழைப்புவகை வாதங் காட்டிக்

கனுப்பியே வயித்தியத்தில் கருக்கள் காட்டிக்
கனமான வியாதியுட நிதானங் காட்டி
உனுப்பியே எல்லோரும் கற்றுக் கொண்டு
உறுதியாய் யூகியைத்தான் றுதி செய்தாரே. (572)

## பால்போல் சொன்னேன்
## விதியாளி கண்டுபிடிப்பான்

துதி செய்து எனையாண்ட குருவின் பாதம்
தொல்லுலகில் உள்ளோரும் துதித்துச் சொல்ல
பதிசெய்து நூல்களெல்லாம் பார்த்துத் தேளிப்
பதிவாகக் கறந்தபால் போலே சொன்னேன்
விதகாரன் கண்டுதான் பிடிப்பான் பாரு
விருப்பமில்லா வாதிதான் காணமாட்டான்
நதியான நதியறிந்தால் பலனு மாகும்
நாட்டினால் எல்லாமாம் நலம்பெற் றோரே (573)

## உபதேசித்த பரம்பரை

நலமாகச் சிவன்சொல்லத் தேவி கேட்டு
நாடியே நந்திக்குச் சொன்னா ரப்பா
பலனாக நந்திதான் அசுவனிக்குச் சொல்ல
பதிவான அசுவனியும் விசுவனிக்குச் சொல்ல
அலனாக விசுவனியும் தன்வந்திரிக்குச் சொல்ல
அவ்வழி அகத்தியரும் கேட்டுக் கொண்டு
புலனாகப் புலத்தியருக்கு உபதே சிக்கப்
புலத்தியரும் தேரருக்குச் சொன்னார் தாமே (574)

சொன்னதொரு தேரருமே கேட்டுத் தேறி
சொற்பெரிய யூகிக்குச் சொன்னா ரையா
நன்னயமாய் யூகியே மனம் கீழ்ந்தது
நாடியே யுலகத்தில் மனிதர்க் காகக்
கன்னல்போல் பாவாகப் பாடிச் சொன்னேன்
கருத்துறவே இந்நூலைச் சோதித் தேற
இன்னிலத்தில் வாதசித்தி காய சித்தி
எப்போதும் வாழ்ந்துமே இருக்க லாமே (575)

## புலத்தியார் பாகம் யூகிமுனிக்குக் காட்டியது

இருக்கவே அயச்செம்பு சொல்லக் கேளு
இன்பமாய்ப் புலத்தியரும் சொன்ன பாகம்
நெருக்கவே மலைமுழைஞ்சில் கூட்டிப் போக
நேரான கைபாக நேர்மை காட்டிப்
பெருக்கமா யுபதேசஞ் சொன்னா ரப்போ
பேரான செம்புதான் பெருமை மைந்தா
பருக்கவே சிவனாணை யிந்தப் பாகம்
பதிவாகப் பார்த்திடவே தங்க மாமே (576)

## அயச்செம்பு அயக்காரீயக்கரி

ஆமேதான் அயமதுவும் பலமும் பத்து
அந்தெடைக்குக் காரீயம் நிறுத்துக் கொண்டு
தாமேதான் ரெண்டுமே கல்வத் திட்டுத்
தடையறவே தகடாகத் தட்டிக் கொண்டு
போமேதான் பிச்சுமே போட்டுக் கொண்டு
பின்புதான் கற்றாழஞ் சாற்றி னாலே

சாமேதான் சாமந்தான் அரைத்து வில்லை
சரியாக அரைத்துமே வில்லை கட்டே (577)

கட்டியே ரவியிலிட்டுக் காய்ந்த பின்பு
காட்டாகப் புடம்போட்டு எடுத்துக் கல்வம்
தட்டியே கற்றாழைப் பாலை விட்டு
தாட்டிகமாய்ச் சாமமொன் றரைத்து வில்லை
முட்டியே ரவிதனிலே காயப் போட்டு
மூன்றுபுடம் போட்டுமே எடுத்துப் பாரு
பட்டியே மஞ்சள்போல் இருக்கும் பாரு
பதிவாக அதையெடுத்து வைத்துக் கேளே (578)

## செம்புக் கரி

கேளுமே செம்பதுவும் பலமும் பத்துக்
கெடியாக நிறச்செம்பாய் எடுத்துக் கொண்டு
ஆளுமே ரவியினெடை முக்காற் கெந்தி
ஆதியாம் பண்ணையதும் அரையும் போடு
காளுமே வீரமது பாலுஞ் சேர்த்துக்
காரணமாய்ப் பழச்சாறு சாமம் ஆட்டி
தாளுமே தவித்தகடு மேலே கட்டித்
தாக்கிடவே கவசமது கட்டிக் கொள்ளே (579)

கொள்ளவே ரவிதனிலே காய வைத்துக்
கூறாகச் சுண்ணாம்பு உப்பு நேரே
மெள்ளவே யதையரைத்துக் கவசங் கட்டு
விருப்பமாய் அதன்மேலே மண்ணை யிட்டுத்
துள்ளவே கசவுடமாய்ப் போட்டு வாங்கு
துடியாக எடுத்துபார் அதரு மாகும்

கள்ளமாய் எடுத்துவைத்து உள்ளே நிற்கும்
கனிவான செம்பின்மேற் கவசம் கட்டே (580)

## செம்புக் கரிசெய்ய
## மீதிச் செம்பையும் கரிசெய்ய

கட்டவே முன்னரைத்த கெந்தி தன்னைக்
கடுமையாய்க் கட்டியே முன்போற் போடு
தெட்டவே யெல்லாமும் நொறுங்கு மட்டும்
திடமாகப் போட்டுமே கரியாய்ச் செய்து
நட்டவே ரவிசேர்த்துக் கரியாய்ப் போக
நலமாகப் புடம்போட்டு எடுத்துப் பாரு
செட்டவே எல்லாமும் செத்து தானால்
சேர்க்கவே வகைசொல்வேன் திறமாய்க் கேளே (581)

## செம்புக்கரியும் அயங்காரீயக்கரியும்
## சேர்த்துச் செம்பெடுக்க

திறமாகச் செம்புசேர்த்தி கரியி ரண்டு
திட்டமாய்க் காரிய்யம் சேர்த்த தூளு
அறமாக நாலிலொன்று சேர்த்து அரைத்து
அடைவாகப் பழச்சாற்றால் சாமம் ஆட்டு
வறமாக வில்லைசெய்து காய வைத்து
வலுவாகக் கசபுடமாய்ப் போட்டு வாங்கு
பறமாக எடுத்துஎடை வெங்கா ரஞ்சேர்
பதிவாக வுருக்கிடவே ரவிபோ லாமே (582)

## அயச்செம்பு வேதை

ஆகுமே நொறுக்குவெள்ளி பலமும் பத்து
அன்பான களங்கெல்லாம் இரண்டரையு மாகும்
தாகுமே மதிகொடுத்து உருக்கி யூது
தாட்டிகமாய் மாற்றென்ன ஏழு மாகும்
ஆகுமே ஏழான மாற்றை விற்று
அடைவான சிவயோகம் செய்து தேறு
ஆகுமே செந்தூரம் செய்து தின்று
அடைவான - காயகித்தி யடைவாய்ப் பாரே (583)

### 572 – 583 உரை

சித்தரும் முனிவரும் வாழ்த்தி உலகவாதிக்கு நலஞ்சொன்னீர் என்று கூறினர். போற்றினர். சிவன் முதல் முன்கூறிய வழிவழியாக இம்முறை வந்தது.

இனி புலத்தியர் அருளிய அயச்செம்பு கேள். இந்தப் போக்கு சிவனாணை உண்மை. அயமும் காரீயமும் வகைக்குப்பலம் தகடுகட்டிப் பியத்து நொறுக்கிக் கல்வத்திலிட்டுக் கற்றாழஞ்சாறு விட்டரைத்து வி. த. கா. புடமிடு. இங்ஙனம் ஐந்து புடமிட மஞ்சள் நிறமாகும். பின்பு நிறமான செம்பு பத்துப் பலம் எடு. அதற்று முக்காற்பாகம் கெந்தியும் அரைப்பாகம் லிங்கமும் காற்பாகம் வீரமும் எடுத்துப் பழச்சாறு விட்டரை. பத்துப்பலம் செம்பினையும் தகடுதட்டி அத்தகட்டுக்குப் பூசு. சுண்ணாம்பும் உப்பும் அரைத்துக் கவசமிடு. பின்னர் அதன்மேல் மண்கவசமிட்டுப் பெரும் புடமிடு. எடு. அதராக இருக்கும். அதராகாமலிருக்கும் மிச்சச் செம்பிற்கும் கெந்தி பூசி மீண்டும் மீண்டும் புடம் வைத்து எல்லாவற்றையும் கரியாக்கிக்கொள்.

இந்தக்கரி இரண்டு பலம், முன்கூறிய அயகாரிக்கரி நாலில் ஒருபங்கு சேர்த்து பழச்சாறுவிட்டரைத்துக் கெசபுடமிடு. செம்பாகும். நொறுக்கு வெள்ளிபத்துப்பலம், களங்கு இரண்டரைப்பலம் கொடுத்து உருக்கு ஏழு வயது. விற்று உண். சிவயோகம் செய். உடலைவன்மையாக்கு.

### முப்புவழலை பிண்டமென்பதெல்லாம் இருப்புக்கே பேர்

அடைவான முப்பூவும் இதுதான் அப்பா
ஆதியாம் வழலையது இதுதான் பாரு
திடமாகப் பிண்டமது இதுதான் அப்பா
தியங்கியே திரியாமல் கரும்பொன் பாரு
நடமாடும் இதுவல்லோ ஞானத் துக்கு
நளினமாம் ஆதியடா செம்பின் வேதை
கடமாகச் சொல்லிவிட்டேன் கடையில் தானே
கனமான நூலறிந்தால் வாதி யாமே *(584)*

### வாதம்செய்ய ஆசைகொண்டு முயன்று செய்தால்தான் வாதம் வரும். அதனால் ஞானமாகும்

அறிந்தவன்றான் இவ்வேதை பற்றிப் பாரு
அறியாட்டால் என்செய்வேன் வாதம் பொய்யோ
எறிந்திடவே கல்லதுதான் தூரம் போகும்
எறியாட்டால் தூரவே ஓடுமோ சொல்
பரிந்திட்டால் ஞானங்கள் மிகவு மாகும்
பரியாசம் செய்வதால் நரக மாகும்
புரிந்திட்டால் வாதம்வரும் ஞானம் ஆகும்
புரியட்ட சித்தியெல்லாம் கைக்குள் ளாமே *(585)*

## உலகவாழ்வு பொய்யென்பது

உள்ளாக வாழ்வதுதான் பொய்ய தாகும்
உய்த்துணர்ந்து பாஷாண்டி நிலைக்க மாட்டான்
தெள்ளியதோர் ஞானமாய்ப் பேசுவான்பார்
திறமான செகமெல்லாம் என்னுது என்பான்
துள்ளியே பேசிடுவார் வெறும்பொய் யாகச்
துடியாத அயத்தினுட செம்பைக் காணார்
கள்ளமாய்ச் சொன்னாக்கால் வருகா தப்பா
கருத்துறவே சரக்கைமுந்தி உழைத்தி டாயே (586)

## இந்நூல் முடிவுவரைப் பார்த்தால் தங்கம் செய்யலாம்

உழைத்திட்டால் அயக்காரி செம்பைத் தானும்
உண்மையாய்த் தங்கமாம் காவி நிற்கும்
பிழைத்திடவே பலனாகும் பிழையோ இல்லை
பிரபலமாய்ச் சொல்லாதே பெருமை மெத்த
தழைத்தமரம் போலவே வேதை பாரு
தாட்டிகமாய் இந்தநூல் கடைசி பாரு
வழைத்திடவே வாதம்வரும் - ஏவல் கேட்கும்
வடிவாக வந்துவிடும் மார்க்க மாமே (587)

## அயம் காரீயம் சேர்த்துப் புடம்போட்டுப் பின்பு செம்புக் கரியில் சேர்த்தால் செம்பு கட்டிப்போம்

மார்க்கமாய்ச் செம்புகட்ட நிதானங் கேளு
மனதார அயக்காரி இரண்டும் சேர்த்து

ஏர்க்கவே புடம்போட்டால் மஞ்ச ளாகும்
இனியென்ன பேச்சுண்டு தங்கந் தானும்
ஆர்க்கமாய்ச் செத்தசெம்பு தன்னி லிட்டால்
அன்பான செம்புகட்டும் அருமை மைந்தா
தீர்க்கமாய்ப் பார்த்தாக்கால் வாத மாகும்
திடமில்லை என்றுவிட்டால் பொய்ய தாமே *(588)*

## பஞ்சலோகம் சேர்ந்தால் பொன்னாகும்

பொய்யாகப் போகாமல் தங்கம் காரி
போக்கோடே செம்பு அயநாகம் சேர்ந்தால்
மெய்யாகப் பஞ்சபூ தங்க ளாச்சு
மேன்மையாய்ப் பொன்னாகும் தங்க மாகும்
வையகத்தில் உனக்கீடோ பூதம் பாரு
வகைகெட்டுத் திரியாதே வேதை யாகும்
பையவே பூதத்தைப் பார்த்தாய் ஆனால்
பதிவான ஏவலது கேட்கும் பாரே *(589)*

## மூன்றுலோகத்தில் வேதை

பாருமே பூதமது மூன்று கேளு
பதிவான அயங்காரி செம்பு சேர
நேருமே இத்துடனே கெந்தி வீரம்
நிலவரமாய்ச் சேர்ந்திடவே ஐந்து மாச்சு
காருமே ஐந்துக்கு மாற்று ஏழு
கருணைபெற நாகதங்கம் சேரா தாலே
வாருமே பத்துக்கு ஏழ தாச்சு
வடிவாக இனவழியாய்ச் சேர்த்துக் கொள்ளே *(590)*

## பஞ்சபூதத்தில் ஒன்றுகுறைந்தால் மாற்றுக்கட்டையாம் கல்லுப்பும் ரசமும் சேர்த்து உருக்கினால் தங்கமாகும் ஆகையால் உப்பைப்பார்

கொள்ளவே பஞ்சபூ தத்தி லொன்று
குணமாகத் தப்பிடிலோ மாற்றுக் கட்டை
விள்ளவே கல்லுப்பும் ரசமும் சேர்ந்தால்
மேன்மையாய் உருகிடலோ தங்க மாகும்
துள்ளியே திரியாமல் உப்பைப் பாரு
துடியாகச் செலவுமெத்தத் தானு மில்லை
வள்ளலார் சொன்னபடி உலகத் தோர்க்கு
வகையான ஆயுர்வே தத்தைத் தானே *(591)*

## முன்னேயுப்பைக் கட்டினால் வாதம் நிலைக்கும்

சொன்னதொரு வாதமெல்லாம் எளிதி லாகும்
சுருதியைநீ ஆராய்ந்தால் தோன் றும் பாரு
நன்மைமாய் வாதமென்றால் எளிசோ அல்ல
நற்குருவும் ருஷிகள் சித்தர் சொன்னபேச்சு
இன்னிலத்தில் கறந்தபால் போலே சொன்னேன்
இகபரத்துக்கொப்பாக வுண்மை யுண்மை
முன்னமே யுப்பையல்லோ கட்டிப் பாரு
முற்றுமாய் வாதம்வந்து நிலைக்கும் பாரே *(592)*

## உப்பைவிட்டு வாதம்செய்து கெட்டுச் சாத்திரம் பொய்யென்பார்

பாருமே உலகத்தில் வாதி மார்கள்
பதிவான உப்பைவிட்டு வாதம் பார்த்து

தேருமே சேர்ந்துதிரிந் தலைந்து கெட்டுத்
திடமில்லை சாத்திரம்பொய் என்பார் பாரு
பாருமே மலைகள்சுற்றிக் காடு சுற்றிப்
பரிவாக ஒருவருந்தான் சொல்லா தாலே
வாருமே யிருந்தஇடந் தனிலி ருந்தால்
வகையாக இருக்கலாம் என்பார் பாரே (593)

## 584 – 593 உரை

இரும்பினையே முப்பு வழலை பிண்டம் என்றெல்லாம் இயம்பினர். செம்பு அதனொடு சேரின் மாற்றாகும். அயக்காரிச் செம்பை உண்மையாய் உழைத்துச் செய்தால் தங்கமாகும். இந்நூலை இறுதிவரைப் பார்த்துச் செய். மாற்றுத்தொழில்- ஏவல் கேட்கும். அயக்காரி இரண்டும் புடமிட மஞ்சளாகும். செம்பிலிட்டால் செம்பு கட்டும். பொன்னாக்கும். தங்கம் காரி செம்பு அயம் நாகம் இவை ஐம்பூதப் பொருள்கள். இவை ஒழுங்காகச் சேர்ந்தால் செம்பொன்னாகும். அயம்காரி செம்பு இவை மூன்று பூதம். இவற்றொடு கெந்திவீரம் சேர ஏழுமாற்று. நாகமும் தங்கமும் சேராமையாலே ஏழுமாற்று ஆயிற்று. ஐம்பூதத்தில் ஒன்று குறையின் மாற்றுக் கட்டையாம். கல்லுப்பும் ரசமும் சேர்ந்து உருகினால் தங்கமாகும். முதலில் உப்பைக் கட்டு.

## சங்கரன் திராவகத்தின் பெருமை

பார்க்கவே சங்கரன் திராவ கத்தைப்
பாடுகிறேன் உலகத்தில் பரிந்து கேளு
ஏர்க்கவே சாத்திரத்தில் சொன்னா ரில்லை
ஏழைமதி போகாமல் புகைநீர் பாரு

மூர்க்கமாய் வந்துவிடும் சரக்குக் கட்டும்
முடியுமட்டும் வேதையாம் சுண்ண மாகும்
மார்க்கமாம் நவலோகம் எல்லாம் நீறும்
வடிவாகப் பொன்மயமும் ஆகும் பாரே (594)

## சங்கரன் திராவகம் சரக்கு எடை

பாருநீ வெடியுப்பு அறுப தாகும்
பதிவான இந்துப்பு முப்ப தாகும்
சேருநீ சாரமது இருப தாகும்
செயமுள்ள பேதியது ஒன்ற தாகும்
காருநீ நீலனது அரையு மாகும்
கடிதான சீனமது முந்நூ றாகும்
சாருநீ பூநீறு ஒன்ற தாகும்
சரியாக நிறுத்துமே சொல்லக் கேளே
(595)

## சங்கரன் திராவகம் செய்பாகம்

சொல்லவே கல்லுரலில் இடித்து மாப்போல்
செயமான பானைதனி லரைதா னிட்டு
மெல்லவே சட்டியென்ற வாலை மூடி
விருப்பமாய் உழுந்தாலே மண்ணுஞ் செய்து
வல்லவே யடுப்பிலே யேற்றி வைத்து
வளமாகத் தீயெரிப்பாய் கமலம் போல
கல்லவே முன்னீரைத் தள்ளிப் போட்டுக்
கனமான பின்னீரை வாங்கிக் கொள்ளே (596)

## சங்கரன் திராவகம் வைக்கும் பாத்திரமும் திராவகத்தின் பெருமையும்

வாங்கியே அரக்கென்ற குப்பி தன்னில்
வளமாக அடைத்திடவே குப்பி தக்கும்
தாங்கியே லோகமென்றால் கரைந்து நீறும்
தனையதிலே வைக்காமல் தண்மை பாரு
தாங்கியே திரியாமல் பெருமை யாகும்
துடியாமல் சொல்லுகின்றேன் உலகத் தோர்க்கு
வாங்கியே முப்புரத்தை எரித்தாற் போல
வளமாகும் திராவகத்தின் ஆண்மை தானே. (597)

## சங்கரன் திராவகம் செய்யும் வேலை

ஆண்மையாம் சூதமதைப் பீங்கா னிட்டு
உடைவாகப் புகைநீரை விட்டு வைக்க
தாண்மையாய் ரவிதனிலே நீறிப் போகும்
தனியான லிங்கத்தில் ஊற்றி வைக்க
பாண்மையாய் இலிங்கமது நீறிப் போகும்
பதிவான தங்கத்திலிட்டு வைக்கத்
தூண்மையாய் ஏமமது நீறிப் போகும்
துடியான அரப்பொடிதான் நீறிப் போமே (598)

## சங்கரன் திராவகத்திலரைத்து உப்பிலெரித்தால் எல்லாம் நீறும்.

நீறிப்போம் உப்புமுதல் இருபத் தைந்தும்
நொடிக்குள்ளே நவலோகம் எல்லாம் நீறும்

ஆறுமே பாஷாண மெல்லாம் நீறும்
அளவான வேதையாம் வேதை கோடி
கா றுமே கட்டாகும் மெழுகு மாகும்
கனமான கல்லுமுதல் நீறிப் போகும்
வா றுமே நீறினதோர் சரக்க தெல்லாம்
வடிவான கல்லுப்பில் எரிக்க நீறே. (599)

## மூலிகை யிலரைத்தால் ஒன் றும் நீறமாட்டா து. அதன் பயன் இதுவாகும்.

நீறேது மூலிகையில் அரக்கச் சொன்னேன்
நேரான மூலிகையைச் சொல்லக் கேளு
காறேது அவுரியொடு ஓரிலைத்தா மரையும்
கனிவான செவ்வல்லி புளிநரலை கோவை
பாறேது கொடிவேலை செந்தி ராயும்
பதிவான செம்பரத்தம் பூவி னோடும்
நாறேது அயச்செம்பு இடம தெல்லாம்
நலமாக இவைவிட்டு அரைத்தி டாயே. (600)

## அயச்செம்பு வந்த இடத்தில் மேற்சொல்லிய மூலிகையில் கிடைத்ததைக் கொண்டு செய்க.

அரைத்திடவே கையதனில் கிடைத்த மூலி
அன்பாக ஏதொன்றால் அரைக்கச் சித்தி
புரைத்திடவே ஈதெல்லாம் செம்பாச் சப்பா
பொ றுமையாய்ச் செம்புசெத்தால் எழுப்பு, மூலி
பரைத்திடவே பழச்சாறு நல்ல தாகும்
பதிவான யூகிமுனி சொன்ன சொல்லால்
நிரைத்திடவே வேதையாம் ரவியு மாகும்
நீடூழி காலமெல்லாம் இருப்ப தாமே. (601)

**அயச்செம்பு வந்த இடமெல்லாம் எலுமிச்சம்பழமும் செம்பரத்தம்பூச்சாறும் சேர்த்தரைக்கவும்.**

இருக்கவே பழச்சாறு பிழிந்து கொண்டு
இதமாகப் படியரைதான் பீங்கா னிட்டு
இருக்கியே செம்பரத்தைப் பூவைப் போட்டு
இதமாக வைத்திடவே ரத்தம் போலாம்
பருக்கவே கண்கூசும் நீறு மாகும்
பதிவான அயச்செம்பு இட மெல்லாமும்
பெருக்கவே இச்சாறு விட்டு ஆட்டு
பிலப்படுமே செம்பதுவும் பேசொ னாதே. *(602)*

**இனமறிந்து மூலிகை விட்டரைக்கவும்.**

பேசவே சொல்லவில்லை பூவைத் தானும்
பிலமாக எலுமிச்சஞ் சாற்றி லூற
ஆசவே வைத்திடவே யிரத்தம் போலாம்
அதையறிந்து இப்படியே செய்து கொள்ளு
வாசவே செம்புவந்த இடத்திற் கெல்லாம்
வகையாக அரைத்திடவே செம்பு தோன்றும்
நாசவே யினமறிந்து அரைக்க வேண்டும்
நற்குணமும் துர்க்குணமும் நயந்து பாரே. *(603)*

**மூலிகையால் அயஞ்செம்பாக மாட்டாது. செம்பு சேர்ந்தால் அயஞ்செம்பாகும்.**

நயந்துபார் சுடுவாதி கூட்ட மாகா
நலமாக ரவிசேர அயஞ்செம் பாகும்
வியந்துமே வெறும்அயத்தை மூலி தன்னில்
விதமாக அரைக்கரைக்கக் கரியாய்ப் போகும்

பயந்துமே பொய்யென்று சொல்லு வாரைப்
படபடத்த வாதிதான் புத்தி யில்லான்
கயந்துபார் மடைகாத்த கொக்கைப் போல
கனிந்துமே திரிந்த லைந்து மாளுவானே. *(604)*

**தனியே அயம் செம்பாக மாட்டாது.**
**செம்பு சேர்ந்தால் செம்பாம்.**
**அயம் சேர்ந்தால் பொன்னாம்.**

மாளாமல் அயச்செம்பு சேர்ந்த போது
மணத்துடனே பொன்னாகும் வடிவு மெத்த
நீளாமல் கரிசெம்பு சேர்ந்த போது
நிமிஷத்தில் வேதையாம் நயப்பு மெத்த
வாளகப் பெண்புருஷர் சேர்ந்த தாலே
வகையாக உருத்தரிக்கும் வாறு போல
கோளாக அயந்தானே செம்பா காது
குறித்த செம்பு சேர்ந்தாக்கால் கட்டிப் போமே. *(605)*

**சூழ்ச்சத்தைக் கண்டு பார்க்கவும்.**

கட்டிப்போம் இச்செம்பு வெள்ளி தன்னில்
காட்டிடவே ஏமமாம் வேதை யாகும்
தட்டியே வாய்ப்பேச்சால் சொன்னால் ஆமோ
தடையற்றுச் செய்தாலே ஏம மாகும்
குட்டியே கவர்கோடி வேதை கோடி
குணமான மணம்வேணும் கூர்ந்து பாரு
கட்டியே துடிதுடித்துத் திரிய வேண்டாம்
சூழ்ச்சாதி சூழ்ச்சத்தைக் கண்டு பாரே. *(606)*

### கட்டின உப்பால் சூதம் கட்டிக் குளிகை செய்து பொன் கவனங்கள் செய்தோம்.

கண்டுபார் கட்டினதோர் உப்பெ டுத்துக்
கரியில்வைத் துருக்கிப்பார் பொன்போ லாகும்
பண்டுபார் உப்புதொட்டுச் சூதம் கட்டிப்
பதையாமல் குளிகைகட்டிப் பறந்தோம் நாங்கள்
தொண்டுபார் பொன்செய்து ஆடித் தேர்ந்தோம்
துரிசறவே அண்டத்தின் கோட தேறி
நின்றுபார் அடுக்கெல்லாம் ஆய்ந்து பார்த்து
* நீற்றினம்யாம் உப்பினுட பொருமை தானே. (607)

நீற்றனம் நிர்ணயமாய். பா. வே.

### கட்டிய வுப்பால் ஆறாதார தரிசனை கண்டு அப்புறம் சென்று அடுக்குகளைக் கண்டு சாத்திரங்கள் பாடி நந்தி தரிசனை செய்து தோத்திரம் செய்தோம்.

பெருமையாய் ஆறுவரை தாண்டி யேறிப்
பேசாதே மாசற்ற நிர்க்கு ணத்தை
அருமையாய் மனமூன்றிப் பார்த்துத் தேர்ந்து
அடுக்காறு தலத்தில் நின்று * சேவித்து ஏறி
நிருமையாம் சாத்திரமும் பாடித் தேர்ந்து
நிர்க்குணத்தின் வழிநின்று நெடுநாளாகக்
கருமையாய் நந்தியென்ற பாட்ட னாரைக்
கனிவாக நாவினால் துதிசெய் தேனே. (608)

* செபித்து

## நந்தீசரால் யூகிமுனியென்று பேர்கொடுக்கப்பட்டு திருவண்ணாமலையில் வெகுநாளிருந்தேன்.

துதிசெய்தேன் சுருதியாய்ச் சொன்னா ரையா
துப்புரவாய்க் கேளாது கேட்டுக் கொண்டேன்
பதிசெய்து நம்முடைய மரபு தானும்
பதிவான ருஷிமரபு பேதம் மெத்த
கதிபெறவே கடாட்சித்து யூகி யென்றார்
கருணைபெற அடியேனும் ஒப்புக் கொண்டு
நிதிபெறவே திருவண்ணாமலையில் வந்தேன்
நெடுங்காலம் அங்கிருந்து உரை செய்தேனே. *(609)*

## உமையாள் அருளால் பதினாயிரம் பாடல் பாடினதைச் சுருக்கி இவ்விரண்டு காண்டத்தில் உலகிற்குச் சொன்னேன்.

உரைசெய்தேன் சாத்திரந்தான் சொல்லக் கேளு
உண்மையாய்ப் பதினாயி ரத்தின் சொச்சம்
கரைசெய்த * நூற்றாறு மண்ட லத்தில்
கனிந்துமே இச்சுருதி யிருந்த தென்று
பரைசெய்த பார்வதியைக் கேட்டுக் கொண்டேன்
பதிவான் பார்வதியும் கொடுத்த னுப்பத்
துரைசெய்தேன் நூலெல்லாம் சுருக்கிப் பாடிச்
சூழ்ச்சமெல்லாம் சொல்லிவிட்டேன் உலகத் தோர்க்கே.
*(610)*

* நூற்றறுபதாம் மண்டலத்தில். பா. வே.

**வாத நூலெல்லாம் ஆதிதொகுத்தந்தியம் வரைக்கும்
பார்த்தால் ஒன்றையொன்று தொடர்ந்து
கருத்தாயிருக்கும்.**

*உலகத்தில் மானுடர்கள் சாத்தி ரத்தை*
*உண்மையாய்ச் * காப்போடுங் கடையாய்ப் பார்த்தால்*
*@ நிலமொத்தாற் போலவே தோன்றும் வாதம்*
*நிர்ணயமாய்ப் பார்த்தாக்கால் வாத மாகும்*
*கலகத்தே திரிந்தவன்தான் பார்த்தா னானால்*
*கருவான வாதமது நிலைகொள் ளாது*
*$ அலையற்ற இடத்திலே மீன்கள் போல*
*# வலுவொக்கும் நிர்மூட வாதி கேளே.* (611)

* காப்போடுங்கடையோடும்
@ நிலவொத்த போலவே
$ வலையற்ற
# வானொக்கும்

### 594 – 611 உரை

*வெடியுப்பு 60. இந்துப்பு 30. காரம் 20. அன்னபேதி 1. துரிசு ½. சீனம் 300. பூநீறு 1. கல்லுரலிலிட்டு மாப்போல் இடித்து பாலையிலிட்டுத் தீநீர் வடித்துக்கொள். சூதம் இலிங்கம் தங்கம் அரப்பொடி உப்பு இருபத்தைந்து ஒன்பது உலோகம் பாடாணம் எல்லாம் தனித்தனி பீங்கானிலிட்டுத் திராவகம் விட்டு வைக்க நீறிப்போகும். கட்டாகும். மெழுகாகும். நீறினவற்றைக் கல்லுப்பில் வைத்து எரிக்க நீறாகும். அவுரி ஓரிலைத்தாமரை செவ்வல்லி புளிநரலை கோவை கொடிவேலி செந்திராய் செம்பரத்தம்பூ இவற்றின் சாற்றை விட்டு அயச்செம்பு கூறிய இடங்களுக்கு எல்லாம் (பொருள்களில் ஊற்றி) அரைக்க நலம். செம்பு செத்தால்*

எழுப்பும் மூலிகை இவை. செம்பரத்தம்பூவும் எலுமிச்சம்பழச் சாறும் சேர்த்திட்டு ஊற்றியரைக்க நலம். செம்பு சேர்ந்தால் அயச்செம்பாகும். வெறும் மூலிகையால் ஆகாது. அயச்செம்பை வெற்றியிற் கொடு. கட்டிய உப்பைக் கரியில் வைத்துருக்கு. பொன்போல் உருகியாடும். உப்புத் தொட்டுச் சூதம் கட்டிக் குளிகை கட்டிப்பறந்தோம். அண்டமுகட்டிலேறிப் பார்த்தோம். ஆறு அடுக்கில் நின்று மேல் வெளியேறி நின்று தவம்புரிந்து நந்தியென்ற பாட்டனாரை வாழ்த்தினேன்.

## கட்டியவுப்புச் சுண்ணம்

கேளுமே கட்டினதோர் உப்புத் தன்னைக்
கெடியான சுண்ணமது சொல்லக் கேளு
நாளுமே பலம்பத்து நிறுத்துக் கொண்டு
நாயுருவிக் கொழுந்ததுவும் இடையே சேர்த்துக்
காளுமே யரைத்துநீ புடத்தைப் போடு
கனிவாக ஐந்துதரம் உருவி யாலே
பாளுநீ யரைத்துநீ புடத்தைப் போடு
பதிவாகக் கடுஞ்சுண்ணம் ஆகும் பாரே. *(612)*

## உப்பேச் சுண்ணச் செயநீர்

ஆகுமே சுண்ணமெடை சாரம் சேர்த்து
அன்பாக நெட்டடங்கு மட்டுந் தானும்
ஏகுமே யரைத்துமே கலையந் தன்னில்
இன்பமாய் எடுத்துவைத்துப் புடமும் போடு
தாகுமே பனியில்வைக்கச் செயநீ ராகும்
தாக்கிடவே செயநீரில் வீரம் பூரம்
பாகுமே பொடித்துச் செய நீரில்போட்டால்
பதிவான நீர்ப்பெருமை சொல்லக் கேளே. *(613)*

### உப்புச் செயநீரால் பச்சைக் கற்பூரமும் சூடமும் சேர்ந்த சுண்ணம்.

சொல்லவே நிறமதுவும் சிவப்பு மாகும்
சூழ்ச்சமாய் வெகுகாரம் துறைகள் மெத்த
நல்லவே செயநீர்தான் பலமு மொன்று
நலமான பீங்கானில் விட்டுக் கொண்டு
கல்லவே பச்சைக்கற் பூரந்தானும்
கனமான சூடனது பலமும் கேளு
வல்லவே வகைக்கொன்று பலமும் போட்டு
வகையான அறுசாமம் அரைத்துக் கொள்ளே. (614)

### பச்சைக் கற்பூரம் சூடன்சேர்த்த சுண்ணச்செயநீர்

கொள்ளவே வில்லைசெய்து காயப் போட்டு
கூறாக அஞ்சுசுண்ணக் குகைக்குள் வைத்து
மெள்ளவே பத்தெருவில் புடத்தைப் போடு
மேன்மையாம் நீறியது சுண்ண மாகும்
நள்ளவே சுண்ணமெடை சாரம் சேரு
நலமாகச் செயநீராம் நாட்டடங் கேளு
கள்ளவே செயநீரின் பெருமை தன்னைக்
கனமான நாவினால் சொல்லப் போமோ. (615)

### செயநீரால் நிமிளைச் சுண்ணமும் அதனால் துரிசுச்சுண்ணமும் அதனால் சூதக்கட்டும்.

போமேதான் இந்நீரில் நிமிளை தன்னைப்
போக்கோடே தோய்த்திட்டு ஊதிப் போடு
காமேதான் கடுஞ்சுண்ண மாகும் பாரு
கடிதான கண்டர்மேல் அப்பிப் போடு

வாமேதான் பத்தெருவில் புடத்தைப் போடு
வளமாக நீறிவி.டும் துரிசு தானும்
தாமேதான் கண்டரைத்தான் சூதம் மேலே
தாக்கிடவே கட்டியது மணியு மாமே. (616)

**கட்டிய சூதத்தைச் செயநீரால் அரைத்து ஊதச் சுண்ணச்செயநீராய் எல்லாம் சுண்ணமாகும்.**

மணியாகும் சூதத்தை முன்னீர் விட்டு
மாட்டியரை கரியில்வைத்து ஊதிப் போடு
தனியான சூதமது சுண்ண மாகும்
தாட்டிகமாய்ச் சகலமுந்தான் சுண்ண மாகும்
கணியான லோகமெல்லாம் சுண்ண மாகும்
கருகினால் சுண்ணமது சூழ்ச்ச மாகும்
வணியாக இதனாலே யெல்லாம் சுண்ணம்
வகையாகத் தொட்டதெல்லாம் சுண்ணமாமே. (617)

**கல்லுப்பைக்கட்டிச் சுண்ணம் செய்யப் பாஷாணங்கள் உபரசங்கள் யாவும் சுண்ணமாய் வேதையாகும்.**

சுண்ணமாம் பாஷாண உபர சங்கள்
சூழ்ச்சமாய்ச் சுண்ணமாம் வேதை யாகும்
சுண்ணமாம் உபரசங்கள் நூறிரண்டு பத்தும்
கனமான சுண்ணம் வேதை கோடி
முன்னமே சொல்லிவிட்டேன் உப்பைக் கட்ட
முதன்மையாய்க் கல்லுப்பைச் சுண்ணம் செய்து
நன்னயமாய் எடுத்தாடச் சித்தி யாகும்
நலமாகப் பாய்ச்சிடவே தோணும் தானே. (618)

## காரீயத்தால் செம்பு திடப்படும்.

தானென்ற கல்லுப்பால் வேதை கோடி
தாட்டிகமாய் அயச்செம்பால் கவரோ கோடி
கானென்ற வெடியுப்பால் வேதை கோடி
கனிவான கடல்நுரையால் சுண்ணம் கோடி
பானென்ற சீனத்தால் கவரோ கோடி
பரிவான புகைநீரால் போக்குக் கோடி
வாளென்ற காரீயத் தாலே செம்பு
வளப்படுமே அயந்தானும் மார்க்க மாமே. (619)

## 612 – 619 உரை

கட்டிய உப்பு ஒருபத்துப்பலம் எடு. நாயுருவிக் கொழுந்து அதனெடை சேர். உரை. புடமிடு. இங்ஙனம் ஐந்துமுறை. கடுஞ்சுண்ணம். சுண்ணத்தினெடை காரம் சேர்த்து அரைத்துக் கலயத்திலிட்டுப் புடமிட்டு எடுத்துப் பனியில் வைக்கச் செயநீராகும். வீரம் பூரம் பொடித்துப் போடு. சிவப்பாகும். பச்சைக் கற்பூரமும் சூடனும் வகைக்கு ஒரு பலம் எடுத்து ஒருபலம் திராவக விட்டரைத்து வி. த. கா. அஞ்சு சுண்ணக்குகைக்குள் வைத்துப் பத்தெருப்புடமிடச் சுண்ணம் ஆகும். அதனெடை சாரம் சேர்க்கச் செயநீராகும். இந்நீரில் நிமிளையைத் தோய்த்து ஊது. கடுஞ்சுண்ணம். துரிசின்மேல் அப்பிப் புடமிடு. நீறிவிடும். சூதத்தில் தாக்கு. கட்டும் மணியாகும். மணியில் செயநீர் விட்டரைத்து ஊது சுண்ணமாகும். இதனாலே எல்லாமே சுண்ணமாகும். உலோகம் பாடாணம் உபரசம் நூற்றிருபது ஆகியன சுண்ணமாகும். மாற்றும் கோடி. கல்லுப்பாலும் அயச்செம்பாலும் வெடியுப்பாலும் தனித்தனியே மாற்றுகோடி. கடல்நுரையால் சுண்ணம் கோடி. சீனத்தால் கோடி கவராகும்.

புகைநீரால் கோடி போக்குமாற்று உண்டாம். காரீயத்தால் செம்பு வளமாகும்.

## லோகபஞ்ச பூதக் களங்கு

மார்க்கமாய் லோகபஞ்ச பூதஞ் சேர்ந்த
மதியான களங்குதான் சொல்லக் கேளு
ஈர்க்கவே இக்களங்கு பாக மாக
இன்பமாய்ச் செய்தாக்கால் ஏம மாகும்
ஊக்கமென்ற ஐந்தினால் எல்லா மாகும்
உண்மையாய் ஐந்தைவிட்டால் எல்லாம் பாழாகும்
சேர்க்கின்ற இம்மருந்து சேர்த்தான் ஆனால்
சிறப்பான அட்டசித்தி யாடலாமே. *(620)*

## அயச்சத்து

ஆடவே இன்னமொரு களங்கு சொல்வேன்
அம்பலத்தில் சிவன்தானும் சொன்ன நேர்மை
பாடவே புகைநீரில் கெந்தி வீரம்
பண்பாக மனோசிலைதா ளகமுங் கூட்டி
வாடவே வகைக்கு ஒரு பலம்நிறுத்து
வகையாக அரைத்திடவே சாமம் நாலு
மூடவே யரைத்துமே காய வைத்து
முடிவான அரப்பொடிதான் பலமும் நாலே *(621)*

நாலுமே பலம்நிறுத்துப் பழச்சாற் றாலே
நலமாக அலம்பியே காய வைத்துச்
சாலுமே முன்மருந்தில் பிசரிக் கொண்டு
சரியான குகைதனிலே வைத்து ருக்கக்

காலுமே யொருமணியாய்த் திரளும் பாரு
கணக்கான மணியெடுத் துடைத்துக் கொண்டு
பாலுமே புகைநீரை விட்டு ஆட்டிப்
பதிவாக வுருக்கிடவே யீய மாமே. (622)

ஈயமாம் வெங்காரம் கொஞ்சம் சேர்த்து
இழுத்தரைத்துப் புகைநீரில் ஆட்டி மூசை
தாயகமாய் வைத்துமே யுருக்கிப் பாரு
தடையற்று வெள்ளியோல் கண்விட்டா டும்
பாயுமே யிப்படியே யுருக்கிக் கொள்ளு
பதிவாகக் கல்மிசங்கள் விலகும் பாரு
தோயவே கன்மிசங்கள் அற்றுப் போனால்
துடியாக நவலோகம் தங்க மாமே. (623)

## வங்கச் சத்து

தங்கமாம் அயச்சத்தை யப்பால் தானே
தடையறவே யெடுத்திட்டு அப்பால் வைத்து
வங்கமாம் வெள்ளீயம் பலந்தா * னென்று
வடிவாகப் பாதிசேர் சூதந் தன்னை
தங்கமாய் உருக்கியே புட்டாய்ச் செய்து
துடியான அயக்கரண்டி தனிலு ருக்கு
பங்கமாம் மனோசிலையும் அரையும் போடு
பதிவாகப் புகைநீரால் அரைத்துக் கொள்ளே. (624)

* நாலு. வே. பா.

அரைத்துமே வில்லைகட்டிக் காயப் போட்டு
அன்பாகப் பத்தெருவில் புடத்தைப் போடு

நிரைத்துமே வெங்காரம் கொஞ்சம் சேர்த்து
நேராக வுருக்கிடவே வெட்டை யாகும்
புரைத்துமே வெள்ளீயம் செத்துப் போகும்
புதுமையாய் லோகத்தை யுடைக்கா தப்பா
நரைத்துமே இதுவேதை சொல்லப் போகா
நலமாகச் சொல்லுகிறேன் நாடிப் பாரே. *(625)*

## காரீயச் சத்து

நாடிப்பார் சத்தெடுத்து அப்பால் வைத்து
நலமாகச் சொல்லுகிறேன் இன்னஞ் சத்து
தேடிப்பார் காரீயம் பலந்தா னென்று
திரமாகக் கரண்டியினி லுருக்கிக் கொண்டு
மூடிப்பார் சூதமரை நிறுத்து ஊற்று
முன்பாகப் பிட்டாகும் எடுத்துக் கொண்டு
பாடிப்பார் கெந்தியரைப் பலம்நி றுத்து
பதிவான காரீயப் பிட்டில் சேரே. *(626)*

சேருமே கல்வத்தில் இட்டுக் கேளு
செயமாகப் புகைநீரில் சாமம் ஆட்டிப்
பாருமே வில்லைகட்டிக் காயப் போடு
பதிவாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
காருமே குகையிலிட் டுருக்கிப் போடு
கனிந்துமே வெட்டையாய்ச் சத்தாய்ப் போகும்
தாருமே சத்தெடுத்துப் புறம்பாய் வைத்து
தன்மையாய்ச் சொல்லுகிறேன் பின்பு கேளே. *(627)*

## செம்புச் சத்து

கேளுமே காரீயம் சத்தாய்ப் போச்சு
கெடியாக ஆடலாம் வாத மாட்டு

பாளுமே போகாமல் சொல்லக் கேளு
        பதிவான செம்பதுவும் பலமும் ஒன் று
நாளுமே நி றுத்ததனைத் தகடாய்த் தட்டி
        நலமாக அரைக்கத்திரா வகத்தை விட்டு
காளுமே களிம்பூறும் களிம்பு தன்னில்
        கனமான சாதிலிங்கம் அரையும் சேரே. *(628)*

சேர்த்துமே யிழுத்தரைத்து வில்லை யாக்கிச்
        செயமாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
பார்த்துமே யெடுத்துப்பார் குகையில் வைத்துப்
        பதிவாக வுருக்கவே யீய மாகும்
கார்த்துமே யீயந்தான் நல்ல சத்து
        கனிவான வாதமெல்லாம் இதற்குள் ளாகும்
நார்த்துமே செம்புசத்தை யப்பால் வைத்து
        நலமாகச் சொல்லுகிறேன் கேட்டி டாயே. *(629)*

## நாகச்சத்து

கேட்டிடவே நாகமது பலமு மொன் று
        கெடியாக இலுப்பைநெய் யதிலே பத்து
தாட்டிடவே யுருக்கியே சாய்த்துக் கொண்டு
        தனியாகக் கரண்டிதனில் உருக்கும் போது
வாட்டிடவே சூதமரைப் பலந்தா னிட்டு
        வகையாகப் புட்டாக எடுத்துக் கல்வம்
நீட்டிடவே அரைத்துநீ புகைநீ ராலே
        நிலவரமாய் அயச்சத்தை யிடையே சேரே. *(630)*

சேருமே புகைநீரால் அரைத்து வில்லை
        ·திடமாகக் காய்ந்தபின்பு சொல்லக் கேளு

பாருமே பத்தெருவில் புடத்தைப் போடு
பண்பாகக் குகையிலிட் டுருக்கிப் போடு
நாருமே நாகமது சத்தாய்ப் போகும்
நலமான சத்தெடுத்துப் பார்க்கும் போது
சாருமே வெட்டையாய் இருக்கும் பாரு
சரியான சத்தாகும் நாகச் சத்தே. (631)

## ரவிதங்கச் சத்து

சத்தெடுத்து அப்பாலே வைத்துக் கொண்டு
சரியான தங்கமது பலமு மொன்று
முத்தியாய்ப் படுசெம்பு பலமு மொன்று
முடிவாக இதுரெண்டும் சேர்த்து ருக்கி
நித்தியாய்த் தகடாகத் தட்டிக் கொண்டு
நிலையான கந்தகமும் வீரந் தானும்
புத்தியாய் வகைக்குஒரு பலம்நி றுத்துப்
புதுமையாய்ப் புகைநீரால் ஆட்டிக் கொள்ளே. (632)

## நேராகப் பஞ்சபூதச்சத்துக்கள் சேர்க்கும் வழி

ஆட்டியே தகட்டின்மேல் தடவிக் காய
அன்பாக நொறுங்கவுமே புடத்தைப் போடு
தீட்டியே எடுத்துருக்கச் சத்தாய்ப் போகும்
திடமான சத்தெடுத்துப் புறம்பாய் வைத்து
மூட்டியே சத்தெல்லாம் சேர்க்கக் கேளு
முனிவாக அயச்சத்து பலமும் ஒன் று
நாட்டியே வெள்ளீயச் சத்து மொன்று
நலமாகக் காரீயச் சத்து மொன்றே. (633)

ஒன்றான செம்புசத்துப் பலமும் ஒன்று
உயர்த்தியாம் நாகசத்துப் பலமும் ஒன்று
தின்றான தங்கச்சத்துப் பலமும் ஒன்று
திறமாகச் சத்தெல்லாம் ஆற தாச்சு
கன்றான பிருதிவிதான் தங்க மாச்சு
கலந்துநின்ற காரிவெள் ளீய மப்பு
தின்றான செம்பதுவும் தேய்வு மாச்சு
சிறப்பான அயம்வாய்வு நாகா காசம். (634)

## பஞ்சபூத திட்டாந்தரம் வேதையாகும் வழி

ஆச்சப்பா இவைதாமும் பஞ்ச பூதம்
அறிவு கெட்டவாதிகளே சொல்லக் கேளு
நாச்சப்பா வுடலதனில் பஞ்ச பூதம்
நலமாகத் தப்பிவிட்டால் சடலம் நிற்கா
பாச்சப்பா இப்படித்தான் வாத மார்க்கம்
பதிவான தேகம்போல் பஞ்ச பூதம்
காச்சப்பா எடுத்துமே செய்தா னானால்
கனகமுண்டு தெருவினிலே இறையும் பாரே. (635)

## களங்கம் உருக்கி யெடுத்துப் பூசை செய்ய

இறையவே பஞ்சகர்த் தாக்கள் தானும்
இதமாகச் சத்தாச்சு வகைய தொன்று
அறையவே குகைதனிலே ஒன்றாய்ப் போடு
ஆதியாய்க் காரமிட் டுருக்கித் தீர
நிறைசரியாய் உருக்கியே களங்கு மாக்கி
நீதியாய்க் களங்குவைத்துப் பூசை செய்வாய்
கறைமிடற்றார் அடியார்க்குச் சொன்ன மார்க்கம்
கடைசியிலே சொல்லிவிட்டேன் களங்கைத் தானே. (636)

### முதற்செம்பெடுக்கும் வழி

தானான துரிசதுவும் பலமும் எட்டுத்
தாக்கவே வெங்காரம் எட்டுச் சேர்த்து
கோனான திராவகத்தால் ஆட்டி யுண்டை
குணமாக வுருக்கிடவே செம்பாய்ப் போகும்
பானான செம்பதுவும் பலம்ரெண் டாச்சு
பதிவான தகடாகத் தட்டிக் கொண்டு
நானான நாறும்பூ பலமும் ஒன்று
நலமாகச் சூடனது அரையும் போடே. (637)

### செம்புக் கரியோடு முன்களங்கும் சேர்த்துக்கொள்ள

போட்டுமே புகைநீரால் ஆட்டிக் கேளு
பொறுமையாய் செம்பின்மேல் கவசம் கட்டி
நாட்டுமே ரவிதனிலே காயப் போட்டு
நலமாகப் பெரும்புடமாய்ப் போட்டுத் தீரு
வாட்டுமே நொறுங்கியது தூளாய்ப் போகும்
வடிவாக நொறுங்கினதோர் தூளி ரண்டு
பாட்டுமே பஞ்சலோகக் களங்க தொன்று
பதிவாக வுருக்கியே சேர்த்துக் கொள்ளே. (638)

### பஞ்சலோகக் களங்கு வேதை

சேர்த்துமே திராவத்தால் ஆட்டி வில்லை
செப்பமாய் ரவியிலிடு காய்ந்த பின்பு
பார்த்துமே பத்தெருவில் புடத்தைப் போடு
பதிவாக வுருக்கியே எடுத்துக் கொள்ளு

நாத்துமே நொறுக்குவெள்ளி போட்டுக் கொள்ளு
நலமான வெள்ளியெட்டு களங்கு ஒன்று
காத்துமே கொடுத்துருக்கள் கருப்பாய் நிற்கும்
கனிவாக அதையெடுத்து ஒட்டி லூதே. *(639)*

ஊதிடவே தங்கமாம் உயர்த்தி மெத்த
ஓஓஓ தங்கமயம் ஆகும் பாரு
பாதிடவே தட்டியே புடத்தில் வைக்கப்
பதிவாகத் தங்கமது இறங்கும் பாரு
காதிடவே கனகமாம் இந்தப் போக்கு
கைகண்ட யூகிமுனி கருத்தாய்ச் சொன்னேன்
வேதிடவே கடைசிதனில் சொல்லிப் போட்டேன்
விகிதமாய்ச் சிவனாணை விரும்பி டாயே. *(640)*

## பஞ்சலோகக் களங்குச் செந்தூரம்

விரும்பிடவே களங்கமதைச் செந்தூரிக்க
விருப்பமாய்க் களங்கமதை அயத்தில் சேர்த்து
அரும்பிடவே குகையிலிட்டு உருக்கிப் போடு
ஆஆஆ உருகியது மணிபோ லாகும்
துரும்பிடவே தூணான வாறு போல
துடியான புகைநீரில் அரைத்து வில்லை
கரும்புபோல் ரவிதனிலே காயப் போடு
கடிதாக எடுத்துமே சொல்லக் கேளே. *(641)*

எடுத்துமே பத்தெருவில் புடத்தைப் போடு
எளிதன்று செந்தூரம் ஆகும் பாரு
அடுத்துமே செம்புருக்கி நூற்றுக் கொன்று
அடைவாக இட்டிடவே தங்க மாகும்

தொடுத்துக்கோ ஞானத்தில் மரபில் நில்லு
துடிக்காதே வாய்மூடு சூழ்ச்சம் பாரு
கடுத்துமே சொன்னாக்கால் தலைபோம் அப்பா
காரமாம் வேதையதைக் கருதிப் பாரே. (642)

கருதிப்பார் பணவெடை தான் தேனில் உண்ணு
கனிவாக மண்டலத்தில் உண்டு தேறு
பருதிபோல் இருக்குமடா தேகம் தானும்
பதினாறு வயதுபோல் சாவோ இல்லை
வருதியே மலைபோல தேகம் தானும்
வடிவாகும் மன்மதன்போல் அழகு மாகும்
உருதியாய்ச் சொல்லிவிட்டேன் உலகத் தோர்க்கு
உண்மையது கடுஞ்சுருக்குச் செய்து கொள்ளே. (643)

## 620 - 643 உரை

ஐம்பொருட்களங்கால் எல்லாம் திறப்படும். ஐந்தை விட்டால் எல்லாம் பாழாகும். அம்பலத்துச்சிவன் சொன்ன களங்கு ஒன்று காண். கெந்தி வீரம் மனோசிலை தாளகம் வகைக்கு ஒருபலம் எடுத்துப் புகைநீர்விட்டு நாலுசாமம் அரைத்துக் காயவை. அரப்பொடி நாலுபலம் எடுத்துப்பழச்சாற்றில் போட்டு அலம்பிக் காயவை. இரண்டும் விரவிக் குகையில் வைத்து உருக்கு. மணியாகும். உடை. புகைநீர்விட்டரை. உருக்கு. ஈயமாகும். பின்னர் வெங்காரம் சிறிது சேர்த்துப் புகை நீர் விட்டரைத்து மூசையில் வைக்கு உருக்கு. வெள்ளிபோல் கண்விட்டாடும். இங்ஙனம் சுடறும் வரை உருக்கு. கரடு தீர்ந்தால் ஒன்பதும் செம்பொன்னாம். இதுவரைக் கூறியது அயச்சத்து. இனி வங்கச்சத்துக் கூறுவேன். ஒருபலம் வெள்ளீயத்தையுருக்கி அரைப்பலம் ரசம் சேர்க்கப் பிட்டாகும். எடுத்து அயக்கரண்டியிலிலுருக்கி மனோசிலை பாதி சேர்த்துப் புகைநீர்

ஊற்றியரைத்து வி. த. கா. சீ. ம. செ.10 எருப்புடமிடு. வெங்காரம் சேர்த்து உருக்க வெட்டையாகும். வெள்ளீயம் செத்துப் போகும். உலோகத்தில் சேரும்போது அதனை உடைக்காது. இதன் மாற்று சொல்லிலடங்காது.

காரீயச்சத்துக்காண். ஒரு பலம் காரீயம் உருக்கி அரைப் பலம் ரசம் ஊற்றிப் பிட்டாக்கியரைப்பலம் கெந்தி சேர்த்துப் புகைநீர்விட்டு அரைத்து (ஒருச்சாமம்) வி. த. கா. பத்தெருப் புடமிடு. வெட்டையாய்ச் சத்தாகும்.

இனி செம்பின் சத்துக் கூறுவேன். ஒருபலச் செம்புத்தகட்டில் திராவகம் விட்டரைக்கக் களிம்பு ஊறும். அந்தக் களிம்பொடு அரைப்பலம் சாதிலிங்கம் சேர்த்து அரைத்து வி. த. கா. பத்தெருப் புடமிடு. எடு. உருக்கு. ஈயமாகும். இது நல்ல சத்து.

இனி நாகச் சத்துக் காண்போம். இலுப்பெண்ணெய்யில் உருக்கிச் சாய்த்து எடுத்த நாகம் ஒரு பலத்தை இரும்புக்கரண்டியிலுருக்கி யரைப்பலம் சூதம் சேர்க்கும் முறையறிந்து சேர்த்துப் பிட்டாக்கிப் புகைநீர்விட்டு அரைத்து அயச்சத்தை அதனெடை சேர்த்துப் கைநீரூற்றியரைத்து வி. த. கா. சீ. ம. செ. பத்தெருப் புடமிடு. குகையிலிட்டுருக்கு. சத்தாகும். வெட்டையாக இருக்கும்.

**தங்கச் சத்து:** செம்பும் தங்கமும் வகைக்கு ஒரு பலம் சேர்த்துருக்கித் தகடு தட்டிக் கந்தகமும் வீரமும் வகைக்கு ஒருபலம் புகைநீர் விட்டரைத்து மேற்படி தகட்டின்மேல் தடவிப் புடமிட நொறுங்கும். எடுத்துருக்கச் சத்தாகும்.

அயவெள்ளீய காரீய தங்க நாகச் செம்பு ஆகிய அறுவகைச் சத்தும் வகைக்கு ஒருபலம் எடுத்துக் காரமிட்டுக் குகையில்

வைத்து ஊது. களங்கமாகும். எடு. பூசை செய். இறைவன் தன் அடியார்க்கு இயம்பிய முறைமை இது. தங்கம் மண்ணின் சாரம். காரீய வெள்ளீயங்கள் நீரின் சாரம். செம்பு நெருப்பின் சாரம். இரும்பு காற்றின் சாரம். நாகம் வெளியின் சாரம். உடல் ஐம்பூதக் கலப்பு. தங்கமும் ஐம்பூதக்கலப்பினதே. ஒன்று குறைந்தாலும் ஒவ்வாது. (யூகிமுனிவர் கும்மியும் காண்க.)

**செம்பு எடுக்க:** துரிசும் வெங்காரமும் வகைக்கு எட்டுப்பலம் திராவகம் விட்டரைத்து வி. த. கா. உருக்கு. செம்பாகும். இது இரண்டுபலம் தகடுதட்டு. கெந்தி ஒருபலமும் சூடன் அரைப்பலமும் திராவகம் ஊற்றியரைத்துத் தகட்டிற் பூசிப் பெரும்புடமிடு. நொறுங்கித் தூளாகும். இத்தூள் இரண்டு பலம். ஐம்பொற்களங்கு ஒருபலம். உருக்கிச் சேர்த்துத் திராவகம் விட்டரைத்து வி. த. கா. சீ. ம. செ. பத்தெருப்புடமிடு. உருக்கி எடு. நொறுக்கு வெள்ளி எட்டுக்கு ஒன்று சேர். கருப்பாக இருக்கும். ஓட்டில் வைத்து ஊது. தங்கமாகும். இது மிகவுயர்ந்தது. கைகண்டது. கருத்துடன் சொன்னேன். மாற்றுச் செய்ய இறுதியில் சொல்லிவிட்டேன். சிவனாணை.

களங்கும் அயமும் உருக்கி உடைத்துப் புகைநீர் ஊற்றியரைத்து வி. த. கா. பத்தெருப்புடமிடு. நல்ல செந்தூரமாகும். செம்பில் நூற்றுக்கு ஒன்று சேர். தங்கமாகும். வாயைமூடு. (நாகாக்க). தேனில் நாற்பதுநாள் உண். என்றும் பதினாறு. மன்மத அழகு. மலைபோல் உடம்பு.

## பூசை முறை

செய்துமே வாய்மூடு தினமுந் தேறு
தினமாகப் பூசைசெய்து சிறப்ப தாக
பைதுமே நாற்பத்து முக்கோ ணத்தில்
பதிவாகக் கண்டுமே தெரிசித் தேறு

நைதுமே யொருநினைவில் நின்று தேறு
நாடினால் பொன்னுண்டு நலம்பெற் றோர்க்கு
பொய்யெல்லாம் சொல்லியே திரிய வேண்டாம்
புரட்டாகச் செய்தாக்கால் எல்லாம் போச்சே. *(644)*

## சாராயம் கள்ளு கஞ்சா அபின் இவைகளைச் சேர்ப்பது பூசையன்று

போச்சுமே பூசையென்றால் கள்ளோ வன்று
புரட்டான சாராயம் கஞ்சா வல்ல
வாச்சுமே யபினியன்று சொல்லக் கேளு
வகையான சிவபூசை செய்து தேறு
காச்சுதே சிதம்பரத்தில் நடனம் செய்யும்
கயிலையுரை சித்தரெல்லாம் வந்து சேர்வார்
நீச்சாகப் போச்சுதென்று கவனிக் காதே
நிர்த்தொந்தம் ஆடியே நின்றி டாயே. *(645)*

## அரக்கின் சாயமெடுத்து நூலிற் சேர்ப்பதுபோல் அயத்தின் சாயமெடுத்து வெள்ளியிற் சேர்த்தால் வேதை தொலையாது.

நிற்கவே யரக்கில் நின்ற சாயம் போல
நிலவரமாய்ச் செய்தாக்கால் வாத மாகும்
உற்கவே * யிரும்பதிலே சாயம் போட்டால்
உள்ளபடி பார்த்தாக்கால் தங்க மாகும்
துற்கவே தொ லையது # நம்பியப்பா
துடியான தங்கத்தைப் பண்ணி வைத்து
வற்கமாய் மனிதரைப்போல் நினைவில் நில்லு
வடி வாக இருந்திடத்தில் வாழ்வாய் காணே. *(646)*

* நூல்தனிலே # கும்பியப்பா

## நவலோகச் செந்தூரப் பெருமை

காணவே நவலோகச் செந்தூ ரத்தைக்
கைமுறையாய்க் காட்டிடவே கருத்தாய்க் கேளு
ஊணவே சட்டைகக்கும் தேகம் தானும்
உகாந்தவரை சடம்தானும் கல்ல தாகும்
தோணவே தேகமது சிவந்து மின்னும்
துடியாகப் பசுநரம்பு ஓடி மின்னும்
ஆணவே உடம்புகத் தூரி வீசும்
உடைவாகக் கெவுனவழி யோடுந் தானே. *(647)*

## சூதத்தைக் கட்டில் வாதமாம்

ஓடுமே சூதத்தைக் கட்ட வேணும்
உலுத்தனவன் சுடுவாதி ஒப்பு மல்ல
நாடுமே மனசொன்றி நாட வேண்டும்
நாடாத வேறென்ன கழுதை மேய்க்கி
கூடுமே சுடரறிந்து கூட வேண்டும்
கூடாதே பெண்ணரவம் உலுத்த மாடு
தேடுமே ரசவாதம் தேட வேண்டும்
தேடாட்டால் சித்தியில்லை தெளிவாய்ப் பாரே. *(648)*

## கட்டியரசம் துளியாய்ந்தால் வாதமாம்

தெளிவாகக் கட்டினால் பொன்னு முண்டு
தேறாதே போனாக்கால் என்ன செய்வான்
அளிவான புத்தியினால் ஒன்று மில்லை
அறிவறிந்து செய்தாலோ எல்லா மாகும்

துளிபாய்ந்தால் உருவாகும் இல்லாப் போனால்
தூக்கமாய் இருப்பார்கள் உலக வாதி
களியான மனத்தைவிட்டுச் சுழியி லேறிக்
கண்டுமே யிருக்க வென்றால் பெண்ணைத் தள்ளே. (649)

## வாதசித்தி முன்னே செய்துகொண்டால் பின்பு அநந்தம் சீடர் வருவார்கள்

பெண்சாதி வைத்துமே துக்கப் பட்டுப்
பெரிதான பணம்வேண்டும் என்று சொல்லித்
திண்டாட்டப் பட்டுமே தியங்க வேண்டாம்
திறமான சாத்திரத்தைப் பார்த்துத் தேறு
கொண்டாட்டம் செய்யவே வேண்டா மையோ
குறிப்பான வாதசித்தி செய்தாற் பின்னே
தொண்டாக வருவார்கள் சீடர் தானும்
தொல்லுலகில் அரசாள்வீர் தொன்மை காண்பீர். (650)

## ரசமும் பாடாணமும் உப்பில் எரித்தால் கட்டும் பற்பமாகும்

காணவே யுப்பிலிட்டுச் சூதங் கட்டு
கணக்காக எரிந்திடவே சூதம் நீறும்
தோணவே வாதிமார் உப்பைவிட்டுத்
தொல்லுலகில் அலைவார்கள் மூலி தேடி
தாணவே யப்பில்லா வாதி கையில்
தாழ்ச்சியாய் அதிகமுந்தான் சூதம் உண்டு
வாணவே பாடாணம் உப்பிற் கட்ட
வகையான வேதையாம் வண்மை பாரே. (651)

## மூலிகையிற் சூதங்கட்ட வாதமாம்

வண்மையாய் மூலிகையில் சூதம் கட்ட
வகையாகச் சொல்லுகிறேன் வாதி கேளு
தண்மையாய்ப் பதினெட்டுச் சித்தர் சொன்ன
தடையெல்லாம் வெளிவிட்டுச் சொல்லக் கேளு
உண்மையாய்ச் சிவயூகி முனிதன் சொல்லை
உறுதியாய் நம்பியே செய்து கொள்ளு
தண்மையாய்ப் பாகமாய்ச் செய்து கொள்ளு
தடையறவே வாதமாம் தாக்கிப் பாரே. *(652)*

## ரசபற்பம் செய்யும் பாகம்

தாக்கியே சூதமது சேர தொன்று
தடையறவே நிறுத்துமே கல்வத் திட்டுப்
பாக்கியமாய்க் கல்லுப்புப் படியும் போட்டுப்
பண்பாக இடித்துமே பொடியாய்ச் செய்து
தூக்கியே செங்கல்மா படியும் ஒன்று
துடியாக இரண்டுமொன்றாய்க் கலந்து கொண்டு
வாக்கியே சட்டிதனில் உப்பு விட்டு
வகையாக அமுக்கியே நடுவிற் கேளே. *(653)*

## ரசபற்பம் எரிப்பு

நடுவிலே குழிசெய்து அதிலே சூதம்
நாட்டியே யிட்டுமே சட்டி மூடிக்
கடுமையாய் ஏழுமண் சீலை செய்து
கட்டாய மாகவே யடுப்பி லேற்றி

வடுவாகக் கமலங்கா டாக்கினி யாக
வலுமையாய்ச் சாமமது இருபத் தொன் று
துடிவாக வெரித்திட்டு ஆற வைத்துத்
துப்புரவாய்ப் பிட்டுமெல்லப் பார்த்தி டாயே. *(654)*

## ரசபற்பத்தையெடுத்து மூலிகை விட்டரைக்கும் வழி

பார்த்திடவே தந்தம்போல் வெள்ளை யாகும்
பதிவாக மயிர்க்குச்சி தன்னால் தானே
சேர்த்துமே யெடுத்துமே கல்வத் திட்டுச்
செயமாக வரைக்கின்ற மூலி கேளு
காத்திடவே நூறாண்டின் வேம்பு தன்னின்
கனமான இலைதன்னை யுருவிப் போட்டுப்
பார்த்திடவே குறுகஅரி பாண்டத் திட்டுப்
பதிவான பாணிதனைச் சொல்லக் கேளே. *(655)*

## மூலிகைச் சாறெடுக்கும் வழி

சொல்லவே கலத்தண்ணீர் விட்டுக் காய்ச்சிச்
சுயமான எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொண்டு
மெல்லவே கிட்டியால் பிழிந்து கொண்டு
மேன்மையாய்க் கியாழத்தில் சொல்லக் கேளு
நல்லவே முன்னெரித்த ரசபற் பத்தை
நாட்டியே கியாழத்தி னுள்ளே விட்டு
வல்லவே குழம்பாகக் காய்ச்சிக் கொண்டு
வகையான கல்வத்தில் வழித்துப் போடே. *(656)*

### ரசபற்பத்தில் மூலிகைச் சாறுவிட்டரைத்து உப்பில் வைத்து எரிக்க

போட்டுமே யரைத்திடவே நாலு சாமம்
பெரிதான வில் லைதட்டிக் காயப் போட்டு
நாட்டுமே முன்சட்டி யுப்பில் வைத்து
நலமாக எரித்திடவே யுயர வேறும்
காட்டுமே யதைவழித்துக் கல்வத் திட்டுக்
கனிவான வேம்பின் கியாழத்தி லாட்டி
மூட்டுமே வில்லைபண்ணி யுப்பில் வைத்து
முடிவாக எரித்திடவே பற்பமாமே. *(657)*

### மூலிகையிற் செய்த ரசபற்பத்தில் வேதை

பற்பத்தை யெடுத்துமே மெழுகி லோட்டிப்
பதறாதே யிருபதுக்கு ஒன்று தாக்கு
அற்பமென் றெண்ணாதே மாற்று ஆறு
அன்பாகப் பசுமையாய் இருக்கும் பாரு
கற்பத்துக் கிதுதானே யாதி யாகும்
கருத்தான நோயெல்லாம் கருதி யோடும்
நற்புதுமை யாகவே சொல்லிப் போட்டேன்
நாதாக்கள் இப்படியே பார்த்திட் டாரே. *(658)*

### குருபரம்பரையாய்ப் பார்த்துக் கொண்டது. இந்த ரசபற்பம். இதையுலகத்தார்க்குச் சொன்னேன்.

பார்த்திட்ட நந்தியென்ற தேவர் தானும்
பதிவான அகத்தியரும் பார்த்துத் தேறி
கோத்திட்ட தன்வந்திரி பார்த்துத் தேறி
குடியான புலத்தியரும் பார்த்துத் தேறி

சார்த்திட்ட தேரருமே பார்த்துத் தேறி
சகலசித்து மாடிவர யூகி சொன்னார்.
நாத்திட்ட பாவனைபோல் உலகம் தன்னில்
நலமாகக் ஸ்கைபாகம் செய்து தேறே. *(659)*

## *644 – 659 உரை*

*644-652* அறிவுரை. இரசபற்பம் செய்யும் வழி காண்க. இடித்த கல்லுப்பு ஒருபடியும் இடித்த செங்கல்மா ஒருபடியும் சேர்த்துக் கலந்து சட்டியில் போட்டு அமுக்கி நடுவில் பள்ளம் செய்து ஒரு சேர் ரசத்தை அதில் விட்டுக் கவிழ். சட்டி மூடி 7 சீ. ம. செ. அடுப்பிலேற்றித் தாமரைப்பூந்தீயும் காட்டுத்தீயுமாக இருபத்தொரு சாமம் எரித்து ஆறவைத்துப் பிட்டுப் பார்க்கத் தந்தம் போல் வெள்ளையாகும். மயிர்க்குச்சியினால் வழி. பின்பு நூறாண்டு வேம்பின் இலையை உருவியாந்து ஒருகலத் தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க் குறுகக் காய்ச்சிக் கிட்டி கட்டிப் பிழிந்து அந்தக் கியாழத்தினுற் முன்பு வழித்த ரசபற்பத்தைப் போட்டுக் குழம்பாகக் காய்ச்சி கல்வத்தில் போட்டு நாலு சாமம் அரைத்து வி. த. கா. முன் சட்டிக்குள் உப்பில் வைத்து எரி. உயர ஏறி இருக்கும். மீண்டும் வழித்துக் கியாழம் விட்டாட்டி வி. த. கா. உப்பில் வைத்து எரி. பற்பமாகும். எடுத்து மெழுகில் ஒட்டிக் கலந்து (செம்பில்) இருபதுக்கு ஒன்று கொடு. ஆறு மாற்றாகும். கற்பத்துக்கு இது முதன்மை. நோயெல்லாம் போய்விடும். நாதாக்கள் இங்ஙனம் பார்த்தார். நந்தி முதல் தேரர்வரை இங்ஙனமே செய்தனர்.

## காரீயச் செந்தூரம்

தேறவே யின்னுமொரு வேதை மார்க்கம்
செப்புவேன் கெட்டியாய்ப் போடலாகும்

ஆறவே காரீயம் பலமும் பத்து
அடைவான கற்றாழம் நீரிற் சுத்தி
தாறவே தகடாகத் தட்டிப் பியத்துத்
தாட்டி கமாய்க் கல்வத்தில் போட்டுக் கொண்டு
பாறவே வெடியுப்பு நாலத் தொன்று
பதறாமற் போட்டுமே பரைக்கக் கேளே. (660)

## காரீயத்தை யரைத்து ஐந்துமுறை புடமிடு

அரைக்க வே கற்றாழை நீரிலாட்டி
யடைவாகச் சாமமே யிரண்டு சென்றால்
துரைக்கவே வில்லைதட்டி ரவியிற் போடு
துடியாகப் பெரும்புடமாய்ப் போட்டுக் கொண்டு
கரைக்கவே யெடுத்துப்பார் மஞ்சள் போலாம்
கனிவாகக் கற்றாழம் பாலி லாட்டிப்
புரைக்கவே புடம்போடு ஐந்து தானும்
பொறுமையாய் வங்கத்தைப் பேர்சொண்ணாதே. (661)

## வெடியுப்புத் திராவகம்

பேசவே எடுத்துவைத்து அப்பாற் கேளு
பிரிவாக இரதமது பலமும் பத்துப்
பாசவே வெடியுப்பு பலமும் பத்துப்
பதிவாகச் சீனமது இருபத் தைந்து
காசவே யிரண்டுமொன்றாய் இடித்துக் கொண்டு
கணக்காகக் கவசமரை வாசியிட்டு
மோசவே வாலையென்ற சட்டி மூடி
முன்னீரைத் தள்ளியே பின்னீர் வாங்கே. (662)

## திராவகத்தால் ரசம் பூத்தல்

வாங்கியே யரக்கென்ற குப்பி யில்தான்
வளமாக வடைத்துமே சொல்லக் கேளு
தூங்கியே திரியாமல் பீங்கா னிட்டுத்
துப்புரவாய் ரசஞ்சேரு விட்டுக் கொண்டு
பாங்கியே திராவகத்தை விட்டுக் கொஞ்சம்
பதிவாக ரவிபடவே வைத்துக் கேளு
ஏங்கியே பார்த்தாக்கால் பூத்து நிற்கும்.
இதமாகப் பூவெல்லாம் எடுத்துக் கொள்ளே. *(663)*

## பூத்த ரசத்தையும் காரீயச் செந்தூரத்தையும் சேர்த்து அரைத்து உப்பில் வைக்கவும்

எடுத்துமே மீட்டுந்திரா வகத்தை விட்டு
இதமாகப் பூக்குமட்டும் வைத்துக் கேளு
அடுத்துமே இப்படியே யெல்லாந் தானும்
அளவாகப் பூத்ததெல்லாம் வாங்கிக் கொள்ளு
தடுத்துமே காரீயம் ஐந்தில் ஒன்று
தலையான பூத்தரச மெடையே சேர்த்து
அடுத்துமே யரைத்துமே யுப்பி லிட்டு
வகையாக மண்ணேழு சீலை செய்யே. *(664)*

## உப்பில் எரிக்கி

செய்துமே எரித்துப்பனி ரெண்டு சாமம்
செயமாக எரித்திட்டுப் பிரித்துப் பாரு
கைதுமே யுயரவே யேறி நிற்கும்
கனிவாகச் சுரண்டியே யடியிற் போடு

ஐந்துமே காரீய வில்லை போட்டு
நலமாகச் சேர்த்தரைக்கத் திராவ கத்தால்
வெய்துமே முன்சுட்டி யுப்பு தன்னில்
விதமாக நடுவில் வைத்து மேலே மூடே (665)

## வங்கரச செந்தூரம் செம்பில் கொடுக்கத்தங்கமாம்

மூடியே சீலைமண் ணேழு செய்து
முடிவாக எரித்திடவே சூதந் தானும்
நாடியே கட்டியே யடியில் நிற்கும்
நலமாகச் செந்தூரம் முருக்கம் பூப்போல்
பாடியே திரிந்தாலும் அகப்ப டாது
பதிவான வங்கரச செந்தூ ரத்தை
காடியே செம்பில்முப் பதிற்கு ஒன்று
காட்டிடவே தங்கமாம் கருதிப் பாரே.
(666)

## வங்கரச செந்தூரம் கொடுக்கத் தங்கம் பச்சையாய் இருக்கும்

கருதியே வங்கமென்ற தங்கந் தானும்
கனிவாகப் பச்சைபோல் இருக்கும் பாரு
நிருதியே பசுமைமெத்த இருக்கும் பாரு
நினைவாக மதத்தினால் கர்ச்சிக் காதே
வருதியே யுலகத்தில் மனிதர் வந்து
வலுவாகச் சொல்லென்பார் சொல்ல வேண்டாம்
பொருதியே பொந்தாத மனிதர் போலப்
புகழாக இருந்துமே ஞானம் பாரே. (667)

**காரீயச் செந்தூரம்:** பத்துப் பலம் காரீயத்தைக் கற்றாழை நீரிலுருக்கிச் சாய்த்துத் தூயதாக்குக. தகடுதட்டிப் பிய்த்துக் கல்வத்தில் போட்டு நாலில் ஒன்று வெடியுப்புச் சேர்த்து இரண்டு சாமம் கற்றாழை நீர்விட்டரைத்து வி. த. கா. பெரும்புடமிடு. இங்ஙனம் ஐந்து முறை அரைத்துப் புடமிடு. எடு. பின்பு வெடியுப்புத் திராவகம் இறக்கு. ஒரு பீங்கானில் ஒரு சேர் ரசம் விட்டு அதில் திராவகமும் ஓரளவு விட்டு வெயிலில் வை. ரசம் உப்பாகப் பூத்து நிற்கும். எஞ்சிப் பூக்காமலிருக்கும் ரசத்திலும் திராவகம் விட்டுப் பூக்கச் செய். ஐந்தில் ஒரு பாகம் வங்கபற்பம் சேர்த்து அரைத்து உப்புப் பானைக்குள் உப்பின் நடு வைத்து 7 சீ. ம. செ. பன்னிரண்டு சாமம் எரி. உயர ஏறும். பிரி. சுரண்டி எடு அடியிலுள்ள காரீய வில்லையையும் சேர்த்து திராவகம் ஊற்றி யரைத்து முன்சட்டியுப்புக்குள் வை. 7 சீ. ம. செ. எரி. ரசம் கட்டும். அடியில் நிற்கும். செந்தூரமாகும். செம்பில் முப்பதிற்கு ஒன்று கொடுக்கச் செம்பொன்னாகும். வங்கதங்கம் பசும்பொன்னாக இருக்கும். அடக்கமாக இரு. வெளிவிடாதே.

## வாதம் செய்தால் லோகம் திடப்படும்

ஞானமே பார்க்கவே சொன்னேன் பாரு
ஞானத்தைக் கற்றுக்கொள் பொறுமை யாக
மோனமே யிருந்தாக்கால் * தலையும் தங்கும்
மோழையாய் இருந்தாக்கால் கொல்வா ரப்பா
வானகமும் விண்ணகமும் உன்னுதாச்சு
வகையாக வாதமெல்லாம் எளிதி லாகும்
தீனமே வகாரத்தைச் செய்தால் லோகம்
திடப்படுமே மனத்தில்பரத் தீர்க்கந் தானே (668)

* முப்பும்

## இன்னது தப்பினால் இப்படியாம்

தீர்க்கமாய் நிறைதப்பில் பாகம் தப்பும்
திறமான எரிப்பினுட பாகந் தப்பில்
பார்க்குள்ளே இரதமது தப்பிப் போகும்
பதிவாகச் சீலைமண்தான் தப்பிற் றானால்
ஏர்க்காது ஓடியே போகுங் கண்டீர்
ஏத்தமாய்ச் சுத்துமுறை தப்பி னாக்கால்
வார்க்குமே வாந்தியது மினவும் பண்ணும்
வடிவான புடபாகம் தப்பக் கேளே. (669)

கேளுமே தீமிஞ்சில் கருமை யாகும்
கெடியான குகையுடைந்தால் சிட்ட மாகும்
தாளுமே கெந்தியுடன் பட்டாற் கேளு
தனியான தங்கமாம் வேதை யாகும்
ஊளுமே ஊத்தினத்தில் உருக்குத் தப்பில்
ஒன்றுமில்லை கிட்டானாய்ப் போகும் பாரு
வாளுமே வகைதப்பில் பாகந் தப்பும்
வரிசையாய்ச் சாத்திரத்தில் நுழைந்து பாரே. (670)

## செம்புகள் எடுத்துத் தங்கத்தில் சேர்த்துப் பின்பு வெள்ளியில் சேர்க்கவும்

நுழைந்துபார் அயச்செம்பு காரிச் செம்பு
நுணுக்கமாய் எடுத்தாக்கால் தங்கம் நேரே
அழைஞ்சுமே யதனெடைக்குச் சேர்த்துக் கொண்டு
அடைவான் மதியினிடம் * பாய்ச்ச வேண்டும்

கழைஞ்சுமே தங்கமாம் வேதை யாகும்
கனமான பொருளாகும் காட்சி மெத்த
நழைஞ்சுமே யயச்செம்பை யெடுத்து வெள்ளி
நலமாகக் கொடுத்தாக்கால் ஆகா தென்றே. (671)

* பாகம்

## வேகாக்கால் துரிசு. சாகாத்தலை அயம் என்பது

ஆகாது என்று சொல்லி மலைக்க வேண்டாம்
அறிவாக மனதூன்றிப் பார்த்துத் தேறு
வேகாத காலேது என்றாற் கேளு
விருப்பமாய்த் துரிசு என்ற பேர தாகும்.
சாகாத தலையெது என்றாற் கேளு
தனியான அயமதுதான் தனித்துப் பாரு
நாகாது இது இரண்டால் வாதம் ஆச்சு
நலமாக இதையறிந்தால் வாதி யாமே. (672)

## செவிவழிக்கற்பித்த மரபு

வாதியாம் சிவன்சொல்லத் தேவிக் குத்தான்
வளமாகத் தேவிதான் நந்திக் காகும்
நீதியாம் நந்திதான் அசுவனிக்குச் சொல்ல
நிர்ணயமாய் அசுவனியும் விசுவ னிக்கும்
பாதியாம் விசுவனியும் தன்மந் திரிக்குப்
பதிவான தன்மந்திரி யகத்தி யர்க்குச்
சாதியாய் அகத்தியரும் புலத்தியர்க்குச் சொல்லச்
சலுதியாய்த் தேரருக்குச் சொன்ன வாரே. (673)

## தேரர் நூலும் யூகி நூலும் பார்த்தால் மாற்று வலுக்கும்

சொன்னதொரு தேரர் யூகிக்குச் சொல்ல
சொற்பெரிய யூகிமுனி யுலகத் தோர்க்குக்
கன்னல்போல் ஆயுள்வே தத்தைத் தானும்
கணக்காகச் சொல்லிவிட்டேன் கருதிப் பார்த்து
பின்னையொன்றுங் காணாமல் யூகி நூலைப்
பிரபலமாய்ப் பார்த்தாக்கால் குருவு தோன்றும்
நன்னயமாய்த் தேரருட நூலைப் பாரு
நலமான வாதமெல்லாம் சித்தி யாமே. (674)

## கல்லுப்புத் திராவகம் அல்லது மகாதிராவகம்

சித்தியாம் மகாதிரா வகத்தின் செய்தி
செப்புகிறேன் உலகத்தில் திறமாய்ப் பாரு
முத்தியாம் சூதமது கட்டி நீறும்
முனிவான தேரர்தான் எனக்குச் சொன்னார்
பத்தியாய் வாய்பொத்திக் கேட்டுக் கொண்டேன்
பதிவான திராவகத்தைப் பாக மாகச்
சத்தியமாய் வைத்துமே பாரு பாரு
தடையில்லை சூத*சித்தி யாகும் பாரே. (675)

* சுத்தி

## கல்லுப்புத் திராவகத்தின் பெருமை

ஆகுமே கல்லுப்புத் திராவகந் தான்
அடைவான வேதையிது அடுத்துப் பாரு

ஏகுமே சரக்கெல்லாம் கட்டிப் போகும்
எளிதான லோ:கமெல்லாம் தானே நீறும்
பாகுமே ஒவ்வொன்றில் தனியே வேதை
பாகமாய்ச் சித்தர்களும் மறைத்துப் போட்டார்
நாடுமே கடையதனில் சொன்ன மார்க்கம்
நலம்புரிந்து பாகமாய்ச் செய்து கொள்ளே. *(676)*

## கல்லுப்புத் திராவத்துக்குச் சரக்கெடை பாகம்

கொள்ளவே கல்லுப்பு பலமோ பத்துக்
கூரான வீரமது பலமோ பத்து
மெள்ளவே இவைரெண்டும் கல்வத் திட்டு
விருப்பமாய்ச் சாமம் இரண்டரைத்துக் கொள்ளு
துள்ளவே இவைரண்டும் மெழுகு போலாம்
துடியான சீனமது இருபத் ௭ தந்து
கள்ளமாய்ப் பொடிபண்ணி மெழுகில் போட்டுக்
கருத்தாகக் கலையத்தில் போட்டுக் கேளே. *(677)*

## கல்லுப்புத் திராவகம்

கேளுமே சக்கரமாம் வாலை யாலே
கெடியாகக் கவிழ்த்துமே உழுந்துச் சீலை
நாளுமே கெட்டியாய்ச் செய்த பின்பு
நலமாக அடுப்பில்வைத் ெநரிநேர் பாகம்
தாளுமே தூரில்நின்ற நீரைத் தானும்
தப்பாமல் பிடித்துமே குப்பி தன்னில்
வாளுமே யடைத்துநீ வைத்துக் கொண்டு
வடிவான பாகத்தைச் சொல்லக் கேளே. *(678)*

## 668-678 உரை

மெய்யுணர்வு பார். பொறுமை கொள், பேசாமல் இருந்தால் தலைதப்பும். விண்ணகமும் மண்ணகமும் உனதாகும். மாற்றுச் செய்தால் உறுதியாம். நிறை எரிப்பு பாகம் சுத்தி தவற விட்டால் பயனில்லை. தீமிகாமலும் ஊத்துத் தவறாமலும் பார். அயச்செம்பு காரிச் செம்பு எடுத்தால் நேர்எடை தங்கம் சேர்த்து வெள்ளியில் கொடுத்தால் மாற்று உண்டாகும். சிவம் முதல் யூகி வரை முன்போல் செவிவழிவந்த முறைமை இது. யூகி நூலும் தேரர் நூலும் கற்றால் மாற்று வலுக்கும். கல்லுப்புத் திராவகமாகிய மகாதிராவகத்தைத் தேரர் எனக்குச் சொன்னார். கை கட்டி வாய் பொத்தி நின்று கேட்டுக் கொண்டேன். சரக்கெல்லாம் கட்டும். உலோகமெல்லாம் நீறும்.

கல்லுப்பு பத்துப்பலம். வீரம் பத்துப்பலம். இரண்டையும் கல்வத்திலிட்டு மெழுகு போலாகும் வரை அரை. சீனம் இருபது பலத்தைப் பொடித்து அந்த மெழுகில் போடு. கலையத்திலிட்டுச் சக்கரவாலை மூடி உழுந்துச்சீலை செய்து எரி. (முதலில் வரும் நீரைத் தனியே வை) தூரில் நின்ற நீரைப் பிடித்துக் குப்பியிலடை. செய்ய வேண்டிய பாகத்தைக் கேள்.

### தூரிசுச் சுண்ணம்

சொல்லவே தூரிசுஒரு கட்டி வாங்கிச்
சுக்காகக் கல்லுப்புத் திராவகத்தில்
மெல்லவே தோய்த்தெட்டு நாளும் போடு
மேன்மையாய் ரவிதனிலே காய்ந்த பின்பு
கல்லவே எடுத்துமே அப்பால் வைத்துக்
கருத்துடனே இன்னமொன்று கருதக் கேளு

வல்லவே வங்கமது பலமும் பத்து
வகையான வெடியுப்பு இடையே சேரே. (679)

### வங்கச் சுண்ணம்

சேருமே வங்கத்தை ராவிப் போட்டுச்
செயலான வெடியுப்பைக் கூடப் போட்டு
பாருமே வெண்கருவும் எருக்கம் பாலும்
பாய்ச்சியே தெளிந்தசலம் தன்னால் ஆட்டி
காருமே எட்டுநாள் ஆட்டி மைந்தா
கருணைபெறப் பெரியபுடம் போட்டெ டுத்து
வாருமே சூதபற்பம் இடையே சேர்த்து
வகையான வெண்கருவால் அரைத்தி டாயே. (680)

### வங்கச் சுண்ணத்தோடு சூதபற்பம் சேர்த்து எரிப்பு

அரைத்துமே வில்லைபண்ணிக் காய வைத்து
அடைவாகச் சட்டிரெண்டும் பொருந்தப் பார்த்து
நிரைத்துமே சட்டிநடு வைத்து மூடி
நினைவாக மேல்மூடி கவிழ்த்துச் சீலை
வரைத்துமே மண்ணேழு சீலை செய்து
வளமாகக் கடிகைநூ றெரித்த பின்பு
துரைத்துமே யெடுத்துப்பார் உயர வேறும்
துடியாக வழித்துமே வங்கத் தோடே (681)

### வங்கம் ரசம் சேர்த்து ஐந்து முறை மடக்கெரிப்பு

வங்கத்திற் சேர்த்தரைத்துத் தெளிந்த நீரால்
வகையாக அரைத்துவில்லை காய வைத்து

துங்கமாய் முன்போல எரிநேர் பாகம்
துடியாக இப்படியே முறையெந் தாகம்
பங்கமாய் எரித்திட்டால் அடியில் நிற்கும்
பதிவான கடுஞ்சுண்ணம் வங்கம் பாரு
இங்காமல் மறுபடியும் தெளிந்த நீரில்
இன்பமாய் அரைவில்லை தட்டிக் கொள்ளே. (682)

## துரிசுச் சுண்ணம்

தட்டியே ஐந்துசுண்ணக் குகைக்குள் வைத்துத்
தாங்கியே பத்தெருவில் புடத்தைப் போடு
கட்டியே ரசம்சேர்த்து வங்க நீறிக்
கடிதாகக் கடுஞ்சுண்ணம் ஆகும் பாரே
முட்டியே முன்காய்ந்த துரிசுக் கப்பி
முதன்மையாய்க் காயவைத்துப் புடமும் போடு
எட்டியே யெடுத்துப்பார் துரிசு நீறு
இன்பமாய்ச் செயசுண்ண மாகும் பாரே. (683)

## துரிசு செய சுண்ணமானால் வாதமெல்லாம் முடியும்

செயசுண்ணம் துரிசறுவே ஆகி னாக்கால்
சிறப்பான சூதத்தைக் கௌவிக் கொல்லும்
பயமில்லை இரதமணி யுருண்டு கட்டும்
பதிவான கவனமணி யோட லாகும்
நயமான லோகசித்தி தங்க சித்தி
நாடினால் செம்பதுவும் பழுத்துப் போகும்
வயமான வாதந்தான் சூதத் தாலே
வடிவான சூதமென்ன சிவனு மாமே. (684)

**வங்கத்தால் துரிசு நீறும். அதனால் சூதம் கட்டும் கட்டினால் நவலோகமும் பழுக்கும்.**

சிவமாகப் போகவே சூதம் கட்டில்
செயமாகும் நயமாகும் முத்தி யாகும்
நவமான நவலோகம் தனியே வேதை
நாடினால் எல்லாந்தான் பழுக்கும் பாரே
கவமாகக் கவர்கோடி வேதை யாகும்
கடிதான வங்கத்தால் துரிசு நீறும்
பவமான பசும்பொன்னும் உடனே யாகும்
பாலித்தார் யூகி என்ற முனிவர் தானே. *(685)*

**மூலிகைச் சாற்றால் சூதக்கட்டு**

தானேதான் முன்வைத்த துருசுச் சுண்ணம்
தடையறவே யொருகழஞ்சு நிறுத்துக் கொண்டு
வானேதான் விராலியிலைக் கிட்டு மைந்தா
வடிவாக வைத்திடவே சாறு மாகும்
ஊனேதான் அயக்கரண்டி தன்னில் ஊற்றி
உண்மையாய் ரசஞ்சேரு அதிலே விட்டு
கானேதான் ஒட்டவே காய்ச்சிப் போடக்
கடிதான சூதமது மணியு மாமே. *(686(*

**சூதமணி**

மணியான சூதத்தை யுருட்டிக் கேளு
மதியாக மத்தங்காய் தனிலே வைத்துக்
கணியாக நூறுபுடம் தீர்த்தாய் ஆனால்
கனிவான மணியாகும் கண்டு கொள்ளு

திணியாகக் கரியில் வைத்து உருக்கி னாக்கால்

திறமாக உருகிநிற்கும் மணியின் வேகம்

பணியான வாயினால் சொல்லப் போகா

பதிவான சாரணைதான் தீர்த்தி டாயே. (687)

## சூதமணிச் செந்தூரம்

தீர்த்திடவே சங்கவரை யெட்டி யோடும்

திறமாகச் சொல்லுகிறேன் கேளுகேளு

நார்த்திடவே ரசம்நாலு நிறுத்துக் கொண்டு

நலமாகக் குகையில்வைத் துருக்கும் போது

வார்ந்திடவே தங்கமொன்று * நாகம் ஒன்று

வடிவாகக் கொடுத்துநல் லுண்டை யாக்கிக்

கார்ந்திடவே யடிக்கடிக்குக் காரம் தாக்கு

காயச்சித்தாம் லோகசித்தாம் கண்டு பாரே. (688)

* வேறுசுவடியில் நாகமொன்று என்பது இல்லை.

## இரசமணிச் செந்தூர வேதை

பாருமே களங்கெடுத்து எட்டில் ஒன்று

பதிவான கெந்தியொன்று கூடச் சேர்த்து

தாருமே பொற்றலையின் சாற்றால் ஆட் டிச்

சாதகமாய்ப் புடமிட்டு எடுத்துப் பாரு

வாருமே நிறைசரியாய்ச் செந்தூ ரந்தான்

சரியான நவலோகம் நூற்றுக் கொன்று

பாருமே கொடுத்திட வே பத்து மாற்று

பதிவாகக் காவியிலே நிலைக்கும் பாரே. (689)

## ரசமணிச்செந்தூ ரமுண்ணும் பலன்

நிலைக்கவே செந்தூரம் தேனில் உண்ணு
நினைவாகச் சாவிலைசெவ் வலரி போலாம்
பலக்கவே அருணனுமே தோற்றுப் போவான்
பதிவான தேகமது ஒளிவு மின்னும்
கலைக்கவே விந்ததுவும் இறுகிக் காணும்
கனிவான நோயெல்லாம் தவிட தாகும்
பலைக்கவே இதுமெத்த வேதை யாகும்
பாலித்தார் யூகிமுனி பண்பு தானே. *(690)*

## ரசமணிச்செந்தூரம் அகத்தியர் வைத்துக் காட்டியதைத் தெரிந்துகொண்டு திருவண்ணாமலையில் இருந்தேன்.

பண்புள்ளான் என்றுமே சொல்லி என்னைப்
பதிவாகத் தேருமே கூட்டிப் போக
தண்பாக வகத்தியரும் உபச ரித்துச்
சரியான செந்தூரம் வைத்துக் காட்டி
எண்பாக என்பாகம் என்றுமே சொல்லிக் காட்ட
இருந்திட்டேன் திருவண்ணா மலையில் நேரே
கண்பார்த்தால் எல்லாமும் சித்தி யாகும்
கருத்துவைத்துச் செந்தூரம் பண்ணித் தின்னே. *(691)*

## சூதமணி கட்ட வேண்டிய நிச்சயம்

பண்ணிடவே வங்கத்தைச் சுண்ணம் செய்து
பரிவான துரிசதன்மேல் கட்டித் தீரு
நண்ணிடவே துரிசதுவும் நீறிப் போகும்
நலமான சூதத்தில் போடக் கட்டும்

கண்ணிடவே யூமத்தங் காயிற் குள்ளே
கனிவாகப் போட்டுமே மணியாய்ச் செய்து
உண்டிடவே யோகசித்தி காய சித்தி
யுறுதியாய்ச் செய்துமே யாடி டாயே. (692)

## சூதத்தைக் கட்டிச் சேர்த்தால் வாதம் எளிதிலாகும்.

ஆடிடவே சூதத்தைக் கட்டிச் சேர்க்க
* அடைவாகச் சுட்டாக்கால் ஆக்க மாகும்
தேடிடவே சித்தருக்குக் கீர்த்தி தேடு
திடமான வாதமெல்லாம் எளிதி லாகும்
மூடிடவேயெட்டெட்டும் சித்தியாகும்
முடிவாகும் வேதையாம் மூர்க்கம் மெத்த
பாடிடவே சாத்திரத்தைப் பார்த்துத் தேறு
பதிவான வாதமெல்லாம் எளிதி லாமே. (693)

* அடமாகச் சுட்டாக்கால் நரகமாகும். வே. பா.

### 679 – 693 உரை

துரிசு ஒருகட்டி எடுத்துக் கல்லுப்புத் திராவகத்தில் எட்டு நாள் தோய்த்து ஒவ்வொரு நாளும் காயப் போடு. எடுத்துவை. பின்பு வங்கம் அராவிப் பத்துப் பலம் எடு. வெடியுப்பு பத்துப்பலம் அதனொடு சேர். வெண்கருவும் எருக்கம்பாலும் தெளிந்த நீர் விட்டு எட்டுநாள் அரைத்துப் பெரும்புடமிடு எடுத்துச் சூத பற்பம் அதனெடை சேர்த்து வெண்கருவிட்டு அரைத்து வி. த. கா. வாய் பொருந்தத் தேய்த்த சட்டிக்குள் வைத்துக் கவிழ் சட்டி முடிச் சீ. ம. 7. செய்து நூறு நாழிகை எரி ரசம் மேலே ஏறும். வழித்து அடியில் நிற்கும் வங்கத்துடன் சேர்த்தரைத்து வி. த. கா. முன்போல் எரி. இவ்வாறு ஐந்துமுறை செய். மேலேறாமல்

வங்கத்துடன் நிற்கும் இது வங்கச் சுண்ணம் இதனை மறுபடியும் தெளிநீர் விட்டரைத்து வி. த. கா. ஐந்து சுண்ணக்குகைக்குள் வைத்துப் பத்தெருப்புடமிடு. நீறும் ரசமும் சேர்த்து நீறிக்கடுமையாக இருக்கும். முன்பு காயவைத்த துரிசுக்கு அப்பிக் காயவைத்துப் புடமிடு செயசுண்ணமாகும். ரசம்கட்டும். பறவைக்குளிகையாகும். உலோகம் வலுக்கும். உடல் வலுக்கும் சூதம் சிவனேயாகும். ஒருகழஞ்சு சுண்ணம் எடுத்து விரரலியிலைக்கு இட்டுவைக்க நீராகும். அயக்கரண்டியில் ஊற்றி ஒருசேர் சூதம் விட்டு ஒட்டக்காய்ச்ச மணியாகும். எடுத்து உருட்டி மத்தங்காய்க்குள் வைத்து நூறு புடமிடு இறுகிவிடும் குடகரியில் உருக்க மணியாகும் சாரணை செய்ய ஒரு சங்கம் வரைத்தாண்டியோடும். மணியை உருக்கு முகத்தில் நாலில் ஒன்று தங்கமும் நாலில் ஒன்று நாகமும் சேர்த்துக் காரம் கூட்டி உருக்கக் களங்காகும். எட்டில் ஒன்ற கெந்தி சேர்த்துப் பொற்றலையின் சாற்றால் அரைத்து வி. த. கா. புடமிடு செந்தூரமாகும். நவலோகம் நூற்றுக்கு ஒன்று கொடு. பத்து மாற்று. செந்தூரம் குன்றியவாக உண்டுவரச் சாவில்லை. உடல் செவ்வலரி போலாகும். அருணனுமே தோற்றுப் போவான். விந்து இறுகும் நோயெல்லாம் தவிடாய்ப் போகும்.

பண்புடையவன் என்று தேரர் என்னையழைத்துச் சென்றார். அகத்தியர் என்பாகம் என்று சொல்லிக்காட்ட நன்றாய்ச் செய்து திருவண்ணாமலையில் இருந்தேன் வங்கத்தைச் சுண்ணம் செய் அதுகொண்டு துரிசினை நீற்று அதுகொண்டு சூதமணியாக்கு காயசித்தி லோகசித்தியாகும்.

## முப்பு விவரம்

எளிதாக முப்பினி கருவைக் கேளு
இன்பமாய்க் கல்லுப்பு முப்பு வாகும்

தளிதாகச் சூதமொரு வுப்பு வாச்சு
தடையற்ற இரும்பதுவும் உப்பு வாச்சு
நளிதாக இம்மூன் றும் சேர்ந்த தாலே
நலமாக முப்புவெனப் பேரு மாச்சு
களிதாக வழலையென் று இதற்குப் பேராம்
கண்டபடி சொன்னதிந்தக் கருத்துத் தானே (694)

## உலகர் வீண்பேச்சுக்கள் பேசவார்களே யல்லாமல் இராபம் வரக்காணார்கள் முப்பூவின் மார்க்கம் கேள்

கருத்தாகப் பாராமல் உலக வாதி
கனிவாக முப்பூவென் றும் வழலையென் றும்
உருத்தாகச் சொல்லுவார் பார்கக மாட்டார்
உண்மையில்லை என் றுமே சொல்வார் பாரு
பொருத்தாகச் சொன்னாலும் தெரியா தப்பா
போட்டியாய்ச் சொல்வார்கள் பலனைக் காணார்
வருத்தமாய்க் காணர்கள் மட்டி மட்டி
வகையாக முப்பூவின் மார்க்கம் கேளே (695)

## கல்லுப்புக்கட்டுமுப்புச் செய்ய

கேளுமே கல்லுப்புக் கட்டி வாங்கு
கெடியாக மேற்றூசி யகற்றிப் போடு
நாளுமே கடல்நுரையைக் கரியில் வைத்து
நலமாகக் கடுமையாய் ஊதிப் போடு
வாளுமே கடல்நுரையின் கடுஞ்சுண் ணத்தால்
வடிவாக எடுத்துவெண் கருவால் ஆட்டித்
தாளுமே கல்லுப்பு மேலே தானும்
தடையறவே பெரிதாகக் கவசம் கட்டே (696)

கட்டியே மண்கவசம் மேலே கட்டிக்
கனிவாகப் பெரும்புடமாய்ப் போட்டெ டுக்க
நட்டியே பிரித்துப்பார் உள்ளே தானும்
நலமாகக் கல்லுப்பு நீரை வாங்கி
துட்டியே உருகியது மணிபோல் தோணும்
துடியாக எடுத்துமே சொல்லக் கேளு
கிட்டியே சூதத்தைப் பற்பம் செய்யக்
கெடியாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளே (697)

## இரச பற்பம்

உற்றுமே சொல்லுகிறேன் ரசமும்பத்து
உண்மையாய்க் கல்லுப்பு படியும் எட்டு
நத்தியே செங்கன்மா இரண்டு கூட்டி
நலமாகக் கல்லுப்பிற் சேர்த்தி டித்து
புத்தியாய்ச் சட்டியிலே வாரி யிட்டுப்
புலப்படவே ரசமதனை நடுவில் இட்டுச்
சித்தியாய் மேற்சட்டி பொருந்தப் பார்த்துச்
சிறப்பாக மண்ணேழு சீலை செய்யே (698)

செய்துமே யடுப்பிலே வைத்தெ ரிக்கச்
சிறப்பாகக் கமலம்போல் கடிகை நூறு
பைதுமே யெடுத்துப்பார் தந்தம் போலாம்
பதிவாக மேற்சட்டி தனிலே நிற்கும்
வைதுமே சுண்டியதை யெடுத்துக் கொள்ளு
வலுவாக இன்னமொரு வரிசை கேளே
மைதுமே யரப்பொடிதான் பலமும் பத்து
நலமாக எடுத்துமே சொல்லக் கேளே (699)

## துரிசுச் செம்பெடுக்கும் வகை

சொல்லவே கல்லுப்பு பலமும் ஒன்று
சுருக்கான ரசபற்பம் பலமும் ஒன்று
வெல்லவே அயமதுதான் பலமும் ஒன்று
விருப்பமாய் வெங்காரம் பலமும் ஒன்று
கல்லவே சரக்கதுதான் நான்கு மாச்சு
கருத்தான துரிசதுதான் பலமும் நான்கு
நல்லவே நீலனைத்தான் நெருப்பில் ஊத
நலமான பசுமைபோம் நாடிப் பாரே (700)

## துரிசுச்செம்பு அல்லது அயச்செம்பு

நாடிப்பார் துரிசின்மேல் முன்றான் குந்தான்
நலமான செவ்வல்லிப் பூவின் சாற்றால்
காடிப்பார் இருசாமம் அரைத்துக் கொண்டு
கருணைபெறத் துரிசதன்மேல் கவசம் கட்டி
வாடிப்பார் அதன்பேரில் சுண்ணம் கட்டி
வளமாக அதன்மேல்மண் கவசம் கட்டித்
தேடிப்பார் பெரியபுடம் போட்டெ டுக்கத்
திறமான துரிசதுதான் குருவு மாமே. (701)

## செம்பு மாற்று

ஆமேதான் குருவெடுத்து மூசை தன்னில்
அன்பாக வுருக்கிடவே ரவியு மாகும்
காமேதான் தங்கத்தில் சேர்த்து ஊதக்
கனமாகத் தங்கமது செம்பாய்ப் போகும்
நாமேதான் மதியெட்டில் ஒன்று கூட்டு
நலமான மாற்றென்ன எட்டு மாகும்

வாமேதான் உப்புக்கும் காவி நிற்கும்
வடிவான அயமாட்டும் வண்மை தானே (702)

## மாற்று இன்னோர்க்கு ஆகும் இன்னோர்க்கு ஆகாது

வண்மையாய்ச் சிவயோகி நல்லோருக்கும்
வரிசையாய்ச் சொல்லிவிட்டேன் வாத மார்க்கம்
தண்மையாய்த் தவசிக்கு ஆகும் பாரு
தடையற்ற நூல்பார்த்த வாதிக் காகும்
கண்மைதான் படியாக வாதிக் கில்லை
கருத்தாலே செய்வோர்க்கும் இல்லை யப்பா
உண்மையாய்ச் சொல்லிவிட்டேன் உலகத் தோர்க்கே
உற்றறிந்து பார்த்தவனே வாதி யாமே (703)

## 694 – 703 உரை

கல்லுப்பு ஓர் உப்பு. இரசம் ஓர் உப்பு. இரும்பும் ஓர் உப்பு. இம்மூன்றுப்பும் சேர்ந்தால் முப்பு. வழலை என்பதுவும் இதுவே. கடல்நுரையைக் கரியில் வைத்து ஊதி வெண்கருவிட்டு அரைத்துக் கல்லுப்புக் கட்டியின்மேல் பூசிக் கவசமாகக் கட்டி அதன்மேல் மண்கவசமும் கட்டிப் பெரும்புடமிட உருகிக் கட்டும். அதுநிற்க. கல்லுப்பு பத்துப்படியும் செங்கல்மா இரண்டுபடியும். சேர்த்து இடித்துச் சட்டியில் போட்டு அழுத்தி நடுப்பள்ளத்தில் பத்துப்பலம் ரசம்விட்டு கவிழ். சட்டி மூடி 7 சீ. ம. செ. நூறு நாழிகை எரி. மேலேறித் தந்தம் போலாம். சுரண்டி எடு.

நாலுபலம் துரிசுக்கட்டியை நெருப்பில் வைத்து ஊது. வெள்ளையாகும். கல்லுப்பு ரசபற்பம் அயம் வெங்காரம் ஆகிய நான்கும் வகைக்கு ஒருபலம் எடுத்துச் செவ்வல்லிப் பூச்சாறு

விட்டரைத்து முற்கூறிய வெள்ளைத்துரிசுக்கட்டியின்மேல் கவசம் கட்டு. அதன்மேல் சுண்ணக் கவசமிடு. அதன்மேல் மண்கவசமும் இடு. பெரிய புடமிடு. துரிசு குருவாகும். இக்குருவினை மூசையிலிட்டுருக்கு. செம்பாகும். தங்கத்தில் சேர். அதுவும் செம்பாகும். வெள்ளி எட்டுக்கு ஒன்று கொடுத்துருக்கு. எட்டு மாற்று. உப்புக்கும் காவிக்கும் நிலைக்கும். சிவயோகிக்கும் தவத்தோர்க்கும் ஆகும்.

## கல்லுப்பைவிட்டு மூலிகை தேடிச்சில வாதிகள் அலைவார்கள். குறைவில்லாத சம்பத்தையடையச் செம்பைப்பார்

வாதியா மென்றுசொல்லிக் கல்லுப் பைத்தான்
வடிவாக விட்டுமே மூலி தேடிச்
சேதியாய்க் கேட்டுமே வாதம் சுட்டுச்
சிறப்பித்துத் திரிவார்கள் உலக வாதி
நீதியாய் நூல்முறைமை பார்த்துத் தேர்ந்து
நிலவரமாய்ப் பார்த்தாக்கால் செம்பு தோன்றும்
கோதிலா மனம்போலே சொல்லிப் போட்டேன்
குறைவற்று இருக்கவே செம்பைப் பாரே (704)

## செம்புகல்லுப்பு அயம் துரிசு இவைகளைச் செய்துபார்த்தால் தப்பாமல் வெள்ளி பழுக்கும். இது சத்தியம்.

செம்பைப்பார் கல்லுப்பு தன்னைப் பாரே
சேதியாய் அயத்தைப்பார் துரிசைப் பாரு
வம்பாகச் செய்யாமல் பாக மாக
மதிப முக்கச் செய்துமே வாழ லாகும்

தம்பிரான் செயலென்று சொன்ன தாலே
தசையறவே செம்பதுதான் காணமாட்டார்
எம்பிரான் தானறியச் சொல்லிப் போட்டேன்
இருந்தஇடம் தனிலிருந்து செய்து பாரே (705)

## கல்லுப்பைக் கட்டியாடினால் வாதம் ஏவல் செய்யும்

செய்துமே சிவயோக வழியில் நில்லு
சிறப்பாக மதத்தினால் கர்ச்சிக் காதே
பைதுமே நூல்விரும்பிப் பார்த்துத் தேறே
பதையாமல் கல்லுப்பைக் கட்டி யாடு
நைதுமே வாதமது ஏவலாகும்
நாதாந்தப் பொருளைத்தான் நாட்டம் பண்ணு
வைதுமே திரியாதே வடிவ மாக
வைத்துமே பார்த்திடவே சித்தி யாமே (706)

## துரிசுச் செம்பு

சித்தியாய் இன்னமொரு செம்பு சொல்வேன்
சிறப்பாகப் பாகமாகச் செய்து கொள்ள
மத்தியாம் கட்டினதோர் கல்லுப் பைத்தானே
முடிவாகப் பலம்நிறுத்துக் கல்வத் திட்டு
நத்தியாய் ரசபற்பம் இடையே சேர்த்து
நலமான துரிசிரண்டு பலத்திற் கட்டு
சத்தியாம் சுண்ணாம்புக் கவசம் கட்டிச்
சரியான புடம்போட்டு எடுத்துக் கொள்ளே (707)

## மட்டத்தில் பொன்சேர்க்கும் எடை

எடுத்துமே நேர்காரம் இட்டு ருக்கு
இதமான செம்பாகும் சிவப்பு மெத்த

அடுத்துமே வெள்ளியெட்டக் கொன்று சேரு
அடைவாக வூதிடவே பசுமை யாகும்
நடுத்துமே பசுமைக்கு இரண்டு கொண்டு
நாட்டிடவே பொன்சேர்த்து ஊதிப் போடு
விடுத்துமே மாற்றென்ன ஏழு மாகும்
விதமாக எடுத்துமே செலவு செய்யே (708)

## அறிவு கூறுதல்

செய்துமே ஞானத்தைப் பார்த்துத் தேறு
சிறப்பான வாசியைநீ இறுக்கிக் கொள்ளு
நைதுமே சிவசொத்தை வறுமை போலே
நாடியே யுண்டிடுநீ நடுவில் நில்லு
பைதுமே யொருவருடன் பேச வேண்டாம்
படபடத்து நில்லாமல் நிலையில் நில்லு
கொய்துகுரு வருளாகும் இந்த வித்தை
குறிப்பாக இருந்திடவே வசியம் ஆமே (709)

## செம்மை யுறுதியாய்ச் செய்தால் உலகத்தில் இருப்பவர்களுக்கு கைகண்ட பலனாகும்

வசியமாம் உலகத்தின் வசியம் வாதம்
வடிவான செகமயக்கும் வாதம் தன்னை
உசியமாம் உள்ளபடி சொன்னேன் பாரு
உற்றுணர்ந்து செம்பைநீ உறுதி யாக்கு
நசியமாம் கருத்தாலே நாடிப் பாரு
நலமாகப் பார்த்துணர்ந்தால் வேதை யாகும்
கசியமாம் உலகத்தில் இருப்போர் வாதம்
கைகண்ட பலனாகும் கருதிப் பாரே (710)

## மனமொன்றியுழைத்தால் மாற்றாகும். இன்றேல் இல்லை

கருதியே ஆங்காரந் தன்னை விட்டுக்
கருத்தோடே மனமஞ்சிக் கருதிப் பாரு
உருதியாய் மனந்தன்னை யொக்கப் பண்ணு
உற்றுமே மனசொன்றிப் பார்த்துத் தேறே
வருதியாய் உழைத்தாக்கால் வாத மாகும்
வடிவாக வுழைக்காதே போனாற் கேளு
பருதியாய் வாதந்தான் இல்லை யப்பா
பதிவாக வுலகதனில் பார்த்துத் தேறே (711)

## துரிசுச் செம்பு அல்லது ரசச்செம்பு

பார்த்திடவே யின்னமொரு செம்பு சொல்வேன்
பதிவாகத் தேரர்தான் ஆடும் வித்தை
கோத்திடவே எனையழைத்துச் சொன்னார் பாரு
குற்றமில்லை இச்செம்பு வேதை யாகும்
நேர்த்திடவே கல்லுப்பு பலமும் ஒன்று
நினைவாக ரசபற்பம் முக்கா லாகும்
பார்த்திடவே சூடனரை வீரங் காலாய்
வடிவாகத் திராவகத்தில் வைத்துக் கொள்ளே (712)

கொள்ளவே துரிசதுதான் பலமும் நாலு
கொடுமையாய் நீலன்மேல் கவசம் கட்டி
மெள்ளவே மண்கவசம் மேலே கட்டி
மேன்மையாய்ப் பத்தெருவில் புடத்தைப் போடு
துள்ளவே வெங்காரம் இட்டு ருக்கத்
துடியாகச் செம்பாகும் மதியில் எட்டில்

விள்ளவே யொன்றுதான் கொடுத்து ஊது
விதமான தங்கமும் வித்தை யாமே (713)

## இந்த ரசச்செம்பு ஈசுவரர் தேரர்க்குச் சொல்ல தேரர் எனக்குச்சொல்ல யான் உலகத்தோர்க்குச் சொன்னேன்

வித்தையாம் ரசமதுதான் செம்பு வாச்சு
விதமான கைலையுறை நாதம் தாமும்
புத்தியாய்த் தேரருக்குச் சொன்னர் பாரு
புதுமையாய்த் தேரர்தான் பார்த்துத் தேறிச்
சித்தியாய் அடியேற்குச் சொன்னா ரப்பா
சீர் பெறவே யுலகத்தில் மனிதர்க் காக
நத்தியே சொல்லிவிட்டேன் நம்பிப் பாரு
நாடினால் எல்லாமும் நேர தாமே (714)

## துரிசில் செம்பெடுத்துக்கொடுத்தால் வேதையாம். மூலிகைச் செம்பெடுப்பது ஆகாது

நேரதாம் வாதிதான் செம்பெ டுத்து
நேராகப் பாய்ச்சினால் மதிப முக்கும்
ஆரதாம் வீணாகச் சுட்டாற் கேளு
அடைவாக ஒன்றுமில்லை கரியாய்ப் போகும்
பாரதாம் உலகத்தில் வாதி தானும்
பதமாக மூலிகையில் செம்பு செய்தால்
நாரதாம் சொன்னாக்கால் ஒன்று மில்லை
நாடினால் துரிசுநீ நவின்று பாரே (715)

## செம்பைக்கட்டவேண்டும். வீணே சுட்டால் ஒன்றும் காணாது

நவின்றுமே பார்த்தாக்கால் தோன்றும் தோன்றும்
நவிலாட்டால் ஒன்றுந்தான் இசைவா காது
கவின்றுமே செம்பைத்தான் கருணை யாகக்
காதலாய்ப் பார்த்தாக்கால் வளம தாகும்
துவின்றுமே செம்புதான் கட்டி னாக்கால்
துடியாக ஆடலாம் வாத மாட்டு
கவின்றுமே பேய்க் கூத்தாய்ச் சுட்டா யானால்
காணாது வாதமென்ற கருணை யாமே (716)

## கல்லுப்பு முதலானவை செய்துகொண்டால் செம்பு வழிபடும்

கருணையாம் ரசபற்பம் பண்ணிக் கொள்ளு
கருத்தாகக் கல்லுப்பைக் கட்டிக் கொள்ளு
வருணையாம் வெங்காரம் பொரித்துக் கொள்ளு
வகையாகப் பாகமாய்ச் செய்து கொள்ளு
உருணையாம் குகைதனிலே வைத்து ருக்க
ஒழுங்காகும் செம்புதான் உறுதி மெத்த
அருணையாம் பதிதனிலே வாழு கின்ற
அடைவான யூகிமுனி யருள்செய் தாரே (717)

## 704 – 717 உரை

கல்லுப்பை விடுத்து மூலி தேடி அலைவது தவறு. செம்பு கல்லுப்பு அயம் துரிசு இவற்றைப் ப்ார்த்துச் செய். சிவயோக நெறி நில். நாதாந்தப் பொருளை நாட்டம் பார்.

இரண்டுபலத்துரிசுக்கட்டியின் மேல் கட்டிய கல்லுப்பு ஒரு பலமும் ரசபற்பம் ஒருபலமும்சேர்த்தரைத்துக் கவசங்கட்டி அதன்மேல் சுண்ணாம்புக் கவசமுமிட்டுப் புடமிட்டெடு. அதற்கு நேர் வெங்காரமிட்டுருக்கு. சிவந்த செம்பாகும். வெள்ளியில் எட்டுக்கு ஒன்று சேர். பசுமையாகும். அதற்கு இரண்டுபங்கு பொன் சேர்த்து ஊதிப்போடு. ஏழுமாற்றாகும். செலவுசெய்.

தேரர் ஆடிய செம்பு கேள். கல்லுப்பு ஒரு பலமும் ரசபற்பம் முக்காள்பலமும் சூடன் அரைப்பலமும் வீரம் காற்பலமும் எடுத்துத் திராவகம் ஊற்றியரைத்து நாலுபலத்துரிசின் மேல் கவசமாகக் கட்டி அதன்மேல் மண்கவசமும் செய்து பத்தெருப்புடமிட்டெடுத்து வெங்காரம் சேர்த்துருக்கி வெள்ளியில் எட்டுக்கு ஒன்று கொடு. தங்கமாகும். இறைவன் தேரருக்குச் சொல்ல அவர் எனக்குக் கூறினார். ரசபற்பம்செய். கல்லுப்பைக் கட்டு. வெங்காரம் பொரித்துச்சேர். செம்புசெய். யூகியருள் செய்தேனே.

## பஞ்ச பூதக் களங்கு

அருள்செய்தார் பஞ்சபூ தக்க ளங்கை
அன்பாகச் சொல்லுகிறேன் உலகத் தோரே
பொருளாக இதைவிற்றுச் செலவு செய்து
போதையாய்த் திரியாதே பெருமை மெத்த
அருள்செய்யும் வரும்வாதம் அனந்தப் போக்கு
அப்பனே செந்தூரம் கோடா கோடி
இருளான சாத்திரத்தைப் பார்த்துத் தேறி
இருப்பாகச் செய்தாக்கால் இல்லை தானே (718)

## தங்கச் செம்பு

இல்லையென்று போகாமல் தங்கந் தானும்
இரும்பாகப் பலம்நிறுத்துச் செம்பு நேரே
வல்லையாய் எடைக்கெடை தான் சேர்த்துக் கொள்ளு
வகையாக வுருக்குமுகந் தன்னில் சேரு
நல்லையாம் இலிங்கமொரு பலமும் பத்து
நாடியே பழச்சாறு முலைப்பால் விட்டு
சொல்லையாம் சுருக்கிட்டுச் சாமம் நாலு
குணமாகச் செய்துமே பின்பு கேளே (719)

## இலிங்கக்கட்டுச் செய்பாகம்

கேளுமே யப்பிரகத் தகட்டை வாங்கிக்
கெடியாகத் தாளகத்தைப் பெடியாய்ப் பண்ணு
ஆளுமே கரியோட்டில் தகட்டை வைத்து
அடைவாகக் கரிநெருப்பில் வைத்து ஊது
நாளுமே தாளகத்தின் பொடியைப் போடு
நலமாக வுருகுமது இலிங்கந் தன்னை
வாளுமே புரட்டியே வாங்கு வாங்கு
வளமாகத் தைலத்தை யுண்ணும் பாரே (720)

## இலிங்கக்கட்டுப் புடவாகம் முதலியன

உண்ணுமே யதன்பின்பு சொல்லக் கேளு
உய்த்துமே யப்பிரேகம் பல மும் வாங்கி
நண்ணுமே வீரமது காலும் கூட்டி
நலமான செவ்வல்லிப் பூச்சாறு விட்டு
கண்ணுமே நேரவரை வெண்ணெய் யாகும்
கடிதான இலிங்கத்தின் மேலே கட்டி

வண்ணுமே காயவைத்து உமியின் மேலே
வறட்டியும் வைத்துமே புடத்தைப் போடே (721)

## தங்கச் செம்புக்கு அயம் இலிங்கம்சேர்க்கும் பாகம்

போட்டுமே பிரித்துப்பார் இலிங்கக் கட்டைப்
பொறுமையாய் எடுத்துமே வைத்துக் கொள்ளு
காட்டுமே தங்கமது செம்பு சேர்த்துக்
கனிவாக வுருக்கையிலே பத்திற் கொன்று
நீட்டுமே கொடுத்திடவே கழித்து வாங்கும்
நிலவரமாய் எடுத்துமே கல்வத் திட்டுத்
தாட்டுமே நேர்சரியாய் அயத்தைச் சேர்த்துத்
தடையறவே வெங்காரம் பாதி சேரே (722)

பாதியே சேர்த்துமே பூச்சாறு விட்டுப்
பதியஅரை வில்லைதட்டி ரவியிற் போடு
சாதியாம் மூசைதனில் இட்டு ருக்கிச்
சரியாக பூதிடவே தங்கச் செம்பு
மாதுமையாள் சொன்னசெம்பு சிவப்பு மாகும்
மயங்காமல் எடுத்துமே யப்பால் வைத்து
நீதிபெற இன்னமொன்று சொல்லக் கேளு
நிலையான பாதையிதைச் சொன்னேன் பாரே (723)

## பஞ்சபூதக்களங்கிற்குக் கௌரிக்களங்கு

சொன்னதொரு கௌரியது பலமும் பத்துச்
சொற்பெரிய கெந்தியது பலமும் பத்து
நன்னயமாய்ச் சீனமது பலமும் பத்து
நவிலவே பொடித்துமே யோட்டி விட்டு

கன்னதொரு வுருக்கினே கௌரி போட்டுக்
கணக்காகப் புரட்டியே தைலந் தன்னைப்
பின்னமில்லாமலே யுண்ணும் உண்ணும்
பிரட்டியே யெடுத்துமே சொல்லக் கேளே (724)

## கௌரிக்கட்டிற்குப்புடம்

கேளுமே அப்பிரேகம் மேலே கட்டிக்
கெடியாக உமிநெருப்பில் புடத்தைப் போடு
காளுமே உருக்குமுகம் போலே யாகும்
கருவாக எடுத்துமே சொல்லக் கேளு
தாளுமே யப்பாலே வைத்துக் கொள்ளு
தடையறவே காரீயம் பலமும் பத்து
வாளுமே நாகமது பலமும் பத்து
வடிவாகச் செம்புபத்து நிறுத்துக் கொள்ளே (725)

## தாமிரம் முடித்து அயத்தைச் சேர்க்கவும்

கொள்ளவே யுருக்குமுகம் தன்னிற் றானே
கொடூரமாய் நான்கிற்கு ஒன்று தானும்
மெள்ளவே கௌரியது முகத்தில் தாக்கு
மேன்மையாய் நொறுங்கியே தூளாய்ப் போகும்
வள்ளலே கண்டவெடை யயத்தைச் சேரு
வளமான வெங்காரம் பாதி சேர்த்துத்
துள்ளவே யரைத்துவில்லை காய வைத்துத்
துடியாகப் பெரும்புடமாய்ப் போட்டிடாயே (726)

போட்டுமே எடுத்துத்தான் மூசை தன்னில்
பொறுக்கவே யூதிடவே செம்பு மாகும்

நாட்டியே யதையெடுத்துச் சொல்லக் கேளு
நலமாகச் சேருகின்ற வரிசை கேளே
காட்டமே தங்கமது செம்பு ஒன்று
கடினமாய்க் காரி நாகச் செம்பு ஒன்று
மூட்டியே யிரண்டுமொன்றாய் உருக்கு கையில்
முடிவாக வைத்துமே சொல்லக் கேளே (727)

## 718 - 727 உரை

தங்கம் ஒருபலம். உருகும்போது செம்பு ஒருபலம் சேர்த்துருக்கு. இலிங்கம் பத்துப்பலம் எடுத்து முலைப்பாலும் பழச்சாறும்விட்டுச் சுருக்கித்தாக்கு. கரியோட்டில் அப்பிரகத்தகட்டை வைத்து ஊது. தாளகப்பொடி தூவு. உருகும். இலிங்கக் கட்டியை அந்த உருகும்நிலையில் போட்டும் புரட்டு. தைலத்தை உண்ணும். ஒருபலம் அப்பிரகமும் காற்பலம் வீரமும் சேர்த்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்து வெண்ணெய்யாக்கி இலிங்கத்தின்மேல் கவசம்கட்டி (அதன்மேல் மண்கவசமும் செய்து) உமியின் மேல் எருவைத்துப் புடமிடு. பிரி. இலிங்கக்கட்டினை எடு. தங்கமும் செம்பும் சேர்த்த சேர்வையை உருக்கும்போது பத்துக்கு ஒன்று கொடு. சுழித்துவாங்கும். அதனெடைக்கு அயம்சேர்த்துப் பாதி வெங்காரமும் சேர்த்துப் பூச்சாறு விட்டரை. வி. த. கா. மூசையிலிட்டுருக்கியூது. தங்கச் செம்பாகும். இது இறைவி சொன்ன முறை.

கெந்தியும் சீனமும் வகைக்குப் பலம் பத்து ஓட்டிலிட்டு உருக்கிப் பத்துப்பலம் கௌரியை அதிற்போட்டுப்புரட்டு. தைலத்தை உண்ணும். அப்பிரகத்தையதன் மேற்கவசம்கட்டி உமி நெருப்பிற்புடமிடு. உருக்கு முகம் போலாகும். காரீயமும் நாகமும் செம்பும் வகைக்குப் பத்துப்பலம் எடுத்து அவை

உருகுமுகத்தில் நாலில் ஒன்று கௌரிக்கட்டினைத் தாக்கு. பாதி சேர். அரை. வி. த. கா. பெரும்புடமிடு. மூசையில் வைத்து ஊது. செம்பாகும். தங்கச் செம்பு ஒன்று காரி நாகச் செம்பு ஒன்று சேர்த்து உருக்கிச் செம்பாக்கி எடுத்து வைத்துக் கொள்.

## செம்பை வைத்துக்கொண்டு வேண்டும்போது வெள்ளியிற்கொடுக்க வேதையாம்

கேளுமே செம்பெடுத்துக் கையிற் கொண்டு
கெடியாகத் தேசத்தில் சஞ்ச ரிக்க
வாளுமே போகையிலே செலவுக் காக
வைத்திடவே சொல்லுகிறேன் வரிசை யாகப்
பாளுமே சீவனத்துக் கில்லா விட்டால்
பலமான மதிதனிலே யெட்டிலொன்று
தாளுமே கொடுத்திடவே யெட்டு மாற்று
தாட்டிகமாய்ச் செலவழித்து நடந்தி டாயே (728)

## செம்பையெடுத்துப் பொன்செய்துகொண்டு குளிகைக்குச்சாரணை தீர்த்துக் கவனவழியோடுக

நடந்துமே செலவுதான் செய்து கொண்டு
நாடியே மலைதனிலே சஞ்சரித்துத்
தொடர்ந்துமே ஏறியதோர் உபர சத்தைத்
திடமாகக் கிடைத்த மட்டும் எடுத்துக் கொள்ளு
அடைந்துமே குளிகைக்குச் சாரணையைத் தீரு
அடைவாகக் கமனம்நீ யோடிப் பாரு
கடந்துமே அதிகமாய்ச் செந்தூரஞ் செய்
கனிவாகப் பாகமாய் உண்டி டாயே (729)

## மனம் நிலைக்கச்செய்

உண்டிடவே சுழிமுனையில் கருத்து வைத்து
ஒளிவான விராட்புரு சனையுந் தேடு
கொண்டிடவே ஞானத்தைச் சித்தி யாக்கு
குடிகேடு செய்யாமல் மனத்தைக் கட்டு
தொண்டிடவே மோட்சவழிக் கிதுவே யாதி
துடியான மனந்தன்னைச் செம்மை யாக்கு
திண்டிடவே செந்தூரம் செய்து தின்னு
திறமான காயசித்தி கடிதி லாமே *(730)*

## பஞ்சபூதம் சேர்த்துச் செம்பை எடுத்தால் வேதையாகும்

கடிதாகப் பஞ்சபூதத்தைக் கண்டு
கணக்கறிந்து செம்பைத்தான் கருதிச் செய்து
வடிவாக மதிதனிலே கொடுக்க மாற்று
வகையாகத் தோணுமது வலிமை மெத்த
துடியாகத் திரியாதே நூலைப் பாரு
துடித்துமே சொல்லாதே வாயை மூடு
கடிதென்று விடவேண்டாம் வாதம் தன்னைக்
கருத்தாக விட்டாக்கால் இசைவா காதே *(731)*

## பஞ்சபூதம் பார்த்துச் செய்தால் வாதம் எளிதிலாகும்

இசைவாகப் பூதத்தைப் பார்த்துத் தேறு
ஏற்றமாம் வாத மெல்லாம் எளிதி லாகும்
அசைவாக மனக்குறும்பை விட்டுத் தேறு
அன்பான யோகம் வரும் ஞான மாகும்

தசையான இடந்தனிலே கத்தி நாடும்
தசையில்லாப் போனாக்கால் நாடாது பார்
விசையான விசையறிந்தால் சித்தியாகும்
விருப்பமாய் அறிந்துமே செய்து கொள்ளே (732)

செய்திடவே பஞ்சபூ தத்தைப் பார்த்துச்
செய்தாக்கால் பலனாகும் சித்தி யாகும்
வைதிடவே வாதமென்றால் எளிதோ வல்ல
வடிவான சிவரூபம் ஆகும் பாரே
மெய்யிதுதான் சூதத்தைச் சொல்லிப் போட்டேன்
மேன்மையாய் வாதந்தான் எளிதி லாகும்
கைமுறையும் நூன்முறையுங் கண்டு தேறு
கடிதாக வந்திடுங் காண்ஏம மாமே (733)

## வாதம் வந்தால் மிகவும் அடக்கமாய் இருக்கவும்

ஏமத்தைக் கண்டவுடன் கர்ச்சிக் காதே
எகிறியே திரியாதே இன்பம் வேண்டாம்
காமத்தைத் தள்ளியே ஞானம் பாரு
கருணையாய் மனதொன்றி நாடிப் பாரு
ஊமத்தைப் பூப்போல வாசி யேற்று
உய்த்துணர்ந்து பார்த்து நின்று தேறு
நாமத்தைக் கேட்டுமே அறிவில் நில்லு
நாடினால் சிவயோக நன்மை தானே (734)

## துரிசு மிருதார் சிங்கிகளின் செம்பு

நன்மைதான் இன்னமொரு செம்பு சொல்வேன்
நலமான மிருதார சிங்கிச் செம்பு

கண்மைதான் துரிசதுவும் பலமும் பத்துக்
காரணமாய்க் கெந்தியது பலமும் முக்கால்
வண்மைதான் சூடனரைப் பலமும் போடு
வகையான வீரமது கால தாகும்
தண்மையாய்ச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டுத்
தடையறவே துரிசுமேல் கவசங் கட்டே (735)

## துரிசுக்கரியை இரண்டுவிசை உருக்கவும்

கட்டியே சுண்ணாம்புச் சீலை செய்து
கனிவான மண்கவசம் மேலே போட்டுத்
திட்டமுடன் பத்தெருவில் புடத்தைப் போடு
திறமான வெங்காரம் இடையே சேர்த்து
வட்டியே யுருக்கியே கல்வத் திட்டு
வகையாக எடைகாரம் பொரித்துச் சேர்த்து
நட்டியே யரைத்துமே யுருக்கித் தீரு
நலமான செம்பாகும் நாடிப் பாரே (736)

## அயம் உருக்கி முன் செம்பைச் சேர்த்துக் களங்கு செய்ய

நாடிப்பார் அயமுருக்க வித்தை கேளு
நலமான அரப்பொடிதான் பலமும் பத்து
கூடிப்பார் கெந்தகமும் பலமும் பத்துக்
குளிரவே யரைத்துமே யுருக்கிப் போடு
வாடிப்பார் உருகியே கரிபோ லாகும்
வளமான இந்தஎடை முன்செம் பிட்டுப்
பாடிப்பார் உருக்கிட்டு எடுத்துப் பாரு
பதிவாகக் களங்காகும் பண்புமாமே (737)

## முன் களங்கு வேதை

பண்பாக மதியெட்டில் களங்கி ரண்டு
பதிவாகக் கொடுத்தூத மாற்று ஆறு
தண்பாகக் களங்கில் வெங் காரம் சேர்த்துத்
தாக்கியே ஐந்து முறை உருக்கி யாட்டு
வண்பாகக் கசடற்று மணிபோல் ஆகும்
வகையாக எடுத்துமே வேடம் செய்து
திண்பாகக் காததனில் தரித்துக் கொள்ளு
திடமான சமையம் வந்தால் சொல்லக் கேளே (738)

## உழைத்தால் பலனாகும் சும்மா திரிந்தால் பலனில்லை

சொல்லவே சீவனத்துக் கில்லா விட்டால்
சொகுசாக மதியுருக்கி யதிலே எட்டு
நல்லவே ஒன்றிடவே ஏழு மாற்று
நலமாகக் கொடுத்திட்டு விற்றுக் கொள்ளு
கல்லவே சீவனத்தைச் செய்து கொண்டு
கனிவாக வாசியோ கத்தைப் பாரு
வில்லவே யுழைத்தாக்கால் செம்பு மாகும்
வீணாக இருந்தாக்கால் ஆகாதென்னே (739)

ஆகாது சாத்திரத்தில் செம்பு தன்னை
அடைவாகத் தலைகீழாய்ப் பாடினார்பார்
தாகாது இந்நூலில் வெளியாய்ச் சொன்னேன்
தடையற்றுப் பாகமாய்ச் செய்து கொள்ளு
வாகாது மலைத்தாக்கால் பயிரு மாகும்
வடிவாக வுழுதாக்கால் பயிரு மாகும்

தேகாது உழாவிட்டால் பயிரு மில்லை
ஒட்டென்ன என்றாக்கால் இல்லை தானே (740)

## அயம்செம்பைப் பார்த்துத் தேறில் வாதம் சித்தியாம்

இல்லையென்று போகாமல் அயத்தைப் பாரு
இதமான கெந்தியைத்தான் உழைத்துப் பாரு
நல்லாக வந்திடுங்காண் வாத மாட்டு
நடைதப்பில் பாகமது இல்லை கண்டாய்
வில்லாக வளைந்தாலோ அம்பு தைக்கும்
விருப்பமாய் வளையாட்டால் அம்பு போமோ
தெல்லவே அயச்செம்பைப் பார்த்துத் தேறு
திட்டமாய் வாதமெல்லாம் சிக்குந் தானே (741)

சிக்குமட்டும் பாகத்தைச் சோதித் தேறு
சிக்கினால் அயச்செம்பு வேதை யாகும்
நிக்கவே செந்தூரம் செய்து தின்னு
நிலவரமாய்க் காயமது கற்றா னாகும்
மிக்கவே ஏமமது எளிதி லாகும்
மிதமாகத் திரியாதே செம்பைப் பாரு
தைக்கவே செம்பெல்லாம் எளிதி லாகும்
தடையறவே எடுத்தாக்கால் நன்மை தானே (742)

## 728 – 742 உரை

முன் கூறிய செம்பினை வைத்துக்கொள். உலகம் சுற்றும் போது செலவிற்கு இல்லாவிட்டால் வெள்ளியில் எட்டிற்கு ஒன்று கொடு. எட்டு மாற்று. உபரசம் எடுத்துக் குளிகைக்குச் சாரணை

செய். விண்ணில் பறந்துபார். சுழிமுனையில் கருத்து வைத்து நிறைவினையும் தேடு. செந்தூரம் செய்து தின். ஐம்பூதச் சேர்க்கையால் செம்பொன்னாகும். பார்த்துத் தேர். வளிநிலை செய்.

துரிசு பலம் பத்து. கெந்தி பலம் முக்கால் சூடன் அரைப்பலம் வீரம் காற்பலம் இம்மூன்றும் செவ்வல்லிப்பூச்சாறு விட்டரைத்துத் துரிசுக்குக் கவசமிடு. சுண்ணாம்புச் சீலை செய். அதன் மேல் மண்கவசமிடு. பத்தெருப்புடமிடு. கண்ட எடைக்கு வெங்காரம்சேர்த்து உருக்கு. செம்பாகும். அயப்பொடி பத்துப் பலமும் கெந்தகம் பத்துப்பலமும் அரைத்துஉருக்கு. கரிபோலாகும். அந்தஎடைக்கு முன் செம்பிட்டு உருக்கு. களங்காகும். வெள்ளி எட்டில் களங்கு இரண்டு கொடுத்து ஊது. ஆறுமாற்று களங்கில் வெங்காரம் சேர்த்து ஐந்துமுறை உருக்கியாட்டு சுசடற்ற மணிபோலாகும். வளையம்செய்து காதிலணி. வேண்டியவேளை வெள்ளி எட்டு உருக்கி ஒன்றிடு. ஏழுமாற்று வில். செலவிடு. சிவயோகம்பார். நூல்களில் செம்பினைத் தலைகீழாகச் சொல்லிவிட்டார். அதனால் தகுதியில்லை. ஈங்கே உண்மை சொன்னேன். சிக்குமட்டும் பாகத்தை ஆய்ந்து தேறு. வெற்றியாகும்.

## துரிசுச் செம்பு

தானேதான் இன்னமொரு செம்பு சொல்வேன்
　　தடையறவே கைபாக மாகக் கேளு
மானேதான் துரிசதுவும் பலமும் பத்து
　　மயமான கெந்திமுக்கால் வீரங் காலாம்
கானேதான் சூடனரைப் பலமும் போடு
　　கருத்தாகச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டு
நானேதான் இருசாமம் அரைத்துக் கொண்டு
　　நலமாகத் துரிசின்மேல் அப்பிப் போடே (743)

போடவே யதன்பேரில் சுண்ணச் சீலை
பொலிவாகக் கவசமது வலுவாய்ச் செய்து
நாடவே பத்தெருவில் புடத்தைப் போடு
நலமாகக் களங்காக விருக்கும் பாரு
காடவே களங்கெடுத்து அப்பால் வைத்துக்
காரியமாய் அயமதுதான் பலமு மொன்று
காடவே கௌரியேது பலமும் போட்டுக்
கருணையாய் அரைத்துமே சொல்லக் கேளே (744)

## கௌரிப்பாஷானம் அயம் துரிசுக்களங்கும் சேர்க்கிற பாகம்

சொல்லவே மூசைதனில் வாரி யிட்டுத்
துடியாக வுருக்கிடவே மணியுமாகும்
மெல்லவே அயமணிதான் பலமும் பத்து
மேன்மையாய்க் களங்கதுவும் பலமும் பத்து
நல்லவே இதுவிரண்டும் அரைத்து மூசை
நலமாக வுருக்கிடவே மணியு மாகும்
வல்லவே மதியெட்டுக் களங்கு நாலு
வகையாக வுருக்கிடவே மணியுமா மே (745)

மணியெடுத்து நிகடைதனில் ஊதிப் போடு
மயமான மாற்றுத்தான் ஏழ தாகும்
கனிவாக இதைவிற்றுச் செலவு செய்து
காரணமாய் ஞானத்தைப் பார்த்துத் தேறே
அணியாக வாதமென்ன எளிதி லாகும்
அடைவாக வுழைத்தாக்கால் அறிவில் தங்கும்
உணியாக உ ணவறிந்து கூடு கூடு
உய்த்துமே பார்த்தாக்கால் சித்தி யாமே (746)

### கல்லுப்பும் ரசபதங்கமும் சேர்ந்த அயச்சவளை

சித்தியாம் அயச்சவளை சொல்லக் கேளு
சிறப்பான அரப்பொடிதான் பலமும் பத்து
முத்தியாய் ரசபற்பம் பலமும் பத்து
முடிவான கட்டினதோர் கல்லுப் பைந்து
நத்தியாம் பாணியால் அரைத்து ருட்டி
நலமான மூடைக்குள் வாரி யிட்டுக்
கத்தியாய் உருக்கிடவே யீயம் போலாம்
கண்விட்டு ஆடுமே யயமுந் தானே (747)

ஆடுமே இப்படியே முறையைந் தாகும்
அடைவாக வுருக்கிடவே சத்தாய் நிற்கும்
தேடுமே கிடைக்காது அயத்தின் போக்கு
தேசத்தில் அலைந்தாலும் கிட்ட தப்பா
பாடுமே அயஈயம் இதற் கொவ்வாது
பதிவான வேதைதான் பகரக் கேளு
பாடுமே சொல்லுகிறேன் பாரு ளோர்க்கு
பதிவாகக் கேட்டாக்கால் சித்தி யாமே (748)

### 743 – 748 உரை

துரிசுபலம் பத்து எடுத்துவை. கெந்தி முக்காற்பலம் வீரம் காற்பலம் கூடன் அரைப்பலம் இம்மூன் றும் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்துத் துரிசுக்குக் கவசமிடு. அதன்மேல் சுண்ணச்சீலைக் கவசமிட்டுக் காயவைத்துப் பத்தெருப்புடமிடு. களங்காக இருக்கும். அயமும் கெளரியும் வகைக்கு ஒருபலம் எடுத்து அரைத்து மூசையிலிட்டுருக்கு. உருகி மணியாகும்

அயமணிபத்துப்பலம் களங்கு பத்துப்பலம். சேர்த்தரைத்து மூசையிலிட்டுருக்கு. மணியாகும். வெள்ளிஎட்டுக்குக் களங்கு நாலு சேர்த்து உருக்க மணியாகும். நிகடையில் வைத்து ஊது. (பிடிவாத நூலில் நிகடை காண்க). ஏழு மாற்று. செலவிற்கு வைத்துக்கொள். ஞானம் பார்.

அரப்பொடி பலம்பத்து. ரசபற்பம் பலம் பத்து. கல்லுப்பு ஐந்துபலம். இவற்றை அரைத்து மூசைக்குள் விட்டு உருக்கு. ஈயம் போலாகும். அயஈயம் இதற்கு நிகராகாது. உலகெலாம் அலைந்தாலும் இதுகிட்டாது. மாற்று முறைகேள்.

## துரிசுச் சவளை

சித்திபெறச் சொல்லுகிறேன் துரிசு பத்து
சிறப்பாகக் கெந்தியது ஏழ தாகும்
மத்திபெறச் சூடனது ஐந்த தாகும்
முடிவான வீரமது கால தாகும்
நத்தியே செவ்வல்லிப்பூச்சாறு விட்டு
நலமாக அரைத்திடவே மெழுக தாகும்
சத்தியமாய்த் துரிசதன்மேல் அப்பிப் போடு
சரியாகச் சுண்ணமென்ற சீலை செய்யே (749)

செய்துமே பத்தெருவில் புடத்தைப் போடு
சிறப்பாகக் கரிபோலக் களங்கு மாகும்
கைதுமே இக்களங்கு பலமும் ஒன்று
கடிதான அயச்சவளை ஒன்று சேர்த்து
நைதுமே யுருக்கியே யூதிப் போடு
நலமான செம்பாகும் நயக்கும் பாரு
பைதுமே செம்பெடுத்து மதியில் பத்து
பண்பாக ஒன்றிடவே மாற்றுக் கேளே (750)

## அயச்சவளைச் செம்பு வேதை

கேளுமே வயதென்ன ஏழு மாகும்
கெடியான செம்புதான் வேதை யாகும்
ஆளுமே செம்பெல்லாம் எடுக்க வாதம்
அடைவாக வாய்பொத்தும் ஏவல் கேட்கும்
நாளுமே வாதமென்றால் எளிதோ வன்று
நாதாந்த சற்குருவின் நாட்டம் பாரு
தூளுமே படிந்தாலோ அழுக்க தாகும்
துடியான வாதமென்ன சூழ்ச்சம் தானே (751)

## புத்தி கூறல்

சூழ்ச்சமாய் உடல்கருவி தன்னைப் பாரு
சூதாகப் பேசாதே சூழ்ச்சம் மெத்த
ஆட்ச்சியாய் மூட்டினதோர் மூட்டறிந்து
அடைவாகக் கண்டாக்கால் அளவு காணும்
தாழ்ச்சியே வாராது செம்பு மார்க்கம்
தடையறவே பாகமாய்ச் செய்து கொள்ளு
மோழ்ச்சமே யுண்டாகும் இந்தப் போக்கு
முடியுமட்டும் பார்த்தாக்கால் வேதை யாமே (752)

## முன்னே அயச்செம்பை முடித்தாக்கால் எல்லா வகையும் கூடி வரும்

வேதையாம் அயச்செம்பை முன்னே பாரு
வேடிக்கை சொல்லாதே பாடு பட்டு
காதையாம் செம்பைமுந்திப் பார்த்துத் தேறு
கைலையுறை சிவனும் வந்து நிர்த்தம் செய்வார்

சாதையாம் வேதையிது மூர்க்கம் மெத்த
சரிவரவே செய்தாலோ வேதை வேதை
சீதையாம் ஆட்டுவித்தால் என்ன லாபம்
கீர்த்தியாய் ஒன்றுண்டு கிருபை யாமே (753)

## 749 – 753 உரை

துரிசு பத்துப்பலம். கெந்தி ஏழு சூடன் ஐந்து வீரம் காற்பலம் இம்மூன்றும் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்து மெழுகாக்கி அந்தப் பத்துப்பலத்துரிசின்மேல் கவசம் கட்டு. அதன்மேல் சுண்ணச் சீலை செய். பத்தெருப்புடமிடு. கரிபோலாகும். இதில் ஒரு பலமும் அயச்சவளையொரு பலமும் சேர்த்துருக்கியூது. செம்பாகும். வெள்ளியில் பத்துக்கு ஒன்று கொடு. ஏழு வயது. அயச்செம்பை முதலில் பார். வெற்றி.

## அயக்களங்கு

ஆமேதான் இன்னமொரு செம்பு சொல்வேன்
அன்பான வாதியே அறிந்து கொள்ளு
தாமேதான் இதுலெகுவு முன்னே பாரு
தப்பாது செம்புதான் ஆதீத வேதை
வாமேதான் செம்பென்றால் எளிதோ அல்ல
வகையான சீவனத்துக் கிதுதான் ஆதி
பூமேவும் உலகத்தில் வாதி மார்கள்
போக்கோடே செய்தறிந்தால் பெருளு மாமே (754)

பொருளாகச் சொல்லுகிறேன் இன்னம் செம்பு
போக்கோடே எடுத்துப்பார் வேதை மெத்த
அருளாகத் துரிசதுதான் பலமும் பத்து
அன்பான அயமதுதான் பலமிரண்டு

கருளாகக் கௌரியது பலமும் ரெண்டு
        கருத்தான சூடனது பலமும் ஒன்று
வருளாக வீரங்கால் நிறுத்துப் போடு
        வகையான கல்வத்தில் அரைத்தி டாயே (755)

அரைத்திடவே செவ்வல்லிப் பூச்சாறு விட்டு
        அன்பாக இருசாமம் அரைத்துக் கொண்டு
புரைத்திடவே துரிசதன்மேற் கவசம் கட்டிப்
        பொருந்தவே சுண்ணாம்புச் சீலை செய்து
வரைத்திடவே மண்கவசம் வலுவாய்ச் செய்து
        வடிவாகப் பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
நிரைத்திடவே யெடுத்துப்பார் களங்கு மாகும்
        நேர்காரம் இட்டுருக்க மணியு மாமே (756)

மணியெடுத்து அடித்துபார் வெள்ளை யாகும்
        மாசாற்ற துரிசதனைச் செம்பெடுத்து
அணியாக இரண்டிற்கும் ஒன்ற தாக்கு
        அடைவாக உருக்கியே ஊதி மெல்ல
தணியாக வெள்ளியிலே கொடுத்து ஊதத்
        தண்மைபெற மாற்றென்ன ஆறும் ஆகும்
வணியாக விற்றுமே செலவு செய்து
        வடிவான ஞானமுடன் யோகம் பாரே (757)

பாருமே யோகமதில் நிலையில் நில்லு
        பதிவான செம்பைத்தான் வைத்தெடுத்து
காருமே வஸ்துவைத்தான் வைத்துப் பூசி
        கருணைபெறச் சமாதியிலே யிருந்து தேறு
வாருமே வாசியைநீ யுள்ளே சேரு
        வடிவான வயதுதான் அதிக மாகும்

தாருமே தொழிலெல்லாம் வந்து தோன்றும்
தாக்கிடவே எட்டெட்டும் சித்தி யாமே. (758)

சித்திபெற்று இருக்கவென்றால் செம்பைப் பாரு
செயமுள்ள செந்தூரம் பண்ணித் தின்னு
முத்திபெற்று இருக்கவென்றால் ஞானம் பாரு
முடிவுள்ள காயமது உறுதி யாகும்
சத்திபெற்று இருக்கவென்றால் *அயத்தைப் பாரு
சரியான வேதத்தி லுள்ள வார்த்தை
பத்தியே சொல்லிவிட்டேன் இக்காண் டத்தில்
பதிவான வாதமென்ன எளிதி லாமே (759)

* ஊத்தை

## இந்நூலை காப்பு முதல் கடைவரை பார்

எளிதாகப் போகாமல் பாகம் பாரு
இன்பமாய் மனம்தன்னை யொக்கப் பண்ணு
அளிவான புத்தியைநீ தள்ளிப் போடு
அடிமரமும் நுனிமரமும் ஏறித் தீரு
துளிபோல பாயுமிது வாத மார்க்கம்
தொல்லுலகில் அரசாள்வாய் சூழ்ச்சம் மெத்த
களிவான மனத்தைவிட்டுக் கண்டு தேறு
கருத்துறவே சித்தியெல்லாம் வருகும் பாரே (760)

## கன்னியர்கள் ஆசைவிட்டுச் செம்பை முன்னேபார்

வருகவே கன்னியரைத் தள்ளிப் போடு
வடிவான ஏமத்தைக் கண்டு தேறு

திருவாக இருக்கவே செம்பை முந்தித்
திடமாக வைத்துமே செலவு பண்ணு
கருவாளி யானாக்கால் கண்டு தேறு
கருத்திலார்க் கொன்றுமில்லைவாத மில்லை
புருவாகச் சுழிமுனையில் நாட்டம் பாரு
புகழாக வருகுமே வாத மாமே (761)

## 754 - 761 உரை

அயம் இரண்டுபலம் கௌரி இரண்டு பலம் கூடன் ஒருபலம் வீரம் காற்பலம் இவற்றைச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டு இருசாமம் அரை. பத்துப்பலத்துரிசுக்குக் கவசமிடு. அதன்மேல் சுண்ணாம்புச் சீலை செய்து மண்கவசமிட்டுப் பெரும்புடமிடு. களங்குமாகும். காரமிட்டுருக்கு. மணியாகும். அடித்துப்பார். வெள்ளையாகும். துரிசுச் செம்பெடுத்து அதனொடு சேர். உருக்கியூதி வெள்ளியிலே கொடு. ஆறு மாற்றாகும்.

சித்தி பெறச் செம்பைப் பார். செந்தூரம் செய்து தின். சுழிமுனையில் நோக்கம் வை.

## வாதம் கண்டபின் வெளியில் சொன்னால் தலை போகும்

வருகுமே யின்னமொரு செம்பு மார்க்கம்
வலிமைபெறச் சொல்லுகிறேன் உலகத் தோர்க்கு
திருகுமே யில்லையிதை வைத்துப் பாரு
திட்டமாய் வாதந்தான் எளிதி லாகும்
கருகுமே வாதத்தைக் கண்டு சொல்லிக்
கருணைபெறத் திரிந்தாக்கால் தலைகள் போகும்
உருவாகச் செய்துமே யுண்மை யாக
வுறுதியாய் இருந்திட்டால் சித்தி யாமே (762)

## அரிதாரச் செம்பு

சித்தனாய்த் திரியவே செம்பைச் சொல்வேன்
சிறப்பாகத் துரிசதுவும் பலமும் பத்து
முத்தனாய்த் தாரமது பலமும் ரெண்டு
முடிவான பண்ணையது அரையும் போடு
வித்தனாய் வீரமது காலும் போடு
விருப்பமாய்க் கல்வத்தில் பொடியாய்ப் பண்ணு
சத்தனாய்ச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டுச்
சரியாக இருசாமம் அரைத்தி டாயே (763)

அரைத்துமே துரிசதற்குக் கவசம் கட்டி
அடைவாக மண்கவசம் மேலே கட்டி
புரைத்துமே கசபுடமாய்ப் போட்டெ டுத்துப்
புகழாகப் பார்த்திடவே களங்கு மாகும்
நிரைத்துமே வெங்கார மிட்டுருக்க
நேரான ரவியாகும் தாரச் செம்பு
புரைத்துமே நொறுக்கு வெள்ளி போடி ரண்டு
போர்ராகக் கொடுத்திடவே மாற்றும் ஏழே (764)

மாற்றாரும் ஏழதுதான் பொன்னை விற்று
மனதாக வாசியோ கத்தைப் பாரு
சேர்த்தாலே வாதந்தான் செயமு மாகும்
சிறப்பான வசியசித்தி யோகசித்தி
காத்தான சுழிமுனைதான் இறுக்கிக் கொள்ளு
கனிவான பாகத்தைப் பிரித்துப் பாரு
மூத்தாள்தான் முகத்திலே நின்றால் வாதம
முக்கியமாய் வாராது முந்திப் பாரே (765)

## அயச்செம்பு செய்துகொண்டால் வாத சித்தியாகும்

முந்தியே *யயத்தினுட செம்பைப் பார்க்க
முடிவான வாதசித்தி தங்க சித்தி
சந்தியே யுழைத்தாக்கால் செம்பு மாகும்
சதியாக விட்டாக்கால் எல்லாம் பாழாம்
முந்திபெறச் செய்தாக்கால் வாத மாகும்
முடிவாகும் வாதமாம் மூர்க்க மாகும்
பந்தியாய் இரையறிந்து செய்து கொள்ளு
பதிவான யூகிமுனி சொன்ன வாறே (766)

* தாளகத்தின்

## தாறுமாறாகச் செய்தால் வாதம் தடைபடும் அயச்செம்பு புடத்திற்கு இறங்கும்

வாறேது என்றாக்கால் சொல்லக் கேளு
வடிவான அயச்செம்பு புடமி றங்கும்
காறேது செலவிற்கு வருகும் பாரு
கருணைவைத்தால் சித்தியாம் பலனு மாகும்
சீறேது தொழிலெல்லாம் வெறுமை யாகும்
செய்தாக்கால் லாபமாம் சீருமெத்த
தாறேது தா றுமா றாகச் செய்தால்
தடையுண்டு சொல்லிவிட்டேன் தாழ்ச்சி யாமே (767)

## அயச்செம்பால் வேதையாம் சஞ்சலத்தால் வேதைகெடும்

தாழ்ச்சியாம் சஞ்சலத்தால் வேதை யில்லை
தாட்டிகமாய்ப் பண்ணாக்கால் வேதை போகும்

மிழ்ச்சியாய் மிரண்டாக்கால் சித்தி யில்லை
மிரளாம லேபார்த்தால் வேதை யாகும்
வாழ்ச்சியாய் யோசிக்க எளிதோ அல்ல
வாய்ப்பேச்சால் ஒன்றுமில்லை வலுவு மில்லை
ஆழ்ச்சியாய் அயச் செம்பைப் பார்த்துத் தேறு
அடைவான பொருளாகும் ஊன்றிப் பாரே (768)

## *762 - 768* உரை

தாரம் இரண்டு பலம் இலிங்கம் அரைப்பலம் வீரம் காற்பலம் இம்மூன்றும் பொடித்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்துப் பத்துப்பலத்துரிசிற்குக் கவசமிட்டு மேலே மண் கவசம் கட்டிக் கெசபுடமிடு. களங்காகும். வெங்கார மிட்டுருக்கு. இது தாரச் செம்பு. நொறுக்கு வெள்ளியில் எட்டுக்கு இரண்டு போட்டுருக்கு. ஏழு மாற்று. விற்றுச் செலவு செய்.

## களங்குகளைச் செய்து பயனடைய

ஊணியே மனதுதான் ஒக்கப் பண்ணை
உருவான களங்கைமுந்திச் செய்து கொள்ளு
பேணியே யிருந்துமே ஞானம் பாரு
பிரட்டல்ல உங்களுக்குச் சொன்னேன் புத்தி
காணியாய் இருந்துமே செய்து கொள்ளு
கனிவான சிவமயமாம் கருதிப் பாரு
நாணியே மனதுறைத்தால் சித்தி யாகும்
நாதாந்தப் பொருளறிந்தால் வாதி யாமே (769)

## சுட்டுக்கெட்ட வாதிகளே வழலையில்லாமல் முடியாது

வாதியாம் என்றுசொல்லி யலைந்து சுட்டு
வடிவான தங்கத்தைக் காணா தாலே

சோதியாம் ஒன்றுமிலை யென்பார் பாதி
சூழ்ச்சத்தை யறியாமல் அலைந்து கெட்டுப்
பாதியாம் வழலையென்று நினைத்துக் கொண்டு
பதிவாக அலைவார்கள் நாட்டு வாதி
காதியா மலைந்ததனால் வாத மாமோ
கருத்துவைத்துக் கேட்டாக்கால் சித்தி யாமே (770)

## துன்மார்க்க வாதிகள் ஐங்காய பிண்டத்தை வழலையென்றும் சவுக்காரமென்றும் சொல்வார்கள்

ஆமேதான் வழலையென்று நினைத்துக் கொண்டு
ஐங்காய பிண்டத்தை யழியச் சொல்வார்
காமேதான் சவுக்காரம் என்று சொல்லிக்
கடைகெட்டுத் திரிவார்கள் உலக வாதி
போமேதான் ஞானமாய்ச் சொல்லிப் பின்பு
போக்கோடே வித்தகமாம் நூல்கள் பொய்யாம்
தாமேதான் தனித்துமே தர்க்கம் பேசித்
தடையாகத் திரிவார்துன் மார்க்கர் தானே (771)

## உண்மையைக் கண்டவர் வெளியே சொல்லார் புத்தியில்லார் காணார்

தானேதான் உலகத்தில் புத்தி யில்லார்
தாட்டிகமாய் நிசத்தைத்தான் காணு வாரோ
காணேதான் கண்டாலும் சொல்லு வாரோ
கருதியே திரிந்தாலும் சொல்ல மாட்டார்
வானேதான் சாத்திரமும் பொய்ய தென்பார்
வடிவான சூத்திரமும் பாரு மென்பார்
நானேதான் என்று சொல்லித் தவிப்பார் பாரு
நலமான ஞானசித்தி நவின்றி டாயே (772)

வழலையென்று நினைத்துக் கொண்டு ஐங்காய பிண்டத்தைக் கூறுவார். தருக்கம் பேசித் தடையாகத் திரிவார். நூல் பொய்யென்பவர் உண்மை காணார். உண்மை கண்டாலும் சொல்லார்.

## வீரச் செம்பு

நவிலவே வீரத்தின் செம்பு சொல்வேன்
நானிலத்தில் வாதிகளே கண்டு கொள்ளும்
கவிலவே வீரமென்றால் எளிதோ வல்ல
கனிவான தங்கசித்தி யுடனே யாகும்
துவிலவே காளகமும் மெத்த வுண்டு
சூட்சாதி குட்சமெல்லாம் துலங்கும் மெத்த
தவிலவே பாகத்தை விட்டு விட்டுத்
தாக்கிடவே சொன்னாக்கால் எல்லாம் ஆமே (773)

ஆமேதான் துரிசதுவும் பலமும் பத்து
அடைவான வீரமது பலமும் முக்கால்
நாமேதான் சூடனதும் பலமும் பாதி
நலமான கெந்தியது காலும் போடு
காமேதான் எலுமிச்சம் சாற்றால் ஆட்டிக்
கனிவான சாமம்நால் அரைத்துக் கேளு
நாமேதான் துரிசதன்மேல் கட்டிப் போடு
நலமான சுண்ணாம்புச் சீலை செய்யே (774)

செய்துமே மண்கவசம் மேலே கட்டிச்
சிறப்பாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
பைதுமே யெடுத்துமே காரம் கட்டிப்
பதிவாக வுருக்கிடவே செம்பு மாகும்

நைதுமே செம்பெடுத்து அப்பால் வைத்து
நலமாக வெள்ளியைத்தான் ஊதிப் போட்டு
சைதுமே வெள்ளியெட்டுச் செம்பிரண்டு
கனிவாகச் சேர்த்தூதப் பொன்னுமாமே (775)

## 773 – 775 உரை

வீரம் முக்கால் சூடனதை கெந்தி காற் பலம் எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் பத்துப் பலத்துரிசின் மேல் கவசித்துச் சுண்ணச் சீலைலையும் மேல்மண் சீலையும் செய்து பத்தெருப் புடமிட்டுருக்கிச் செம்பாக்கி வெள்ளி எட்டுக்கு இரண்டு கொடு. செம்பொன்னாகும்.

## பொன்செய்ய வேண்டுமென்றால் துரிசாலாகும்

பொன்னாக வென்றக்கால் சொல்லக் கேளு
போக்கோடே துரிசைநீ பேணிப் பாரு
தன்னாலே ஏமமது எளிதி லாகும்
தடையறவே மாயமாயச் செய்தாற் கேளு
பண்ணாகப் பாகத்தை விட்டு விட்டுப்
பதிவாகப் பின்னொன்றும் செய்ய வேண்டாம்
சொன்னாலும் தெரியாதே போனாற் கேளு
தொல்லுலகில் வேதமெல்லாம் பொய்யாய்ப் போமோ
(776)

## துரிசால் எல்லாமாகும்

போமேதான் துரிசினால் களங்கு கோடி
போக்கான நீலனால் செம்பு கோடி
ஆமேதான் கண்டரால் சுட்டுக் கோடி
அடைவான சூத்தனால் சுண்ணம் கோடி

வாமேதான் துரிசினால் ஏமங் கோடி
வடிவான செந்தூரம் வடிவு மெத்த
நாமேதான் சுண்ணமென்ற துரிசு தன்னால்
நலமாகச் சித்தியெல்லாம் எளிதி லாமே (777)

எளிதான வாதமென்றால் எளிதி லாமோ
ஏற்றமாம் துரிசைநீ உழைத்தால் ஆகும்
வளியான சிறுபிள்ளை யாடும் வாதம்
வடி வான வடிவறிந்தால் வாதி யாவான்
களிவான குணங்கெட்ட வாதி யானால்
கருத்திலே யொன்றுந்தான் நினைக்க மாட்டான்
தளிவான தறுதுரும்பன் செய்ய மாட்டான்
சாத்திரத்தின் வகையறிவான் சண்டி தானே (778)

## சுடுவாதிகள் கெட்ட பின்பு மனம்போனபடி பிதற்றுதல்

சண்டிதான் மெத்தவுண்டு சுட்டு வாதி
தவித்துமே நாம்கெட்டோம் என்று சொல்லி
கண்டிப்பாய்ச் சாத்திரம்பொய் கைபா கந்தான்
காரணமாய் மெய்யென்று சொல்வார் பாரு
துண்டியே தோசியாய்த் திரிவார் பாரு
துடியாகச் சித்தியில்லை என்பார் பாரு
மிண்டியே யுழைத்தாக்கால் எல்லா மாகும்
முடிவான சாத்திரத்தைப் பார்த்தி டாயே (779)

## சரக்குவகை தெரிந்து சேர்த்தால் வாதமாம்

பார்த்திடவே பாஷையெல்லாம் தோணும் பாரு
பதிவான கைபாக விவரம் தோணும்
சேர்த்திடவே களங்காகும் வேதை யாகும்
சேராட்டால் ஒன்றுமில்லை திடமு மில்லை

கார்த்திடவே சரக்குவகை யறிய வேண்டும்
காராட்டால் ஒன்றுமில்லை கழுதை மேய்க்கி
சார்த்திடவே வாதமெல்லாம் எளிதி லாகும்
என் சத்தியதை நோக்கினால் எல்லாம் ஆமே (780)

## கெந்தி சூதங்களால் வாதம் முத்தி ஞானம் இம்மூன்றும் உண்டாம்

சத்தியது ஏதென்றால் கெந்தி யாச்சு
சரியான சூதமது விந்து வாச்சு
முத்தியுண்டு வாதமுண்டு ஞானம் உண்டு
முடிவான இம்மூன்று பதிவு முண்டு
பத்திடவே யொன்றிடவே பொன்ன தாச்சு
பதிவான சிவனத்துக் கிடமே யாச்சு
சித்தியாய்ச் சொல்லி விட்டேன் இந்த நூலில்
திடமாகப் பார்த்திடவே யெல்லாம் ஆகும் (781)

## காந்த அயச்செம்பு சொல்கின்றேன் இதில் உழைத்தால் பயனாம்

எல்லாந்தான் ஆகவே செம்பு சொல்வேன்
இதமான காந்தஅயச் செம்பு தன்னைச்
சொல்லவில்லை யென்றுசொல்லித் துயர மாகச்
சொல்லிவிட்டேன் கடையதனில் கண்டு பாரு
மெல்லவே உழைத்தாக்கால் சீவனமு மாகும்
மெதுவென்று விட்டாக்கால் செம்பு போச்சு
பொல்லாமை யில்லாமல் செம்பு பாரு
பொன்னாகும் வேதையாம் பூட்டிப் பாரே (782)

## அயக்காந்தச் செம்பு

பூட்டிப்பார் அயந்தானும் பலமும் பத்து
புதுமையாய்க் காந்தமது பலமும் பத்து

ஆட்டிப்பார் இது இரண்டும் நேரே சேர்ந்து
அன்பாகச் செவ்வல்விச் சாற்றால் ஆட்டி
மூட்டிப்பார் கசபுடத்தில் போட்டுத் தேறு
மூதண்ட குருவாகும் பின்பு கேளு
நாட்டிப்பார் எடுத்துமே யப்பால் வைத்து
நலமான செம்புபலம் இருப தாமே (783)

இருபதாம் தகட்டினுக்கு மேலே பூச
இதமான கெந்தி பலம் முக்கா லாகும்
நருபதாம் சூடனரைப் பலமும் ஆகும்
நாட்டியே கால்வீரம் நிறுத்தெடுத்து
கருபதாம் செவ்வல்லிப் பூச்சாறு விட்டுக்
கணக்கவே சாமமிரண் டரைத்துப் பூசு
தருபதாம் பூசியே சுண்ணச் சீலை
தப்பாமல் செய்துநீ புடத்தைப் போடே (784)

போடவே அதராக நொறுங்கிப் போகும்
போக்கோடே அயக்காந்தம் அதனிற் சேர்த்து
நாடவே நேராகச் சேர்த்துக் கொண்டு
நலமாக அரைத்துமே புடத்தைப் போடு
காடவே நேர்காரம் சேர்த்து மூசை
கனிவாக உருக்கிடவே ரவியுமாகும்
தாடவே செம்புதான் நீறிப் பூப்போல்
தப்பாமல் வேதையெல்லாம் தானே யாமே (785)

ஆகுமே நாளத்தை வைத்து ஊது
அன்பாகக் கசடகலும் சோதி யாகும்
தாகுமே குறையில்லாச் செம்பு மாகும்
தனியுருக்கப் பேதிக்கா ரவியு மாகும்

போகுமே மதியெட்டுக் கொன்று போடு
பொறுமையாய்த் தங்கமொன்று சேர்த்து ஊது
யோகமாய் மாற்றென்ன எட்டு மாகும்
உயர்ந்ததொரு செம்பாகும் உற்றுப் பாரே (786)

## அயச்செம்புச் செந்தூரம்

உற்றுப்பார் அயச்செம்புச் செந்தூ ரத்தை
உண்மையாய்ச் சொல்லுகிறேன் கேளு வாதி
சிற்றுப்பார் பலம்நாலு நிறுத்துக் கொண்டு
சிறப்பாகத் தங்கமொன்று நாகம் ஒன்று
பற்றிப்பார் உருக்கியே தகடாய்த் தட்டிப்
பதியவே கெந்திரசம் அயமும் வீரம்
வற்றிப்பார் சூடனுமே கூட்டிக் கொண்டு
வகையாக நேர்சமனாய் நிறுத்தி டாயே (787)

நிறுத்துமே செவ்வல்லிப் பூச்சாற் றாட்டி
நிலவரமாய்த் தகட்டின்மேல் பூசிப் பூசி
நறுத்துப்பார் ரவியிலிட்டுக் காய வைத்து
நலமாகப் பத்தெருவில் புடத்தைப் போடு
கறுத்துமே செந்தூர மாகும் பாரு
கண்கொள்ளா வேதையிது கனக மாகும்
உறுத்துமே மண்டலந்தான் தேனில் உண்ண
உகாந்தவரை கடம்தானும் இருக்க லாமே (788)

## அயச்செம்பும் செந்தூரம் சாப்பிட்டால் தேகம் அழியாது

இருக்கலாம் வேதையிது மலை போல் தானும்
இன்பமாய்ச் செவ்வல்லிப் பூப்போல் மேனி

உருக்கலாம் வாசியது மேலே யேறும்
உகாந்தவரை யிருந்துமே யோகம் பாரு
திருக்கலகாம் காயசித்தி கடிதி லாகும்
சிவனறியச் சொல்லிவிட் டே னிந்தப் போக்கு
பெருக்கவே யிருந்திடவே சொன்னே னப்பா
பேருலகில் வாழ்வாய்நீ யரசு தானே (789)

அரசாக விருக்கவல்லோ இந்தச் செம்பை
அன்பாக வைத்துமே செந்தூ ரஞ் செய்
விரசாக நவலோகந் தன்னி லிட்டு
விரவியே தங்கமயம் செய்து கொள்ளு
வரசாக வுண்டிடுநீ சட்டை கக்கும்
வடிவமெல்லாம் பொன்னாகும் மயங்க வேண்டாம்
துரசான துரியத்தில் நின்று தேறு
சுத்தசை தன்னியத்ததில் வாசம் பண்ணு (790)

பண்ணவே காயத்தை நிறுத்தில் கொண்டு
பதிவான ஞானத்தைப் பார்த்துத் தேறு
நண்ணவே யட்டாங் யோக மெல்லாம்
நாடியே வந்திடுமே நயம தாகும்
வெண்ணையே யிடக்கரத்தில் வைத்த சோதி
பேருலகில் அடியேற்குச் சொன்ன மார்க்கம்
உண்ணவே சொல்லிவிட் டேன் நேர்மை யெல்லாம்
உய்த்துணர்ந்து பார்த்தாக்கால் சித்தி யாமே (791)

## 776 – 791 உரை

776-782. அறிவுரை. அயமும் காந்தமும் வகைக்குப் பத்துப்பலம் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்துக் கெசபுடமிடு.

குருவாகும். பின்பு கெந்தி முக்காற்பலம் சூடன் அரைப்பலம். வீரம் காற்பலம் நிறுத்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டரைத்து இருபது பலச் செம்புத் தகட்டின்மேல் பூசியதன்மேல் சுண்ணச்சீலைசெய்து புடமிடு. நொறுங்கும் முன்புடமிட்டு வைத்த அயக்காந்தத்தை இதனொடு சேர்த்து அரைத்துப் புடமிடு. பின்பு அதன் நேர் வெங்காரம் சேர்த்து உருக்கச் செம் பாகும். நாளம் கொண்டு ஊது. நலமாகும். வெள்ளி எட்டுக் கொன்று இச்செம்பு சேர்த்துத் தங்கமும் ஒன்று சேர். எட்டு மாற்றாகும்.

இனி அயச்செம்புச் செந்தூரம் கேள். மேற்கூறிய அயச் செம்பு நாலுபலம் தங்கம் ஒருபலம் நாகம் ஒருபலம் இம்மூன்றும் சேர்த்துருக்கித் தகடாய்த் தட்டிக் கெந்தியும் ரசமும் அயமும் வீரமும் சூடனும் வகை ஒவ்வொன்றும் ஓர் அளவாக எடுத்துச் செல்வல்லிப்பூச் சாறுவிட்டு அரைத்து மேற்படி தகட்டின் மேற் பூசிக் காயவைத்துப் பத்தெருப்புடமிடு செந்தூரமாகும். மாற்று உண்டாகும் தேனில் உண்டுவரஉடல் வலுக்கும். ஊழிவரை உடலழியாது மலை போல் உடலாகும். செவ்வல்லிப் பூப்போல் நிறமாகும். உடல் பொன்னாகும் அரசாளலாம். இறைவனறியச் சொல்லிவிட்டேன்.

## நாகச் செம்பு

சித்தியாம் இன்னமொரு சேதி கேளு
சிறப்பாகச் சொல்லுகிறேன் நாகச் செம்பை
முத்தியாம் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
முக்கியமாய் உருக்கியே இலுப்பை நெய்யில்
நத்தியாய் இருபத்து ஒன்று தானும்
நலமாகஉருக்கியே சாய்த்துக் கொண்டு
வித்தியாய் அதையுருக்கி இரதந் தன்னை
விருப்பமாய் நாலிலொன்று சேர்த்துக் கொள்ளே (792)

சேர்த்துமே புட்டாகப் பண்ணிக் கொண்டு
செம்மையாய் இதுநேரே கருப்பி சேரு
பார்த்துமே எடைசரியாய்ச் சேர்த்துக் கொண்டு
பதிவாக எலுமிச்சஞ் சாறு தன்னால்
நேர்த்தியாய் அரைத்திட்டு வில்லை தட்டி
நினவைாக ரவியிட்டுக் காய்ந்த பின்பு
பார்த்திபனே யதன்பேரில் கிளிஞ்சில் சுண்ணம்
பக்குவமாய்க் கட்டியே புடத்தைப் போடே (793)

போட்டுமே எடுத்துப்பார் மஞ்ச ளாகும்
போராக வதையெடுத்து கைத்துக் கொண்டு
தாட்டுமே செம்புதான் பலமோ பத்து
தடையறவே தகடாகத் தட்டிக் கொண்டு
காட்டுமே கெந்தியது பலமும் முக்கால்
கனமான சூடனரை வீரங் காலாம்
மாட்டுமே யதையரைத்துச் செம்பின் மேலே
மாயமாய்க் கட்டிரவி காயப் போடே (794)

போட்டுமே பத்தெருவில் புடத்தைப் போடு
போரான் செம்பதுவும் நொறுங்கிப் போகும்
காட்டுமே நொறுங்கு மட்டும் போட்டெடுத்துக்
கடினமாய் ஆனபின்பு சொல்லக் கேளு
நாட்டுமே இனநாகம் அயமும் சேர்ந்த
நலமாகப் பலமொன்று கரிச்செம் பொன்று
வாட்டுமே எடைசமனாய் வைத்துக் கொண்டு
வகையாக செவ்வல்லிப் பூச்சாற் றாலே (795)

சாற்றாலே யரைத்திட்டு வில்லை தட்டித்
தாக்கான கசபுடமாய்ப் போட்டெடுத்து
பார்த்தாலோ நேர்காரம் சேர்த்து ருக்கு
பதிவான நகாமது செம்ப தாகும்

கார்த்தாலே செம்பைத்தான் கண்ணால் தானே
காரியமாய்ப் பார்க்கவே யடங்கா தப்பா
சேர்த்தாலோ மதிமனிலே எட்டு மாற்று
செயமுள்ள பாதையாம் செய்து கொள்ளே (796)

## செம்புக்குண்டாகிய தோசரகிதமான நாகச் செம்பு

கொள்ளவே நாமது செம்பு வாச்சு
கூரான புரையும்வழ வழப்பு மற்றுத்
துள்ளவே களிம்பற்றுப் பொருமல் அற்றுத்
துடியான ஊறலற் றிருந்த செம்பை
மெள்ளவே நொறுக்குவெள்ளி எட்டி லொன்று
மேன்மையாய்க் கொடுத்திடவே தங்க மாகும்
கள்ளமாய்ச் சொல்லவில்லை தங்கத் தாயைக்
கண்டுமே தரிசித்தால் முத்தி யாமே. (797)

## நாகமும் அயமும் சேர்ந்தால் அளவில்லா வேதையாம்

முத்தியாம் நாகத்தில் லோகம் சேரில்
முடியாது வேதைமெத்த உண்டாம் பாரு
சித்தியாய் இத்துடனே கரியாய்ப் போன
சிறப்பான செம்பொன்று சேர்ந்த தானால்
சத்தியமாய்த் தங்கமாம் வேதை மெத்த
சாயுச்சீய பதவிதரும் தன்மை மெத்த
புத்தியினால் கண்டாக்கால் எல்லாம் சித்தி
புத்திகெட்டால் ஒன்றுமில்லை விழலு மாமே (798)

## வேதையாக வென்றால் அயமும் நாகமும் சேர்

விழலாகப் போகாமல் நாகம் பாரு
வேதைதா னாகவென்றால் இரும்பைப் பாரு

தழலாக விவ்விரண்டால் தங்க மாகும்
தாட்டிகமாய் இல்லாவிட்டால் எல்லாம் போச்சு
குழலான விழியாளைத் தேடித் தேடிக்
குணங்கெட்டுத் திரியாதே நூலைப் பாரு
பழகினால் ரசவாதம் சாந்தி யொக்கும்
பழகாட்டால் வாதத்தைச் சுட்டால் தோசம். (799)

## பாராது சுட்டால் பலிக்காது நூலைப் பார்த்துச் செய்

சுட்டதினால் வருமேதான் வாதம் வாதம்
சுருதியைத்தான் ஆராய்ந்து பார்க்க வேண்டும்
பட்டதினால் அலைந்தாலோ வாதம் ஆமோ
பாடுபட்டுச் சரக்குவகை யறிய வேண்டும்
நட்டதினால் பயிராமோ களையெ டாமல்
நடாவிட்டால் நாற்றாமோ நாட்டில் தானும்
முட்டாளாய்ப் போகாமல் இந்த நூலை
முடியுமட்டும் ஆயிரமும் பார்த்துத் தேறே. (800)

## வாதம் வந்தால் யோகம் ஞானம் இவ்விரண்டும் வரும்

தேறவே வாதம்வந்து குடியாய் நிற்கும்
தெருவிலே இறையுமது சித்தி யாகும்
ஆறவே வாதம் விட்டால் எல்லாம் பாழாம்
அலுத்ததினால் வருமோ ஆதார சித்தி
ஊறவே இறைத்தாலோ நல்ல நீராம்
உண்மையைச் சொன்னாலும் தெரியா தப்பா
மூறவே முதல்கடையும் பார்த்தால் தோணும்
முத்தியாம் சித்தியாம் முடிவு மாமே (801)

முடிவாக மனத்தையே நிறுத்திக் கொள்ளு
முத்திபெறச் சிற்றின்ப நிலையைத் தள்ளு
நெடிதாக ஞானத்தால் விரும்பி நில்லு
நேரான பொன்னையே விற்றுக் கொள்ளு
மடிவாக நிட்டையிலே அருள்பு ரிந்து
மாசற்ற சமாதியிலே மயக்கம் கூரு
துடியாகச் சாத்திரத்தில் மனத்தை யூன்று
சுத்தமாய்ச் சுழிமுனையை நாடி டாயே (802)

நாடியே வழியோடே ஆறா தாரம்
நன்மையாய் நிராதாரத் துள்ளே சொக்கி
நீடியே தமர்வாசல் வழியை நீக்கி
நிலவரமாய்ப் பூரணத்தில் நின்று தேறு
பாடியே மனத்தைத் தான் வழியி லேற்று
பத்தியாய்ச் சிவமதனில் பதிய நாடு
தேடினால் ரிஷிகளுக்குள் கீர்த்தி தேடு
சிலம்பொலியின் நாதத்தைக் கண்டு தேறே (803)

தேறவே யாசனத்தில் வீற்றி ருந்து
சிறப்பான கமலத்தில் சொக்கு சொக்கு
மூறவே யுன்மனைத்தாய் பதத்தைப் போற்று
முத்திசித்தி யுண்டாகும் மூர்க்க மாகும்
தூறவே துந்துமியின் முழக்கத் தோடே
துடியான நந்தியைத்தான் கண்டு கேளு
வாறவே ஞானத்தின் வழியும் சொல்வார்
வகையாக விவரமெல்லாம் கேட்டுக் கொள்ளே (804)

**முன்செய்த நாகச்செம்புச் செந்தூரம் சாப்பிட்டால் காயசித்தி யாகும்**

கொள்ளவே முன்வைத்த நாகச் செம்பைக்
கொழுமையாம் செந்தூரம் பண்ணித் தின்னு

மெள்ளவே காயமது கல்தான் ஆகும்
விருப்பமாய் மேனிகத் தூரி வீசும்
துள்ளவே சாகாத வர மு மாகும்
துடியான சரீரமிது இரும்பு தானாம்
அள்ளவே இருதயமும் சுழியி லேறும்
அடைவான இன்பமாய் அறிந்து பாரே (805)

## நாகச்செம்பைச் செய்து வெள்ளியிற்கொடுத்தால் வேதை தப்பாது

அறிந்துமே தானாகச் செம்பை வைத்து
அடைவாகப் பார்த்துமே தெளிந்து கொள்ளு
முறிந்துமே மதிதனிலே ஏறி யாடு
முடிவாக இருக்குமே தனியே பாரு
செறிந்துமே மனத்தைநீ கட்டிக் கொள்ளு
சிறப்பாக யூகியைப்போல் தெளிந்து நில்லு
வறிந்துமே வாதத்தை யடைவாய்ப் பண்ணு
வழியோடே நின்றுமே யாடி டாயே (806)

## *792 – 806* உரை

**நாகச்செம்பு:** பத்துப்பலம் நாகத்தை உருக்கி இலுப்பெண்ணெய்யில் இருபத்தொருமுறை காய்த்துத் தூயதாக்கி உருக்கி நாலில் ஒருபங்கு ரசம் சேர்த்துப் பிட்டாக ஆக்கி அதனெடை அயம் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் ஆட்டி வி. த. கா. அதன்மேல் கிளிஞ்சில் சுண்ணம் கவசமிட்டுப் புடமிடு. மஞ்சள் நிறமாக இருக்கும். பின்பு கெந்தி முக்காற்பலமும் சூடன் அரைப்பலமும் வீரம் காற்பலமும் அரைத்துப் பத்துப்பலச் செம்புத் தகட்டின்மேல் கவசித்துக் காயவைத்துப் பத்தெருப்புடமிட

நொறுங்கும். இந்தக் கரிச்செம்பு பலம் ஒன்று, முன்செய்த அயநாகச் செம்பு பலம் ஒன்று எடுத்துச் செவ்வல்லிப் பூச்சாறு விட்டு அரைத்த வி. த. கா. கசபுடமிடு. அதனளவு வெங்காரம் சேர்த்து உருக்கு. நாகம் செம்பாகும். கண் கொள்ளாது. வெள்ளியில் எட்டுக்கு ஒன்று கொடு. எட்டுமாற்று. புரையும் வழவழப்பும் அற்றுக் களிம்பற்று ஊறலற்று இருக்கும். செம்பை நொறுக்கு வெள்ளியிலேதான் கொடுத்தல் வேண்டும். கள்ளாகச் சொல்லவில்லை.

நாகமும் அயமும் சேர்ந்தால் மாற்று உண்டாகும். அதனுடன் கரியாய்ப் போன செம்பு ஒன்று சேர்ந்தால் உண்மையாகத் தங்கமாகும். அயநாகம் சேர்ந்தால் செம்பொன்னாகும். இந்நூல் ஆயிரமும் பார்த்துத் தெளி. முதல்கடையும் பார்த்துச் செய். மேற்கூறிய நாகச் செம்பினைச் செந்தூரம் செய்து உண். உடம்பு கல்லாகும். கத்தூரி மணக்கும். சாகாத வரமாகும். உடம்பு இரும்பாகும். *798 முதல் 804 முடிய அறிவுரை.*

## துரிசு நீறப் புகைநீர்

ஆடவே இன்னமொரு புகைநீர் சொல்வேன்
அடைவாகத் துரிசதனை நீறாய்ப் பண்ணும்
தேடவே கிடையாது இந்த நீறு
தேசத்தில் அலைந்தாலும் சொல்லார் சொல்லார்
வாடவே இந்நூலிற் சொல்லிப் போட்டேன்
வகையாகப் பார்த்துமே வைத்துக் கொள்ளு
மூடவே யொருவருக்கும் சொல்ல வேண்டாம்
முடிவான வங்கத்தால் எல்லாம் ஆச்சே (807)

## வங்கத் திராவகம்

ஆச்சுதே வங்கமது பலமும் பத்து
அடைவான வீரமது அதற்குப் பாதி
நீச்சுதே யிரண்டுமொன்றாய் *அரைக்க நீறும்
நிலையான நீறதனில் சீனம் பத்து
வாச்சுதே பொடித்துமே யதிலே போட்டு
வகையான கலையத்தில் வாலை மூடி
மூச்சுதே யுழந்துமண் சீலை செய்து
முக்கியமாய் அடுப்பதனில் எரித்தி டாயே (808)

*நூக்க

எரித்திடவே மேலோடிப் புகைநீ ராகும்
இதமான நீரெல்லாம் பிடித்து வாங்கி
அரித்திடவே யரக்கென்ற குப்பி தன்னில்
அடைவாக அடைத்துமே சொல்லக் கேளு
கரித்துமே நீலனொரு கட்டி வாங்கிக்
கனிவாகத் திராவகத்தில் தோய்த்துப் போட்டுப்
பரித்துமே யெட்டுநாள் ரவியிற் போடு
பதமாக எடுத்துமே கவசம் கேளே (809)

## தூரிசுச் சுண்ணம்

கவசமென்ன சொல்லுகிறேன் அண்டந் தன்னை
கதிபெறவே வெண்கருவால் அரைத்து வில்லை
துவசமாய் ரவியிலிட்டுக் காயப் போட்டுத்
துடியான கரியில் வைத்து ஊது ஊது
நவசமென்ன நீறியே கடுமை யாகும்
நலமாக அப்பாலே வைத்துத் தேளே

புவசமென்ன சீனமது பலமும் பத்துப்
போக்கோடே கரியில் வைத்துப் பொரித்தி டாயே (810)

## சீனச் சுண்ணம்

பொரித்துமே யண்டவெண் கருவால் ஆட்டிப்
போக்கோடே வில்லைபண்ணிப் புடத்திற் போடு
வரித்துமே கடுமையாய் எடுத்துக் கல்வம்
வளமாக அரைத்துமே சொல்லக் கேளே
சரித்துமே முன்னண்டச் சுண்ணம் ஒன்று
சரியான சீனத்தின் சுண்ணம் ஒன்று
குறித்துமே வெண்கருவால் ஆட்டி வில்லை
குணமாக ரவியில் வைத்துக் குறிப்பைக் கேளே (811)

கேளுமே கரியில் வைத்துக் குமுடி வூது
கெடியாகச் சுண்ணமாம் கடுமை யாகும்
நாளுமே இச்சுண்ணம் சொல்லப் போகா
நலமான சரக்கெல்லாம் சுண்ண மாகும்
வேளுமே எரித்ததொரு ஈசன் போல
விதமாக இச்சுண்ணம் தானுமாகும்
கோளுமே சொல்லாமல் இச்சுண்ணத்தைக்
குணமாகச் சொல்லுகிறேன் கூர்ந்து பாரே (812)

பாருமே இச்சுண்ணம் தனிலே வீரம்
பகட்டியரை நாலுக்கு ஒன்று தானும்
காருமே யரைத்துமுன் துரிசிக் கப்பிக்
கௌதாரிப் புடமிடவே கண்டர் நீறும்
வேருமே தொடுத்தாக்கால் எல்லாம் சித்தி
விதமான துரிசுதான் நீறிப் போச்சு

சாருமே கசலமுந்தான் இதுவே யாச்சு
சகலதுறை யிதுக்குள்ளாய்த் தயங்கும் பாரே (813)

## துரிசுநீரால் இலிங்கக் கட்டு வீரக்கட்டு

தயங்காமல் கழஞ்சுதான் துரிசு நீரு
தாக்கிடவே விராயியிலை தண்ணீ ராகும்
முயங்காமல் இலிங்கத்தில் சுருக்குப் போட
முக்கியமாய்க் கரியில் நின்று பொன்போல் ஆடும்
வயங்காமல் கரியிலிடத் தங்க மாகும்
வாய்ப் பேச்சால் சொன்னாக்கால் ஒன்று மில்லை
நயங்காண வீரமிப் படியே செய்ய
நாடியே கரியில் நின் றுருகும் பாரே (814

## உப்புக்களும் பாடாணங்களும் இதனால் கட்டும்

உருகுமே உப்பதுதான் இருபத் தைந்தும்
உற்றுமே யறுபத்து நால்பா டாணம்
பெருகுமே உபரசமுந் தண்ணீ ராகும்
பெருமை சொல்ல என்னாலே முடியா தப்பா
வருகுமே வாதசித்தி யோக சித்தி
மகத்தான பாகமிது மருவிப் பாரு
பருகுமே இதனாலே எல்லாம் ஆகும்
பதிவாகத் தயங்காதே யோகம் பாரே (815)

## ஒன்றைவிட்டொன்று செய்தால் வாதம் தலைகீழாகும்

தயங்குமே வீரத்தைச் சுருக்குப் போடு
தயவாகக் காரத்தில் தோய்ச்சுப் போடு

முயங்குமே பாடாணம் சுருக்குப் போடு
முடிவான வாதமாம் மூர்க்கம் மெத்த
வயங்குமே தரியாதே கரியில் ஆடும்
வகையென்ன ஏமம் தனியே யாகும்
மயங்கியே யொன்றைவிட் டொன் று பார்த்தால்
மணியான வாதமெல்லாம் தலைகீ ழாமே (816)

## உப்பை முன்னே பார்க்கவும்

கீழாகப் போகாமல் உப்பைப் பாரு
கிளரவே வங்கச்சுண் ணத்தைப் பாரு
மாளுமே துரிசதுதான் மனம்போ லாகும்
மாளாட்டால் சித்தியில்லை யுலகத் தோர்க்கு
தேளாகக் கொட்டினால் விசமு மாகும்
திறமாகக் கொட்டாட்டால் பிள்ளைப் பூச்சி
பாளாகச் சொன்னாக்கால் பயனு மில்லை
பதிவாக வுப்பைமுந்திப் பார்த்தி டாயே (817)

## வாதிமுகத்தில் மூதேவித் தன்மையிருந்தால் தொட்டசரக்கெல்லாம் கரியாய்ப்போம்

பார்த்திடவே சகலமுந்தான் சித்தி யாகும்
பாராட்டால் ஒன் றுமில்லை பதராய்ப் போகும்
ஏர்த்திடவே ஆலவிதை சிறிதா னாலும்
எல்லோர்க்கும் நிழலதனால் உண்டாம் பாரு
மூத்தாள்தான் முகந்தனிலே நின்றா ளானால்
முனிந்துமே வாதியவன் சரக்குத் தொட்டால்
ஏத்திடுமே கரியாகப் போகும் பாரு
எப்படிக்குப் பார்த்தாலும் இசை வாகாதே (818)

### சுண்ணங்களைக் கரியில் வைத்து ஊதினால் நல்லது

இசைவாகச் சுண்ணமென்ற போக்குக் கெல்லாம்
இதமாகக் கரியில்வைத்து ஊத நன்று
பிசகாமல் கடுஞ்சுண்ணம் ஆகும் பாரு
பிரட்டாகச் சொல்லவில்லை பேணிப் பாரு
கசைபோலச் சரியாக வைத்துக் கொள்ளு
கணக்காகச் சுண்ணமாம் கருதிப் பாரு
பசையாகப் பருவமாய்ப் பார்த்துச் செய்து
பதிவுடனே யிருந்துமே ஞானம் பாரே (819)

ஞானமே பார்ப்பதற்கு வாதம் சொன்னேன்
நடுவாக வுண்டுடுக்கச் செம்பு சொன்னேன்
மோனமே யாவதற்கு முன்னே சொன்னேன்
முத்திசித்தி யாவதற்கு முறைமை சொன்னேன்
வானமே பார்ப்பதற்குக் குளிகை சொன்னேன்
வகையான பொருளறிந்தால் வடிவு மெத்த
கானகத்தில் சித்தருட மார்க்கஞ் சொன்னேன்
காயசித்தி லோகசித்தி கண்டு பாரே (820)

### வழியறிந்து வாதஞ்செய்தால் மகராச யோகமுண்டு

கண்டுபார் துறவறிந்து பூட்ட றிந்து
கருத்தாகச் சாவியைநீ பார்த்தெ டுத்து
வண்டுபார் திறந்துமே யெடுத்துக் கொள்ளு
மகாராச யோகமென்ன வலுவாய்ப் பாரு
பண்டுபார் பழக்கமறி யாமற் போனால்
பதினாலு லோகத்தார் நகைப்பார் பாரு
வண்டுபார் பறத்தலால் மதுவை யுண்ணும்
வடிவாகப் பறக்காட் டா லில்லை தானே (821)

## வெடியுப்புச் சுண்ணம் யூகிக்குத் தேரர் சொன்னது

இல்லையென்று போகாமல் வெடியுப் பைத் தான்
இன்பமாய்க் கடுஞ்சுண்ண மாகச் சொல்வேன்
முல்லைவனந் தன்னிலே தேரர் சொன்ன
முக்கியமாம் வெடியுப்புச் சுண்ணம் பாரு
தில்லையென்ற நடராசர் ஆடும் ஆட்டு
திறமாகப் பொட்டலையின் சுண்ணம் வைத்து
கொள்ளையென்ற வங்கத்தை நீற்றிப் போடு
கொடுஞ்சுண்ண மாகுமே துரிசு தானே *(822)*

தானேதான் வங்கமது நீற வேண்டின்
தாக்கிடவே வெடியுப்பு பலமோ பத்து
கானேதான் சீனமது ஐந்து போடு
கடிதாக இரண்டுமொன்றாய்ப் பொடித்துப் போட்டு
வானேதான் சட்டிதனி லிட்டுக் கேளு
வகையாக அடுப்பேற்றி யுருக்கிப் பாரு
நானேதான் தவளம்போல் உருகி யாடு
நாதாந்த வெடியுருக்கை யெடுத்துக் கொள்ளே *(823)*

கொள்ளவே யுருகினது பலமும் பத்து
கூரான சுடர்க்கொடியோன் பலமும் பத்து
மெள்ளவே யிவையிரண்டும் பழச்சாற் றாலே
மேன்மையாய் அரைத்துரவி காய வைத்து
கள்ளமாய் எரியிட்டு எடுத்துக் கொள்ளு
கனிவாக வுருக்குமுனை தன்னி லேதான்
துள்ளவே யெடுத்துவைத் தப்பாற் கேளு
துறையாகச் சொல்லுகிறேன் உற்றுக் கேளு *(824)*

கேளுமே சீனமது இரண்டு சேரு
கெடியாகப் பொரித்துமே சொல்லக் கேளு
வாருமே யண்டவெண் கருவு சேரு
வகையாக வெருக்கம்பால் சேரு ஒன்று
நாளுமே இரண்டுமொன்றாய் ஊற்றிக் கேளு
நலமாகக் கடைந்துமே தெளிவை வாங்கு
தாளுமே முன்குறித்த சீனம் விட்டு
தப்பாமல் அரைத்துவில்லை பண்ணிடாயே (825)

பண்ணியே ரவிதனிலே காய வைத்துப்
பதையாமல் பெரும்புடமாய்ப் போட்டெடுக்க
நண்ணியே கடுஞ்சுண்ணம் சீனச் சுண்ணம்
நலமான பாகத்தை நாட்டக் கேளு
கண்ணியே முன்னுருக்குச் சூடனோடு
கனிவாகச் சேர்த்துவெண் கருவா லாட்டு
கிண்ணமாய் வில்லை பண்ணி ரவியில் வைத்துக்
கீர்த்திபெறப் பெரும் புடமாய்ப் போட்டுக் கேளே (826)

போட்டுமே எடுத்துப்பார் கடுமை யாகப்
பொலிவான சுண்ணமாம் பேணிப் பாரு
தீட்டுமே யம்புகளின் கூர்மை போலத்
திறமான வெடியுப்புப் பூத்த சுண்ணம்
பாட்டுமே படித்ததனால் பலனுண் டாமோ
பதிவாகச் செய்தாக்கால் சித்தி யாகும்
காட்டுமே என்றாக்கால் காட்ட லாமோ
கனிவாக வுழைத்தாக்கால் சித்தி யாமே (827)

## வங்கச் சுண்ணம்

சித்தியாய் முன்வைத்த வெடியின் சுண்ணம்
சிறப்பாக வங்கத்தைக் கரண்டி தன்னில்
நத்தியே யுருக்கியே யிடையே போட்டு
நலமாகக் கரண்டியினால் தேய்க்கச் சுண்ணம்
பத்தியாய்த் தேய்த்துமே கல்வத்திட்டுப்
பதிவாக வெண்கருவால் ஆட்டி வில்லை
சித்தியாய் ரவியில் வைத்து ஊதிப் போடு
செயமாகச் சுண்ணமாம் சூட்சம் பாரே (828)

## துரிசுச் சுண்ணம்

பாரேநீ துரிசைத்தான் புகைநீர் தன்னில்
பதிவாகத் தோய்த்துமே யெட்டுநாள் தான்
சேரேநீ போட்டுமே யெடுத்துக் கொண்டு
செயமாகத் துரிசின் மேல் கவசம் கேளு
வாரேநீ வங்கத்தின் சுண்ணத் தோடே
வகையாக உப்பு நாலொன்று வீரம்
காலேநீ எருக்கம்பால் தெறிந்த நீரால்
கனிவாக அரைத்துமே துரிசிற் கப்பே (829)

## தாரபற்பம்

அப்பியே பத்தெருவில் புடத்தைப் போடு
ஆஆஆ கடுஞ்சுருக்கு துரிசுச் சுண்ணம்
தப்பியே இதையெடுத்து வைத்துக் கொள்ளு
தளமாகத் தாளகத்தின் எடை எட்டு
துப்பியே யுமிழ்நீரால் சேர்த்த ரைத்து
துடியாகக் கட்டிடவே தாரம் நீறும்
முப்பியே யரிதார நீரைத் தானும்
முக்கியமாய்த் துரிசின்மேல் கட்டி டாயே (830)

## துரிசுச்சுண்ணம். அதனால் தங்கச் சுண்ணம்

கட்டியே பத்தெருவில் புடத்தைப் போடு
கனமான துரிசுதான் கடுமை யாக
முட்டியே நீறியது சுண்ண மாகும்
மூவுலகை யெரித்ததொரு ஈசன் போல
வட்டியே துரிசினது நீற்றைத் தானும்
வளமாகத் தங்கத்தின் மேலே கட்டித்
துட்டியாய்ப் புடம்போடத் தங்கம் நீறும்
துடியாகத் தங்கநீறு வேதை கேளே (831)

## தங்கவேதை

வேதையென்ன சொல்லுவேன் வேதைப் போக்கு
வேதாந்த சற்குருவைத் தியானம் பண்ணி
நீதியாய்ச் செம்பு நூறுதனிலே ஒன்று
நிச்சயமாய்க் கொடுத்திடவே பத்து மாற்று
வாதைதான் படவேண்டாம் தங்கம் சித்தி
வருத்தந்தான் பட்டுமே திரிய வேண்டாம்
சோதியாய் இருக்குமந்தத் தங்க நீற்றில்
துப்புரவாய் நெய்தலிலே யுண்ணச் சித்தி (832)

பாதிமதி யணிந்தார்போல் தேக மாகும்
பதிவான மேனிசெவ் வலரிபோலாம்
நீதிபெறக் காசாம்பூ வண்ண மாகும்
நிச்சயமாய் இப்போக்கு நிசம தாமே
..........................................................
..........................................................
..........................................................
.......................................................... (833)

## தங்கபற்பம் உண்ணும்போது பத்தியம்

ஆமேதான் தாதுவெல்லாம் இறுகிக் காணும்
அடைவான வாதசித்தி ஏம சித்தி
காமேதான் தாதுவெல்லாம் இறுகிக் காணக்
கைப்போடு புளியுப்பு தள்ளிப் போடு
வாமேதான் மண்டலத்தில் சித்தி யாகும்
வடிவான நல்லெண்ணெய் தள்ளிப் போடு
பாமேதான் தங்கசித்தி காய சித்தி
பரிவான யூகிமுனி பகர்ந்த தாமே *(834)*

## தங்கச்சுண்ணம் செய்வதற்கு வரிசைமுறை

பகரவே வெடியுப்புச் சுண்ணம் பண்ணு
பதிவான அதன்பின்பு சூடச் சுண்ணம்
தகரவே யதன்பின்பு சீனச் சுண்ணம்
தாட்டிகமாய் அதன்பின்பு வங்கச் சுண்ணம்
உகரவே யதன்பின்பு துரிசுச் சுண்ணம்
உத்தமனே யதன்பின்பு தாரச் சுண்ணம்
வகரவே யதன்பின்பு தங்கச் சுண்ணம்
வடிவாக மடக்கியே செய்து கொள்ளே *(835)*

## தங்கபற்பம் செய்துகொண்டால் காயசித்தி வாதசித்தியாகும்

கொள்ளவே காயசித்தி லோக சித்தி
கூரான நோய்களெல்லாம் குடிவிட் டேகும்
மெள்ளவே காயமது இரும்புத் தூணாம்
மேதினிக்குள் ரசவாதம் சிக்கிப் போச்சு

துள்ளியே வாதமென்ன நொடிக்குள் ளாச்சு
சூதாகப் பேசவில்லை சுருதி தன்னில்
கள்ளநரி சந்தைக்குப் போகாதப்பா
கனிவில்லா வாதியே சரக்கைப் பாரே (836)

## சரக்கையும் தங்கத்தையும் விடாமல் பார்த்துச் சோதித்தால் வாதமாகும்

பாரேநீ சூடுகண்ட பூனை தானும்
பரிவாக அடுப்பதனில் கிட்டா தப்பா
நேரேநீ சரக்கைப்பார் தங்கம் பாரு
நேரான வாதமெல்லாம் நிலைக்கும் பாரு
கோரேநீ கொஞ்சநாள் சுட்டுப் பார்த்துக்
குணங்கெட்டு இல்லையென்றால் என்ன செய்வேன்
வாரேநீ யெல்லாமும் சோதித் தாக்கால்
வடிவான ரசவாதம் சாந்தியாமே (837)

## வாதம் பொய்யென்றால் நரகம் உண்டு

சாந்தியாய் ஆறுதன்னில் தண்ணீர் ரெம்பி
சரியாக இருக்கையிலே யிறங்கப் போகா
பாந்தியே யரைவாசி வடிந்த போது
பக்குவமாய் மனிதனவன் இறங்கிப் போகக்
காந்தியாய் நரிப்பள்ளம் என்று சொன்னால்
கனமாக நரிதானும் பறித்த துண்டோ
வாந்தியாய் வாதம்பொய் யென்று சொன்ன
வடிவான வாதிக்கு நரக மாமே (838)

## அனந்தம்பேர் வாதம்சுட்டால் ஒருவனுக்குத்தான் பலிக்கும்

நரகமாம் நாலுபேர் சாலை தன்னில்
நடக்கையிலே யொருவன்தான் பொன்போல் கண்டான்
பரகமாய் எடுத்துமே பார்க்கும் போது
பதிவாகக் காக்காயின் பொன்ன தாச்சு
வரகமாய்க் காக்காய்தான் பொன்னு பண்ண
வகையாகப் பண்ணிற்றோ வாதி மாரே
குரகமாய் இதுபோலக் கோடிப் பேர்கள்
குணமாகப் பார்த்தாக்கால் ஒருவன் காணே (839)

## கண்டவன் ஒன்றும் அறியாதவன் போல் இருப்பான்

காணவே யொருவனுக்குக் கிட்டும் கிட்டும்
கனிவாகத் தலைபோனா லுந்தான் சொல்லான்
வீணவே வார்த்தை சொல்வான் புரட்ட தென்பான்
விதமாக ஒன்றுந்தான் காணேன் என்பான்
தோணவே புரட்டுத்தான் சொல்வான் பாரு
துடியாக ஒன்றுந்தான் இல்லா வாதி
காணவே தங்கத்தைக் கண்டேன் என்பான்
கருத்தில்லா வாதியைத்தான் தூரத் தள்ளே (840)

## இன்னவாதியைத் தள்ளு இன்னவாதியைச் சேர்

தள்ளுமே சாத்திரமில்லா வாதியைத் தான்
தடையறவே முகந்தனிலே விழிக்க வேண்டாம்
கள்ளுமே குடிக்கின்ற பேரைத் தள்ளு
கனிவான கஞ்சாவா தியையும் தள்ளு
துள்ளுமே சாராய வாதியையும் தள்ளு
துடியான வுறக்கமுடன் வியாதி யுள்ளான்

வள்ளுமே கோபவா தியையும் தள்ளு
வகையான சாத்திரவா தியை நீ சேரே (841)

## வாதம் செய்யவேண்டிய சிரமம்

சேர்த்துமே யோரிருப்பாய் இருந்து கொண்டு
செவ்வையாய் இந்நூலை முடியு மட்டும்
பார்த்துமே திட்டமாய்ப் பண்ணிக் கொள்ளு
பதிவாகச் சரக்கைநீ தொட்டு ஆடு
பேர்த்துமே சோதித்து அயத்தைப் பாரு
பிற்பாடு செந்தூரம் பண்ணித் தின்னு
சேர்த்துமே யிருந்திட்டுக் காய சித்தி
திறமாகச் செய்யென்று முனிசொன் னாரே (842)

## இந்நூலிற் சொன்னதெல்லாம் மெய்

சொன்னதொரு நூலதனில் வாதம் பொய்யோ
சூட்சமமாய்க் களங்கு செந் தூரம் பொய்யோ
இன்னிலத்தில் கல்லுப்புக் கட்டுப் பொய்யோ
இதமான வெடியுப்புச் சுண்ணம் பொய்யோ
நன்னயமாய் வங்கத்தின் சுண்ணம் பொய்யோ
நலமான பதங்கரசம் பொய்யோ ஐயோ
கன்னல்போல் திராவகமும் கட்டும் போய்யோ
கனிவான சூதத்தைக் கட்டி ஆடே (843)

## கல்லுப்பைக் கட்டி ரசம் தங்கத்தைச் சேர்த்தரைத்தால் கட்டும்

ஆட்வே கல்லுப்பைத் தெறிப்ப டக்கி
அதனுடனே ரசத்தினுட பதங்கம் சேர்த்துப்

போடவே சட்டியிலிட் டெரிக்கக் கட்டும்
போக்கோடே கட்டாகும் வேதை யாகும்
தாடவே இப்படிக்குக் கட்டா விட்டால்
தடைப்படுமே வாதசித்தி தானுமில்லை
ஊடவே வாதிதான் வெறுமுப் பைத்தான்
உருக்கியே பார்த்துமே யலைகு வானே (844)

## மூடர்கள் வெறுமுப்பைக் கரியில் உருக்கக் கரிகுடிக்கக் கண்டு உப்பிதுவன்று என்பார்.

அலைகுவார் வெறும்உப்பை உருக்கிப் பார்த்து
அதைக் கரியில் வைத்திடவே கரிகு டிக்கும்
வலைகுவார் இந்தவுப்பு அன்று என்பார்
வண்மையாய்ச் சமுத்திரத்தில் நடுவில் தானும்
பலைகுவார் பதினெட்டு முழத்தி னுள்ளே
பதமாக இருக்குமென்பார் மதியில் லார்கள்
உலைகுவார் உப்பைத்தான் பார்த்துப் பார்த்து
உண்மைதெரி யாமலே யலைகு வாரே (845)

## பதம் தப்பினால் பாகம் தப்பும்

தெரியாமல் சிறுபெண்கள் சோறு ஆக்கத்
திட்டமாய்த் தண்ணீரை நிரம்ப விட்டுப்
பரிவாக வரிசிதான் கொஞ்ச மிட்டுப்
பதமில்லாச் சோறுதான் குழைந்த தென்பார்
விரிவாகச் சொன்னதனால் என்ன செய்ய
விருதாகச் சுட்டுமே யவதிப் பட்டு
முரிவான சாத்திரந்தான் பொய்யென் றாக்கால்
முடியுமோ வுலகத்தில் வாதி கேளே (846)

(துரிசு நீற்றும் புகைநீர் - வங்கத் திராவகம்)

ஈயம் பத்துப்பலமும் வீரம் ஐந்துபலமும் சேர்த்து அரைக்க நீறாகும். அதனுடன் சீனம்பத்துப்பலம் சேர்த்து கலையத்தில் போட்டு வாலைமூடி உழுந்துமண் சீலை செய்து எரி. மேலோடிப் புகைநீராகும். இந்தத்திராவகத்தில் துரிசுக்கட்டியை எட்டுமுறை ஒவ்வொரு நாளும் தோய்த்துக் காயப்போடு. முட்டைத்தோட்டை வெண்கருவிட்டரைத்து வி. த. கா. சீ. ம. செ. கரியில் வைத்து ஊது. கடுஞ்சுண்ணமாகும். பத்துப்பலம் சீனத்தைக் கரியில் வைத்து ஊதிப் பொரித்து முட்டையின் வெள்ளைக்கரு ஊற்றியரைத்து வி. த. கா. புடமிடு. எடுத்து முன் அண்டச் சுண்ணத்தின் அளவு சேர்த்து வெண்கரு ஊற்றியரைத்து வி. த. கா. கரியில் வைத்துக்குமுற ஊது கடுஞ்சுண்ணமாகும். இச்சுண்ணத்தால் சரக்கெல்லாம் சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் நாலுக்கு ஒன்று வீரம் சேர்த்து அரைத்துத் துரிசுக்கு அப்பிக் கௌதாரிப்புடமிடு. துரிசு நீறும். விராலி இலையில் ஒரு கழஞ்சு சுண்ணமிட்டு வைக்கத் தண்ணீராகும். இலிங்கத்திற்குச் சுருக்கிடு. கரியில் நின்று பொன்போல் உருகியாடும். (செம்புக்) கரியிலிட்டுருக்கத் தங்கமாகும். வீரத்தை இவ்வாறு செய்ய அதுவும் கரியில் நின்று உருகியாடும். இருபத்தைந்து உப்பும் அறுபத்து நாலு பாடாணமும் (நூற்றிருபது) உபரசமும் கண்ணீராகவுருகும். வீரத்துக்குச் சுருக்கிடு. காரத்தைத் தோய்த்துப் போடு. பாடாணத்துக்கும் சுருக்கிடு. கரியில் நின்று உருகும். மாற்றாகும். உப்பை முதலில் பார். வங்கச் சுண்ணம் செய். துரிசு நீற்று. மனம்போலாகும் *(818 - 821 அறிவுரை).*

தேரர் சொன்ன வெடியுப்புச் சுண்ணம் காண்க. வெடியுப்பு பத்துப்பலம் சீனம் ஐந்துபலம் சேர்த்துப் பொடித்து உருக்கு

வெள்ளையாய் உருகிவிடும். எடுத்து அது பத்துப்பலமும் சூடன் பத்துப்பலமும் பழச்சாறு விட்டரைத்து வி. த கா. எரியிட்டு உருகும் நிலையில் எடுத்துக் கொள்.

சீனம் இரண்டு சேர் பொரித்து எடு. முட்டை வெண்கரு ஒரு சேர் எருக்கம்பால் ஒரு சேர் ஆகிய இரண்டையும் ஒன்றாய் ஊற்றிக் கடைந்து மேற்படி பொரித்த சீனத்தில் விட்டு அரைத்து வி. த. கா. பெரும்புடமிடு. கடுஞ்சுண்ணமாகும். இதனை முன் உருக்கி வைத்த சூடனுடன் சேர்த்து வெண்கருவிட்டு அரை. வி. த. கா. பெரும்புடமிடு. கடுமையான சுண்ணமாகும். ஈயத்தைக் கரண்டியில் போட்டு உருக்கி மேற்படி வெடியுப்புச் சுண்ணமிட்டுத் தேய்க்க அது சுண்ணாகும். அதனை வெண்கரு விட்டரைத்து ஊது. சுண்ணமாகும். வங்கச் சுண்ணத்துடன் உப்பு நாலு பங்கும் வீரம் ஒருபங்கும் எருக்கம்பால் தெளிந்த நீர்விட்டரைத்து எட்டுநாள் புகை நீரில் தோய்த்துக் காயவைத்த துரிசின் மேல் அப்பிப் பத்தெருப் புடமிடு. துரிசு சுண்ணமாகும். இச்சுண்ணத்தை உமிழ்நீர் விட்டரைத்துத் தாளகத்துக்குப் பூசிப் புடமிடச் சுண்ணாகும். அரிதார நீற்றைத் துரிசின்மேல் கவசமிடு. பத்தெருப்புடமிடு. துரிசு கடுஞ்சுண்ணமாகும். இதனைத் தங்கத்துக்குக் கவசமிட்டுப் புடமிடத் தங்கம் நீறாகும். இந்நீற்றில் செம்பு நூற்றுக்கு ஒன்று கொடுத்து உருக்கு. பத்துமாற்று. அந்தத் தங்க நீற்றை நெய்யில் குழைத்து உண்ண உடல்வலுக்கும். பொன்னார் மேனியன் போல் மேனியாகும். செவ்வலரி போலாம். கைப்பு புளிப்பு எண்ணெய் நீக்கு. வெடியுப்புச் சுண்ணம் செய். அதன்பின் சூடச்சுண்ணம் பின்னர் சீனச்சுண்ணம் பின்பு வங்கச் சுண்ணம். பின்னர் துரிசுச் சுண்ணம் பின்பு தாரச் சுண்ணம் அதன்பின்பு தங்கச் சுண்ணம் செய் (836 - 843 அறிவுரை) கல்லுப்பைத் தெறிப்படக்கியதனுடன் ரசபதங்கம் சேர்த்துச் சட்டியிலிட்டெரிக்கக்கட்டும். மாற்றாகும். வெறும் உப்பை உருக்கி மயங்குவது தவறு. (845 - 846 அறிவுரை).

## துரிசுச் செம்பு

கேளுமே யின்னமொரு செம்பு சொல்வேன்
கெடியாகத் தேரர்தான் ஆடும் ஆட்டு
பாளுமே போகாமல் துரிசு பத்து
பதமாக நாற்றமிரண் டரையு மாகும்
தாளுமே சுடர்க்கொடியோன் ஒன்றே காலாம்
தாட்டிகமாய் வீரமது அரையு மாகும்
வாளுமே இவைநாலும் கல்வத் திட்டு
வகையாகப் பாணியால் அரைத்து வாங்கே (847)

வாங்கியே வில்லை தட்டி ரவியிற் காய
வளமாக வதன்பேரில் சுண்ணச் சீலை
தேங்கியே கவசமிட்டு அதன்மேற் கேளே
செயமாகக் கவசமிட்டுக் காய வைத்து
ஆங்கியே வைத்துக்கச புடமாய்ப் போடு
அன்பாக எடுத்துமே கவசம் பிட்டு
பாங்கியே யெடுத்துப்பார் கரிபோல் ஆகும்
பருவமாய் எடுத்து வைத்துப் பாகம் கேளே (848)

## வெடியுப்புத் திராவகம்

கேளுமே வெடியுப்புப் பலமும் பத்துக்
கெடியான சீனமது இரட்டிப் பாகும்
தாளுமே இரண்டுமொன்றாய் இடித்து வாலை
தயவாகக் குடத்திலிட்டுப் புகைநீர் வாங்கு
தாளுமே முன்நீ ரைத் தள்ளிப் போடு
தனியான பின்னீரை வாங்கிக் கொள்ளு
வாளுமே அரக்கென்ற குப்பி தன்னில்
வகையாக அடைத்துமே பாகங்கேளே (849)

## அயத்திராவகம்

பாகமாம் திராவகத்தைப் பீங்கா னிட்டுப்
பதறாமல் அரப்பொடியைப் பச்சை யாக
வேகவே போட்டிடவே புகைந்து நீராம்
விதமாகத் தெளிவெல்லாம் இறுத்துக் கொள்ளு
தாகமாய்ப் புடம்போட்ட துரிசு தன்னைத்
தயவாகக் கல்வத்தில் இட்டுக் கேளு
வேகமாய்த் தெளிந்ததிரா வகத்தை விட்டு
விருப்பமாய் அரைத்துவில்லை தட்டிக் கொள்ளே (850)

## முன் துரிசுக்கரியில் அயத்திராவகம் விட்டரைத்துப் புடமிட்டுருக்கிச் செம்பெடுக்கவும்

கொள்ளவே கசபுடமாய்ப் போட்டு வாங்கு
கூர்மையாய் வெங்காரம் சரியாய்ச் சேர்த்து
மெள்ளவே திராவகத்தால் அரைத்து வில்லை
விருப்பமாய்ப் புடம்போட்டு எடுத்துக் கொள்ளு
துள்ளவே குகைதனிலே வைத்து ருக்கத்
துடியாக ரவியாகும் கரிபோற் செம்பு
வள்ளவே இதையெடுத்து நாளத் தூது
வடிவான செம்பாகும் மகிழ்ந்து பாரே (851)

## பேதிக்கும் செம்பு இருக்கும் லட்சணம்

மகிழ்ந்துமே புரையில்லாச் செம்பு மாகும்
மதியாக வுருக்கிடவே பேதிக் காது
நகிழ்ந்துமே களிம்பில்லாச் செம்பு மாகும்
நலமான செம்புதா னாட்டக் கேளு

வகிழ்ந்துமே தங்கமது போலே யாகும்
வடிவாக அடித்தாலோ சொல்லக் கேளு
நகிழ்ந்துமே பொருபொருப்பாய் உடையும் பாரு
நலமாக இச்செம்பு வேதை யாமே (851)

## செம்புடன் தங்கம் சேர்க்கும் வழி

வேதையாய் இச்செம்பு இடையே தங்கம்
விருப்பமாய்ச் சேருகிற விதத்தைக் கேளு
பாதையாய்த் தங்கத்தைத் தகடு தட்டிப்
பழச்சாறு கற்காவியரைத்துப் பூசு
நாதையாய்க் கரியோட்டில் பழுக்கக் காய்ச்சி
நலமாக ஏழுதரம் துவைத்துக் கொண்டு
காதையாம் செம்பொன்று தங்கம் ஒன்று
கனிவாகச் சேர்த்துருக்கித் தகடாய்த் தட்டே (853)

## 847 – 853 உரை

தேரர் ஆடும் துரிசுச் செம்பு : துரிசுபத்து கெந்தகம் இரண்டரை சூடன் ஒன்றேகால் வீரம் அரை இங்ஙனம் பலக்கணக்கில் எடுத்துப் பாணிவிட்டரைத்து வி. த. கா. சுண்ணச் சீலை செய். கசபுடமிடு. எடுத்துப்பார். கரிபோல் இருக்கும். வெடியுப்பு பத்துப்பலமும் சீனம் இருபதுபலமும் பொடித்துப் போட்டுத் திராவகம் இறக்கிப் பீங்கானில் விட்டு இரும்பு அராவிய பொடியைப் பச்சையாகத் திராவகத்தில் போட்டு வைத்துக் கரைந்தபின்பு காரம்சேர். திராவகம் ஊற்றியரை. புடமிட்டெடுத்து உருக்கு. செம்பாதகும். எடுத்து ஈயக்குழலால் ஊது. நல்ல செம்பாகும். இதில் புரையில்லை. உருக்கினால் மாறாது. களிம்பில்லை. தங்கம் போன்றது. அடித்தால் பொருபொருப்பாய் உடையும். இதனையாக்கும்வரைகேள்.

தங்கத்தைத் தகடுதட்டிக் கற்காவியும் பழச்சாறும் அரைத்துப் பூசிக கரியோட்டில் பழுக்கக் காய்ச்சித் துவை. தூயதாகும். இத்தங்கம் ஒன்று செம்பு ஒன்று சேர்த்துத் தகடாய்த்தட்டு.

## அயச்செம்பு

தட்டியே மேற்கவசம் சொல்லக் கேளு
 தாட்டிகமாய்ச் செம்படைக்கு அயமும் சேரு
முட்டியே அயஎடைக்கு நாகம் சேரு
 முடிவாக அரைவாகி சூடன் சேரு
வட்டியே கால்வாசி வீரம் சேரு
 வகையாக இவை நாலும் பாணியாலே
சுட்டியே வரைத்துமே தகட்டில் பூசித்
 துடியாகப் பெரும்புடமாய் வைத்திடாயே (854)

வைத்திடவே தயெடுத்துப்பார் சிவப்பே யாகும்
 வடிவாக எடுத்துமே சொல்லக் கேளு
நைத்துமே நொறுங்காமல் தானி ருந்தால்
 நலமாக இன்னமொரு புடத்தைப் போடு
பைத்துமே எடுத்துமே யரப்பொடியைச் சேரு
 பருவமாய்ச் சேர்த்தரைத்துப் புடத்தைப் போடு
கைத்துமே புடம்போட்டு எடுத்துக் காரம்
 கனமாகச் சேர்த்துருக்கச் செம்பு மாமே (855)

## செம்பின் பெருமை சொல்லல்

செம்பாகும் சிவப்பாகும் சோதி யாகும்
 செயமான செம்பாகும் வலுவு மாகும்
வம்பாகும் களிம்பில்லாச் செம்பே யாகும்
 வடிவுமெத்தத் தெரியாத வடிவு மாகும்

உம்பாகும் ஊறலில்லாச் செம்பே யாகும்
உருத்தான செம்புதான் வேதை மெத்த
கம்பாகும் கருணைபுரி செம்பு மாகும்
கனிவான செம்பாகும் கருத்துள் ளோரே (856)

## அயச்செம்பு வேதை

கருத்துவைத்துச் செம்பெடுத்து மதியிற் பத்துக்
கனிவான வொன் றுதான் கொடுத்தா யானால்
உருத்துவைத்து தங்கமாம் என்ன சொல்வேன்
உண்மையிது சத்தியமாம் உறுதி யாகும்
பருத்துவைத்த புடத்திற்கு இறங்கும் பாரு
பதையாமால் சித்த ரெல்லாம் கரும றைத்தார்
முருத்துமே தங்கமென்ற முரச மாகும்
முத்தியாம் சித்தியாம் முதன்மை யாமே (857)

## தங்கம் செம்பிற் சேராவிட்டால் செம்பு கட்டாது செம்பிற்கு அறம் சேராவிட்டால் உயிரில்லை

ஆமேதான் செம்புதனில் தங்கம் சேரா
அன்புடனே போனாக்கால் சொல்லக் கேளு
காமேதான் செம்புதான் கட்ட மாட்டா
கனமில்லாஊறல்வரும் நாட்டுச் செம்பு
வாமேதான் செம்புசெத்தால் உயிர் கொ டுக்க
வலுவான அயமில்லாப் போனால் கேளு
மாமேதான் உயிரதுவு மாக மாட்டா
மகத்தான சித்தியெல்லாம் இரும்பி லாச்சே (858)

## இரும்பைத் தொட்டுழைத்தால் எல்லாப்பயனும் தரும்

இரும்பென்றால் வாய்க்கெளிதாய்ச் சொல்ல லாமோ
இதமான லோகத்தால் எல்லா மாகும்

துரும்புபோல் இருக்குமடா அயத்தன் வேதை
தொல்லுலகில் அரசான இரும்பி லாச்சு
விரும்பினால் அயந்தானும் வேதைக் காகும்
விரும்பாட்டால் அயமதுதான் உழைக்க லாகா
அரும்புதான் பூத்தாற்போல் வாசனையு மாகும்
ஆதியாய் இரும்பைமுந்தி யுழைத்துப் பாரே (859)

## முடிந்த இரும்பு வாதத்திற்கு ஆதிவழலை இரும்பை விட்டால் செம்பு போச்சு செம்பையெடுத்துத் தங்கத்தில் கொடுத்தால் வேதை

உழைக்கவே பயன்கொடுக்கும் இரும்பு தானும்
உற்றுமே இரும்பைவிட்டால் செம்பு போச்சு
தழைக்குமே ரசவாதம் பொய்யென் பார்கள்
தாட்டிகமாய் இரும்பினால் செம்பு கட்டும்
முழைக்குமே செம்பெடுத்து ஏமம் தாக்க
முடிவாகும் வேதைபார் மூர்க்கம் மெத்த
அழைத்தாக்கால் வாதமாம் இரும்பி னாலே
ஆதியாம் வழலைதான் இரும்பு தானே (860)

## உள்வழலை இரும்பு. புறவழலை செம்பு இரண்டும் சேராவிட்டால் வாதம்போச்சு இதனால்தான் தங்கமென்ற சொல்லுண்டாச்சு

தானேநீ வழலையது இரும்பு மாச்சு
தாட்டிகமாய்ப் புறவழலை செம்பு மாச்சு
கானேநீ இவ்விரண்டும் சேர்ந்த தாலே
கனிவாகத் தங்கமென்ற சொல்லு மாச்சு
நானேநீ என்றாக்கால் செம்பு போச்சு
நாட்டிலே வாதமெல்லாம் இறந்து போச்சு

கோனேநீ சொல்லிவிட்டேன் போக்குத் தானும்
குணமாகக் கண்டறிந்து வேதை பாரே (861)

கண்டறிந்தால் கவலசித்தும் ஆடலாகும்
கதிபெறவே லோகத்தில் சித்தனா வான்
பண்டறிந்து பழகினால் வாதி யாவான்
பழகாட்டால் ஒன்றுமில்லை மாடு மேய்க்கி
கொண்டறிந்தால் விலைக்குத்தான் விற்க லாகும்
குணங்கெட்ட வாதிகளே யயத்தைப் பாரு
முண்டுசெய்தால் முரடனாய் இருக்க லாகும்
மூட்டுமே யயத்தை முந்திப் பார்த்தி டாயே (862)

## வேதிக்கு முன்னே அயத்தைத் தொட்டால் முடியும்

பார்த்திடவே சகலகரு வெல்லாம் தோன்றும்
பார்பதியாள் எனக்குத்தான் சொன்ன போதம்
ஏர்த்தறிந்தால் வாதசித்தி குறிகை சித்தி
ஏர்க்காதே போனாலும் சித்தி யில்லை
கார்த்திருந்தால் செம்பாகும் வேதை யாகும்
கருணைபெற நூல்தனிலே சொல்லிப் போட்டேன்
மூர்த்தறிந்தோன் வாதியாய் இருப்பான் பாரு
மூர்க்கமாய் அயத்தைத்தான் முந்திப் பாரே (863)

## வாதம் பொய்யென்றால் அவன் வமிசம் நாசமாகும்

முந்தியே செம்பைத்தான் கட்டி யாடு
மூடனாய்த் திரிந்தாக்கால் என்ன லாபம்
வந்திப்பார் வாதந்தான் பொய்யென் பார்கள்
வழக்கமற்ற சித்தர்தான் சொல்லும் சொல்லு

நிந்திப்பார் வங்கிஷங்கள் எல்லாம் போகும்
நிச்சயமாய்ச் சொல்லிவிட்டேன் செம்பின் போக்கு
வந்தனையாய்ச் செய்யாமல் முறையாய்ப் பாரு
வடிவான தேரமுனி சொன்ன வாறே (864)

## முனிசொல்லிய அயச்செம்பு தேரர் எனக்குச் சொல்லியது. இதைப்பார்த்து எல்லாமும் செய்யலாகும்

வாறேது தேரமுனி சொன்ன செம்பை
வடிவாகச் சொல்லிவிட்டேன் கடைசி தன்னில்
காறேது கடினமென்று விடவும் வேண்டாம்
கைவிட்டால் வேதையில்லை கணக்கு மில்லை
தாறேது இவ்வேதை பார்த்துப் பார்த்து
தடையற்ற சகலசித்தும் ஆட லாகும்
வாறேது வாய்க்கெளிதாய்ப் பேச வேண்டாம்
வகையாகும் தொகையாகும்வலுவு மாமே (865)

## பித்தளைச்செம்பு

வலுவாக இன்னமொரு செம்பு மார்க்கம்
வகையாகச் சொல்லுகிறேன் வலிமை மெத்த
திலுவாகப் பித்தளையின் செம்பு தன்னைத்
திறமாகச் சித்தர்தாம் மறைத்தா ரப்பா
நலுவாக மறைத்தசெம்பை நான்சொன் னேன்பார்
நாடவே ஏமமது நல்கும் பாரு
தலுவாகச் சுதந்தரமாய்ப் பார்த்துச் செய்து
தடையற்ற சித்தனாய் வாழ்வீர் காணே (866)

காணவே காக்காயின் பொன்னை வாங்கி
கடிதாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு

வாணவே கவ்வத்தில் இட்டுக் கேளு
வகையாகக் கெந்தியது முக்கா லாகும்
தோணவே சூடனரைப் பலம்நி றுத்துத்
துடியான வீரந்தான் கால தாகும்
ஆணவே பித்த ளையின் ஒக்கச் சேர்த்து
அடைவான திராவகத்தால் அரைத்துக் கொள்ளே (867)

கொள்ளவே யிருசாமம் அரைத்துக் கொண்டு
குணமாக வில்லைகட்டி மேலே கேளு
நள்ளவே யுப்புடனே சுண்ணங் கட்டி
நலமாக வில்லைகட்டிப் புடத்திற் போடு
வள்ளவே பெரும்புடமாய்ப் போட்டெ டுத்து
வகையாக நேர்காரம் சேர்த்துக் கொள்ளு
முள்ளவே குகையில்வைத் துருக்கச் செம்பாம்
முத்திசித்தி யுண்டாகும் முறைமை கேளே (868)

முறைமையாய் நாளம்வைத்து ஊதிப் போடு
மின்னொளிவாம் செம்பதுவும் என்ன சொல்வேன்
கறைமையாம் செம்பதுவும் பொரிச்ச வில்லை
கனிவான வேதையாங் கண்டு பாரு
மறைமையாம் இச்செம்பு வேதை யாக
மாட்டுகிற தொழில்சொல்வேன் மனத்தைக் கட்டு
வறையறவே செம்பொன்று தங்க மொன்று
வடிவாகச் சேர்த்துருக்கத் தங்க மாமே (869)

தங்கமாம் இவ்வேதை பாக மாகும்
தனித்துமே பித்தளையின் செம்பைப் பாரு
பங்கமாம் செம்பதுவும் பெருமை மெத்த
பதிவாக இதுதானும் எளிதில் செய்வார்

பொங்கமாம் வாசியைநீ மாட்டி யூது
போக்கோடே சுழிமுனையின் வழியில் நில்லு
தங்கமாம் மனத்தைநீ கட்டி யாடு
துடியாக மாற்றாகும் பதியில் நில்லே (870)

## *854 - 870* உரை

முன்கூறிய தங்கச்செம்புத்தகட்டின் எடைக்கு இரும்புத்தூளும் அதனளவு நாகத்தூளும்அதற்கு அரைப்பாகம் சூடனும் காற்பாகம் வீரமும் (ஆகிய இந்நான்கும்) பாணிவிட்டரைத்து மேற்படி தகட்டில் பூசிக்காய வைத்துப் பெரும்புடமிடு. சிவப்பாகும். நொறுங்காமலிருந்தால் மீண்டும் ஒருபுடமிடு. எடு. அதனெடையரப்பொடி சேர். அரை. புடமிடு. எடுத்துருக்கு. செம்பாகும்.சிவப்பாகும். ஒளியுள்ளதாகும். வலுத்த களிம்பில்லாத ஊறலற்ற செம்பு இது. வெள்ளியில் பத்துக்கு ஒன்றிடு. தங்கமாகும். உண்மையிது. உறுதி. தங்கம் சேராவிட்டால் செம்புகட்டாது. அயம் சேராவிட்டால் வலுவில்லை. செம்பு செத்தவுடன் அதற்கு உயிர் கொடுக்க இரும்பு சேர்க்கவேண்டும். தொல்லுலகில் அரசான இரும்புதான் துணை. இரும்பைவிட்டால் செம்பு போய்விடும். செம்பை எடுத்துச் செம்பொன் சேர்க்கச் செம்பொன் ஆகும். வழலை என்பதும் இரும்புதானே.

உள்வழலை இரும்பு. புறவழலை செம்பு. இரண்டும் சேர்ந்தால் தங்கம். (860-865 அறிவுரை).

கெந்திமுக்கால் சூடன் அரை வீரம் கால் பித்தளையோடு சேர்த்து அரை. திராவகம் விட்டு இருசாமம் அரை. வி. த. கா. உப்பும் சுண்ணாம்பும் சேர்த்தரைத்துக் கவசமிட்டுப் பெரும்புடமிட்டெடுத்து அதனளவு காரமிட்டுருக்கு. செம்பாகும். ஈயக்குழலால் ஊது. நல்ல செம்பாகி ஒளிவிடும். செம்பு ஒன்று தங்கமொன்று சேர்த்துருக்கு. செம்பொன்னாகும்.

## இந்நூலை ஆதியந்தமாகப்பார்த்தால் குபேரனைப் போல வாழலாம்

நில்லென்று மனமகிழ்ந்து நிலையில் நில்லு
நேரான வாதத்தைச் செய்து தேறு
வில்லென்று வளைத்தாலோ அம்பு தைக்கும்
வெறுமரத்தில் அம்புதையா வாற தாகும்
கல்லென்று எறிந்தகல்லு நிற்கு மோபார்
கருணைவைத்துச் செய்தாரே பலனுண் டாகும்
அல்லென்று குபேரன்போல் வாழ்வீர் கண்டீர்
ஆதியந்தம் மிகத்தொடுத்துப் பார்த்தி டீரே (871)

## இந்த ஒரு சாத்திரத்தில் எல்லாம் சொல்லியிருக்கிறேன்

பார்த்திடவே களங்குசெந் தூரஞ் சொன்னேன்
பரிவான சாரமுதற் கட்டுச் சொன்னேன்
நார்த்திடவே அயச்செம்பு பாகஞ் சொன்னேன்
நலமறிந்து கண்டுகொள்ள நடக்கை சொன்னேன்
ஏர்த்திடவே கல்லுப்புக் கட்டுச் சொன்னேன்
எடுத்தோடுங் குளிகைமுதல் வாசி சொன்னேன்
கோத்திட்டேன் முத்துப்போல் ஒருக யிற்றில்
குணமாகப் பாகமெல்லாம் கண்டு தேறே (872)

## பூர்வாசாரியர்கள் உபதேசக் கிரமம்

தேறவே சிவன்சொல்லத் தேவி கேட்டுத்
திறமாகச் சமுசயங்கள் திறமாய்க் கேட்டு
ஆறவே நந்தியுந்தான் உடனே கேட்டு
அடைவான விசுவனிக்கு அறிக்கை பண்ணி

காறவே விசுவனியும் அசுவனிக்குச் சொல்லிக்
கருத்தாகத் தன்மந்திரி கருணை கூர்ந்து
வாறவே தன்மந்திரி யகத்தியர்க்குச் சொல்ல
வடிவாகப் புலத்தியர்க்கு வகைசொன் னாரே (873)

சொன்னதோர் புலத்தியரும் தேரர்க்குச் சொல்ல
சொற்பெரிய தேரர்யூ கிக்குச் சொல்ல
நன்னயமாய் யூகிவட மொழியைப் பார்த்து
நவிலவே குணாகுணத்தை நவிலக் கண்டு
கன்னல் போல் உலகத்தோர் பிழைக்க வென்று
கருத்துவைத்து வாதிகட்குக் கருணை கூர்ந்து
இன்னிலத்தில் வாதங்கள் மிகவுஞ் சொல்லி
இருந்தாரே சிவயோகம் இன்ப மாயே (874)

## அகத்தியர் எனக்குச் சொல்லிய கல்லுப்புத் திராவகம் பாகமாக அடியிற்சொல்லுகிறேன்

இன்பமாய்ப் புகைநீர்தான் ஒன்று கேளு
இனிதாகச் சித்தர்கரு மறைந்த நீரு
அன்பாக அகத்தியரும் கூட்டுப் போகி
அருமையாய் எனைவைத்துப் பாகம் காட்டித்
தென்பாகச் சூதமெல்லாம் கரியில் ஆடச்
சிறியேற்குக் கைபாக வரிசை காட்டி
வன்பாகப் பாகமென்ன சொல்லக் கேளு
வடிவாகச் சொல்லுகிறேன் கிளர்ந்து கேளே (875)

(871-875 அறிவுரை)

## கல்லுப்புத் திராவகம்

கேளுமே வெடியுப்புப் பத்து மாகும்
கெடியான கல்லுப்பு பத்துமாகும்

நாளுமே சீனமது இருபத் தைந்தாம்
நலமாகப் பொடித்துமே வாலை யிட்டு
வாளுமே அரைகுடத்தில் இட்டுக் கேளு
வடிவான வாலையென்ற சட்டி மூடி
தாளுமே திராவகத்தைப் பிடித்துக் கொள்ளு
தாட்டிகமாய் இன்னமொன்று சொல்லக் கேளே (876)

## செயரச பற்பம்

சொல்லுகிறேன் இரதமது சேரு ஒன்று
சொற்பெரிய கல்லுப்பில் எரித்துப் போடு
கல்லென்ற சரம்நீறிப் பதங்க மாகும்
கருணைபெற எடுத்துமே கல்வத் திட்டு
நல்லென்ற புகைநீரை விட்டு ஆட்டி
நலமாக வில்லைதட்டி ரவியிற் போடு
வெல்லவே வில்லையைத்தான் உப்புத் தன்னில்
விருப்பமாய் வைத்தெரிக்கச் சித்தி யாமே (877)

சித்தியாய் எரிக்கவே யுயர வேறும்
சிறப்பாக அதைவழித்துக் கல்வத் திட்டுப்
பத்தியாய்ப் பின்னுமே புகைநீ ராவே
பதமாக அரைத்துமே வில்லைபண்ணி
நத்தியாய் உப்பதனில் வைத்து மூடி
நலமாக எரித்திடவே அடியில் நிற்கும்
முத்திபெற எடுத்துப்பார் தவள மாகும்
மூதண்ட சூதத்தின் முறைமை கேளே (878)

கேளுமே ரவியுருக்கி நூற்றுக் கொன்று
கெடியாகக் கொடுத்திடவே மாற்றுப் பத்தாம்

நாளுமே பணவெடைதான் உண்டு தேறு
நலமான காயமது இறுகும் வாசி
வாளுமே செவ்வல்லிப் பூப்போ லாகும்
வடிவான தேகமாம் காய சித்தி
பாளுமே கண்கள்செவ் வலரி யாகும்
பதிவான சித்தி யெல்லாம்சூதத் தாலே (879)

## ரசத்தின் பெருமை

சூதந்தான் வாதமெல்லாம் சூதத்தாலே
சூழ்ச்சமாம் தேகமெல்லாம் சூதத் தாலே
வேதமாம் வேதாமெல்லாம் சூதத் தாலே
வேதாந்த மாவதுதான் சூதத் தாலே
காதந்தான் ஒடுவது சூதத் தாலே
கடிந்தோடுங் குளிகையது சூதத் தாலே
மாதந்தான் சென்றாக்கால் வருட மாகும்
மதிகெட்ட வாதிகளே மருவி டீரே (880)

## சூதத்தால் வாதமாகும்

மருவவே சூதத்தை முந்திப் பாரு
மதிமயங்கிப் போகாமல் நினைவாய்ப் பாரு
வருகுமே ரசவாதம் ஏவல் கேட்கும்
வடிவாகச் சித்திதான் கொடுக்கும் சூதம்
தருகுமே சூதமென்ற சிவன்றன் விந்து
தாட்டிகமாய் யோகத்தில் பாச மாகும்
உருகுமே நவலோக பழுக்கும் பாரு
உற்றுமே பார்த்தாக்கால் வாத மாமே (881)

## சூதத்தைவிட்டு இலைதழைகளைக் கொண்டு வாதம்செய்தால் பணம் போய்விடும்

வாதமா மென்றுசூ தத்தை விட்டு
வடிவாக இலைதழைகள் பிடுங்க வேண்டாம்
சேதமாம் பணம்போகும் சிறப்பும் இல்லை
திறமான தொன்றுமில்லை தீநீ ராகும்
வேதமாம் சாத்திரத்தில் சொன்ன நீதி
வேதையாம் இந்நூலா யிரத்தில் தானும்
காதந்தான் நடந்தாலோ வழிகள் போகும்
கனிவாக நடக்காத வாறு கேளே (882)

## சூதத்தைக் கல்லுப்பால் கட்டவேணும். இன்றேல் துரிசினாற்கட்டு. இன்றேல் கட்டாது.

வாறுகேள் என்றாக்கால் சொல்லக் கேளு
வடிவாக முடிவாகும் சூத ராசன்
காறுகேள் ராசனைத்தான் கல்லுப் பாலே
கனமாகத் தானெரிக்கக் கட்டிப் போகும்
நாறுகேள் கல்லுப்பு இல்லா விட்டால்
நலமாகத் துரிசதனால் கட்டிக் கொள்ளு
தாறுகேள் இவ்விரண்டு மில்லா விட்டால்
தாட்டிகமாய்க் கட்டாது சூதந் தானே (883)

## சூதத்திராவகம் துரிசுச் சுண்ணம் பண்ணும்

சூதத்தைப் புகைநீரு பண்ணிற் கேளு
துடியாக துரிசிநீ றுடனே யாகும்
வேதத்திற் சொன்னபடி சொன்னேன் வேதை
வேதையாம் செம்புமது நீறிப் போகும்

காதந்தான் வழிநடந்தால் வழியு மாகும்
கனமாக நடக்காதே போனாற் கேளு
சூதத்தைப் போலவே யாட்டம் காணும்
துடியான வாதத்திற் சூதந் தானே (884)

**ரசம் வாத்திற்கு ஆதி. அது சிவவிந்து. அதனோடு ஈசுவரியினுடைய நாதமாகிய கெந்தி சேர்ந்தால் ரசவாதம் ஆகும்.**

சூதந்தான் வகாரத்தில் தாயு மாச்சு
துன்றிய தோர் ஓட்டமெல்லாம் சூதத் தாலே
வாதமே செய்வதற்குச் சூதம் வேணும்
வடிவான சூதமென்ன சிவன்றன் விந்து
நாதமாம் கெந்தியதில் சேர்ந்தி ருக்கும்
நலமான பெண் ரூப மான தாலே
பூதந்தான் இருந்தாப்போல் இருக்கும் பாரே
பூதலதலத்தில் ரசவாதம் ஆகும் தானே (885)

**இலைச்சாறு விட்டுச் சூதத்தைக் கொதிக்கவைத்து ஒன்றுமில்லை யென்பான் துட்டவாதி.**

ஆகுமென்று சிறிதுபேர் சூதந்தன்னை
அடைவாக இலைபிடுங்கிக் கசக்கித் தானும்
நீகுமாய்ப் பிழிந்துமே கரண்டி தன்னில்
நிலவரமாய்க் கொதியிட்டுப் பார்த்துப் பார்த்துப்
பாகுமாய்ப் பலிக்காதே போச்சு தென்று
பகலிரவில் யோசனைகள் பண்ணிப் பண்ணி
ஏகுமென்று பொய்சொல்லித் திரிவான் பாரு
இதமாகப் பொல்லாத வாதி தானே (886)

## இரசவாதமென்பது ரசத்தைக் கட்டுகிறது சுளுவாய்க் கல்லுப்பிற் கட்டுமே

வாதியே சொல்லுகிறேன் உற்றுக் கேளு
வகையாக வாதமென்று சொன்ன பேர்தான்
நீதியாய் ரசங்கட்ட இந்தப் பாடு
நேரான உபரசமும் பார சாரம்
பேதியா எல்லாந்தான் ரசத்திற் காகப்
செருமையாய்க் கட்டுமென்று சொன்னேன் அப்பா
சோதியாம் கல்லுப்பிற் கட்டிப் போகும்
துடியான வேதைதான் சிறுமை தானே *(887)*

## ரசங்கட்டத் துரிசைப்பார். இன்றேல் செம்பைக் கொன்றுபார். இன்றேல் கல்லுப்பும் ரசமுந்தான் குருவாகும்.

சிறுபிள்ளை யாடுமிந்த வாதந் தன்னை
செப்பவே அடிக்கடிக்குச் சொல்லப் போமோ
குறுமுழியாய் முழித்துக் கொட் டாவி விட்டால்
குணமில்லை துரிசைநீ குணமாய்ப் பாரு
துறுவென்ற துரிசுதான் இல்லாப் போனால்
துடியாகச் செம்பைமுந்திக் கொன்று பாரு
அறுவதே யதுதானு மில்லாப் போனால்
அடைவாக கல்லுப்பு ரசமும் சேரே *(888)*

## கட்டியவுப்பில் ரசபதங்கம் சேர்த்துருக்கி மேருசெய்து அம்மேருவில் ரசம்விட்டு எரித்தால் அந்தரசம் வேதிக்கும்

சேர்த்துமே இரண்டையுந்தான் ஒன்றய்ச் சேர்த்துச்
சிறப்பாகப் புடம்வைத்து உருக்கி யாட்டிப்

பார்த்துமே மேருபோல் பண்ணிக் கொள்ளு
பதியவே யிரதம்வந்த இடங்கள் தோறும்
கார்த்துமே யதில்வைத்து எரித்துக் கொள்ளு
கனமான வேதையாம் கண்டு பாரு
நீத்துக்குள் இருந்தாற்போல் மனிதர் தாமும்
நிர்ணயமாய்ச் செம்புகட்டத் தங்க மாமே (889)

## செம்பையாக்கும்முறை கொடுக்கும் வகை கல்லுப்பும் ரசமும் சேர்த்துக் குப்பிச் செந்தூரம் செய்யும்முறை இரும்பைக்கொன்று பிழைக்கும்முறை கூறினேன்.

தங்கமாம் செம்பினுட குணமும் சொன்னேன்
தயவாக அதுகொடுக்கும் வகையும் சொன்னேன்
இங்கிதமாய்க் கல்லுப்பு ரசமும் சொன்னேன்
இதமாகச் செந்தூரம் சொன்னேன் பாரு
பங்கமில்லாமலே பார்த்துத் தேறு
பதிவான இரும்பைநீ கொன்று ஆட
இங்கிதமாய்த் தங்கமாம் என்று சொன்னேன்
இதமான யூகிமுனி பார்த்திட் டேனே. (890)

## அறியாவாதிகளே உப்பைச்செய்தால் வாதம் நிலைக்கும்

பார்த்திட்டேன் நிசவேதை தானு மப்பா
பதிவான கைபாகம் அறியா தாலே
சேர்த்திட்ட களங்குவகை தெரியா தாலே
திறமான செந்தூரம் பண்ணா தாலே
கோத்திட்ட ரசவாதம் பொய்யென் பார்கள்
குடிகெடுத்த வாதிகளே கூர்ந்து பாரும்

நேர்த்திட்டு நேரமாய் உப்புப் பாரும்
நிலையான வாதம்வந்து நிலைக்கும் பாரீர் (891)

## செம்பெடுத்தால் அதுகொடுக்க நொறுக்கு வெள்ளி இருக்கவேண்டிய இயல்பு

நிலைக்கவே செம்பெல்லாம் சொன்னேன் பாரு
நிலவரமாய்ச் செம்பு செய்தால் வெள்ளி தன்னில்
அலைக்கவே யதுகொடுக்க வகைகள் சொல்வேன்
அருமையாய் மதிபாரு வேதையாக
கொலைக்கவே நொறுக்குவெள்ளி நேர்மை சொல்வேன்
குணம்கெட்ட வாதியே கண்டு தேறு
தொலைக்கவே திரியாமல் மதியைப் பார்த்துத்
துடியாகச் செம்பெடுத்துக் கொடுத்துத் தேறே. (892)

## இவ்விரண்டு காண்டத்திற்குள் சொல்லிய எல்லாம் உண்மை

தேறவே வெள்ளிதனைச் சொல்லக் கேளு
துடியாக முன்சொன்ன வாத காண்டம்
ஆறவே யதில்குறைத்துச் சொன்னேன் பாரு
அடைவாக இக்காண்டம் தனிலே சொல்வேன்
கூறவே காண்டங்கள் இரண்டிற் குள்ளே
குணமான வாதமெல்லாம் கொள்ளை யாகும்
காறவே சொன்னவெல்லாம் நிசமு மாகும்
கருத்தாகப் பார்த்துமே செய்து கொள்ளே. (893)

## வெள்ளி சுத்தி

செய்திடவே வெள்ளியது பலமும் பத்து
சிறப்பாக வங்கமது நாலத் தொன்று

கொய்திடவே எடுத்தூதச் சுத்தி யாச்சு
குணமாக நலமாக பூதிப் போடு
மெய்திடவே சாம்பல்தனில் பறிய வூது
மேன்மையாய் அதையெடுத்து உருக்கிக் கொள்ளு
வைதிடவே தகடுதான் தட்டக் கேளு
வளமான வரிசையினி வகைசொல் வேனே. (894)

## நொறுக்குவெள்ளிக்கு தகடடிக்கும் அளவு

வகையென்ன சொல்வதுதான் வெள்ளி தன்னை
வகையான தகடுஅங் குலத்தைக் கேளு
தொகையான கனமென்ன ஒலை யீர்க்கு
துடியாக மூன்றிர்க்குக் கனம தாகும்
தகையென்ன இடமென்ன பத்து ஈக்கு
தாக்கியே நிகளமென்ன தோண மட்டும்
நகையென்ன இப்படியே யடித்துக் கொள்ளு
நலமாக வுறுதிகண்டு செய்து கொள்ளே. (895)

## நொறுக்குவெள்ளி செய்ய எடையளவு

கொள்ளவே பலம்பத்து எட்டு ஆறு
குறிப்பாக ஐந்துமுதல் நான்கு மூன்று
மெள்ளவே இரண்டொன்று எடைக்கு அப்பா
நிலவரமாய் இப்படியே தகடாய்த் தட்டி
துள்ளவே வெள்ளிக்கு முக்கால் கெந்தி
துடியாக வீரமது காலும் போடு
வள்ளலே சூடனது அரையும் போடு
வடிவாக மதிமேலே கவசங் கட்டே. (896)

## நொறுக்குவெள்ளிக்குப் புடவரிசை

கட்டியே ரவிதனிலே யுலர வைத்துக்
கனிவாகப் புடவரிசை சொல்லக் கேளு
வட்டியே எருவதுதான் பத்தெடுத்து
வகையாகப் படலமது சொல்லக் கேளு
நட்டியே மூன்றினுட வறட்டி தன்னை
நலமாகப் பொடியாக முறித்துக் கொள்ளு
முட்டியே பத்துஎரு முக்கா லாக
முனிவாக அடுக்கியே சொல்லக் கேளே. (897)

கேளுமே நெருக்கமாய் வட்ட மாகக்
கெடியாக வடுக்கியே சொல்லக் கேளு
நாளுமே கால்வறட்டி நடுவில் வைத்து
நலமான முன்வெள்ளி நடுவே வைத்து
வாளுமே கால்வாசி வறட்டி போடு
வளமான அக்கினியாம் தீயை முட்டக்
கோளுமே யுருகாமல் அட்டை போல
கொடுமையாய் முத்துப்போல் கருத்தி ருக்கும். (898)

## நொறுக்குவெள்ளியுருக்க

இருக்குமே இப்படிக்கு மூன்று போடு
இதமான வெள்ளியது நீரு வாங்கிக்
கருத்துமே இருக்குமது ஒடித்துக் கொள்ளு
கரியில் வைத்து நேர்காரம் கொடுத்து ருக்க
நருத்துமே கெந்தியின்றன் னீயம் வெள்ளி
நனிவாகப் பிடித்துமே யுருகி நிற்கும்

பருத்துமே பழையபடி வெங்கா ரம்சேர்
பதிவாக வுருக்கிடவே வெள்ளியாமே. (899)

## நொறுக்குவெள்ளியுருக்கியபின் இருக்கும் நிறமும் அதனை ஆய்வு செய்யும் முறையும்

ஆமேதான் வெள்ளியது நிறத்தைக் கேளு
அடைவான வெள்ளியது கொக்குப் போல
நாமேதான் சோதனையைச் சொல்லக் கேளு
நலமாகத் தகடாகத் தட்டிக் கொள்ளு
காமேதான் அரையோட்டில் கெந்தி மஞ்சள்
கனிவாக இழைத்துமே யுளி கரைத்து
போமேதான் குழம்பாகப் பாணி விட்டுப்
போக்கோடே கொதியிட்டுத் தகட்டைப் போடே. (900)

## நொறுக்குவெள்ளியும் அயச்செம்பும் சேர்ந்தது மட்டம்

போடவே தகடுதான் தங்கம் போலாம்
போக்கோடே பழுத்துவிடும் நேர்மை கண்டு
ஆடவே அயச்செம்பைக் கொடுத்தா யானால்
அதுபழுத்து ஏழுவய தாகும் பாரு
நாடவே இன்னமொரு கருத்துக் கேளு
நலமான புடம்போட்ட வெள்ளி யைத்தான்
காடவே யுருக்கியே தகடாய்த் தட்டிக்
கனிவான வெங்காரம் பொரித்துக் கொள்ளே. (901)

பொரித்துமே தகட்டின்மேல் தடவித் தானும்
　　பொறுமையாய்க் கரியோட்டில் தகட்டை வைத்து
நருத்துமே மின்னூதிப் பாரு வெள்ளி
　　நலமாக மின்னினால் நல்ல வெள்ளி
வருத்துமே பொன்போல மின்னும் பாரு
　　வகையாக இதிலேதான் அயச்செம் பைச்சேர்
கருத்துமே வெகுவாகத் தங்கம் சேர்த்துக்
　　காரியமாய்ப் புடம்போடத் தங்க மாமே. *(902)*

## எல்லா மட்டமும் இது போலவேயாம்

தங்கமாம் அருகுகட்டி யிறங்கும் பாரு
　　தங்கத்தில் மதிநின்று தங்க மாகும்
எங்குமாம் வெள்ளியோ டாது பாரு
　　இன்பமாய் மட்டங்கள் இயல்பு மெத்த
துங்கமாய்ப் பாகமாய்ச் செய்து கொள்ளு
　　துடியாக மட்டமெல்லாம் இந்தப் போக்கு
பொங்கமாய்ப் பார்த்தாக்கால் புடமி றங்கும்
　　புத்தியில்லா வாதிகளே சொல்வேன் பாரே. *(903)*

## நொறுக்குவெள்ளிக்குத் தகடு மெல்லிதாய் அடித்தால் கெட்டுப் போகும். புடத்தில் வறட்டிமிஞ்சில் உருகிவிடும்.

பாருமே நொறுக்குவெள்ளி போடும் போது
　　பரிவான தகடுதான் லேசே யானால்
கோருமே யுருகியே கெட்டுப் போகும்
　　குணமில்லா வெள்ளியது குறைந்து போகும்

நாருமே வறட்டிமிஞ்சில் உருகிப் போகும்
நல்லகெந்தி வீரமுடன் சூடன் மூன்று
வாருமே அரைப்பதுவும் குறைந்து தானால்
வகையாக வாராது வகையைக் கேளே. (904)

## நொறுக்குவெள்ளி செய்ய சரக்குகள் அரைப்புக் குறைந்தால் கெடுகின்ற விவரம்

கேளுமே வெள்ளிதனில் கெந்தி யீயம்
கெடியாக ஏறியே யுருகும் போது
வாளுமே கரிதனிலே சிதறிப் போகும்
வகையாக வெள்ளிதனைக் காண மாட்டாய்
தூளுமே யாகியே யெடுக்க மாட்டாய்
துப்புரவாய் வெள்ளிதனில் விருப்பம் இல்லை
கோளுமே இல்லாமல் பாக மாகக்
குணமாகச் செய்திடவே சித்தி யாமே. (905)

## நொறுக்குவெள்ளி செய்ய வெள்ளி சுத்தி செய்யும்போது வெள்ளியில் ஈயம் இருந்தால் கெந்தகத்தினால் கரியாய்ப் போய்விடும். ஆகையால் விழிப்பாகச் செய்து கொள்க.

சித்தியாய் வெள்ளிதனை யூதும் போது
திடமாக வெள்ளியுடன் ஈயம் சேர்ந்து
சுத்தியே ஈயந்தான் தீயாய்ப் போனால்
துடியான பாகத்தைச் சொல்லக் கேளு
நத்தியே கெந்தியைத்தான் கவசம் கட்ட
நலமான புடத்திலே கரியாப் போகும்

மெத்தெனவே பாகமாய்ச் செய்து கொள்ள
மேன்மையாம் தங்கமாம் சித்தி காணே. (906)

## நொறுக்குவெள்ளி செய்யப் புடவரிசையும் சரக்கரைப்பும்

காணவே வெள்ளிபுட மிட்டாற் கேளு
கனிவாக வறட்டிமுக்கால் அமுக்கிக் கொள்ளு
தோணவே தகட்டைத்தான் வைத்துக் கொள்ளு
துடியாகக் கால்வாசி மேலே மூடி
வாணவே கெந்தியணை வீரம் போட்டு
வகையாக அரைசாமம் அரைத்துக் கொள்ளு
பாணவே நுறுங்கமட்டும் புடத்தைப் போடு
பதிவான கரியில்வைத் துருக்கக் கேளே. (907)

## நொறுக்குவெள்ளியுருக்க வேண்டிய வகையும் அயச்செம்பும் தங்கத்தைச் சுத்தியாக்கிச் சேர்த்தால் வேதையும்.

கேளுமே வெங்காரம் அடிக்க டிக்குக்
கெடியாகச சேர்த்துமே யுருக்கிக் கொள்ளு
பாளுமே போகாமல் சிதறி டாமல்
பதையாமல் செய்துமே பாக மாக
ஏளுமே இயல்பாகச் செய்து கொள்ளு
இன்பமாய் அயச்செம்பைக் கருட்பு வாங்கித்
தாளுமே தங்கத்தைச் சுத்தி பண்ணு
தாட்டிகமாய்ச் சேர்த்திடவே சித்தியாமே. (908)

வெடியுப்பு பத்துப்பலம் கல்லுப்பு பத்துப்பலம் சீனம் இருபது பலம் பொடித்து வாலையிலிட்டுத் திராவகம் இறக்கு. இரசம் ஒரு சேர் எடுத்துக் கல்லுப்பினுள் வைத்து எரி. பதங்கமாகும். எடுத்துப் புகைநீர் விட்டு அரை. வி. த. கா. உப்புக்குள் வைத்து எரி. உயர ஏறும். வழி. மீண்டும் புகைநீர் ஊற்றி அரை. வி. த. கா. உப்பில் வைத்து எரி. அடியில் வெண்மையாக நிற்கும். செம்பில் நூற்றுக்கு ஒன்று உருக்குமுகத்தில் கொடு. பத்து மாற்று. பணவெடையுண். உடலிறுகும். செவ்வல்லி - செவ்வலரிப்பூக்கள் போலாகும். எல்லாம் சூதத்ததாலாகும். கல்லுப்பால் ரசம் கட்டலாம். துரிசினாலும் கட்டலாம். சூதத்தைப் புகைநீராக்கினால் துரிசு நீறு உடனே ஆகும். செம்பும் நீறும். (880-888 அறிவுரை).

கல்லுப்பும் ரசமும் சேர்த்துப் புடம்வைத்து உருக்கி அரைத்து மேருபோல் (மேரு-காசிக்குப்பி) செய்துகொள். இரசம் செய்ய வேண்டிய வேளைகளில் அக்குப்பியில் வைத்து எரித்துக்கொள். மாற்றாகும். இவ்விரண்டு காண்டத்தில் சொல்லியன எல்லாம் உண்மை.

**வெள்ளிசுத்தி:** வெள்ளி பத்துப்பலம் ஈயம் இரண்டரைப்பலம் சேர்த்து உருக்கி ஊத வெள்ளி தூயதாகும். (வெள்ளியிலுள்ள கசடுகளையெல்லாம் ஈயம் வெளியேற்றிவிடும்) சாம்பலில் வைத்து ஊதி எடுத்துத் தகடு தட்டிக் கொள். தகட்டின் கனமும் அகலமும் நீளமும் தெரிந்து கொள். தகட்டின் ஓலை ஈர்க்கில் மூன்று ஈர்க்கின் கனமும் பத்து ஈர்க்கின் அகலமும் நீளம் வேண்டிய அளவும் தகடாக அடித்துக் கொள்க. ஒன்றுமுதல் பத்து

எடையளவு வரை இங்ஙனம் தகடுதட்டி எடுத்து வைத்துக் கொள்க. வெள்ளியின் எடைக்கு முக்கால்பாகம் கெந்தியும் சூடன் அரைப்பாகமும் வீரம் காற்பாகமும் எடுத்து அரைத்து வெள்ளித் தகட்டுக்குக் கவசம் கட்டு. பின்பு பத்து எரு எடுத்துக் கொள். மூன்றெருவைப் பொடியாக முறி. மற்றவற்றை முக்காற் பாகமாக்கு. நெருக்கமாக வட்டமாக அடுக்கிக் கால் எரு நடுவில் வைத்து முன் வெள்ளியை அதன் நடுவில் வைத்து மேலே கால்பங்கு எருப்போட்டு எரி. உருகாமல் அட்டைபோல் முத்துப்போல் கருத்து இருக்கும். இப்படி மூன்று புடமிடு. வெள்ளி நீர்வற்றி பொடிபடும். நேரளவு காரம் சேர்த்துருக்க உருகி நிற்கும். கெந்தியின் ஈயம் பிடித்து இருக்கும். மீண்டும் காரம் சேர்த்து உருக்கு. வெள்ளியாகும். கொக்கு நிறமாக இருக்கும். கெந்தியும் மஞ்சளும் செதுக்கிக் கரைத்த புளியில் சேர்த்துக் குழம்பாக்கி வெள்ளியைத் தகடுதட்டியதில் போடு. தகடு தங்கம் போலாகும். அதில் அயச்செம்பு கொடு. ஏழு மாற்று. புடம்போட்ட வெள்ளியயைத் தகடாகத் தட்டி வெங்காரம் பொரித்தரைத்துத் தடவிக் கரியோட்டில் வைத்து ஊதிப்பார். பொன்போல் மின்னும். இது பொருத்தமான பருவம். எல்லா மட்டங்களையும் இப்படிச் செய். எரு மிகுந்தால் உருகிவிடும். கெந்தி சூடன் வீரம் அரைப்புக் குறைந்தாலும் ஒழுங்காக வாராது. வெள்ளிக்குப் பலமுறை காரம் கொடுத்துருக்கித் தங்கத்தைத் தூயதாக்கி அயச்செம்பைக் கருப்புப் போக்கிச் செய்து கொள். வெள்ளியைத் தூய்மை செய்து புடமிடும்போது வெள்ளியில் ஈயமிருந்தால் கெந்தி சேர்ந்த பின்பு புடமிடும்போது கரியாகப் போய்விடுமாதலால் அங்ஙனம் நேராமல் விழிப்பாகச் செய்துகொள்க. வெள்ளி புடமிடும்போது முக்கால் பாகம் எருவைக் கீழே அமுக்கிவை. அதன்மேல் தகடு வைத்துக் காற்பாகம் எடு மேலே மூடு. மற்றும் கூறிய பாகம் பார்த்துச் செய்க.

**முன் சொன்னது ஏழைக்குச் சொல்லியது பிண்டம் வழலை சவுக்காரம் இவைகளைத் தொட்டு ஆடும் பேர்களை அவற்றையே கட்டிக்கொண்டு அழச் சொன்னேன். வெள்ளியின் னீரை வாங்கிப் போடு. வேதையாம்.**

சித்தியாம் ஏழைவா திக்குச் சொன்னேன்
        சிறப்பான பிண்டமுடன் வழலை வாதி
நத்தியாம் சவுக்கார வாதி யைத்தான்
        நலமாக அதையெடுத்து அலையச் சொன்னேன்
புத்தியாய்ச் செம்பைத்தான் வைத்துக் கொள்ளு
        புதுசாக மதிநீரை வாங்கிப் போடு
சத்தியமாய்ச் செய்தாக்கால் தங்க மாகும்
        சரியான வேதையாம் சாற்றி னோமே (909)

**செம்பை முன்னேசெய்து நொறுக்குவெள்ளியிற் சேர்த்து ஆகின்ற பொன்னைச் செலவு செய்துகொண்டு செந்தூரம் செய்துகொண்டால் பெரிய வேதையாம்.**

சாற்றினோம் செம்பைத்தான் வைத்துக் கொண்டு
        சதியான மதியுருக்கி யதிலே தாக்கு
போற்றியாந் தங்கமாம் தன்னை வைத்துப்
        போக்கோடே செலவிற்கு வைத்துக் கொண்டு
நாற்றியே செந்தூரம் பண்ணிக் கொள்ளு
        நற்பெரிய வேதையாம் நயப்பு மெத்த
காற்றிலே திரியாமல் முதன்மை யாகக்
        கனிவாக வெள்ளியைத்தான் பார்த்தி டாயே (910)

**முன்னே வெள்ளியைப் பார் வறுமை தீரும். கருவைத் தொட்டு ஆடு. வாதிக்கு உண்மை சொன்னால் நரகமுண்டு. பிண்டமென்பது உப்பு.**

பார்த்திடவே ஏழைவா திக்குச் சொன்னேன்
பதியான பிண்ணவா திக்குத் தானும்
ஏர்த்திடவே சொன்னாலும் கேட்க மாட்டான்
எளியவனாய்த் திரிந்துமே கெட்டுப் போவான்
நேர்த்திடவே யவனுக்குச் சொன்னா லுந்தான்
நிசமாக நரகமுண்டு சொல்ல வேண்டாம்
போர்த்திடவே சித்தர்தான் பிண்ண மென்று
பொறுமையாய்க் கருமறைத்த துப்புத் தானே (911)

**வாதசாத்திரத்தை மறைத்துச் சொல்லாவிட்டால் ஆங்காரத்தால் கெட்டு எவ்லோரும் பொன் செய்வார்கள் என்று மறைப்பாகச் சொல்லியது. பிண்டமென்றால் சுரைக்காய்போல் இருக்குமென்று வாதிகள் கெட்டு அலைகின்றார்கள்.**

மறைக்காதே போனாலும் ஆண வந்தான்
வடிவாகப் படியாது செகத்தில் வாதி
உறைக்கவே சித்தர்தாம் நிசஞ்சொன் னாக்கால்
உண்மையாய் எல்லாரும் தங்கம் செய்வார்
புறைக்கவே கவடாகச் சொல்லிப் போட்டால்
பூதலத்தில் ரசவாதி யலைந்து கெட்டார்
சுறைக்காய்போல் பிண்டமென்று தொடங்கி னார்பார்
தொல்லுலகில் ரசவாதி எல்லாந் தானே (912)

### வாதம்வந்தால் கோபத்தைத் தள்ளிவிடு வெள்ளியை நொறுக்கியாடு

எல்லாரும் பார்க்கவே வெளியாய்ச் சொன்னேன்
ஏழைமதி போகாமல் வெள்ளி பாரு
நல்லாக வாதம்வரும் வந்து தானால்
நவிலாதே யொன்றுக்கும் சொல்ல வேண்டாம்
பொல்லாமை இல்லாமல் நடந்து கொண்டு
புஞ்சையாம் கோபத்தைப் போக்கிப் போடு
வல்லமையாம் வெள்ளியைத்தான் நொறுக்கி யாடு
வகையான தங்கமாம் ஆடிப் பாரே (913)

### அயச்செம்பு நொறுக்குவெள்ளி கல்லுப்பு இவைகளைக் கோடியில் ஒருவன் காண்பான்

ஆடியே அயச்செம்பைக் கண்டாய் ஆனால்
அடைவான் யோகசித்தி சித்தி யாகும்
கூடியே நொறுக்குவெள்ளி கண்டா யானால்
கோடிகவ றாடலாம் தங்க மாகும்
மூடியே கல்லுப்பைக் கண்டாய் ஆனால்
முத்திக்கும் சித்திக்கும் முதன்மை யாகும்
கோடியிலே யொருவனவன் காண்பா னப்பா
குறையுண்டா அவர்களுக்குக் கூர்ந்து பாரே (914)

### கல்லுப்பும் ரசமும் சேர்த்தால் கோடி வேதை மூலிகையாலும் பிண்டத்தாலும் பயனில்லை

கூர்ந்துபார் கல்லுப்பு இரதம் சேர்ந்தால்
கோடான கோடிக்கும் வேதை யாகும்

ஆர்ந்துபார் ஏழைதான்வாதி செய்வான்
அடைவாகப் பலதுண்டாம் அறியக் கேளு
நார்ந்துபார் இலைதழையால் வாதம் ஆமோ
நலமான பிண்டத்தில் வாதம் ஆமோ
வார்ந்துபார் வெள்ளாட்டிப் பயல்கள் சேய்வார்
வகையான பிண்டவித்தை வருகா தாமே (915)

## இந்நூலைப் பார்த்தால் வாதம் சித்தியாம்

வருகாது ஒன்றுமில்லை பிண்டம் தன்னில்
வலிமைமெத்த ஐங்காய மென்று சொன்னார்
திருகுமுறுக லாகவே சொன்னா ரப்பா
தேசத்தோர் அலைந்துமே சுற்றிப் பார்க்க
வருகாது சத்தியமாம் பாரு நன்றாய்
வகையான கும்பமுனி சொல்வார் வேதை
தருகாதே என்னூலைப் பார்த்துத் தேறு
தப்பாது வேதையாம் சித்தி யாமே (916)

## வெள்ளியை நொறுக்கியாடு பயனாம்

ஆமேதான் வெள்ளியது நொறுக்கச் சொன்னேன்
அன்பாக வதைச்செய்ய மார்க்கம் சொன்னேன்
காமேதான் வெள்ளிசெய்யுங் குணமும் சொன்னேன்
கருத்துவைத்து வேதைமுறை கண்டு தேறு
பூமேவு நிலந்தன்னில் இருந்து ஞானம்
போக்கோடே யிருக்கலாம் புகழ்ந்து தானும்
நாமேதான் சொல்லிவிட்டேன் வேதைப் போக்கு
நாட்டிலே ரசவாதி காணு வாயே (917)

## வாதம் விட்டால் ஞானமில்லை. ஆணவம்விட்டு நொறுக்கு வெள்ளி செய். பயனாம்.

காணவே வாதம்விட்டால் ஞானம் இல்லை
கருத்தறியா தவருக்குப் புத்தி யில்லை
தோணவே மனம்விட்டால் எல்லாம் போச்சு
சுருதியைத்தான் விட்டாக்கால் வாதம் இல்லை
வாணவே யாணவத்தை விட்டுப் போடு
வகையான நொறுக்கு வெள்ளி பார்த்துத் தேறு
கோணாமல் கைபாகம் ஆகச் செய்தால்
கொடிதான் கவறாடும் கொள்கை தானே (918)

## கோடியில் ஒருவன் அறிவான்

கொள்கையாம் ரசவாதம் பொய்யோ அல்ல
கூர்மையாய்க் கண்டுதான் பிடிக்கா தாலே
நள்கையாம் பொய்யாகும் ரசவாதந்தான்
நாடியே கருத்தெரியாப் போன தாலே
உள்கையாம் உள்ளபடி சொன்னேன் பாரு
உய்த்துணர்ந்தால் வேதையாம் உழைத்துப் பாரு
கள்கையாய்க் கோடிக்கு ஒருவ னுண்டு
கடைகெட்ட வாதிதான் செய்ய மாட்டான் (919)

## கெடாதே. அயச்செம்பினை முதலிற்பார்

மாட்டாமை அயச்செம்பைச் செய்து கெட்டு
மதிமயங்கித் திரிந்தாக்கால் ஆரென் செய்வார்
தீட்டான காலறிந்து முடக்க வேணும்
நேராகத் திரிந்ததுதான் நூலைப் பாரு
கூட்டாகக் கூட்டியே வாதம் சுட்டுக்
கொடுமையாய்ச் சாத்திரமல் லாமல் தானும்

பாட்டாகப் பாடினால் என்ன லாபம்
பதிவாகச் செம்பைமுந்திப் பார்த்தி டாயே (920)

## கீழேகூறும் செம்பினைச் செய். வாதம் ஏவல் கேட்கும்

பார்த்திடவே செம்பொன்று சொல்லக் கேளு
பதிவாக யூகிமுனி பகர்ந்த நேர்மை
ஏர்த்திடுமே பாகமாய்ச் செம்பு சொல்வேன்
இன்பமாய்ச் செம்பைவைத்துப் பதமாய் நில்லு
கோர்த்திடுமே ஞானங்கள் மிகவும் ஆகும்
குணமாகும் நலமாகும் கூர்மையாகும்
ஏர்த்திடுமே வகாரம் வந்து கையைக் கட்டி
இதமாகக் கேட்குமே வாதம் தானே (921)

## தாமிரக்கரி

வாதமே வருவதற்குச் செம்பு தானும்
வகையாகப் பலம் பத்து நிறுத்துக் கொண்டு
பேதமறப் இல்லாமல் கெந்தி முக்கால்
பிரியமாய்ப் பண்ணையரை வீரம் காலும்
காதமாய்ச் சேர்த்துமே பாணி யாலே
கனிவாக அரைத்துமே நாலு சாமம்
நீதமாய்த் தகட்டின்மேல் கட்டிப் போடு
நிலையாக எடுத்திடவே அதரு மாமே (922)

ஆமேதான் அதரெடுத்து அப்பால் வைத்து
ஆகியாய் மறுத்தொருக்கால் தடவிப் போடு
போமேதான் அதராகப் போகும் பாரு
போக்கோடே அதரெடுத்துப் புறம்பாய் வைத்து

நாமேதான் திரும்பவே போட்டுத் தீரு
நலமான செம்பெல்லாம் அதராய்ப் பண்ணி
காமேதான் அதரெடைக்குச் சூடன் சேரு
கனமான வெங்காரம் சேர்த்துக் கொள்ளே (923)

## செம்புக்கரிச் செந்தூரம்

கொள்ளவே திராவகத்தை விட்டு ஆட்டிக்
குணமாக வில்லைகட்டி ரவியிற் காய
மெள்ளவே புடம்போட்டு எடுத்துப் பாரு
மிதமாகப் பழையபடி திராவ கத்தால்
நள்ளவே அரைத்துவில்லை காய வைத்து
நலமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடு
துள்ளவே எடுத்துப்பார் பவழம் போல
துடியாக இருந்திடுமே வாதி கேளே (924)

## இதனொடு சண்டரசபற்பம் சேர்த்துச் செந்தூரம் செய்

கேளுமே சிவந்தசெந் தூர மாகும்
கெடியாகச் சிவக்குமட்டும் புடத்தைப் போடு
ஆளுமே எடுத்துமே சொல்லக் கேளு
அடைவான சண்டரச பற்பம் சேர்த்து
காளுமே எடைசமனாய்ச் சேர்த்துக் கொண்டு
கருணைபெறத் திராவகத்தால் ஆட்டிக் கொண்டு
நாளுமே போகாமல் புடத்தைப் போடு
நலமான செந்தூரம் ஆகும் பாரே (925)

## அயச்செம்பு செய்ய

செந்தூரம் தனையெடுத்து அயத்தைச் சேர்த்து
செப்பமாய்த் திராவகத்தை விட்டு ஆட்டி

முந்தியே மூன்றுபுடம் போட்டுப் பாரு
முக்கியமாய்ச் சிவப்பாகும் பின்பு கேளு
பந்தியே நேர்காரம் இட்டு ருக்கப்
பதிவான செம்பாகும் நாவி னாலே
சுந்தரமாய் இருக்குமந்தச் செம்பை நீயும்
துப்புரவாய் நொறுக்குவெள்ளி தன்னி லீயே (926)

## அயச்செம்பு வேதை

ஈயவே மாற்றென்ன பத்து மாகும்
இதமான காவியொடு முப்பி னிற்கும்
தாயகமாய் இருந்துமே யருகு கட்டும்
தனையெடுத்து விற்றுமே செலவு செய்து
மாயமாய் இருந்துமே யுலகில் வாழ்வாய்
மயக்கத்தை விட்டுமே ஞானம் பாரு
தோயவே பார்த்தாக்கால் எல்லாம் ஆகும்
துடியாக வயித்தியத்தில் நின்று பாரே (927)

## அயம்செம்பும் நொறுக்குவெள்ளியும் சேர்த்தால் உலகில் நலமாக வாழலாம்

பாருநீ சொன்னாக்கால் பார்க்கப் போமோ
பதையாமல் நொறுக்குவெள்ளி தன்னைப் பார்த்துச்
சேருநீ அயச்செம்பைச் சேர்த்தாய் ஆனால்
செழுமையாய் உலகுதனில் வாழ லாகும்
காருநீ நூலையே பார்த்துத் தேறு
கனிவான வாதசித்தி கைக்குள் ளாகும்
வாருமே இருந்துழைத்துச் சுழியி லேறு
வடிவான ஞானமாய் நின்று தேறே (928)

### செருக்குவிட்டு வளிநிலைசெய்து இருசிவடிவாக இரு

தேறியே மனதுதான் ஆங்கா ரத்தைத்
திடாகரித்து மனத்தைநீ ஒக்கப் பண்ணி
ஆறுநீ அலையாமல் வாசி யைத்தான்
அங்கென்று இறுக்கியே மாட்டி யூது
காறுநீ இச்சையெல்லாம் ஓடிப் போகும்
கைகண்ட ஞானக்கள் மிகவு மாகும்
தேறுமே மனத்தைவிட்டுத் தவிக்க வேண்டாம்
செகத்திலே இருசிவடிவாய் இருந்தி டாயே (929)

### வீணாய் அலையாமல் உப்பைவைத்துக்கொண்டு வாதம்பார்

இருந்திடவே வாதமென்ன எளிதோ அன்று
இதமாக எல்லாந்தான் சோதித்து ஏறு
பொருந்தியே வாதம்வந்து நிலைக்கும் பாரு
பூதலத்தில் இருசிவடிவாய் வாழ லாகும்
விருந்திட்டுப் பகைபண்ணித் திரிய வேண்டாம்
மேலான உப்பைத்தான் வைத்து நீயும்
பருந்துபோல் திரியா்தே பாக மாகப்
பார்த்திடவே ரசவாதம் தோயும் பாரே (930)

### நொ. வெ. அ. செ. சேர். பழுக்கும்

தோயுமே முன்வைத்த நொறுக்கு வெள்ளி
தொக்கோடே பார்த்தாக்கால் எல்லாம் தோயும்
ஆயுமே அவசரந்தான் படவும் வேண்டாம்
ஆதியாய் அயச்செம்பை வைத்துத் தேறு

காயுமே பழுக்குமட்டும் பார்த்துக் கொள்ளு
கதிபெறவே பழுத்தாக்கால் உறுசுவையு மாகும்
பாயுமே மடைதனிலே மீன்கள் போல
பார்த்துமே நொறுக்குவெள்ளி வைத்துக் கொள்ளே (931)

## அ. செ. வுக்கு நொ. வெ. போடாவிட்டால் புழுக்காது. மாற்றுக்காணாது. புடமிறங்காது

கொள்ளவே நொறுக்குவெள்ளி போடா விட்டால்
கொப்போடே அயச்செம்பு சேர்ந்த போது
மெள்ளவே பழுப்பாக மாட்டா தப்பா
மேன்மையாய் அரைகல்லில் மாற்று மில்லை
நள்ளவே புடமிறங்க மாட்டா தப்பா
நாட்டிலே வாதமில்லை நவின்றிட் டேன்யான்
உள்ளபடி சொல்லிவிட்டேன் வாதந் தன்னை
உய்த்துணர்ந்து பார்த்தவனே இருசியு மாமே (932)

## நொ. வெ. வில் வேதைபோடாமல் வெறும்வெள்ளியில் வேதைபோட அதுபுடத்தில் தீய ஏமாற்றம் அடைவர்

ஆமேதான் சிறிதுபேர் வாதம் சுட்டு
அறியாமல் வெள்ளிதனில் கொடுத்து ஊத
நாமேதான் புடத்திலே தீய்ந்து போக
நலமாகத் தான்கெட்டோம் என்று சொல்லிப்
போமேதான் பொய்யென்பார் உலக நீதி
போக்கோடே செய்யாமல் உலுத்தர் தாமும்
நாமேதான் வெகுபாடு பட்டுத் தேற
நாடினேன் வாதகாண் டத்தில் தானே (933)

## கடுமுயற்சியுடன் இக்காண்டத்தில் நொறுக்கு வெள்ளி சொல்லியுள்ளேன்

தானேதான் சாத்திரத்தைப் படித்துப் பார்த்து
தவித்துமே சரக்கைத்தான் பாரா தாலே
கானேதான் லோகத்தில் சொல்லிச் சொல்லிக்
காரியமாய்ப் புலம்பினால் என்ன செய்ய
நானேநான் என்றுசொன்னால் வாரா தப்பா
நாடியே திரிந்தாக்கால் வந்து தோயும்
போனவன்போல் திரிந்தாக்கால் லாபம் என்ன
புரட்டுருட்டுச் செய்யாமல் வாதம் பாரே *(934)*

## *909 – 934* உரை

*(909-921 அறிவுரை)* கெந்தகம் முக்காற்பலம் இலிங்கம் அரைப் பலம் வீரம் காற்பலம் சேர்த்துப் பாணிவிட்டரை. நாலுசாமம் அரைத்துப் பத்துப்பலச் செம்புத் தகட்டின்மேல் கவசம் கட்டு. புடமிடு. அதராகும். ஆகாமல் இருக்கின்றவற்றை எடுத்து மீண்டும் ஒருமுறை போடு. அதராகும். மீண்டும் இங்ஙனம் போட்டு அதனெடை சூடன் சேர். வெங்காரமும் பொரித்துச் சேர். திராவகம் விட்டு அரை. வி. த. கா. மெல்ல புடமிடு. எடுத்து மீண்டும் திராவகம் விட்டரைத்து வி. த. கா. பத்தெருப்புடமிடு. பவழம்போல் இருக்கும். இதனெடை சண்டரசபற்பம் சேர்த்துத் திராவகம் ஊற்றி அரைத்து வி. த. கா. புடமிடு. செந்தூரமாகும். இதனெடை அயம் சேர்த்துத் திராவகம் விட்டரைத்து மூன்று புடமிடு. சிவக்கும். அதனெடை காரமிட்டுருக்கு. செம்பாகும். இதனை நொறுக்கு வெள்ளியிற்கொடு. பத்துமாற்று. உப்பும் காவியும் அரைத்துப் பூசிப்புடமிட்டால் நிறம் ஓடாது. அருகு கட்டி இறங்கும். *(927-934 அறிவுரை)*

**நூன்முறைப்படி செய்துகொண்டேவரின் ஏதேனும் ஒன்று பலியாமல் போகாது.**

வாதமே பார்த்தாக்கால் ஞான மாகும்
வருத்தாக்கால் எல்லாந்தான் வெளியு மாகும்
கோதிதான் ஆட்டைப்போல் திரிய வேண்டாம்
கொடுப்பாரைப் பார்த்துமே ஏங்க வேண்டாம்
சாதனையால் வாதத்தைச் சுட்டுத் தேறு
சாம்பசிவன் அருளாலே யொன்று தோயும்
பேதமாய் இல்லையடா சொல்லிப் போட்டேன்
பிறப்புமுத்தி யாகுமடா பெருமை யாமே *(935)*

**என்னூலை அடிதொடுத்து முடிவரைக்கும்பார்த்தால் எல்லாக்கருத்தும் தோன்றும். வாதியாவான். ஞானசித்தி யோக சித்தியாகும்.**

ஆமேதான் என்னூலை யடிதொ டுத்து
அடைவாக முடிதொடுத்துப் பார்த்தா னானால்
காமேதான் எக்கருத்தும் தோன்றும் அப்பா
கடிதாக வாதசித்தி யாகும் பாரு
வாமேதான் ஞானந்தான் சித்தி யாகும்
வடிவான யோகந்தான் முன்னே வந்து
போகமாய் நின்றிடுமே யோக மாகும்
புத்தியாய் நூலினையே பார்த்துத் தேறே *(936)*

**நொறுக்கு வெள்ளி**

தேறவே யின்னமொரு நொறுக்கு வெள்ளி
செயமாகச் சொல்லுகிறேன் உலகத் தோரே

நாறவே வெள்ளிதான் பலமும் ஒன்று
நலமான வுளியதுதான் காலும் கட்டி
வாறவே இவைரெண்டும் உருக்கிக் கொண்டு
வகையாகக் கல்வத்தில் உடைத்துக் கொண்டு
தாறவே கெந்தியது முக்கால் போடு
தாக்கான சூடனரைப் பலமும் போடே (937)

## நொ. வெ. வை யரைத்துப் புடமிடுக

போட்டுமே வீரமது பலமும் கால்தான்
போக்கோடே நிறைசரியாய் நிறுத்துப் போடு
காட்டுமே பாணிவிட்டு அரைநேர் சாமம்
கணக்காக வில்லை தட்டி . . . . . . . . .
வாட்டுமே பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
வகையான நேர்காரம் இட்டுருக்க
தீட்டுமே மாசற்ற வெள்ளி யாகும்
திறமான தங்கம்போல் இருக்கும் பாரு (938)

## நொறுக்குவெள்ளி ஆய்வு

பாருமே இதையெடுத்து உரைத்துப் பாரு
பதியவே பச்சையாய் இருக்கும் பாரு
காருமே இந்தஎடை ஏழு மாற்று
கனிவான பொன்னுதான் எடையே சேர்த்து
வாருமே மாற்றாறு காணும் பாரு
வகையில்லா வாதியே கண்டு கொள்ளு
ஏருமே சகல முந்தான் நிதான மாகும்
இதமான வாதசித்தி கணக்கு மாமே (939)

**இந்த நொறுக்குவெள்ளி செய்யும் போது இதில் சேரும் கெந்தி யீயத்தைச் சூடனால் பிரித்து எடுத்தால் வெள்ளியுருக்குமுகத்தில் சிதறாது.**

கணக்காக வெள்ளிதனில் கெந்தி வீரம்
கருவாகச் சேர்த்தாக்கால் நொறுங்கிப் போகும்
துணக்காக வுருக்கினால் சிதறும் பாரு
தொன்மைபெறக் கரியிலே இருக்கும் பாரு
வணக்காக இவ்வீயம் எடுக்க வென்றால்
வகையாகச் சூடனால் கெந்தி யீயம்
பிணக்காக எடுபட்டுத் தங்கம் ஆகும்
பிரித்துரைத்த வாதிகளே கண்டு கொள்வீர் *(940)*

**செம்புக்கரி செய்யும்போது பெரும்புடமே போடுக**

கொள்ளவே செம்பினுடன் கெந்தி சூடன்
குணமாக வீரனுமே கூடச் சேர்த்துத்
துள்ளவே சிறுபுடமாய்ப் போட்டெ டுத்துத்
துடியாகக் கெந்தியது *சுற்றிக் கொண்டு
மெள்ளவே அயங்காரஞ் சேர்ந்த போது
மெதுவாக எல்லாமும் கரியாய்ப் போகும்
கள்ளமாய்க் கிட்டானாய்த் திரைந்து போகும்
காரியமாய்ப் பெரும்புடமாய்ப் போட்டுக் கொள்ளே *(941)*

போட்டுமே செம்புகெந்தி வீரம் சூடன்
போக்காகச் சோந்தாக்கால் சொல்லக் கேளே
காட்டுமே பெரும்புடமாய்ப் பேட்டெ டுக்கக்
கனமான கெந்தகவா டைகளும் போகும்
வாட்டுமே அயங்காரம் சேர்த்து ருக்க
வகையான செம்பாகும் சோதி யாகும்

பாட்டுமே பாகமது தவறி னாக்கால்
பதிவான கரியாகும் கிட்ட னாமே (942)

## தவறாமல் விழிப்பாகச் செய்

கிட்டானாய்ப் போகாமல் பாகம் பாரு
கிருபையாய் நூலைத்தான் கிளர்ந்து பாரு
பட்டபா டெல்லாமும் நினைந்து கொள்ளு
பதிவான வாதம்வரும் பெருமை மெத்த
தட்டானைப் போலவே கூர்மை பாரு
தவித்துமே போகாமல் செம்புபாலு
வட்டாகத் தங்கமது எளிதி லாகும்
வாய்ப் பேச்சால் ஒன்றுமில்லை வடிவு தானே (943)

## 935 – 943 உரை

வெள்ளி ஒரு பலமும் உளிராவினபொடி காற்பலமும் கூட்டி உருக்கிக் கல்வத்திலிட்டு உடைத்துக் கெந்தி முக்கால் சூடனரை வீரங்கால் சேர்த்துப் பாணி விட்டரைத்து வி. த. கா. பெரும் புடமிட்டெடுத்து அதனெடை வெங்காரம் சேர்த்து உருக்க மாசற்ற வெள்ளியாகும். திறமான தங்கம்போல் இருக்கும். உரைத்துப் பார்க்கப் பச்சையாக இருக்கும். பொன் சேர்த்துருக்க ஆறு மாற்றாகும். வெள்ளியில் கெந்தி வீரம் சேர்த்தால் நொறுங்கும். உருக்கினால் சிதறும். கரியிலே போய்த்தங்கும். இந்தக் கெந்தியீயத்தை நீக்கச் சூடன் சேர். கெந்தி நீங்கும். தங்கமாகும்.

செம்பினுடன கெந்தி சூடன் வீரம் சேர்த்துச் சிறுபுடமிட்டால் கெந்தி செம்பில் பற்றிக் கொள்ளும். அயமும் காரமும் சேர்க்கும் போது கரியாகத் திட்டமாகத் திரைந்து போகும். ஆதலால் செம்பும் வீரமும் சூடனும் கெந்தியும் சேர்த்துப் புடமிடும்போது பெரும்புடமிடுக. கெந்தக மணம் போய்விடும்.

அயமும் காரமும் சேர்த்துருக்கச் செம்பாகும். பாகம் தவறினால் கரியாகும். கிட்டமாகும். பாகம் பார்த்துச் செய் தவறாது. தங்கம் எளிதிலாகும்.

## துருசுச் சுண்ணம்

வடிவாகத் துரிசினுட சுண்ணந் தன்னை
வகையாக இந்நூலில் சொல்வேன் கேளு
மிடியற்குச் சொல்லாதே வேதை காணார்
விருப்பமாய் நல்லோர்க்கு விரும்பிச் சொல்லு
துடியாக சுண்டமது துளைந்து ஆடும்
துயர்வான குளிகையாம் வேதை யாகும்
பிடியான யோகசித்தி காய சித்தி
பேய்க்கூத்தாய்க் கெடவேண்டாம் துருசு பாரே
*(944)*

பார்க்கவே யொருதுரிசு பண்பு கேளு
பதிவான அண்டரண்டம் துளைத்து ஆடும்
ஏர்க்குமே இரதமது கட்டிப் போகும்
எளிதாகக் கவனமது ஓட லாகும்
கோர்க்கவே செயமாகும் கூத்த னாகும்
கொடியதொரு சுண்ணமாம் இந்தப் போக்கு
தார்க்கவே துடிமெத்தக் காரம் மெத்த
துப்புரவாய்ப் புரண்டுருண்டு காரம் பாரே *(945)*

## ஆனந்தக் களிப்பு

## வெடியுப்புத் திராவகம்

பாரே வெடியுப்புப் பத்து-சீனம்
பக்குவ மாகவே இருபத்து ஐந்து

சேரே இவை ரெண்டும் தானே-பொடி
சீக்கிர மாக வுரல்தனில் இட்டு (946)

நொறுக்கி எடுத்துமே வாலை-அடைத்து
நுட்பமாய் அரைவாசி தானுமே கேளு
பருக்கியே வாலைமேல் வைத்து-வடி
பாகமாய் முன்னீரு வெள்ளையைத் தள்ளு (947)

மஞ்சளைத் தான்வடி கட்டிக்-குப்பி
வாகாய் வடித்துமே கேளடி தோழி
(வீரப்பதங்கம்)
தஞ்சமாய் வீரமும் பத்துக்-குடம்
தன்னில் வெடிபொடித் தடிதனி விட்டு (948)

மூடிடு மேல்குடந் தான்-சீலை
முக்கிய மாகவே ஏழது செய்து
ஆடி யடுப்பினி லேற்றி-எரி
அன்பாக மேலே பதங்கமு மாமே (949)

## வீரபதங்கத் திராவகம்

வழித்துமே பீங்கானில் இட்டு-இதில்
வாகாய்ப் புகைநீரை நிரம்பவும் விட்டு
தளித்து ரவிதனில் வைத்து-மூன்று
தானிடு நாளும் புளிக்கவே தோழி (950)

கலையத்தி விட்டுமே வாலை-சட்டி
காரண மாகவே மூடியே சீலை
துலையவே கெட்டியாய்க் கட்டிப்-பாகம்
சொல்லுவேன் இன்பமாய்க் கேளடி தோழி (951)

## திராவகம் பிடிக்கவேண்டிய பக்குவம்

வாலையின் மூக்கையே சாய்த்துக்-குப்பி
வாகாகத் தானந்தக் குப்பியை மாட்டு
காலையாய் மூக்கையும் உள்ளே-இட்டுக்
காரண மாக எரிநிழல் போலே (952)

மேலேறித் தான்புகை நீரும்-வரும்
முக்கிய மாகவே தான்வடி தோழி
வாலை யுடையாமல் தானே-வடி
வாகாய் அரக்கென்ற குப்பியில் தானே (953)

வடிக்கிற போதுமே தோழி-கிட்ட
வாகாய் இருக்காமல் அப்புறம் போடி
துடிப்பாகத் தான்புகைநீரு-பட்டால்
துப்புர வாகச் சடம்பொடி யாகும் (954)

மறைப்பாய் இருந்து வடித்து-எடு
வாகாய்ப் புகைநீரு வடித்திடு தோழி
துறையெல்லாம் சொல்லுவேன் தோழி-நாளும்
சூழ்ச்சாதி சூழ்ச்சம் இதுவெகு வாகும் (955)

## துருசுக்குத் தீச்சை

திட்டமாய்ப் பீங்கான் எடுத்துப்-புகை
தீச்சுடர் நீரதைச் சேரொன்று விட்டு
கட்டமாய்ப் பச்சைக்கற் பூரம்-பலம்
காட்டிடு தானே புகைநீருக் குள்ளே (956)

போட்டுக் குழப்பியே வைத்து-நீலன்
போக்கோடே தான்கரி வைத்துமே ஊத

காட்டுமே வெள்ளை நிறமே-இதைக்
காதலாய்த் தான்புகை நீரில் துவைத்து (957)

எட்டுநாள் போட்டு தோழி-இதை
இன்பமாய்த் தான்ரவி தன்னில் முகத்தில்
பட்டுமே நீலனும் போகும்-அங்கிப்
பாதையைச் சொல்லுவேன் கேளடி தோழி (958)

## துருசுக்குக் கவசம் செய்ய அண்டச்சீனச் சுண்ணம்

அண்டமும் சீனமும் ஊத-நல்ல
ஆதாரமான கடுஞ்சுண்ண மாகும்
தெண்டமாய்த் தான்புகை நீரை-விட்டுத்
திட்டமாய்த் தானே யரைத்துமே வில்லை (959)

கட்டியே யூதி யெடுக்க-நல்ல
காரிய மாகக் கடுஞ்சுண்ண மாகும்
திட்டமாய் வீரத்தைச் சேர்த்து-நாலுக்
கொன்றிட் டரைத்துமே சொல்லவும் கேளு (960)

நீலனுக் கங்கியும் இட்டு-ரவி
நிச்சய மாகவே காயவும் வைத்து
ஆலமாய் மேலிடு மண்ணை-அங்கி
அன்பாக இட்டுமே பத்தெரு இட்டு (961)

## துரிசுச்சுண்ணத்திற்குப் புடம்

சாலவே தான்புடம் வைக்க-நீலன்
தாட்டிக மாகக் கடுஞ்சுண்ண மாகும்
ஏலத் திரிமூர்த்திக் கொடுக்கும்-இதை
இன்மாய்த் தானே விராலி இலைக்கு (962)

## துரிசுச் சுண்ணத்தால் மூலிகைச்சாறு எடுக்க

இட்டுப் பிழிந்திடு தோழி-சாறு
இன்பம தாகவே வந்திடும் பாரு
கட்டுமே தான்ரசம் தன்னைப்-பலம்
காரணமாக அதிலிடு வாதி (963)

## இரசம் கட்ட

காய்ச்சி யெடுக்கவே கட்டும்-மணி
காரண மாகக் கரிதனில் இட்டு
பாய்ச்சி யுருக்க உருகும்-மணி
பத்து எடுத்துமே தாழ்வடங் கோத்து (964)

போட்டுச் செபத்தையும் பண்ணச்-சிவன்
போக்கோடே வந்து இருந்திடு வார்பார்
காட்டுக் கரிதனி லிட்டு-ரசம்
காரண மாக வுருக்கு முகத்தில் (965)

## இரசமணி வேதை

தங்கம் எடைக்கெடை யீந்து-ரவி
தானூற்றுக் கொன்று கொடுத்திட வாத
பங்கமில் லாமலே தங்கம்-ஆகும்
பாக்கியம் வந்து பலித்திடும் வாதம் (966)

## வாதம் கோடிக்கொருவருக்கு வரும்

கோடிக் கொருவனுளுக் காகும்-வாதம்
கூடிய வாய்ப்பேச்சால் ஆவதும் உண்டோ

பாடித் திரிந்தாலும் என்னவர்ணம்
　　பார்த்து எடுக்கப் பலனது வாகும் (967)

யூகியைத் தானினை தோழி-வாதம்
　　உய்த்துமே வந்துமே யேவலும் கேட்கும்
பாகியைக் கண்டு பிடித்தால்-வாதம்
　　பார்த்திடச் சித்தி பதிவுட னாமே (968)

## *944 - 968* உரை

வெடியுப்பு பத்துப்பலமும் சீனம் இருபத்தைந்து பலமும் பொடித்து வாலையில் போட்டு முன்போல் தீநீர் இறக்கு.

ஒரு குடத்தினடியில் வெடியுப்புப் பொடித்திட்டு அதன்மேல் வீரம் பத்துப்பலம் பொடித்துப் போட்டுமேல் குடம் மூடு. 5 சீ. ம. செ. அடுப்பேற்றி எரி. வீரம் பதங்கமாக மேலே ஏறியிருக்கும். அதனை வழித்துப் பீங்கானில் போட்டுப் புகைநீர் நிரம்பவிட்டு மூன்று நாள் புளிக்க வைத்துப்பின்பு வாலையில் விட்டுச் சீ. ம. செ. வாலையின் மூக்கைச் சாய்த்து அதில் குப்பியை மாட்டி எரி. திராவகம் மூக்கின் வழி குப்பிக்குள் இறங்கும். கிட்டப் போகாதே. மேலே பட்டால் உடல் விரியும். வாலையுடையாமல் வடித்து எடு. மறைவாக இருந்து திராவகம் வடி. இந்தத்தீச்சுடர் நீரைப் பீங்கானில் ஒருசேர் விட்டுப் பச்சைக்கற்பூரம் ஒருபலம் பொடித்துப் போடு. குழப்பி வைத்துக்கொள். துரிசினைச் சுட்ட வெள்ளையாக்கியெடுத்துப் புகநீரில் தோய்த்து ஊரப்போடு. எட்டுநாள் இங்ஙனம் போடு.

முட்டைத்தோடும் சீனமும் ஊதி எடுத்துப் புகைநீர் விட்டு அரைத்து வி. த. கா. ஊதியெடு. அதில் நாலுக்கு ஒன்று வீரம் சேர்த்து அரைத்து முன்பாகம் செய்த துரிசின்மேல் கவசமிட்டுக் காயவைத்து மேலே மண்கவசமிட்டுப் பத்தெருப்புடமிடு. துரிசு கடுஞ்சுண்ணமாகும். விராலி இலையில் அளவாகப் போடடுச்

சாறுவடித்துக் கரண்டியில் விட்டு ஒருபலம் ரசம் விட்டுக் காய்ச்சி எடு. கட்டும். கரியில் நின்று உருகியாடும். பத்துமணியாக்கித் துளையிட்டுக் கோத்துச் செவி. கட்டிய மணியை உருக்கி அதனெடை தங்கம் சேர்த்துச் செம்பில் நூற்றுக்கு ஒன்றிடு. தங்கமாகும்

## இந்நூலில் ரசமணி கட்டத் துரிசுச் சுண்ணம் வகையாகச் சொன்னேன்
## வேறு

ஆமேதான் யூகிமுனி துரிசுச் சுண்ணம்
அடைவாகக் கைபாக விவர மெல்லாம்
தாமேதான் இக்காண்டம் தன்னிற் சொல்லித்
தாட்டிகமாய் இரதமணி கட்டச் சொல்லி
நாமேதான் குளிகைபபண்ணி வைத்துக் கொண்டு
நலமாக யோகத்தைப் பார்க்கச் சொல்லிப்
பூமேவு வுலகுதனில் வாதிக் காகப்
பிரபல மாய்ச் சொல்லியே பார்க்கச் சொன்னார் *(969)*

## இந்நூலிற் சொல்லியனவெல்லாம் உண்மை செய்யமாட்டா மூடன் பொய்யென்பான்

சொன்னதொரு நூல்தனிலே வாதம் பொய்யோ
சுருக்கான குளிகை பொய்யொ வேதம் பொய்யோ
கன்னதொரு சோதிடம் வைத்தியமும் பொய்யோ
கலந்தோடும் குளிகைமுதல் செம்பு பொய்யோ
பின்னமில் லாமலே யுப்புப் பொய்யோ
பெரியதிரா வகமுந்தான் பொய்யோ இல்லை
நன்னயமாய் உலகத்தோர் பாக மாக
நலமாகச் செய்யாமல் விட்டுப் போட்டு
என்னமோ பொய்யென்று சொல்லு வார்கள்
உலுத்தனவன் மாடுதான் மேய்ப்பான் பாரே *(970)*

## துரிசுச்சுண்ணம் செய்துகொண்டார் இருந்த இடத்திலேயே அட்டமாசித்தும் ஆடலாம்

மாடுதான் மேய்க்காமல் சொல்லக் கேளு
மயங்காமல் துரிசுநீ வைத்துக் கொள்ளு
கோடுதான் ஒன்றுமில்லை சொல்லக் கேளு
குறிப்பறிந்து ஒன்றுமே செய்து கொள்ளு
வீடுவிட்டுக் காட்டுக்குப் போக வேண்டாம்
வேதாந்தம் சித்தாந்தம் விருப்ப மாக
ஆடுமே ருசியாக நாமம் கொண்டால்
அணுசகல மெல்லாந்தான் சித்தி யாமே (971)

## இதனடியில் சொல்லப்படும் அயச்செம்பானது முன்சொல்லியவற்றைவிடச் சிறந்ததாகும்

சித்தியாய் இன்னமொரு செம்பு சொல்வேன்
திறமான இரும்பைவிடக் கார மாகும்
முத்தியாய் வேதையாம் இந்தச் செம்பு
முடிவாகும் செம்புதான் மூர்க்கம் மெத்த
புத்தியாய்க் கண்டோர்க்கு வேதை யாகும்
புத்தியில்லா வாதிகட்கு ஒன்றும் இல்லை
பத்தியாய் இதையறிந்து செய்து கொண்டால்
பாக்கியங்கள் மிகவருமே பாரு ளோர்க்கே (972)

## அயச்செம்பு அயக்கரி

பாரியாய் ஒழுக்கறையும் பலமும் பத்து
பகரவே ராவியதைப் பழச்சாற் றாலே
நாரியாய் மூன்றுநாள் ஊற வைத்து
நலமாகச் சொல்லுகிறேன் நாட்டு ளோர்க்கு
வாரியாய்க் கெந்தியது முக்கால் போடு
வகையான சூடனது பலம ரைதான்

காரியாய் வீரமது காலும் போடு
கனிவாகப் பழச்சாற்றால் அரைத்தி டாயே (973)

## செம்புக்கரி

அரைத்துமே புடம்போட்டு வைத்துக் கொள்ளு
அடைவாகச் செம்பதுவும் பலமும் பத்து
நிரைத்துமே கெந்தியது முக்கால் போடு
நேரான சூடனது பலம ரைதான்
வரைத்துமே வீரமது காலும் போடு
வகையான பழச்சாற்றால் அரைத்துக் கொண்டு
பரைத்துமே செம்புதான் தகட டித்துப்
பரிவாகச் செம்புதனில் பூசிப் போடே (974)

போடவே பெரியபுடம் போட்டெ டுக்கப்
போராக அதராக நொறுங்கிப் போகும்
ஆடவே அதரெடுத்து அப்பால் வைத்து
அடைவாக மீதிச்செம்பு மேலே தானும்
காடவே கவசமிட்டுப் புடத்தைப் போடு
காரணமாய் எல்லாந்தான் நொறுங்கிப் போகும்
சாடவே அதரெல்லாம் எடுத்துக் கொண்டு
தாட்டிகமாய்ச் சேருகிற தன்மை கேளு (975)

## அயக்கரி தாமிரக்கரி சேர்க்குமெடையும் அவற்றைச் செந்தூரமாக்கவும்

கேளுமே முன்போட்ட உளியைத் தானும்
கெட்டடியாய்ச் செம்பதோர் எடையே சேர்த்துத்
தாளுமே கல்வத்தில் இட்டுக் கேளு
தக்கதோர் செவ்வல்லிப் பூச்சாற் றாலே
வாளுமே யரைத்துவில்லை காய வைத்து
வளமாகப் பெரும்புடமாய்ப் போட்டெ டுக்கக்
காளுமே செந்தூரம் ஆகும் பாரே
கண்கொள்ளா வேதையாம் கருதிப் பாரே (976)

## அயச்செம்பு ஒழுங்காக இருக்க வேண்டிய நிறம்

கருத்தாக நேர்காரம் சேர்த்து ருக்கக்
கனிவான செம்புசூ ரியன்போ லாகும்
பொருத்தாக இருந்திடுமே இந்தச் செம்பு
போராகப் புரையிலா திருக்கும் பாரு
முருத்தாகச் சோதிமய மாகும் பாரு
முக்கியமாய் வேதைக்கு அதிக மாகும்
நருத்தாக இச்செம்பு சிவனுக் கொப்பாம்
நலமான ஈகவரிக்கும் ஒப்பாம் பாரே (977)

ஒப்பாகச் சொல்லுகிறேன் கசடு இல்லை
ஓகோகோ வெள்ளிபோல் இருக்கும் பாரு
துப்பாக அயச்செம்பு அதுதான் அப்பா
தொல்லுலகில் ரசவாதம் புரண்டு போச்சு
முப்பாழுக் கப்பாலே நின்ற சோதி
மூவுலகு மெரித்ததோர் ஈசன் ஆணை
அப்புறமே சொல்லுகிறேன் வேதைப் போக்கு
அறிந்தாக்கால் சித்தனாம் அடைவு தானே (978)

## அயச்செம்பு வேதை

அடைவாக வெள்ளியெட்டுச் செம்பு ஒன்று
ஆதியாய்ச் சேர்த்திடிலோ தங்க மாகும்
முடிவாகும் வேதையிது மூர்க்க மாகும்
முடிப்பான்பார் சுடுவாதி முறைமை யாக
துடியான வாதியவன் முடிக்க மாட்டான்
சூழவே யிருந்துமே யேய்ச்சுச் சொல்வான்
படிவாக வாய்ப்பேச்சால் ஒன்றும் இல்லை
பகரரிது செம்பினுட பாக மாமே (979)

**மூடவாதிகள் பேச்சைக்கேட்டு மூலிகையினால் வாதமாகுமென்று மோசம் போகாதே. அப்படிச்சுட்டால் தீரா நரகமடைவான்.**

ஆமேதான் செம்பென்றால் எளிதோ என்பான்
அடைவாக மதங்கொண்டு திரிவான் பாரு
போமேதான் வாதம்தான் வந்த தென்பான்
போக்கான சரக்குவகை யறியான் பாரு
காமேதான் மூலிகையில் இருக்கு தென்பான்
கருத்தில்லா வாதிகளே பேச்சைக் கேட்டு
தோணவே சுடவேண்டாம் ஐயோவையோ
சுட்டாக்கால் ரவிகோடி நரகம் ஆமே (980)

சுட்டதனால் வருவதென்ன தோசம் தோசம்
சுடாட்டால் வருமேதாதான் வாதம் தானும்
கெட்டதனால் புத்தியுண்டோ வுலகத் தோர்க்கு
கெடாட்டால் வருமோதான் புத்தி தானும்
பட்டதினால் புத்திவந்து நிலைக்கும் பாரு
பாருலகில் அரசாள்வீர் பகர்ந்து பாரே (981)

**சித்தர் நூல்களை ஆய்ந்து வாதகாண்டம் இரண்டாகப் பாடினேன். இதிலிருப்பன மெய். இந்நூலைப் பார்த்துச் சித்தியானால் இகபர வாழ்வு உண்டாம்.**

பகர்ந்துபார் சித்தர் நூல் சுரடு அப்பா
பதிவான ருஷி நூலும் கொஞ்ச மாகத்
தகர்ந்துபார் மறைப்பாகப் பாடிப் போட்டார்
தாக்கான எல்லாமும் சோதித் தேதான்
தகர்ந்துபார் வாதந்தான் இரண்டு காண்டம்
தன்மையாய்ப் பாடினேன் இதுபொய் யாது
உகர்ந்துபார் என்னுடைய நூலைப் பார்த்தால்
இகபரமும் வாழ்வீர்கள் இயற்கை தானே (982)

## நூல் உணர்த்திய வழி

இயற்கையாய்ச் சிவன்சொல்லத் தேவி கேட்டு
இயல்பான நந்திக்குச் சொல்ல நந்தி
தயற்கையாம் நந்தியசு வனிக்குச் சொல்ல
தலமான அசுவனியும் விசுவ னிக்கு
வயற்றையாம் விசுவனியும் தன்மந்தி ரிக்கு
வளமான தன்வந்திரி யகத்தி யர்க்குக்
கயற்கையாய் அகத்தியரும் கேட்டுத் தேறிக்
கனிவாகப் புலத்தியர்க்கு உரை செய்தாரே (983)

## யூகிமுனி தேரரிடத்துக் கேட்டுத் தெளிந்து உலகவாதிகள் பிழைக்க வாதகாண்டம் இரண்டாகச் செய்து அதிற்கைபாகம் எல்லாமும் செம்பின் முறை எல்லாமும் கூறியுள்ளவற்றைத் தெளிந்து நலம் பெறலாம்

உரைசெய்தார் புலத்தியரும் தேர ருக்கு
உகந்துமே தேரருமே யூகிக் குத்தான்
கரைசெய்த யூகிமுனி கேட்டுத் தேறி
கனிந்துமே யுலகவா திகள் பிழைக்க
நரைசெய்தார் காண்டங்கள் இரண்டும் பாடி
நலமான கைபாகம் வரிசை பாடித்
துரைசெய்தார் செம்பெல்லாம் வெளியாய்ப் பாடித்
துடிப்பாகப் பார்த்திடவே சுவர்க்க மாமே (984)

## ஆசிரியர் விளக்கம்

சுவர்க்கமாம் சிவனுமையாள் பாதம் போற்றி
சுடரான நந்திக்குச் சரணம் சொன்னேன்
அவர்க்கமாம் அசுவனிக்குச் சரணம் சொன்னேன்
ஆதியாய் விசுவனிக்குச் சரணம் சொன்னேன்
த்வர்க்கமாம் தன்வந்திரிக்குச் சரணம் சொன்னேன்
தடையறவே யகத்தியாக்குச் சரணம் சொன்னேன்

பவர்க்கமாம் புலத்தியர்க்குச் சரணம் சொன்னேன்
பதிவான தேரருக்குச் சரணம் சொன்னேன்
தவக்கமில் லாமலே ருஷிகள் தேவர்
தடையறவே சரணம் ஆயிரமும் முற்றே (985)

* முத்தான யூகிமுனி செய்த நூலை
முறையாக எடுத்தவர்கள் பார்த்துத் தேறிச்
சித்தமாய் நூலிருந்த இடத்தி லப்பா
சிறப்பாக வைத்துவிடு யாசிக் காதே
நத்தியே யவ்விடத்தில் வைக்கா விட்டால்
நலமாக நரகம்வரும் நாம்சொன் னோம்பார்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் தலையும் போகும்
சாதகமாய் இந்நூலை வைத்துப் போற்றே (986)

*இப்பாடல் சிவயோகியவர்கள் சுவடியில் இல்லை.

## யூகிமுனிவர் வாதம் இரண்டாம் காண்டம் ஆயிரம் முற்றிற்று

## 969 – 986 உரை

பத்துப்பலம் ஒழுக்கறையை அராவிப் பழச்சாற்றில் மூன்றுநாள் ஊறப்போடு. எடு. கெந்தி முக்கால் சூடனரை வீரம் கால் சேர்த்து பழச்சாறு ஊற்றி அரைத்துப் புடமிட்டெடுத்து வை. பத்துப்பலச் செம்புத் தகட்டுக்குக் கெந்தி முக்கால் சூடனரை வீரம் கால்பழச்சாறு விட்டரைத்துக் கவசித்துப் பெரும்புடமிட்டெடு. நொறுங்கும். முன்புடமிட்ட உளியிரும்பை இதனுடன் சேர்த்துச் செவ்வல்லிப்பூச்சாறு ஊற்றியரைத்து வி. த. கா. பெரும்புடமிடு. செந்தூரமாகும். காரம் சேர்த்துருக்கு சூரியன்போல் செம்பாகும். ஈசன் ஆணை. வெள்ளியெட்டில் ஒன்றுகொடு. தங்கம். முடிவு இது.

**பேராசிரியர். டாக்டர். ந. சேதுரகுநாதன் உரையுடன் முற்றிற்று.**